வெளியீடு 18-02-2000

Issued 18-02-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 21, 1999 - தொகுதி 74 - எண் 2

Wednesday, 21st April, 1999—Volume 74 - No. 2

ப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V211,31'N99
N99.74.2
201803

21-4-1999

## உள்ளடக்கம்

பக்கங்கள்


1. **வினாக்கள்-விடைகள்—**
உடுக்குறியிட்ட வினாக்கள் 181-219

2. **சிறப்புக் கவன ஈர்ப்பு—**
(அ) மதுரை மாவட்டம், பொட்டிபுரம் கிராம கள் வியாபாரிக்கும், சாராய வியாபாரிக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் காசி நாடார் குடும்பத்தை தீ வைத்துக் கொன்றது. 219-225
திரு. மு. அப்பாவு 220-222
திரு. சி. வேலாயுதன் 222-223
டாக்டர் க. கிருஷ்ணசாமி 223-224
மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 224-225
(ஆ) மதுரா கோட்ஸ் நிறுவனத்தின் ஒரு பிரிவு மூடப்போவதாக வந்துள்ள செய்தி 227-230
திரு. கே. சுப்பராயன் 227, 228-229
மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் 228, 229-230

3. **விதி 110-ன் கீழ் அமைச்சரின் அறிக்கை—**
கன்னியாகுமரி கடற்கரையில் காமராஜர் மணிமண்டபம் கட்ட மத்திய அரசின் அனுமதி பற்றி முதலமைச்சரின் அறிக்கை 225-227

4. **கவன ஈர்ப்பு—**
வாணியம்பாடி, வேலூர், குடியாத்தம், வாலாஜா வட்டங்களில் பாலாற்றில் ஆக்கிரமிப்பு 230-232

5. **அறிக்கைகள் அளித்தல்—**
(அ) பொதுக் கணக்குக் குழு 232-233
(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு 233

6. **தகவல் கோரல்—**
பேரவையின் மார்ச் 22, 23, 24 ஆம் தேதிகளின் நடவடிக்கைக் குறிப்புகளை அனுமதியின்றி எழுதிக் கொடுத்தவர்கள் மீது நடவடிக்கை 233-235

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 7. | **மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி. | 236-334 |
| | (அ) கோரிக்கை எண். 37-சுற்றுச்சூழல் | |
| | (ஆ) கோரிக்கை எண். 44-காட்டுவளத் துறை | |
| | (இ) கோரிக்கை எண். 58-காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | |
| | மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி | 236, 240, 245, 249, 252, 257, 258, 266, 269, 274, 275, 278, 280, 282, 285, 286, 287, 290-291, 295-296, 296-297, 298, 299-300, 300-301, 308, 309-328 |
| | திரு. சி. ஞானசேகரன் | 240, 249-254, 256-258, 263 297-298, 303 |
| | மாண்புமிகு திரு. துரைமுருகன் | 254-255 |
| | மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 258-259, 260 |
| | டாக்டர் மு. தேவராஜன் | 259-263, 264 |
| | திரு. வி.பி. சிங்காரவேலு | 264-268 |
| | * திரு. டி. மணி | 269-273 |
| | டாக்டர் க. கிருஷ்ணசாமி | 273-274, 275, 276-277 |
| | மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் | 276,277 |


221803




| | | |
|---|---|---|
| 7. | **மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி. | |
| | திரு. க. மணிவர்மா | 278-280, 280-281 282-283 |
| | திரு. சி. வேலாயுதன் | 283-285, 288, 287 241, 246 288-290 |
| | * திரு. நா. பெரியசாமி | 291-292 |
| | திரு. பெ.சு. திருவேங்கடம் | 292-297 |
| | திரு. ஜி. நிஜாமுதீன் | 242, 248-249 298-303 |
| | திரு. என்.ஆர். அழகராஜா | 239-240, 244, 304-309 |
| 8. | **அறிவிப்பு**— | |
| | உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி ஏற்பாடு | 264 |
| 9. | **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— | 224-226 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### சித்திரை 8, பிரமாதி - திருவள்ளுவர் ஆண்டு 2030

### 1999 ஏப்ரல் 21, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பிடி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

***"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்***
***காடும் உடையது அரண்"***

*ஆழமும் அகலமும் கொண்ட அகழ், பரந்த நிலம், உயர்ந்து நிற்கும் மலைத்தொடர், அடர்ந்திருக்கும் காடு ஆகியவற்றை உடையதே அரணாகும்.*

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 461, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**461—**

### களவு நகை புலனாய்வு

***13150—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) களவு நகை புலனாய்வு விஷயத்தில் ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களில் உள்ளாட்சித்துறை மூலம் பிறப்பித்துள்ள விதிமுறைகளைத் தமிழ்நாட்டிலும் அமல்படுத்த அரசு கருதியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) களவு நகை புலனாய்வு மேற்கொள்ளும்போது சம்பந்தப்பட்ட புலனாய்வு அதிகாரிகள் நகை வியாபாரிகளுக்குத் தொல்லை தருவது தவிர்க்கப்பட வேண்டும் எனபது குறித்து ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களில் ஆணைகள் பிறப்பித்துள்ளதுபோல், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து காவல் துறை கண்காணிப்பாளர்களுக்கும், காவல் துறை ஆணையர்களுக்கும், காவல் துறைத் தலைமை இயக்குநர் அவர்களால் ஏற்கெனவே தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நீண்டகாலமாக இருந்துவரும் பிரச்சினை. குறிப்பாக பல இடங்களிலே களவு செய்ததாகச் சொல்கின்றவர்கள் எங்கே கை காட்டுகின்றார்களோ அந்தக் கடைகளுக்குச் சென்று அவர்கள் சொல்கின்ற நகைகளை வாங்கிச் செல்வது என்பது நகை வியாபாரம் செய்பவர்களைக் கடுமையாகப் பாதிக்கிறது. குறிப்பாக, கோயம்புத்தூரைப் பொறுத்தவரையிலும், தமிழ்நாட்டிலே, இன்னும் சொல்லப்போனால், ஆசியாவிலே மிகப் பெரிய நகை ஆபரண வியாபார மையமாக இருந்து வருகிறது. ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற அந்தப் பகுதியில் திடீரென்று காவல் துறை சில திருடர்களை அழைத்து வருகின்றார்கள். அழைத்து வந்து அவர்கள் இந்தக் கடையிலே 100 பவுன் விற்றதாகச் சொல்லுகிறார்கள். நீங்கள் 100 பவுன் கொடுக்க வேண்டுமென்று வாங்கி விடுகின்றார்கள். இப்படி வாங்குகின்ற நிலைமை காரணமாக, சில இடங்களில் அவர்கள்





சங்கத்தின் சார்பாக சில பட்டியலே எடுத்திருக்கிறார்கள். சிலபேர் நகைக் கடைகளையே மூடிவிட்டு, நகைத் தொழிலாளியாக மாறிவிட்டார்கள். அதுவும் கைது செய்கிறோம் என்று சொல்லும்போது மானம் போய்விடும் என்ற நிலையில் அவர்கள் இத்தகைய நிர்பந்தங்களுக்கு ஆளாகிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நகை வியாபாரிகள், சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் இந்தத் தொழிலிலே ஈடுபடுகின்றபோது, காவல் துறையிலிருந்து வருகின்றவர்கள் செய்கின்ற இத்தகைய சட்டவிரோதமான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு பொருத்தமான வழி முறைகளை, முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய மூன்று மாநிலங்களில் அவர்கள் போட்ட ஆணையின் நகலைக்கூட வைத்திருக்கிறேன்—இங்கே நீங்கள் செய்து, அவர்களுக்கு உத்தரவாதமான பாதுகாப்பு அளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் 1997 ஆம் ஆண்டிலேயே கேட்டிருக்கிறார். எனக்கு ஒரு பயம், அவர் எங்கே துணைக் கேள்வி கேட்கப்போவதில்லை என்று நேற்றையதினம் சொன்னதைப்போலச் சொல்லிவிடுவாரோ என்று. நல்ல வேளையாகத் துணைக் கேள்வி கேட்டிருக்கிறார். என்றைக்கும் துணையாக இருப்பவர், ஆகவே, துணைக் கேள்வி கேட்டிருக்கிறார்.

இந்தப் பிரச்சினையில் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தமிழ்நாட்டிலே கோயம்புத்தூர் நகை வியாபாரிகள் சங்கம் காவல் துறையால் ஏற்படக்கூடிய இந்தத் தொல்லைகள் குறித்து ஒரு முறையீட்டைத் தந்தது, 1998 ஆம் ஆண்டு தொடக்கத்தில். இந்தக் கேள்வியினுடைய அடிப்படையிலே, இந்தக் கேள்வி வரும்போதே அதைப் படித்த நான், அதைப்பற்றி விவரம் அறிந்துகொள்வதற்காக முற்பட்டபோது, அதையொட்டித்தான் காவல் துறை அதிகாரிகளுடைய ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த நகை வியாபாரிகள் சங்கத்தினுடைய முறையீடு பின்வருமாறு:

1. நகை வியாபாரிகளைச் சட்ட விரோதமாகப் பயமுறுத்துவது மற்றும் தொல்லைகள் கொடுப்பது;

2. நகை வியாபாரிகளைக் குற்றவியல் வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள்போல் பாவித்து மிரட்டுவது;

3. மோசமாக நடத்துவது மற்றும் கொடுமை புரிவது;

4. நகை வியாபாரிகளைக் கை விலங்கோடு காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்று அங்கே தங்க வைப்பது;
5. போதிய காரணங்கள் இல்லாமல் நகை வியாபாரிகளைச் சட்ட விரோதமாக வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வது;
6. பலாத்காரத்தின் மூலம் கையொப்பம் வாங்கிக் கொள்வது;
7. ரசீது ஏதும் தராமல் நகைகளைப் பறிமுதல் செய்வது;
8. நகை வியாபாரிகள் குடும்பத்தாரையும், வீட்டில் உள்ள பெண்களையும் மிரட்டி, கடையில் வேலைக்கு அமர்த்தியுள்ளவர்களை பலாத்காரமாக அழைத்துச் செல்வது;
9. நகைக் கடையிலிருந்து எடுத்துச் செல்லும் நகைகளின் எடை எவ்வளவு என்பதற்கு ஒப்புதல் சான்று ஏதும் அளிக்காமல் இருப்பது.

முற்பகல் 9-35

இந்த முறையீட்டினை விரிவாக ஆராயச் செய்து 29-8-1998 ஆம் தேதியிட்டு ஒரு சுற்றாணை எல்லா காவல் நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தச் சுற்றாணையில் களவு நகைகள் குறித்த வழக்குகளை விசாரிக்கும் காவல் துறை அதிகாரிகள் பின்வரும் நடைமுறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ) பொற்கொல்லர்களை சட்டத்திற்கு விரோதமான முறையில் பயமுறுத்தவோ துன்புறுத்தவோ கூடாது.
(ஆ) பொற்கொல்லர்களை குற்றவாளிகளாக்கும் முனைப்போடு தவறான வழிமுறைகளைக் கையாளக் கூடாது.
(இ) பொற்கொல்லர்களை இழிவாக நடத்தக் கூடாது, தாக்குதல் நடத்தக் கூடாது.
(ஈ) பொற்கொல்லர்களை காவல் நிலையத்திற்கு கைவிலங்கிட்டு அழைத்துச் சென்று அடைத்திடக்கூடாது.
(உ) போதுமான ஆதாரங்கள் இன்றி பொற்கொல்லர்களைக் கைது செய்வதோ அல்லது சட்டவிரோதமாக ஏதாவது தெரிவிக்கப்படாத இடங்களுக்கு விசாரணை என்ற பெயரால் அழைத்துச் செல்வதோ கூடாது.
(ஊ) பொற்கொல்லர்களை வற்புறுத்தி, மிரட்டி கையெழுத்து பெறக் கூடாது.





(எ) நகைகளைக் கைப்பற்றும்போது முறையான ரசீதுகள் கொடுக்கப்பட வேண்டும்.
(ஏ) பொற்கொல்லர்களின் குடும்பத்தினரையோ, குறிப்பாக மகளிரையோ அல்லது அவர்களிடம் பணியாளர்களாக இருப்பவர்களையோ கட்டாயப்படுத்தி அழைத்துச் செல்லக் கூடாது.
(ஐ) நகைக் கடையிலிருந்து கைப்பற்றப்படும் தங்கத்திற்கு உரிய ரசீது கொடுக்கப்பட்ட பிறகு எடுத்துச் செல்ல வேண்டும்.

இது சுற்றாணையாக அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் குறிப்பிட்டதுபோல் ஆந்திரா, கேரளம், பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களில் இருப்பதைப்போல இதை அரசாணையாகப் பிறப்பிக்கலாம் என்று கருதுகிறேன். எப்போதும் பொற்கொல்லர்களுக்கு ஆதரவான அரசுதான் இந்த அரசு. அதனால்தான் பூம்புகார் படத்திலேகூட பொற்கொல்லர் பிழை செய்தார் என்பதை மறைத்துவிட்டு ஓர் அதிகாரி பிழை செய்தார் என்று மாற்றியிருக்கிறேன் என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களது வினாவில் உள்ளாட்சித் துறை என்று கொடுத்திருக்கிறீர்கள். உள் துறையா, உள்ளாட்சித் துறையா?

**திரு. கே. சுப்பராயன்:** உள் துறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் இவ்வளவு விவரமான பதிலைச் சொன்னபிறகும் திரும்பக் கேட்க வேண்டுமா? (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைக் கேள்வி கேட்க வேண்டிய அவசியம் இல்லாமல் அவர்கள் விரிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். எப்போதுமே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் ஒரு விஷயத்தை எடுத்துக்கொண்டால் அந்த விஷயத்தின் வேர்வரை, வேரடி மண்வரை சென்று பிரச்சினையை முழுமையாக ஆய்ந்து பதிலளிப்பதில் அக்கறை கொண்டவர். மிகவும் Seriousஆக இருக்கின்ற இந்தக் கோயம்புத்தூர் பிரச்சினையில் மிகுந்த அக்கறையோடு பதில் அளித்ததற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நான் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 ஏப்ரல் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகைக் களவு விஷயத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல நிபந்தனைகளையிட்டு, அவர்களுக்கெல்லாம் எந்தவிதமான துன்பமும் வராமல் பார்த்துக்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ததை வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் காவல் துறை கைப்பற்றுகின்ற நகைகளை முழுமையாக நீதிமன்றத்திற்குக் கொண்டுபோய் ஒப்படைக்காமல், சில நேரங்களில் அதில் பாதி அளவுக்குக் காணாமல் போய்விடுகிறது. அதையும் சரி செய்து, கைப்பற்றப்பட்ட நகைகளை முழுமையாக நீதிமன்றத்திற்குக் கொண்டுபோய் ஒப்படைத்து, அதற்குப் பிறகு உரியவர்களுக்கு அதைச் சேர்ப்பிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 462, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**462—**

### அறிவியல் ஆய்வுக்கூடம்

***15370—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி வட்டாரம், பெரிய வடகம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அறிவியல் ஆய்வுக்கூட வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி வட்டாரம், பெரிய வடகம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.4.84 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு அரசாணை நிலை எண் 355, பள்ளிக் கல்வித் துறை, நாள் 22-9-1998-ல் அரசு ஆணையிட்டுள்ளது.



1999 ஏப்ரல் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்ட கேள்விக்கு பதில் வந்துவிட்டது. இன்னும் என்ன துணை வினா? சரி கேளுங்கள்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிவியல் ஆய்வுக்கூடம் வருகின்ற கல்வி ஆண்டிலேயே தொடங்கப்படுமா என்று அறிய விரும்புவதோடு, அந்தப் பள்ளிக்கு கணினி வசதியும் ஏற்படுத்தித் தரப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு பள்ளிகளில் படிப்படியாக பல்வேறு வகைகளில் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அது அதற்கு ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையிலும், பள்ளிகளின் இன்றியமையாத தேவையைக் கருதியும் காலப்போக்கில் இவை எல்லாம் நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 463, திரு. லி. அய்யலுசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**463—**

### குடப்பாறைக்கு குடிநீர் வழங்கல்

***6104—திரு. லி. அய்யலுசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், குடப்பாறை கிராமத்திற்கு இளையரசனேந்தல் கண்மாய்க்கரையில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, மேல்நிலைத் தொட்டி கட்டி, குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இளையரசனேந்தல் கிராமத்திற்கு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு ஒரு விசைப்பம்பு அமைக்கின்ற திட்டம் முடிக்கப்பட்டு, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் குடப்பாறை கிராமத்திற்கு குடிநீர்த் திட்டத்தை

நிறைவேற்றும்பொருட்டு, இளையரசனேந்தல் கண்மாயில், இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தும், போதுமான நீராதாரம் கிடைக்கப் பெறவில்லை. எனவே, மேலும் ஓர் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் பொருட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. விரைவில் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு, போதுமான நீராதாரம் கிடைக்கப் பெற்றவுடன், விசைப்பம்பு திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

*முற்பகல் 9-40*

**திரு. வி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடப்பாறை கிராமத்திலே, அந்தப் பகுதியிலே எப்போதும் குடிதண்ணீரே கிடையாது. சாதாரண ஏழை விவசாயிகளும், ஏராளமான தொழிலாளிகளும் நிறைந்த அந்தப் பகுதியிலே, Ration அளவிலேதான் தண்ணீர் கண்மாயிலே இருந்து கிடைக்கும். அந்த ஊரிலே தண்ணீர் தட்டுப்பாடாகத்தான் இருக்கிறது. நீராதாரம் எங்கு கிடைத்தாலும் கண்டுபிடித்து மேல்நிலைத் தொட்டி கட்டி, குடிநீர் வசதி செய்து தரப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்; அவருக்கு மிக்க நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். சீக்கிரமாக அதைச் செய்து முடித்து, அந்தக் கிராம மக்களுக்குக் குடிநீர் வழங்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு உறுப்பினர் நேரில் ஒரு முறை என்னிடம் இதுபற்றித் தெரிவித்திருக்கிறார். மேலும், நான் அங்கே அவருடைய ஊருக்குச் சென்றபோது, அந்தப் பகுதியை என்னிடம் காட்டினார். நேரிலே நான் பார்த்திருக்கிறேன். அங்கு நீராதாரம் இல்லாத காரணத்தினால், இப்படி இழுத்துக்கொண்டே போகிறது. நிரந்தரமாகக் குடிநீர் வழங்குகிற திட்டமான மானூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தில், வழியோர கிராமங்களில், 388 கிராமங்கள் அதில் இணைக்கப்பெறுகிற காரணத்தினால், இதையும் அதோடு இணைக்க வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறேன். அது இப்போது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அந்தப் பரிசீலனை முடிந்த பிறகு, அந்தத் திட்டத்திலே இது இணைக்கப்பட்டுவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 464, திரு. அ. அசோகன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



**464—**

## நடை பாலத்தை அகலப்படுத்துதல்

***15745—திரு. அ. அசோகன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே ஓடம்போக்கி ஆற்றின் குறுக்கேயுள்ள நடை பாலத்தை, வண்டிப்பாலமாக அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் நகராட்சி, மடப்புறம் அருகில் ஓடம்போக்கி ஆற்றின் குறுக்கே உள்ள நடை பாலத்தை வண்டிப் பாலமாக அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் நகரம், இப்போது மாவட்டத்தினுடைய தலைநகராக இருக்கிறது. போக்குவரத்து இடைஞ்சல் மிகுந்த நகரமாகவும் மாறியிருக்கிறது. நகரத்திலிருந்து வெளியே வருவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அதுவும், ஓடம்போக்கி ஆற்றின் எதிர்புறம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அமைய இருக்கிறது. அந்த நடை பாலத்தை வண்டிப் பாலமாக மாற்றினால், போக்குவரத்து இடைஞ்சலைத் தவிர்க்கலாம். ஆகையினால் அதை மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வாரத்திற்கு முன்னால், அதைப்பற்றி விசாரித்தபோது, அந்தப் பாலம் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமானதும் இல்லை; நம்முடைய நகராட்சிக்குச் சொந்தமானதும் இல்லை, தனியாரால் அந்தக் காலத்தில் கட்டப்பட்ட பாலம். ஆகையினால், அதற்கு அரசு பணத்திலோ, நகராட்சி நிதியிலோ செலவழிக்கின்ற சட்டக்கூறுகள் இல்லை என்று தெரிந்தது. இருப்பினும், இதுபோன்ற நடவடிக்கைகள்

[1999 ஏப்ரல் 21

மேற்கொள்கின்றபோது, ஆய்வுகள் பலமாக செய்ய வேண்டியிருக்கிறது. தவிர, மக்கள் தொகை எண்ணிக்கை, அதிலே நடக்கிறவர்களின் எண்ணிக்கை, அதோடுகூட எந்தத் துறைக்குச் சொந்தமானது என்பதையெல்லாம் பரிசீலிக்க வேண்டி இருக்கிறது. தேவைப்படின், இதை மறுபரிசிலனை செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *465*, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**465—**

**விவசாயக் கல்லூரி தொடங்குதல்**

***18580—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டையில் அரசு விவசாயக் கல்லூரி தொடங்க, அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 65 சதவிகித மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய இந்தத் தமிழகத்திலே, விவசாயக் கல்லூரி என்பது மிகமிக அவசியம். அதுவும் என்னுடைய மாவட்டத்தில், இராணிப்பேட்டையில், நவலக் பகுதியிலே, அரசுக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அந்த இடத்திலே, பொதுவாக பொறியியல் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, மருத்துவத் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, படித்து இருக்கக்கூடிய அத்தனைப் பேர்களுக்கும் அரசு வேலை கொடுப்பதில்லை. அதேபோல் விவசாயத் துறையிலும் படித்த பட்டதாரிகளுக்கு வேலை இல்லை என்ற காரணத்தினால், நாங்கள் அதைப் பரிசீலிக்க மாட்டோம்



1999 ஏப்ரல் 21]

என்கிற கொள்கை முடிவைத் தமிழக அரசு இப்போது வைத்திருப்பது நல்லதல்ல. உணவு உற்பத்தியில் Century அடிப்போம் என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், விவசாயத்திற்கு முன்னுரிமை அளித்து, எங்களுடைய மாவட்டத்தில், இராணிப்பேட்டையில் அரசுக்குச் சொந்தமான நிலம் ஏராளமாக இருக்கிற காரணத்தினால், நவலக் பகுதியிலே, ஒரு விவசாயக் கல்லூரியை வருகிற ஆண்டிலே தொடங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், படித்து பட்டதாரிகளாக பலபேர் வருவதற்கும், வேளாண்மை உற்பத்தியிலே Century அடிப்பதற்கும் நேர்முகத் தொடர்பு இருப்பதாகச் சொல்கிறார்கள். படிப்பிற்கும், இந்த வெற்றிக்கும் நேர்முகச் சம்பந்தம் இல்லை என்பதை பல துறைகளின் சார்பாக நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லையே? நீங்கள் கேட்பது என்றால், தமிழ்நாடு பூராவும் வேளாண்மைக் கல்லூரி வைக்க வேண்டும், உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு துணைக் கேள்வி மட்டும்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குக் கட்டாயம் ஒன்றும் கிடையாது.

**திரு. சி. ஞானசேகரன்:** கல்வியமைச்சர் ஓர் அருமையான Point கேட்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அருமையான Point-க்கு பதில் என்ன சொல்லப் போகிறீர்கள்?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே சொல்கிறபோது, படிக்கக்கூடிய அந்தப் பட்டதாரிகளுக்கும், இப்போது இருக்கக்கூடிய

விவசாயத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்கிறார்கள். இன்று பொறுப்பிலே இருக்கக்கூடிய கல்வித் துறை அமைச்சர் அவர்கள்தான், நிச்சயமாக வேளாண்மைத் துறை பட்டதாரிகளினுடைய படிப்பிற்கும், நடைமுறை விவசாயத்திற்கும் தொடர்புபடுத்த வேண்டியவர் அவரே தன்னுடைய கொள்கைகளை கொஞ்சம் மாற்றியமைத்து, செய்கைகளை மாற்றியமைத்து, இதுபோன்ற பட்டதாரிகள், உண்மையிலேயே விவசாயத்தில் ஈடுபடுவதற்கு ஆவன செய்வார்களா, அந்தத் துறை செய்யுமா, என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் சொன்ன பதிலில் குறிப்பிட்ட Century அடிப்பது என்பது வேளாண்மையிலே நூற்றுக்கு நூறு குறிக்கோள் எதுவோ, அந்தக் குறிக்கோளை அடைவது என்ற அடிப்படையில். அதற்காகவே, இந்தப் படிப்பு நேரடியாகத் தேவை என்ற நிலை இல்லை என்று நான் சொன்னேன். இரண்டாவதாக பட்டப்படிப்பு படித்தவர்கள் வேலை இல்லை என்று சொல்கிறபோது, அரசாங்கம் வேலை தர வேண்டும் என்று கேட்கிறார்களே தவிர, அவரவர்கள் படித்த அந்தத் துறையில், மருத்துவமாக இருந்தாலும், பொறியியலாக இருந்தாலும், ஆசிரியர் பயிற்சியாக இருந்தாலும், அந்தப் பயிற்சியைப் பெற்றவர்கள் தாங்களே, தங்களுடைய பயிற்சிக்கு ஏற்ற பணிகளில் ஈடுபடுவதாக அவர்கள் தெரிவிப்பதில்லை. அவர்கள் தங்களுக்கு வேலையை அரசு தர வேண்டுமென்று கேட்கிறார்கள். வேளாண்மைத் துறை அமைச்சருக்கு ஒன்றரை ஆண்டு காலமாக அந்த வேளாண்மைத் துறையிலே பட்டம் பெற்றவர்களுக்கு எப்படி வேலை தருவது என்பதற்காகவே அதை ஒரு குறிக்கோளாக அவர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, படிக்கவும் வைத்துவிட்டு, அதற்குப் பின்னர் அவர்களுக்குரிய சம்பளத்தோடு வேலையும் கொடுப்பது என்று சொன்னால், பொதுவாக எந்த அரசாங்கத்தாலும் இயலாது, எந்தப் புதிய அரசாங்கம் வந்தாலும் அதனாலும் இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 466, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.



466—

### சங்கனூர் பள்ளத்தை சீரமைத்தல்

***10748—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரின் மத்தியில் செல்லும் சங்கனூர் பள்ளத்தை சீரமைக்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூரில் சங்கனூர் பள்ளம் ஆற்றில் வெள்ளத் தடுப்புப் பணிக்கான முன்னோடி அறிக்கை 1997-98ஆம் ஆண்டு விலை விகிதப்படி ரூ.33.00 கோடிக்கு தயாரிக்கப்பட்டு, தற்போது பரிசீலனையில் உள்ளது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் நகரின் மத்தியில் செல்லக்கூடிய இந்தச் சங்கனூர் பள்ளமானது, மழைக்காலத்திலே வெள்ளம் மிகுதி காரணமாக அந்தப் பகுதியிலே மிகுந்த சேதத்தை ஏற்படுத்துகிறது. சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பு 15 கோடி ரூபாய் செலவிலே அந்தச் சங்கனூர் பள்ளத்தை சீரமைப்பதாக ஒரு திட்டம் இருந்தது. அதுமட்டுமல்லாமல் இந்தச் சங்கனூர் பள்ளத்தில் ஒரு பகுதியை சின்னவேடம்பட்டி குளத்திற்கு திருப்பி விடுவதற்கு ஒரு கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கால்வாயை அகலப்படுத்தாததன் காரணமாக இந்தச் சங்கனூர் பள்ளத் தண்ணீர் அந்தக் கால்வாயிலே சென்று, சின்னவேடம்பட்டி குளத்தை முழுமையாக அடைவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஒன்று, அந்தக் கால்வாயை அகலப்படுத்த வேண்டும் அல்லது சங்கனூர் பள்ளத்தை இன்னும் நல்ல முறையிலே சீரமைத்து, இந்த நகருக்கு வெள்ள காலத்திலே சேதம் அதிகம் ஏற்படாமல் காப்பாற்ற வேண்டும். இந்த இரண்டிலே எதை அரசு செய்வதற்கு முன்வரும் என்று தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சங்கனூர் பள்ள கால்வாயிலிருந்து, கடலூர்

என்ற இடத்திலிருந்து ஒரு கால்வாயை வெட்டி சின்னவேடம்பட்டிக்கு நாங்கள் அந்தத் தண்ணீரைக் கொண்டு போகிறோம். அதில் 195 கனஅடி தண்ணீர் போகக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. மேலும், மேற்குத் தொடர்ச்சி மலையிலே அதிகமான மழை பெய்யும் காலங்களிலே சங்கனூர் பள்ளத்திலே வெள்ளம் அதிகமாக வருகிறது. எனவே, அந்தத் தண்ணீர் மிகுதியாக வரும்போது, அந்தக் கால்வாய்க்குப் போக மீதி தண்ணீர் ஊருக்குள்ளே வந்து, கடைசியிலே சங்கனூர் ஏரியிலே வருகிறது. எனவே, அதைச் சீரமைக்க வேண்டும் என்பதற்காக 33 கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் அனுமதி கிடைத்த பிறகு நில நிருவாக ஆணையாளருக்கு அது வந்து, பிறகு அரசுக்கு வரும். ஆனால், அதேநேரத்திலே சின்னவேடம்பட்டிக்கு தண்ணீரை இன்னும் அதிகமாகக் கொண்டு வர முடியுமா என்பதை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 467, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**467—**

### இறவைப் பாசனத் திட்டம்

***15744—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, வல்லம்வாரி வாய்க்காலில் தலையாமங்கலத்தில் விவசாயிகள் நலன் கருதி இறவைப் பாசனத் திட்டம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு நிறைவேற்றப்படுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, வல்லம்வாரி வாய்க்காலில் தலையாமங்கலத்தில் விவசாயிகள் நலனைக் கருதி இறவைப் பாசனத் திட்டம் தொடங்க ஆய்வு செய்யப்பட்டு,





மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்களின் ஆய்வில் உள்ளது.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் கிட்டத்தட்ட 500 ஏக்கர் பாசன வசதியைப் பெறும். இதனை ஆய்வில் எடுத்துக்கொண்டமைக்காக மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் அணையின் சிறுதலை ஏரி ஒரத்தநாடு கிராமத்திலிருந்தும் இப்படிப்பட்ட ஒரு திட்டத்திற்கு முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிறது. அதுபோல திருவாரூர் மாவட்டம், கானகம் வடிகால் வாய்க்காலின் மூலமாக இறவைப் பாசனத் திட்டத்திற்காக முக்கம் காசனூர் கிராமத்திலிருந்தும் முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆக, 3 திட்டங்களையும் இந்த ஆண்டே எடுத்துக்கொள்வதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல் 500 ஏக்கர் அல்ல. குலமங்கலத்திலே 500 ஏக்கர், தலையாமங்கலத்திலே 190 ஏக்கர், நெல்வாசல் தென் பகுதியிலே 150 ஏக்கர், சின்னபொன்னப்பனார் பகுதியிலே 131 ஏக்கர் ஆகிய இடங்கள் பாசனம் பெறும். அது தேவை என்ற காரணத்தை உணர்ந்துதான் அரசு அது குறித்து ஆய்வு நடத்தியிருக்கிறது. தலைமைப் பொறியாளர் அவர்களிடத்திலே அந்தத் திட்ட உருவாக்கம் இருக்கிறது. அது பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலைப் பெற்றபிறகு, அரசுக்கு வருகிறபோது உரிய நிதிநிலைக்கு ஏற்பவும், அவசியம் என்று கருதினால் அந்தத் திட்டத்தை நிறைவேற்றவும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீர்ப்பாசன நீர் மேலேற்றும் திட்டத்தைப் பற்றி கடந்த இரண்டு ஆண்டுகளாக மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரிடம் ஒரு கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயும், தங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலேயும், இதற்குரிய நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாக ஆறுகளிலே Bed Dam கட்டுவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு

இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பாசன நீர் மேலேற்றும் இறவை திட்டத்திற்கான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி ஒதுக்கப்பட்டு இருந்தால் நான் ஏற்கெனவே கொடுத்திருக்கிற திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, அசேசம் கட்டேரி வாய்க்காலிலே பாதி கட்டப்பட்ட நிலையிலே நிற்கிற அந்தப் பாசன நீரேற்றுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வாரா என்பதை அறிய விரும்புவதோடு, இன்றையதினம் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 63-வது வயது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள், அவர்களை வாழ்த்த வயதில்லை என்றாலும் நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்களின் சார்பிலே நான் வாழ்த்துகளை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறவைப் பாசனத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற கிட்டத்தட்ட 20,25, இறவைப் பாசனத் திட்டங்கள் பல்லாண்டு காலமாக பழுதடைந்து போய் கேட்பாரற்றுக் கிடந்தது. ஆனால், அதிலே ஒன்றிரண்டு என்று இல்லாமல், இந்த ஆண்டு அத்தனை இறவைப் பாசனத் திட்டங்களையும் எடுத்து, சீரமைத்து, விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய வகையிலே மாற்றியமைப்பதற்காக தலைவர், நம்முடைய முதல்வர் அவர்கள் கிட்டத்தட்ட 60 இலட்சம் ரூபாய்க்கு மேலே ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதை என்னுடைய மானியக் கோரிக்கையிலே தெரிவித்தேன். திரு. இராசமாணிக்கம் கேட்டது, புதிதாக இறவை பாசனம் அமைக்கப்படுமா என்பது குறித்து. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பார்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நாளுக்கு நாள் நீராதாரம் குறைந்து கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் நேரடியாக வாய்க்கால் மூலமாக விவசாயத்திற்குத் தண்ணீர் பாய்கின்றபோது, 4. 5 ஏக்கருக்கு பாயக்கூடிய அந்த நீர் ஒரே ஒரு ஏக்கருக்குத்தான் பாயக்கூடிய சூழ்நிலை [illegible]. அதை மாற்றி அமைக்கக்கூடிய வகையில் எதிர்காலத்திலே தமிழக அரசு திட்டம் தீட்டுகின்றபோது வாய்க்காலை



அமைத்து, அதிலே இறவைப் பாசனத்திற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து இன்னும் இலட்சக்கணக்கான ஏக்கர்களை விவசாயத்திற்குப், பயன்படுத்திக்கொள்ளக்கூடிய சூழ்நிலையை அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்க்கால் மூலம் தண்ணீர் வயலுக்குப் பாய்வது என்பது வேறு. இறவைப் பாசனம் என்பது வேறு. வாய்க்காலிலே சரியாகப் போய் பாய வேண்டும், நீர் வீணாகக்கூடாது என்பதற்காகத்தான் விவசாயத் துறையிலே Command Area Development என்பார்கள், இருக்கின்ற தண்ணீரை அங்கேயிருக்கின்ற சிறு, சிறு வாய்க்கால்களையும் செம்மைப்படுத்தி, வயலிலேயே கொண்டு போய் சேதாரம் ஆகாமல் விடுகிற காரியத்தை நம்முடைய விவசாயத் துறையினர் செய்கிறார்கள். இருக்கிற வாய்க்கால் பழுதடையாமல் பொதுப் பணித் துறை செய்கிறது. இறவைப் பாசனம் என்பது தண்ணீர் போக முடியாத இடங்களுக்கு தண்ணீரை எடுத்துக் கொண்டுபோய் கொடுக்கிற அந்தக் காரியத்தைச் செய்வது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு அமைந்த புதிதிலேயே என்னுடைய புவனகிரி தொகுதி, மணிக்கொல்லை கிராமத்திற்கு சுமார் 900 ஏக்கருக்குப் போகக்கூடிய வகையிலே பரவ நாட்டிலிருந்து இறவைப் பாசனத்திற்கு நீர் வேண்டுமென்ற திட்டத்தை அளித்திருந்தோம். இதுவரை அதை நடைமுறைப்படுத்தவில்லை. இந்த ஆண்டிலாவது அதை அரசு நடைமுறைப்படுத்த ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தொகுதியிலே இறவைப் பாசனத்தைப் பற்றி இதுவரையிலே அவர் கேள்வி கேட்கவில்லை. இனிமேல் கேட்கட்டும் அதற்கு விவரமான பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பல ஆண்டுகாலமாக வைக்கப்பட்ட கோரிக்கைக்கு, சமீபத்திலே பொது

[1999 ஏப்ரல் 21

பணித் துறை அமைச்சர் தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற முதலை முத்துவாரியை ஆழப்படுத்துவதற்கான திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால், திருவாரூர், நாகை மாவட்டங்கள்கூட வெள்ளப் பாதிப்பிலிருந்து மீட்கப்பட பெரும் உதவியாக இருக்கும். இந்த ஆண்டு தொடங்கப்பட வேண்டிய இந்தத் திட்டம் இந்த ஆண்டே நிறைவேற்றப்படுமா? அதற்குரிய நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலைமுத்துவாரியில் அணை கட்டுவதற்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய 'Tender Schedule Form' பெறுவதற்கு இன்றோ நாளையோ கடைசி நாள் என்று கருதுகிறேன். எனவே, Tender விடப்பட்டிருக்கிறது. Tender விடப்பட்டதிலேயிருந்து 12 மாதங்களுக்குள் அல்லது 15 மாதங்களுக்குள்ளாக அணை கட்டித் தர வேண்டும் என்று அதற்கு நிபந்தனை போடப்பட்டிருக்கிறது. எனவே, முதலைமுத்துவாரி அணை இந்த ஆட்சிக் காலத்திலே திறக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 468, மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**468—**

### வல்லக்கோட்டைக்குப் பேருந்து

***25815—மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி (பேரவைத் துணைத் தலைவர்):**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாரிமுனையிலிருந்து அமைந்தகரை வழியாக வல்லக்கோட்டைக்குப் புதிய பேருந்து விடுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1999 ஏப்ரல் 21]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி இருக்கையில் இல்லை.

வினா எண் 469, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**469—**

### விக்கிரமன் ஆற்றின் குறுக்கே பாலம்

***14347—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியத்தில் பிரசித்தி பெற்ற திருமணஞ்சேரி திருக்கோவிலுக்குச் செல்லும் சாலையில் விக்கிரமன் ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்பாலப் பணி அரசால் ஒப்புதலளிக்கப்பட்டு, செயலாக்கத்திற்கு மேற்கொள்ளப்பட உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 470, திரு. செ. மதிவாணன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**470—**

### பயணியர் விடுதி கட்டுதல்

***18216—திரு. செ. மதிவாணன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 ஏப்ரல் 21

—காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தொகுதியில் கடப்பாக்கம் வழியாகச் செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலையில் பயணியர் விடுதி கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிதிப் பற்றாக்குறையினால் நெடுஞ்சாலைத் துறையால் கிழக்குக் கடற்கரைச் சாலையில் பயணியர் விடுதி கட்டும் வாய்ப்புகள் அண்மைக் காலத்தில் இல்லை.

**திரு. செ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சிறுப்பாக்கம் தொகுதி, இடைக்கழிநாடு பேரூராட்சி வழியாகச் செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலையில் மாண்புமிகு அமைச்சர்களோ, சட்டமன்ற உறுப்பினர்களோ, உயர்மட்ட அதிகாரிகளோ தங்கிப்போக பயணியர் விடுதி அவசியம் தேவைப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டிலாவது அதை ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல நிதிநிலைதான் இதற்குக் காரணம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல அங்கே ஒரு பயணியர் விடுதி அவசியம் தேவை என்பதை உணர்கிறோம். இப்போது கடப்பாக்கம் வழியாகச் செல்லக்கூடிய தேன்பாக்கம் என்ற இடத்தில் ஒரு சிறிய பயணியர் விடுதி இருக்கிறது. அது சரியான முறையில் இல்லை என்பதும் எனக்குத் தெரியும். இருந்தாலும், நிதிநிலை சரியாகிறபோது மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 471, திருமதி ஏ.ஆர். வேடம்மாள். மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 21]

**471—**

**அரூரில் நகரக் கூட்டுறவு வங்கி தொடங்குதல்**

***9802—திரு. ஏ.ஆர். வேடம்மாள்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், அரூரில் நகரக் கூட்டுறவு வங்கியினைத் தொடங்கிடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தர்மபுரி மாவட்டம், அரூரில் நகரக் கூட்டுறவு வங்கி தொடங்குவது குறித்த முன்மொழிவு இந்திய ரிசர்வ் வங்கியின் ஒப்புதல் பெறுவதற்காக 21-2-1999 அன்று அனுப்பப்பட்டுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியின் ஒப்புதல் பெற்றபின் அரூரில் நகரக் கூட்டுறவு வங்கி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 472, திரு. கு. மனோகரன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**472—**

**கிளைச் சிறையை விரிவுபடுத்துதல்**

***13305—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி நகரில் உள்ள கிளைச் சிறையை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தர்மபுரி நகரில் உள்ள கிளைச் சிறையை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி நகரிலுள்ள கிளைச் சிறை சுமார் 40,50 கைதிகளை அடைக்கக்கூடிய ஏழு அறைகளைக் கொண்டதாகும். அதற்குமேல் கைதிகள் வந்தால் சேலம் மத்திய சிறைச்சாலைக்குத்தான் கொண்டு செல்லும் நிலை உள்ளது. தர்மபுரி நகர் மாவட்டத் தலைநகர். மாவட்டத் தலைநகரிலுள்ள இந்தக் கிளைச் சிறையை மாவட்டச் சிறையாக மாற்றி, கிளைச் சிறையின் சுற்றுச் சுவரை உயர்த்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, தர்மபுரியில் அமைந்திருக்கின்ற கிளைச் சிறையில் மொத்தம் அங்கீகரிக்கப்பட்ட இடம் 36. இதிலே விசாரணைக் கைதிகள், பல சந்தர்ப்பங்களிலே அதிகமாக இருக்கிறார்கள் என்பது உண்மை. அதற்காக அந்தச் சிறை விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பது கட்டாயமல்ல. ஏனென்றால், விசாரணைக் கைதிகளை சேலம் சிறைக்கு எடுத்துச் செல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று அது பழுதுபார்க்கப்பட வேண்டும். அதன் சுற்றுச் சுவர்கள் எழுப்பப்பட வேண்டும் என்பதில் சிறைத் துறைக்கு ஒருமைப்பாடு உண்டு. அதிகமாக 4 இலட்சம் ரூபாயிலே ஒரு திட்டத்தைத் தயாரித்து அதை அரசுக்கு அனுப்ப இருக்கிறார்கள். நிதித் துறையினுடைய ஒப்புதலோடு அடுத்த ஆண்டு அந்தப் பழுதுபார்க்கும் பணியை, சுற்றுச் சுவரை உயர்த்துகின்ற பணியை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 473, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.



**473—**

**விக்கிரமங்கலத்தில் சார் பதிவாளர் அலுவலகம்**

***16018—திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலத்தில் பத்திரப் பதிவு சார் பதிவாளர் அலுவலகம் திறக்கும் உத்தேசம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உசிலம்பட்டி தொகுதியில் விக்கிரமங்கலம், அதைச் சுற்றியுள்ள 50 கிராம மக்கள் வாடிப்பட்டி தாலுகாவிற்கு நிலப் பதிவு செய்யச் சென்று கொண்டிருக்கின்றார்கள். எனவே, உசிலம்பட்டி தாலுகாவில், விக்கிரமங்கலத்தைச் சுற்றியிருக்கின்ற 50,60 கிராம மக்களுக்கு விக்கிரமங்கலத்தை மையமாகக் கொண்டு ஒரு பத்திரப்பதிவு சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட வேண்டுமென்று தொடர்ந்து கோரி வருகிறேன். அதற்கான சரியான புள்ளிவிவரங்களும் அனுப்பப்பட்டுள்ளன. எனவே, மீண்டும் அரசு பரிசிலனை செய்து, விக்கிரமங்கலத்தில் பத்திரப் பதிவு சார் பதிவாளர் அலுவலகம் திறக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் உசிலம்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்தைப் பிரித்து விக்கிரமங்கலம் பாப்பாப்பட்டியிலே சார் பதிவாளர் அலுவலகம் அமைக்கப்படுமா என்ற கேள்விக்குத்தான் அந்தப் பதிவு மாவட்டத்திலே இருக்கின்றவர்கள் அதிலிருந்து எத்தனை கிராமத்தைப் பிரிக்க முடியும், அதிலே போதுமான அளவிற்கு

ஆவணங்கள் பதிவு ஆகுமா என்பதைக் கணக்கிட்டுத்தான், இயலாது என்று கூறியிருக்கின்றார்கள். ஆனால், துணைக் கேள்வியிலே, அவர்கள் வாடிப்பட்டி பகுதியை அதிலே சேர்க்க வேண்டுமென்று சொல்லி இருக்கின்றார்கள். அப்படி எந்தெந்தக் கிராமங்களைச் சேர்க்க முடியும், எதிலிருந்து பிரித்துச் சேர்க்க முடியும் என்ற புள்ளிவிவரங்களைக் கொடுத்தால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 474, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**474—**

### திருமானூரில் சார் பதிவாளர் அலுவலகம்

***18139—திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, திருமானூரில் பொதுமக்கள் நலன் கருதி சார் பதிவாளர் அலுவலகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து திருச்சி மாவட்டத்திற்குச் சென்று பதிவு செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. திருமழபாடி, கன்ராயத்தம், புதுக்கோட்டை, செண்பகக்குடிகுளம் வாய்க்கால்களெல்லாம் பெரம்பலூர் மாவட்டத்திலே இருக்கின்றன. இந்தக் கிராமங்களில் உள்ளவர்கள் எல்லாம் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த புள்ளம்பாடியில் பதிவு செய்கிறார்கள். இப்பகுதியிலே பல்வேறு வசதிக் குறைவுகள் பொதுமக்களுக்கு ஏற்படுகின்றன. ஆகவே,





பொதுமக்களின் நலனைக் கருதி திருமானூரிலே ஒரு சார் பதிவாளர் அலுவலகத்தைப் புதிதாகத் திறந்து வைத்தால் பொதுமக்களுக்குப் பல்வேறு சிரமங்கள் குறையும். ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதோடு, அரியலூர் ஒன்றியத்திலேயிருந்து புதிதாகத் தொடங்கப்பட்ட திருமழக்குறிச்சி சார் பதிவாளர் அலுவலகத்தில் பல்வேறு கிராமங்களை இணைத்திருக்கின்றார்கள். அதனால் பல்வேறு சிரமங்கள் அந்தப் பகுதி மக்களுக்கு ஏற்படுகின்றன. குறிப்பாக, கோப்புளியாங்குடிக்காடு, காமனூர், அம்பாவூர், ஐக்காளி, இன்னும் பல்வேறு கிராம மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகிறார்கள். மீண்டும் மறுபரிசீலனை செய்து அரியலூரிலே சார் பதிவாளர் அலுவலகம் திறந்து அங்கே பதிவு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் திருமானூரிலே சார் பதிவாளர் அலுவலகம் அமைக்க வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றார்கள். திருமானூருக்கு மேற்கே புள்ளம்பாடி 12, 14 கிலோமீட்டர் தொலைவிலே உள்ளது. கிழக்கே விக்கிரமங்கலம் 12 கிலோமீட்டர் தொலைவிலே உள்ளது. வடபகுதியிலே 12 கிலோமீட்டரிலே கீழப்பழுர் உள்ளது. ஆக, 3 சார் பதிவகங்கள் திருமானூரைச் சுற்றியே அமைந்திருக்கின்றன. இந்தச் சார் பதிவகங்களின் ஆவணங்களுடைய மொத்தப் பதிவு எண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒரு சார் பதிவகத்திற்குக் குறைந்தது இரண்டாயிரம் ஆவணங்களாவது வருஷத்திற்குப் பதிவாக வேண்டும். புள்ளம்பாடியைத் தவிர கீழப்பழுர், விக்கிரமங்கலம் ஆகிய இரண்டு சார் பதிவகங்களிலே மிகக் குறைவாகத்தான்—இரண்டாயிரத்திற்குக் குறைவாகத்தான்—பதிவாகியிருக்கின்றது. அதனால்தான், இந்தக் கேள்வி எழாது, இந்த வாய்ப்பு இல்லை என்று உங்களுக்குச் சொல்லியிருக்கின்றேன். எனக்குக் கொடுத்திருக்கின்ற தகவலினுடைய அடிப்படையிலே இந்த 3 சார் பதிவகங்களுக்குத் திருமானூரிலேயிருந்து செல்வதற்குப் போக்குவரத்து வசதி மற்றும் எல்லா வசதிகளுமே போதுமான அளவிற்கு இருக்கின்ற காரணத்தால் அது இயலாது என்றுதான் நான் கருதுகின்றேன். அடுத்து, அவர்கள் அரியலூர் பதிவு மாவட்டத்திலே சில கிராமங்களை இணைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

[1999 ஏப்ரல் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. அமரமூர்த்தி.

முற்பகல் 10-05

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், புள்ளம்பாடியும், கீழப்பழுரும், விக்கிரமங்கலமும் 12 கிலோமீட்டர் தூரத்தில்தான் இருக்கிறது என்று சொன்னார்கள். விக்கிரமங்கலம் கிட்டத்தட்ட 30 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. அதேபோல் கீழப்பழுர் கிட்டத்தட்ட 20 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. புள்ளம்பாடி கிட்டத்தட்ட 18 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. மேலும் போக்குவரத்து வசதிகளும் எங்களுக்குக் குறைவாக இருக்கின்றது. அதற்கே அந்த அமைச்சரிடம் கேட்டுக்கொண்டிருக்கிறேன். பேருந்தே எங்களுக்குக் கிடையாது. ஜனங்கள் பேருந்தில் போனால் மேலேதான் ஏறிப் போகிறார்கள். ஆகவே, அந்தச் சிரமத்தைக் குறைக்க வேண்டும் என்பதற்காகத்தான் திருமானூரில் சார் பதிவாளர் அலுவலகம் கேட்டோம். சார் பதிவாளர் அலுவலகம் புதிதாகக் கொடுத்தால் இந்தச் சிரமம் எல்லாம் குறையும் என்பதற்காகத்தான் மாண்புமிகு அமைச்சரிடத்திலே இந்தக் கேள்வியைக் கேட்டேன். ஆகவே, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து திருமானூரில் சார் பதிவாளர் அலுவலகம் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் எந்தச் சார் பதிவாளர் அலுவலகமும், குறைவான பதிவுகள் வருகின்றன என்பதற்காக மூடப்படவில்லை. அரசு அளவிலே இதை ஒரு கொள்கை முடிவாக எடுத்திருக்கிறோம். ஆனால், கடந்தகால அரசில் கடந்த 1991-96 ஆம் ஆண்டு வரை ஆண்டுக்கு 2000 பதிவுகளுக்கு கீழே இருந்தாலோ அல்லது 1000 பதிவுகளுக்குக் கீழே இருந்தாலோ வருமானம் இல்லை என்று சொல்லி மூடப்பட்டிருக்கின்றன. ஒரு சார் பதிவாளர் அலுவலகத்தை ஓராண்டு நடத்த வேண்டுமானால் 5 லட்சம் ரூபாய் அரசுக்குச் செலவாகிறது. ஆகவே, அந்தச் செலவைக்கூட சரிக்கட்ட முடியாத அளவுக்கு இருக்கிற சார்பதிவாளர் அலுவலகங்களை மூடியிருக்கிறார்கள். 1991-96 ஆம் ஆண்டு வரையில் 5 சார் பதிவாளர் அலுவலகங்களை தமிழகத்தில் மூடியிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் இந்த மூன்று சார் பதிவாளர் அலுவலகங்களும் திருமானூரைச் சுற்றியே அமைந்திருக்கின்றன. ஆவணங்களும் குறைவாகப்



1999 ஏப்ரல் 21]

பதிவாகியிருக்கின்றன என்ற புள்ளிவிவரங்களை எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் தூரத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். எனக்கு 14, 12, 12 கிலோமீட்டர் என்றுதான் தகவல் தரப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், தூரம் கூடுதலாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எந்தெந்தக் கிராமங்களை இணைக்க முடியும் என்பதை அவர்கள் தெரிவித்தால் நல்லது. இங்கேகூட பதிலுரைக்கின்றபோது ஒரு கிராமத்தை இணைக்க வேண்டுமென்றால் அந்தக் கிராமத்தின் ஒப்புதல் இல்லாமல் இன்னொரு சார் பதிவாளர் அலுவலகத்திலே இணைப்பது என்பது இயலாத காரியம். ஆகவே, எந்தெந்தக் கிராமங்களை திருமானூரில் இணைக்க வேண்டுமென்று தெரிவித்தால், அந்தக் கிராம மக்களுடைய ஒப்புதலைப் பெற்றபின், அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் அ. மணி.

**டாக்டர் அ. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உளுந்தூர்பேட்டை தொகுதியில் தியாகதுருக்கம் ஒன்றியத்திலே கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு மேலாக சார் பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. அதுசம்பந்தமாக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேகூட ஒரு கோரிக்கை வைத்துள்ளேன். அதை இந்த ஆண்டே எடுத்துக்கொண்டு. அங்கே அரசுக் கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தியாகதுருக்கத்திலே புதிய சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டப்படுவதற்காக 13 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரும்புலிகுறிச்சியிலே சில கிராமங்கள் சேர்க்கப்பட்டதன் விளைவாக மாண்புமிகு உறுப்பினர் அமரமூர்த்தி

[1999 ஏப்ரல் 21

அவர்களுடைய தொகுதியிலே சில பாதிப்புகள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இரும்புலிகுறிச்சியிலே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுத்தான் அங்கே சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட்டிருக்கிறது. முன்பு எதிர்பார்த்ததைவிட இப்போது கூடுதலாகவே பல பதிவுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரும்புலிகுறிச்சியில் திறக்கப்பட்டிருக்கிற சார் பதிவாளர் அலுவலகம், ஏற்கெனவே பல்வேறு இடங்களிலே மூடப்பட்ட சார் பதிவாளர் அலுவலகங்களைப்போல மூடப்படாமல் பார்த்துக்கொள்ள ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இரும்புலி குறிச்சி சார் பதிவாளர் அலுவலகம் நிச்சயமாகத் தொடர்ந்து நடக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்காயத்தில் சார் பதிவாளர் அலுவலகம் ஒன்று வேண்டுமென்று பல்லாண்டுகளாகத் தொடர்ந்து கோரிக்கைகள் வைத்திருக்கின்றோம். ஜவ்வாது மலையில் உள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களில் இருக்கக்கூடிய மக்கள் ஆலங்காயத்திற்குத்தான் வர வேண்டும். வாணியம்பாடி வெகு தூரத்தில் இருக்கிறது. எனவே, இந்த ஆண்டாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலங்காயத்திற்கு முன்னுரிமை வழங்கி அங்கே சார் பதிவாளர் அலுவலகத்தைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆலங்காயத்தில் சார் பதிவாளர் அலுவலகம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். அதுபற்றி அரசு ஆய்வு செய்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 478, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 21]

478—

## ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் பள்ளிகள்

***21709—திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர் தொகுதியில் குறிப்பாக மத்திகிரி, பேரிகை, சூலகிரி மற்றும் பாகலூரில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் பள்ளிகள் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே மத்திகிரி, பேரிகை, சூலகிரி மற்றும் பாகலூரில் மிக ஏழ்மையான ஆதிதிராவிட மக்கள் வசித்து வருகிறார்கள். ஆகவே, அங்கே ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் பள்ளிகள் ஏற்படுமானால் அவர்களுக்குச் சலுகையாக இருக்கும். படிப்பிற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அதை மறுபரிசீலனை செய்து, அதிலே இரண்டு ஊர்களிலாவது ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் ஆரம்பிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பள்ளிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலம் தற்போது தொடங்குவதில்லை என்று அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. ஆகையால், பள்ளிக் கல்வித் துறை மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய முன்மொழிவுகள் பெறப்படுமானால், தகுதியின் அடிப்படையில்,

[1999 ஏப்ரல் 21

மேற்கண்ட கிராமத்தில் பள்ளி தொடங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 475, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**475—**

## குருவாடிப்பட்டியில் கால்நடை மருத்துவமனை

***11658—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், குருவாடிப்பட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம் குருவாடிப்பட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குருவாடிப்பட்டி கிராமம் கொஞ்சம் நகரத்தைவிட்டுத் தள்ளி இருக்கின்ற பகுதி. 20 கிலோமீட்டர் தள்ளி இருக்கிறது. அதைச்சுற்றி ஆலக்குடி, மண்ணியம்பட்டி, வைரப்பெருமாள்பட்டி, சித்திரைக்குடி, இப்படிப் பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன. இந்த இடங்களில் கால்நடைகளும் மிகுதியாக இருக்கின்றன. அந்த ஊரிலே கால்நடை மருத்துவமனை அமைத்தால் நல்லது என்று அந்தப் பகுதி மக்கள் சொல்கின்றார்கள். அரசு அதைப் பரிசிலனை செய்து, அங்கு ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குருவாடிப்பட்டி கிராமத்தில் குறைந்த அளவே



1999 ஏப்ரல் 21]

கால்நடைகள் உள்ளன. குருவாடிப்பட்டி கிராமத்திற்கு 3 கிலோமீட்டர் தூரத்தில் வல்லம் கால்நடை மருந்தகமும், 2 கிலோமீட்டர் தூரத்தில் ஆலக்குடி கால்நடைக் கிளை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. குருவாடிப்பட்டி கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு மேற்படி வல்லம் கால்நடை மருந்தகத்திலும், ஆலக்குடி கால்நடைக் கிளை நிலையத்திலும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தஞ்சை ஊராட்சி ஒன்றியத்தில், வல்லம், கள்ளப்பரம்பூர், மேலமாத்தூர், அம்மாபேட்டை ஆகிய இடங்களிலே கால்நடை மருந்தகங்களும், சித்திரைக்குடி, மேலவளி, கரந்தை, மாரியம்மன் கோயில், சூலமங்கலம், மாவாய்க்கோரை, ஆலக்குடி, நாஞ்சிக்கோட்டை, சூரக்கோட்டை ஆகிய இடங்களில் கால்நடை நிலையங்களும், இந்தக் கால்நடைக் கிளை நிலையங்களுக்கும் அய்யாசாமிபட்டி, சக்கரசாமந்தம், வானம்பூச்சாவடி, வானமார்கோட்டை, நவரசநாயகபுரம், தாளக்குடி, வண்ணாரப்பேட்டை, மாதாகோட்டை, காட்டூர் ஆகிய இடங்களில் கால்நடை பார்வை நிலையங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை மற்றும் நிதி நிலைமை இவற்றைக் கருத்திற்கொண்டு, குருவாடிப்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 476, திரு. எஸ்.எஸ். பொன்முடி, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**476—**

## கோழிக்கறி பதப்படுத்தும் தொழிற்சாலை

***16180—திரு. எஸ்.எஸ். பொன்முடி:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் தொகுதியில் கோழிக்கறியைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலை அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை சட்டமன்றத்திற்கு அளிக்கின்றேன்.

[1999 ஏப்ரல் 21

கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் தொகுதியில் கோழிக்கறியைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலை, அரசுத் துறையால் ஆரம்பிக்கும் திட்டம் இல்லை. எனினும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும், தனியார் நிறுவனம் ஒன்றும் இணைந்து கூட்டுறவு நிறுவனமாக ஆரம்பிக்கும் திட்டம் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக மக்கள் தொகையில் இன்று அதிகமான மக்களால் கோழி இறைச்சி அதிகமாக உண்ணப்படுகிறது. பல்லடம் வட்டத்தில் குறைந்தது 2000-க்கும் மேற்பட்ட கோழிப் பண்ணைகள் உள்ளன. தனியார் கோழிக் குஞ்சுகள் உற்பத்திப் பண்ணைகள் 10 உள்ளன. அரசூரில் அரசின் சார்பாக—TAPCO சார்பாக—கோழிக் குஞ்சுகள் உற்பத்திப் பண்ணை உள்ளது. அங்கு இரண்டு குளிர்பதனக் கிடங்குகள் உள்ளன. மேலும், பல்லடத்திற்கு அருகாமையில் கால்நடைத் துறைக்குச் சொந்தமான சர்வே நம்பர் 103/1 மற்றும் 113/1-ல் 10 ஏக்கர் நிலப் பரப்பும் உள்ளது. ஏற்கெனவே TIDCO-வில் இதற்கு திட்ட அறிக்கையும் உள்ள காரணத்தினால், இந்தத் திட்டத்தை அந்தப் பகுதியில் நிறைவேற்றித் தருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், பொங்கலூரைச் சேர்ந்த திருவாளர்கள் Pioneer கோழிப் பண்ணை உரிமையாளர்கள் தமிழ் நாடு அரசின் தொழில் வளர்ச்சிக் கழகத்துடன் இணைந்து கோழி இறைச்சியைப் பதப்படுத்தி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலை ஒன்றை ரூ.31 கோடி மதிப்பீட்டில் அமைக்க 7-1-1998 ஆம் தேதி கையொப்பமிட்டுள்ளார்கள். இத்தொழிற்சாலையை கோவை மாவட்டத்தில் உள்ள பொங்கலூர், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி ஆகிய இடங்களில் ஏதேனும் ஓர் இடத்தில் நிறுவுவதற்கு இடம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலைக்கான மூலதனம் கீழ்க்காணும் வகையில் அமையக் கூடிய வகையில் அந்தத் திட்டம் உள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ரூ.1.32 கோடி—11 விழுக்காடாகவும், தனியார் நிறுவன ரூ.4.80 கோடி—40 விழுக்காடாகவும், பொதுமக்களின் பங்கு ரூ.5.9 கோடி—49 விழுக்காடாகவும், மொத்த மூலதனம் ரூ.12.02 கோடி ஆகவும், நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன் ரூ.18.38 கோடி



1999 ஏப்ரல் 21]

மாநில அரசின் உதவித் தொகை ரூ. 0.25 கோடி, ஆக மொத்தத் திட்டச் செலவு ரூ.30.65 கோடி. பதப்படுத்திய கோழி இறைச்சி ஏற்றுமதித் தொழில் சர்வதேசச் சந்தையில் ஒரு நிலையான நிலையில் இல்லை. அடிக்கடி விலைச் சரிவு ஏற்படுகிறது. இதைத் கருத்திற்கொண்டும், உள்நாட்டுச் சந்தையில் பதப்படுத்திய கோழி இறைச்சியை விற்பனை செய்வது குறித்தும் பல நிறுவனங்களுடன் பேசப்பட்டு வருகிறது. இந்தத் தொழிலுக்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை கண்டறியப்பட்டு, இந்தத் திட்டம் ஓராண்டு காலத்தில் செயல்படத் தொடங்கும் வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் ஏற்கெனவே விவசாயிகள் நிறைந்த பகுதி. இன்று தண்ணீர் பற்றாக்குறையால் விவசாயம் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டுவிட்டது. விவசாயத்தை அடுத்து விசைத்தறித் தொழில் ஏராளமாக வந்து இன்று மத்திய ஜவுளிக் கொள்கையின் காரணமாக விசைத்தறியும் பாதிக்கப்பட்டுவிட்டது. ஆனால், இன்றையதினம் பல்லடம் பகுதியில் கோழிப் பண்ணைகள் வெகுவாக வளர்ந்து வருகின்றன. ஆகவே, ஏற்கெனவே கால்நடைத் துறைக்குச் சொந்தமான 10 ஏக்கர் நிலப் பரப்பு சின்னிகவுண்டன்பாளையத்தில் இருக்கிற காரணத்தால், அந்தப் பகுதியில் இந்தத் தொழிற்சாலை அமைய ஆவன செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிலகம் அமைப்பதற்கு வேண்டிய இடம், நீர் போன்ற கூறுகளை எல்லாம் அந்தத் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் ஆய்வு செய்துகொண்டு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறும் இடம், பொருத்தமான இடமாக இருந்தால், அதைத் தேர்வு செய்வதற்கு பரிந்துரைக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 477, திரு. உ. திசைவீரன் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 21

477—

## ஆதிதிராவிடர் இனத்தவரைப் பணியமர்த்துதல்

***7974—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்ட ஆதிதிராவிடர் நலத் துறை அலுவலர், TAHDCO மேலாளர் போன்ற பதவிகளில் ஆதிதிராவிடர் இனத்தவரையே பணியமர்த்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆதிதிராவிடர் நலத் துறை அலுவலர், TAHDCO மேலாளர் போன்ற மக்களுக்கு நேரடியாகத் தொடர்புள்ள பதவிகளிலே வருவாய்த் துறையில் பணியாற்றுகின்ற உதவி ஆட்சியர் நிலையில் உள்ளவர்கள் அயற்பணி மூலமாக இப்படிப்பட்ட இடங்களிலே பணியமர்த்தப்படுகிறார்கள். ஆனால், அந்தப் பதவிகளை தண்டனைக்குரிய பதவியாக நினைத்துக்கொண்டு பல நபர்கள் விடுமுறையில் சென்றுவிடுகிறார்கள். எனவே, இதில் தனிக் கவனம் செலுத்தி, ஆதிதிராவிடர் நலத் துறையில் பணிபுரிபவர்களை பணிமூப்பு அடிப்படையில் இப்படிப்பட்ட பணிகளிலே பணியமர்த்த அரசு பரிசிலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் 11-க்கு 5 என்ற சதவிகிதத்தில் பணியமர்த்தப்படுகிறார்கள். தற்போது ஆதிதிராவிடர் நலத் துறையில் பதவி உயர்வு மூத்த கண்காணிப்பாளர் மூலம் வழங்கப்பட்டு, மொத்தமுள்ள 29 மாவட்டங்களில் 7 மாவட்டங்களில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள், ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள். மேலும் 23 TAHDCO மாவட்டங்களுக்கு, அந்தந்த மாவட்டப் பணியிடங்களுக்கு, 4 மாவட்ட



1999 ஏப்ரல் 21]

மேலாளர்கள் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்தத் துறையை தண்டனைக்குரியதாக நினைத்துப் பணியாற்றி வருகின்ற மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலராக இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைக் குறிப்பிட்டுச் சொன்னால் அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுத்து, இந்தத் துறையைச் சீர்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் துறையிலே இருக்கின்றவர்களுக்கு பதவி உயர்வு மூலம் அதிகமான வாய்ப்புகளை வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதிகமான வாய்ப்புகள் மூத்த கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டு, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலராகப் பணியமர்த்தப்பட்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையிலே பணிபுரிகின்ற சாதாரண ஊழியர்கள், அவர்களுடைய பதவி உயர்வு வருகின்றபோது சரியாக அது கூட பிடிக்கப்படுவதில்லை என்று பொதுவாகவே ஒரு புகார் உள்ளது. ஏற்கெனவே என்னிடம் பதவி உயர்வு கிடைக்கவில்லை என்று சொல்லி ஒரு மனுவைக்கூடத் தந்திருக்கிறார்கள். எனவே, இதிலே அதிகக் கவனம் செலுத்தி இந்தத் துறை இதிலே பாதிக்கப்படாமல் இருப்பதற்கு உரிய கவனம் செலுத்தி பதவி உயர்வுகளிலே அவர்களுக்கு உரிய இடம் கிடைக்க ஆவன செய்வீர்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பதவி உயர்வு சரியாக வழங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். எந்த அடிப்படையில், எந்தப் பிரிவைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. குறிப்பாக சொல்ல வேண்டுமானால் இந்த ஆதிதிராவிடர் நலத் துறையில் ஆசிரியர்கள், சமையலர்கள், வரைவாளர்கள், இரவுக் காவலர்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் போன்ற பணியாளர்கள் இருக்கிறார்கள். இதில் எந்தப் பிரிவைத் அவர் குறிப்பிடுகின்றார் என்பது தெரியவில்லை. மேலும் அவர் குறிப்பிட்டுச்

சொல்வாரேயானால், குறிப்பிட்ட குற்றச்சாட்டு இருக்குமேயானால், அதை தகுந்த முன்மொழிவுடன் கொடுத்தால், அதைப் பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 479, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**479—**

**சுற்றுலாத் தலமாக்குதல்**

***14741—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் வட்டம், திருநீர்மலை ரங்கநாதர் திருத்தலத்தைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) எந்த ஓர் இடமும் சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்படுவதில்லை. சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கேற்ப அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. தாம்பரம் வட்டம், திருநீர்மலை அருள்மிகு ரங்கநாதர் திருத்தலத்தைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் திட்டம் தற்போது துறையின் பரிசிலனையில் இல்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருநீர்மலை திருத்தலம் 108 வைணவ திவ்வியத் தலங்களில் ஒன்றாகக் கருதப்படுவதோடு, திருமங்கையாழ்வார் அங்கே நேரடியாக வருகை தந்த அந்தக் காலத்தில் நீர் சூழ்ந்து இருந்த காரணத்தால், அவர் பாடல் இசைத்து, திருநீர்மலை என்று பெயரிட்டதாகவும், அதோடு அங்கு இருக்கின்ற ரங்கநாதர் பெருமான் நின்றான், இருந்தான், கிடந்தான், நடந்தான் என்று நான்கு வகைகளாகக்







காட்சியளிக்கிற சிறப்பு அம்சமுடைய திருத்தலம் என்கிற காரணத்தால், பயணிகள் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. எனவே, சுற்றுலாப் பயணிகளுடைய நலனுக்கு, தக்க வசதிகள் செய்துதர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநீர்மலை திருத்தலம் மற்றும் அந்தக் கோயிலின் பகுதியில் பக்தர்கள் வசதிக்காகக் குடிநீர் வசதி, தங்கும் வசதி, குளியல் அறை, கழிப்பிட வசதி போன்றவைகள் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும், அங்கே திருவிழாக் காலங்களில்தான் பக்தர்கள் வருகை தந்துகொண்டிருக்கிறார்கள். மற்ற காலகட்டங்களில் அதிகமான பக்தர்கள் வருவதில்லை. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, வருங்காலத்தில் சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கை அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 480, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**480—**

**மீன் வளர்ப்பு**

***14964—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணையின் மீன் விற்பனையில் ஆண்டுதோறும் கிடைக்கும் இலாபம் எவ்வளவு?

(ஆ) சாத்தனூர் அணையில் மீன் வளர்ப்பு எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1995-96 ஆம் ஆண்டில் 4.52 இலட்சம் இலாபம் கிடைக்கப்பெற்றது. 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 11.28 இலட்சம் இலாபமாகக்

[1999 ஏப்ரல் 21

கிடைக்கப்பெற்றது. 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 13.59 இலட்சம் இலாபமாக கிடைக்கப்பெற்றது.

(ஆ) 1995-96 ஆம் ஆண்டில், 400 இலட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய இலக்கு அமைத்ததில், 409.50 இலட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்து இலக்குக் குறியை மிஞ்சியுள்ளது.

1996-97 ஆம் ஆண்டில், 400 இலட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய இலக்கு அமைத்ததில், 402 இலட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு, சாதனை இலக்கை மிஞ்சி உற்பத்தித் திறனை மிகைப்படுத்தியுள்ளது.

1997-98 ஆம் ஆண்டில் 155 இலட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய இலக்கு அமைத்ததில், 187.75 இலட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு, இலக்கை மிஞ்சியுள்ளது. சாத்தனூர் அணையில் மீன்வளர்ப்பு பெரிய ரக மீன் குஞ்சுகள் 100 மில்லிமீட்டர் அளவிற்கு வளர்த்து, இருப்பு செய்வதால், அதிக உற்பத்தி கிடைக்கும் என்பதால், சாத்தனூர் அணை மீன் குஞ்சு உற்பத்தி இலக்கு அங்கேயுள்ள இடவசதிக்கு ஏற்ப 155 இலட்சம் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு மீனவர்களுக்கு, சாத்தனூர் அணையில் மீன் பிடிக்கின்ற ஏழை மக்களுக்கு, இந்த ஆண்டு 20 வீடுகளைத் தந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, மீன் பண்ணைகளில் எந்தெந்த மீன் குஞ்சுகள் வளர்க்கப்படுகின்றன? எல்லா வகையான மீன் குஞ்சுகளும் வளர்க்கப்படுமா? மேலும் சாத்தனூர் அணை மற்றும் அதைச் சார்ந்துள்ள பகுதிகளில் உயர் ரக மீன்களான ரோக், கட்லா, மிர்கால் மற்றும் எறால் போன்ற மீன்களை 400 கிராம், 500 கிராம் எடையுள்ள எறாலாகவும், 20, 25 கிலோவரை எடையுள்ள கட்லா, ரோக் போன்ற எறால் மீன்களை எல்லாம் நல்ல நிலையில் வளர்த்து, நல்ல விலைக்கு விற்று இலாபம் ஈட்டிக்கொண்டிருக்கிறார்கள். மேலும், அவற்றை வெளிநாடுகளுக்கு பதப்படுத்தி ஏற்றுமதி செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? இந்த ஆண்டு மீன் குஞ்சுகளைப் பெற்று சென்ற....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எத்தனை துணை வினாக்கள் கேட்பீர்கள்? உட்காருங்கள். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 21]

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்லா, ரோக், மிர்கால் போன்ற மீன் வகைகள் இருப்பு செய்து வளர்க்கப்படுகின்றன. எறால் வகையான மீன்களை எல்லாம் நிச்சயமாக வளர்க்க முடியாது. காரணம் என்னவென்றால் சாத்தனூர் அணையில் 50 அடிக்குத் தண்ணீர் குறைவாக இருப்பதில்லை. எறாலைப் பொறுத்தவரையில் உவர் நீரில் உற்பத்தி செய்யப்படுகிறது. இதுபோன்று அறுவடை செய்யும் காலங்களில் தண்ணீரின் அளவு, இப்போது இருப்பதைவிட, மிகக் குறைவாக இருக்க வேண்டும். அதனால் எறால் வளர்க்க முடியாது. இந்த எறால் சாத்தனூருக்கு வராது. காரணம் என்னவென்றால், தனியார்கள் பண்ணைகளின் மூலம் எறால் வளர்க்கிறார்கள். நன் நீர் எறால்கள் வளர்க்கப்படுகின்றன. அங்கிருந்து தப்பித்து வரும் எறால்கள் மட்டும் இங்கே பிடிக்கப்படுகின்றன. இங்கே எறால் வளர்க்கப்படுமானால், எதிரி மீன்கள், சில மீன்கள் இருக்கின்றன. அவை வளர்க்கப்படும் எறால்களை சாப்பிட்டுவிடும். இந்த அரசைப் பொறுத்தவரையில் தனியார் வளர்க்கின்ற நன்நீர் எறால் பண்ணைக்கு எக்டேருக்கு 30 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

**(அ) மதுரை மாவட்டம், பொட்டிபுரம் கிராம கள் வியாபாரிக்கும், சாராய வியாபாரிக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் காசி நாடார் குடும்பத்தை தீ வைத்துக் கொன்றது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். நான் அடுத்து என்று சொன்னவுடன் எழுந்திருக்கக் கூடாது.

[பேரவைத் தலைவர்] [1999 ஏப்ரல் 21

மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகே பொட்டிபுரம் கிராமத்தில் காசி நாடார் என்பவரின் குடும்பத்தினை தீ வைத்துக் கொன்றது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மு. அப்பாவு, திரு. எஸ்.எஸ். மணி நாடார், திரு. ரா. ஈஸ்வரன், திரு. கே. ரவி அருணன், திரு. சி. வேலாயுதன் மற்றும் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையிலே முதலில் திரு. மு. அப்பாவு, மிகச் சுருக்கமாகப் பேச வேண்டும், வழக்கமாக பேசுவதைக் காட்டிலும்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், கருங்குளத்தில் வசித்து வந்த காசி நாடார் என்பவர் குடும்பத்துடன், திருமங்கலம் அருகே உள்ள பொட்டிபுரத்திற்கு பனையேறும் தொழிலுக்காகச் சென்றார். சாதாரண சுண்ணாம்புப் பதநீரை இறக்கி வந்த அவர், அதில் இலாபம் இல்லை என்பதால், கள் இறக்கினால் அதிக இலாபம் கிடைக்கும் என்று கருதி, என்ன செய்யலாம் என்று யோசித்தபோது, அங்குள்ள கள்ளச் சாராய வியாபாரி, சிங்கத் தேவர் என்பவர் 5 ஆயிரம் ரூபாய் நீ மாதம் தந்தால் காவல் துறையினரை சரி செய்து உனக்கு கள் இறக்க அனுமதி தருகிறேன் என்று சொன்னார். ஆனால், இவர் திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்திற்குச் சென்று, நேரடியாக காவல் துறையினரை அணுகி 1500 ரூபாய் மாதம் ஒன்றுக்குப் பேசி கள் இறக்குவதற்கு அனுமதியைப் பெற்று, கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்டார். கள் விற்பனை அமோகமானது. சாராய விற்பனை குறைந்தது. ஆகவே, சிங்கத் தேவருக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இருந்தபோதிலும், சிங்கத் தேவர் அவரிடம் சென்று கள்ளைக் குடித்துவிட்டு, அவருடைய மனைவி, பிள்ளைகளுக்கு வாங்கிச் செல்வார். ஆனால் அதற்குக் காசு கொடுக்கமாட்டாராம். இந்த நிலையில் சென்ற 4-3-1999 அன்று இரவு 12½ மணி அளவில் ஒரு Bike-லே சிங்கத் தேவர் அவர்களும், அவரோடு அவருடைய நண்பர் ஒருவர், அந்த ஊரிலே உள்ள ஒருவரும் சென்று, அவருடைய நண்பர் காசி நாடாருடைய விடிலில்—அவர்கள் தங்கியிருப்பதை—பதநீர் இறக்குபவர்கள் தங்குகின்ற இடத்தை விடிலி என்று அழைப்பார்கள் - அந்த விடிலிலே—காசி நாடாரை எழுப்பி, உங்களிடம் கள் குடித்ததற்கு பணம் கொண்டு வந்திருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். அவர், இன்று இரவு ஆகிவிட்டது, ஆகவே—காலையிலே வாருங்கள் என்று படுத்துக்கொண்டே பதில் சொல்லியிருக்கிறார். அவர் சென்ற ½ மணி நேரத்தில் விடிலில் தீ பிடித்து எரிந்திருக்கிறது. இவர் மட்டும் வெளியே



1999 ஏப்ரல் 21] [திரு. மு. அப்பாவு]

வந்திருக்கிறார். அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த அவருடைய மாமனார் செல்லக்கண்ணு நாடார், அவருடைய மனைவி பிராட்டி அம்மாள், அவருடைய மனைவி சேர்மகன்னி, அவருடைய மகள்கள் பொண்ணுதாய், மஞ்சுளா, அவருடைய 10 மாத மகன் மகேந்திரன் ஆகிய அனைவரும் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். காசி நாடாருக்கு மட்டும் முகம், முதுகு போன்ற இடங்களில் கடுமையான தீக்காயம் ஏற்பட்டதோடு உடம்பிலே துணியே இல்லாமல் ஓடிவந்து பொட்டிபுரத்திலே ஒரு நண்பரிடம் அவர் கொடுத்த Towel-ஐ அரையிலே கட்டி, T.V.S. 50 பெற்று, காவல் நிலையத்திற்குச் சென்றிருக்கிறார். அங்கே writer மட்டும் இருந்திருக்கிறார். அவரிடம் ஒரு van arrange பண்ணித் தாருங்கள் என்று கேட்டபோது, அவர் இங்கே தொலைபேசி வேலை செய்யவில்லை என்று சொன்னதோடு, Wireless-லும் பேச முடியாது என்று சொல்லி, இங்கே வந்து என்னுடைய உயிரை வாங்காதே, வெளியே செல் என்று அவரை அனுப்பவும், அவர் அங்கிருந்து திருமங்கலம் சென்று, ஒரு van-ஐ அமர்த்தி, பொட்டிபுரம் சென்று, அங்கே தீக்காயங்களால் பாதிக்கப்பட்டவர்களை அந்த van-ல் இரவோடு இரவாக ஏற்றி திருமங்கலம் மருத்துவமனைக்கு எடுத்துவந்து, திருமங்கலம் மருத்துவமனையிலே 'மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறார்கள்' எனவே, மதுரைக்குக் கொண்டு செல்லுங்கள், என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கிருந்து மதுரைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். மதுரை ஆஸ்பத்திரியிலே அவர்களை அனுமதித்ததும், அங்கிருந்த Compounder 50 ரூபாய் தாருங்கள் என்று கேட்டிருக்கிறார். இவரிடம் ஒரு ரூபாய்கூட இல்லை. ஆகவே, அவர்கள் அனைவரையும் மருத்துவமனையிலே அனுமதித்துவிட்டு Van-க்கு பணம் கொடுப்பதற்கும், இந்த Compounder கேட்டப் பணத்தைப் பெறுவதற்காக மேலூருக்குச் சென்று, செய்வதறியாது, தன்னோடு பனையேறும் ஒருவரிடம், மேலூர் முகவரிக்குச் சென்று, அவரிடம் சென்று பணம் பெற்று திரும்ப வந்து பார்த்தபோது, தன்னுடைய குடும்பத்திலுள்ள அவருடைய மாமனார் செல்லக்கண்ணு நாடாரும், பிராட்டி அம்மாளும், அவருடைய 10 மாதக் குழந்தை மகேந்திரனும் இறந்துவிட்டார்கள். மீதி மூன்று பேரும் உயிருக்காகப் போராடி அவர்களும், இரண்டு, மூன்று மணி நேரத்தில், 6 பேர்களும் இறந்துவிட்டார்கள். இந்த நிலையில் அவர்கள் 6 பேரும் இறந்ததும், காவல் நிலைய உதவி ஆய்வாளர் மரியாதைக்குரிய தாணு அவர்கள் அங்கே வந்திருக்கிறார்கள். அதேபோன்று ஆய்வாளர் சுருளி அவர்களும் அங்கே வந்து 'அவர்களுடைய பிணத்தையெல்லாம் நீங்கள்

உங்களுடைய ஊருக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்றால் அதிகமாகச் செலவாகும். ஆகவே, இங்கேயே எரித்துவிடுங்கள் என்று ஓர் ஆலோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அவர், இரவு நடந்த நிகழ்ச்சி, 6 பேர் இறந்த நிகழ்ச்சியையெல்லாம் பார்த்து செய்வது அறியாது திகைத்து, அங்கே மதுரையிலே தத்தனேரி அரசு சுடுகாட்டிலே எரிப்பதற்கு ஒப்புக்கொண்டு 6 பேர்களுடைய சடலங்களையும் எரித்துவிட்டார்கள்.

*முற்பகல் 10-30*

இதில் வேடிக்கை என்னவென்றால், குற்றவாளிகளான சிங்கத் தேவர் மற்றும் அவருடன் வந்தவர்கள்மீது காவல் துறையினர் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல், இவர்கள் இருந்த விடிலில் உள்ள விளக்கு சரிந்து விழுந்து அதிலே தீ பிடித்து விபத்து ஏற்பட்டதாக இந்தியக் குற்றவியல் சட்டம் 174-ன்படி அந்த வழக்கை முடித்து இருக்கின்றார்கள். உண்மையிலேயே பனை ஓலையினால் கட்டப்பட்ட விடிலில் விளக்கு சரிந்து கீழே விழுமானால் அந்த அளவிற்கு தீ பிடிப்பதற்கு வாய்ப்பே இல்லை; ஒருபோதும் அந்த அளவிற்கு தீ பிடிக்காது. அவ்வாறு தீ பிடித்தாலும் ஒரு பகுதியில்தான் தீ பிடிக்குமே தவிர, நான்கு புறமும் தீ பிடிக்கின்ற அளவிற்கு நிச்சயமாக அந்தப் பனை ஓலையிலே தீ பிடிப்பதற்கு வாய்ப்பே இல்லை. ஆகவே, குற்றவாளிகளான சிங்கத் தேவர்மீதும் அவர்களோடு வந்தவர்கள்மீதும் நிச்சயமாக நீங்கள் கொலை வழக்குப் பதிவு செய்து-தண்டனை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, சரியாக நடவடிக்கை எடுக்காத காவல் துறை ஆய்வாளர் திரு. சுருளி அவர்கள்மீதும், உதவி ஆய்வாளர் திரு. தாணு அவர்கள்மீதும், காவல் நிலையத்தில். writer-ஆக இருந்த-உயிருக்கு போராடிச் சென்று, உதவி கேட்டபோது—உதவி செய்யாத writer மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்தக் குடும்பத்தார், 6 பேர்களை இழந்து தவிக்கும் காசி நாடாருடையக் குடும்பத்திற்கு 5 இலட்ச ரூபாய் நிதியையும் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 6 பேரை தீ வைத்து கொளுத்திய சம்பவம் நிச்சயமாக வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இதுபோன்று ஆங்காங்கு நடக்கக்கூடிய





சம்பவங்களுக்கு, சம்பந்தப்பட்ட குற்றவாளிகளின்மீதே வழக்கு தொடர்ந்து—அதாவது தீ வைத்துக் கொளுத்தியவர் பெரிய கள்ளச் சாராய வியாபாரி; ஏகப்பட்ட பொருள் சம்பாதித்து வைத்து இருப்பார் என்று சொல்லுகிறார்கள், அவர்மீது வழக்கு தொடர்ந்து அந்தக் குடும்பத்திற்கு அரசாங்கம் அளிக்க வேண்டிய நிதியை அவர் மூலமாக வழங்குவதற்கு, ஆவன செய்ய வேண்டும். மேலும் இதுபோன்று கஷ்டப்பட்ட நிலையில் வரக்கூடியவர்களிடம் காவலர்கள் மற்றும் மருத்துவமனையில் உள்ள சிப்பந்திகள் நடந்து கொண்ட முறை நிச்சயமாக மன்னிக்க முடியாத குற்றம். எனவே, காவலர்கள், மருத்துவமனையிலே உள்ளவர்கள் எல்லாம் எப்போதுமே Service mentality-யில் இருக்க வேண்டியது அவசியம்தான். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் சிறப்பாக எந்த அளவுக்கு அவர்கள் செயல்பட வேண்டும் என்பதைப் பற்றி ஒரு சுற்றறிக்கை மூலம் அல்லது ஆணை மூலம் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதுபோன்று ஆங்காங்கு நடக்கக்கூடிய சம்பவங்களுக்கெல்லாம் அரசாங்கம் நிதி வழங்க வேண்டும் என்று சொல்வது சற்று சிரமமான காரியம். காரணம், அரசாங்கம் இப்படியெல்லாம் செய்ய வேண்டுமென்று சொன்னால், இப்போது அரசாங்கத்துக்கு நிதி போதாத நிலையில், அது நிச்சயமாக முடியாதுதான். இருந்தாலும், அரசாங்கம் உதவி செய்ய வேண்டும். ஆனால், முடிந்தவரை அந்தக் குற்றவாளிகளிடமிருந்து வசூலித்து நஷ்டஈடு கொடுக்க முடியுமா என்று பரிசீலித்து ஒரு முன்னுதாரணமாக இதிலே அரசாங்கம் செயல்பட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மார்ச் மாதம் 4 ஆம் தேதியன்று மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகே பொட்டிபுரம் கிராமத்தில் காசி நாடாருடைய குடும்பத்தைச் சேர்ந்த 6 பேரை கள்ளச் சாராய வியாபாரிகள் சிலர், அவர்கள் வாழ்ந்த குடிசையோடு தீயிட்டுக் கொளுத்தியதாக அவர் காவல் நிலையத்திலே புகார் கொடுத்தும்கூட, அது பதிவு செய்யப்படவில்லை எனத் தெரிகிறது: காசி நாடாருக்கும் அங்கிருந்த சில கள்ளச் சாராய வியாபாரிகளுக்கும் ஏற்பட்ட மோதலில் அதிலே எந்தவிதத்திலும் சம்பந்தப்படாத அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டு, கொல்லப்பட்டு இருக்கிறார்கள். சாதாரணமாக Chimney விளக்கு விழுந்து குடிசையில்

தீ பற்றி எரிந்தது என்று Section 174-ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது. எனவே, இதில் உண்மை நிலையைக் கண்டறிந்து, அந்தக் குடும்பத்தாருக்கு தக்க நஷ்டஈடு கொடுக்கவும், நீதி வழங்கவும், நீதி விசாரணைக்கு உத்தர விடவேண்டும் என்று இந்த மாமன்றத்தில் வேண்டி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பு குறித்து காவல் துறையின் மூலமாக எனக்குக் கிடைத்துள்ள விவரங்களைப் படிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றே கருதுகின்றேன். இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பில் நம்முடைய மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மு. அப்பாவு, சி. வேலாயுதன் மற்றும் டாக்டர் கிருஷ்ணசாமி ஆகியோர் கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்கள். இதிலே குறிப்பாக, திரு. மு. அப்பாவு அவர்களுடைய உரையை ஒரு வாக்கு மூலமாகவே எடுத்துக்கொண்டு, அந்த அடிப்படையிலே இந்த விசாரணையை நடத்த வேண்டுமென்பதுதான் அரசினுடைய நிலை. ஆனால் இதிலே உண்மையைப் பார்க்கும்போது, அப்பாவு அவர்களுடைய மொழியிலே சொல்ல வேண்டுமானால், கள் வியாபாரிக்கும், சாராய வியாபாரிக்கும் இடையிலே நடைபெற்ற ஒரு தகராறுதான் இந்த அளவிற்கு ஒரு தீ வைப்பிலே போய் முடிந்திருக்கிறது. தீ வைக்கப்பட்டதா அல்லது Chimney விளக்கின் மூலமாக ஏற்பட்டதா என்பது சர்ச்சைக்குரியதாக இருக்கிறது. அவர்கள் குறிப்பிட்ட சாராய வியாபாரிக்கு எதிராக, அந்த ஊரிலே யாரும் 'இவர்தான் இதைச் செய்தார்' என்று சாட்சி சொல்ல முன்வரவில்லை. ஏனென்றால் அவருடைய பெயரிலேயே 'சிங்கம்' என்பது ஒட்டிக்கொண்டிருக்கிறது. அதனால் சாராயச் சிங்கத்திற்கு எதிராக அந்த ஊரிலே உள்ள யாரும் சாட்சி சொல்ல வரவில்லை. இருந்தாலும், போலீசார் இதைத் தக்க முறையிலே விசாரிக்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டிருக்கின்றது. இப்போது மாவட்டக் குற்றப் பிரிவிற்கு இந்த வழக்கு மாற்றப்பட்டுள்ளது. அஃதன்னியில் அதிகாரிகளும், பேரையூர் வட்டாட்சியர் மற்றும் உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் ஆகியோரும் விசாரணை செய்து வருகின்றார்கள். அதிலே ஒன்றைச் சொன்னார்கள். தீ விபத்திலே காயம்பட்டு, உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவர்கள் மதுரை மருத்துவமனையிலே சேர்க்கப்படுவதற்காக எடுத்துச் சென்றபோது அங்குள்ள Compounder



50 ரூபாய் கேட்டார் என்று. அவருடைய பெயரை தயவுசெய்து நம்முடைய உறுப்பினர் அப்பாவு அவர்கள் தெரிவிப்பாரேயானால், உரிய நடவடிக்கை மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் மூலமாக எடுக்கப்படும் என்ற உறுதியை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன். உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றவர்களுடைய நிலையை உணராமல், அந்த நேரத்திலும் காசு சம்பாதிக்க எண்ணிய அந்தக் Compounder மனிதராகவே இருக்க முடியாது. விலங்கோடு சேர்க்கப்பட வேண்டியவர். அவருடைய பெயரை அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் குடும்பத்திற்கு உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இருந்தாலும் இதுபோன்ற சூழ்நிலைகளில், ஒருவர் கள் வியாபாரம் செய்வது இன்னொருவர் சாராய வியாபாரம் செய்வது, இருவரும் மோதிக்கொண்டு, வீட்டிலே உள்ள குடும்பத்தினர், பெண்டு, பிள்ளைகள் எல்லாம் அகால மரணமுறுவது என்பது ஒரு சோகமான செய்தி என்றாலும்கூட, இப்போது உயிரோடு மிஞ்சியுள்ள காசி நாடார் அவர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ஒரு இலட்ச ரூபாய் வழங்கப்படும், சிறப்பு நிதியாக என்று தெரிவித்து அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. விதி 110-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை

### கன்னியாகுமரி கடற்கரையில் காமராஜர் மணிமண்டபம் கட்ட மத்திய அரசின் அனுமதி பற்றி முதலமைச்சரின் அறிக்கை

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், நான் Order of Business-ல் வரவேண்டுமில்லையா? அதற்குள் நீங்கள் எழுந்து நின்று வரிசையாகக் கேட்டுக்கொண்டிருந்தால் எப்படி? பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி கடற்கரையில் காமராஜர் அஸ்தி வைக்கப்பட்ட இடத்தில் காமராஜர் மணிமண்டபம் கட்டுவது பற்றி ஒரு செய்தியை இந்த அவையிலே தெரிவிக்க விரும்புகிறேன்.

19-4-1998 அன்று, கடந்த ஆண்டு, நாகர்கோயிலில் நடைபெற்ற ஜீவானந்தம் மணிமண்டபம் திறப்பு விழாவிலே பேசும்போது, கன்னியாகுமரியிலே காமராஜர் அஸ்தி வைக்கப்பட்ட இடத்தில், அவர்கள் நினைவாக மணிமண்டபம் கட்டப்படும் என்ற அறிவிப்பை நான் செய்திருந்தேன். பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம் அமைப்பதற்கான இடம் மத்திய அரசின் சுற்றுப்புறச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தின் 27-9-1996 ஆம் நாளிட்ட ஆணையின்படி, கடற்கரையிலிருந்து 500 மீட்டர் தொலைவிற்குள் கட்டடங்கள் கட்டக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டப் பகுதியாகும். எனவே, இதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெறுவதற்காக தமிழக அரசின் சார்பில் 7-8-1998 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. இந்தக் கடிதத்திற்கு மத்திய அரசின் சுற்றுபுறச்சூழல் மற்றும் வனத் துறை அனுப்பிய 7-10-1998 தேதிய பதில் கடிதத்தில் மேலும் சில விவரங்களைக் கோரியிருந்தார்கள். அந்த விவரங்கள் தமிழக அரசின் சார்பில் 21-1-1999 அன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. மேலும் இதற்கு நினைவூட்டுக் கடிதம், Reminder ஒன்று 22-2-1999 அன்று அனுப்பப்பட்டது. இதற்கு மத்திய அரசு அனுப்பிய பதில் கடிதத்தில் அந்த இடத்தில் நினைவகம் கட்டுவதற்கு அனுமதிப்பதற்கு இல்லை என்றும், அது தடை செய்யப்பட்ட இடம் என்றும், எனவே பரிசிலனை செய்வதற்கு இல்லை என்றும் தெரிவித்திருந்தார்கள். இதுபற்றிய விவரங்களை நிதிநிலை அறிக்கைக்குப் பதிலளிக்கும்போது நான் அவையிலே விளக்கியதோடு, 1-4-1999 அன்று மீண்டும் பிரதமர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் பிரதமர் அவர்கள், இந்தப் பிரச்சினையில் தனிப்பட்ட முறையில் தலையிட்டு அந்த இடத்திலேயே பெருந்தலைவர் காமராஜர் நினைவிடம் கட்டுவதற்கு ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி அனுமதிக்க வேண்டுமென்று எழுதியிருந்தேன்.

*முற்பகல் 10-40*

மேலும் 19-4-1999 அன்று தமிழக அரசு சார்பில் மத்திய அரசுக்கு அனுப்பிய Fax செய்தியில் குறிப்பிட்ட இடத்திற்கு அருகிலேயே காந்தி மண்டபம் உள்ளது என்றும், மேலும் பல கட்டடங்கள் அந்தப் பகுதியிலே கட்டப்பட்டுள்ளன என்றும், எனவே அந்த இடத்தை, கடற்கரை ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பகுதி II என்று எடுத்துக்கொண்டு அங்கேயே காமராஜர் மணி மண்டபம் கட்ட அனுமதிக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது. இதற்குப் பிறகு நேற்று இரவு மத்திய அரசின் சுற்றுப்புறச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் தமிழக அரசுக்கு அனுப்பியுள்ள Fax செய்தியில் குறிப்பிட்டுள்ள தகவல் வருமாறு:



கன்னியாகுமரியிலுள்ள காந்தி மண்டபத்தை அடுத்துள்ள நிலப் பகுதியை CRZ-I என்பதிலிருந்து CRZ-II என மறுவகைப்படுத்தல் என்ற தலைப்பில் அனுப்பியுள்ள செய்தி:

கன்னியாகுமரியில் திரு. காமராஜருக்கு நினைவகம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கடற்கரையோர நிலப் பகுதியை CRZ-I என்பதிலிருந்து CRZ-II என மறுவகைப்படுத்தல் குறித்த முன்மொழிவை இந்த அமைச்சகம் பரிசிலித்து ஒப்புதல் அளித்துள்ளது என்ற செய்தி வந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பகுதியிலே எந்தவொரு வளர்ச்சிப் பணியையும் மேற்கொள்ளும்போது பின்வரும் நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது:

(அ) எதிர்காலத்தில் வணிக அல்லது குடியிருப்பு வளாகங்கள் அங்கே கட்டப்படக் கூடாது;

(ஆ) அழகைக் காத்தல், பொதுமக்கள் நடமாட்டம் ஆகியவற்றைப் பராமரிப்பதில் வல்லுநர்களுடைய அறிவுரைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று அதிலே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இந்த அனுமதியை வழங்கியதற்காக, ஒப்புதல் வழங்கியதற்காக மத்திய அரசுக்கு தமிழக அரசின் சார்பிலும், தமிழ் மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (ஆ) மதுரா கோட்ஸ் நிறுவனத்தின் ஒரு பிரிவு மூடப்போவதாக வந்துள்ள செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு. Madura Coats Limited நிறுவனத்தின் Madura Coats ITMS பிரிவு மூடப்போவதாக வந்துள்ள அச்சுறுத்தலால் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். அவ்வறிவிப்பை மட்டும் படிக்க வேண்டும். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** (குறுக்கீடு) அது இங்கே இல்லை, இதிலே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது இல்லாமல் ஏன் வருகிறீர்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பின்னால் Supplementary-ஆகக் கேட்க வேண்டுமென்று இருந்தேன்.

Madura Coats ITMS நிறுவனம் மூடப்படும் என்ற அச்சுறுத்தலால் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்டம் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அச்சுறுத்தலுக்கு அவசியம் இல்லை. 13-4-1999 அன்று (குறுக்கீடு) இல்லை, விவர அறிக்கை வைக்கப்படவில்லை. இது சிறப்புக் கவன ஈர்ப்பு என்பதால் விவர அறிக்கை வைக்கப்படவில்லை. அவர் பேசியதற்குப் பிறகு பதில் சொல்ல வேண்டும். அவர் பேசாமல் வெறும் கேள்வி மட்டும் கேட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் பதில் சொல்லுங்கள். நான் உங்களைக் கூப்பிட்டு பதில் சொல்லச் சொல்கிறேன். நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு தொழிற்சங்கங்கள், நிருவாகம் அதை மூடுகிற அபாய நிலையில் இருக்கிறது என்று சொன்னதால் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. நிருவாகத்தின் சார்பாக ஆலையைத் தொடர்ந்து நடத்துவதால் நட்டம் ஏற்படும் என்று சொன்னதால், Voluntary Retirement Scheme-ன்கீழ் தொழிலாளர்கள் போக விரும்பினால் போகலாம் என்றும், அதையும் விரும்பவில்லை என்றால், அதிலே இருக்கக்கூடிய இன்னொரு பிரிவிலே அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கலாம், Re-deployment, என்றும் அவர்கள் பேசுகிறார்கள். I.N.T.U.C. இதை ஒத்துக்கொள்கிறது. மற்றப் பிரிவுகள் ஒப்புக்கொள்ளவில்லை. இருந்தாலும், அரசைப் பொறுத்தமட்டில், பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்து, வருகிற 24-4-1999-ல் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்பெற இருக்கிறது. இன்னும் மூடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Madura Coats ITMS தங்களுடைய தொகுதியிலே இருக்கிறது என்பது தாங்கள் அறியாதது அல்ல. அந்த நிறுவனத்திலே ஏராளமான order-கள் இருக்கின்றன. அந்த நிறுவனம் நிற்காமல் ஓடுவதற்கு order-கள் குவிந்து கிடக்கின்றன.





order-கள் குவிந்து கிடக்கின்ற நிலையில் தொழிலாளர்கள் வேலையைவிட்டு வெளியேற வேண்டும், நாங்கள் தொழிற்சாலையை மூடவேண்டும் என்று அவர்கள் நிர்பந்திப்பதற்கு ஓர் உள்நோக்கம் இருக்கிறது. அது ஒருவிதமான தந்திரமான உள்நோக்கமாகக்கூட இருக்கிறது. அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் அதிகபட்சமான முறையில் தொழிலாளர்கள் வேலைப் பளுவை ஏற்றுக்கொள்ள வேண்டும், இருக்கின்ற ஆட்களைக் குறைக்க வேண்டும், சம்பளத்தை வெட்ட வேண்டும் என்று ஒரு நிர்பந்தத்தை ஏற்படுத்துவதற்காக இப்படி ஓர் அச்சுறுத்தலை திட்டமிட்டு நிருவாகம் தனக்கு இசைவான சங்கத்தின் மூலம் செய்தியைப் பரப்பவிட்டிருக்கிறது.

முற்பகல் 10-45

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் I.N.T.U.C. என்று குறிப்பிட்டார்கள். ஏறத்தாழ, அந்தத் தொழிற்சாலையில் இருக்கிற 391 தொழிலாளர்களும் கையெழுத்திட்டு நாங்கள் எந்தச் சங்கத்திற்கும் உரிமை வழங்கவில்லை, எங்கள் உரிமைகளைப் பலியிடுவதற்கு எந்தச் சங்கத்திற்கும் உரிமையில்லை என்று அவர்கள் எழுத்து மூலமாக அறிவித்துவிட்டார்கள். எனவே, வருகின்ற 24 ஆம் தேதி நடைபெறுகின்ற பேச்சுவார்த்தையிலேகூட — மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன் — அந்தத் தொழிற்சாலையை மூடுவதற்கு, அரசின் அனுமதியை I.D. Act அடிப்படையில் நிருவாகம் கோரி வருவார்களேயானால் அந்த அனுமதியை அரசாங்கம் வழங்கக் கூடாது என்பது ஒன்று. இரண்டாவதாக, அங்கே இருக்கின்ற மதுரை D.C.L. பேச்சுவார்த்தை மூலம் ஒரு நிர்பந்தத்தை ஏற்படுத்தி, எத்தகைய வேலைப் பளுவோ அல்லது சம்பள வெட்டோ அல்லது ஆட்குறைப்போ செய்யக் கூடாது என்கின்ற வகையில் மாநில அரசு அறிவுறுத்துமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு எந்த Mill ஐயும் மூடுவதற்கு நாம் அனுமதிக்கவில்லை. ஆனால் சட்டப்படி, நியாயமான காரணங்கள் இருந்தால் மூடலாம் என்று சொன்னாலும்கூட, நிருவாகம் சொல்லுகின்ற, முதலாளிகள் சொல்லுகின்ற காரணங்களை ஏற்காமல் தொழிலாளர் வர்க்கத்தையே நாங்கள் தொடர்ந்து பாதுகாத்து வருகிறோம். இந்தப் பிரச்சினையிலும் அதையேப் பின்பற்றுவோம். எனவே மாண்புமிகு உறுப்பினருக்குச் சந்தேகம் ஏற்பட வேண்டிய

[திரு. அ. இரகுமான்கான்] [1999 ஏப்ரல் 21

அவசியம் இல்லை. அவர் எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற காரணத்தாலே, சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற காரணத்தாலே, இங்கே தன்னுடைய தொழிற்சங்க நிலையை எடுத்துச் சொன்னார். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொழிற்சங்கமும் அதிலே இருந்து, அதற்காகப் பாடுபட்டு வருகிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

## 4. கவன ஈர்ப்பு

### வாணியம்பாடி, வேலூர், குடியாத்தம், வாலாஜா வட்டங்களில் பாலாற்றில் ஆக்கிரமிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் பாலாற்றில் வாணியம்பாடி, வேலூர், குடியாத்தம், வாலாஜா வட்டங்களில் ஆக்கிரமிப்புகள் அதிகரித்து நீர்ப்பிடிப்புப் பகுதிகள் குறைவதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

*** மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

வேலூர் மாவட்டத்தில், வாணியம்பாடி நகர் அருகே ஓடும் பாலாற்றின் கரையில் உள்ள ஆக்கிரமிப்புகள் 1996 ஆம் ஆண்டு அகற்றப்பட்டுவிட்டன. குடியாத்தம், வேலூர், வாலாஜா வட்டத்தில் பாலாற்றின் கரையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் துறையினர் உதவியுடன் கூட்டாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், ஆற்றின் எல்லையை நிர்ணயிக்க எல்லைக் கற்கள் (Boundary Stones) ஆற்றின் இருகரைகளிலும் ஆங்காங்கு நடப்பட்டு, வரும்



1999 ஏப்ரல் 21] [திரு. துரைமுருகன்]

காலங்களில், மேலும் ஆக்கிரமிப்புகள் நிகழாவண்ணம் தடுக்கத் தேவையான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த மூன்று வருடங்களாக பெய்த பருவமழையினால் ஏற்பட்ட வெள்ளம், சரியான முறையில் கட்டுப்படுத்தப்பட்டு, சேதங்கள் அதிகம் விளைவிக்காமல், கால்வாய்களில் திருப்பிவிடப்பட்டு, ஏரி, குளங்களில் நீர் நிரப்பப்பட்டு, பாசனத்திற்கு பயன்படுத்தப்பட்டது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். 1½ ஆண்டுகளுக்கு முன்னாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாணியம்பாடி பகுதிவரை ஆக்கிரமிப்புகளை எடுப்பதற்கு முழு முயற்சியோடு நடவடிக்கை எடுத்து ஓரளவுக்கு அப்போது ஆக்கிரமிப்புகளை அந்த இடத்தில் எடுத்தார்கள். பிறகு ஏனோ ஓராண்டு காலமாகப் பொதுப்பணித் துறை ஆக்கிரமிப்புகளை எடுக்கக்கூடிய முயற்சிகள் அனைத்தையும் கைவிட்டுவிட்டது. இப்போது எங்கு பார்த்தாலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை, மற்றவர்கள், தனியார்கள், கையகப்படுத்தி, அதை தென்னந் தோப்புகளாகவும் மற்ற வயல் காடுகளாகவும் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். சில இடங்களில் ஆறே இல்லாமல் போய்விட்டிருக்கிறது. ஆறு எங்கே இருக்கிறது என்று பூதக் கண்ணாடியை வைத்துத் தேட வேண்டிய நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையை மாற்ற வேண்டுமென்று சொன்னால் பொதுப் பணித் துறை வெயில் காலத்தில் — மழைக்காலம் வந்துவிட்டால் எதையும் செய்ய முடியாது—பொதுப்பணித் துறையை முழுமையாகப் போர்க்கால அடிப்படையில் ஈடுபடச் செய்து, ஆக்கிரமிப்புகளை எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் ஆவன செய்ய வேண்டும். மற்ற எல்லா மாவட்டங்களையும்விட எங்களுடைய மாவட்டம் பொதுவாக பாலாற்றை மட்டுமே நம்பி வாழக்கூடிய மாவட்டமாக இருக்கிறது. வேறு நீர்நிலைகள் எங்களுக்குக் கிடையாது. எனவே, பாலாற்றை முழுமையாக பழைய அளவுக்கு அகன்ற ஓர் ஆறாக, நீர்பிடிப்பு மிக்க ஒரு பகுதியாக மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் குறிப்பிட்டபடி, கலைஞர் அவர்களுடைய தலைமையில் ஆட்சி அமைந்த பிறகுதான், பாலாற்றிலே ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான முனைப்பான திட்டங்கள்

[திரு. துரைமுருகன்] [1999 ஏப்ரல் 21

திட்டப்பட்டன. அதற்கு ஒரு பெரிய நிதி தேவைப்படுகிறது. Maintenance-ல் அதைச் செய்ய முடியவில்லை. அப்போது பொதுப் பணித் துறைக்கு இருக்கின்ற இயந்திரங்களை வைத்துக் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் — அப்போது தேவிதார் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தார்கள் — அவர்கள் வேகமாக அந்தப் பணியைச் செய்தார்கள். ஆனால் கடந்த ஒரு வருடமாக நின்று போனதற்கு முக்கியமானக் காரணம், இப்படிப்பட்ட காய்ந்த நேரங்களிலே பொதுப்பணித் துறை இயந்திரங்கள் தூர் வாருவதற்கு மற்ற பகுதிகளுக்குச் சென்றுவிடுகின்றன. என்றைக்குமே சிரிக்காதவன் திருவிழாவிலே சிரித்தான் என்று எங்கள் ஊர் பக்கம் சொல்லுவார்கள். அதைப்போல எப்போதுமே தண்ணீர் வராத ஆற்றில் கிட்டத்தட்ட 9 மாத காலம் தண்ணீர் ஓடியிருக்கிறது. பாலாற்றைப் பொறுத்தவரையில் இதுவரையில் 1½ T.M.C. தண்ணீர்தான் அதிகமாகப் போயிருக்கும். ஆனால், சென்ற ஆண்டு பெரிய மழை பெய்த காரணத்தால் பாலாற்றிலே 26 T.M.C.-க்கு மேலே தண்ணீர் ஓடியிருக்கிறது என்று கணக்கு தெரிவிக்கிறது. எனவே, 9 மாத காலம் தண்ணீர் ஓடிய காரணத்தால் இந்த முறை தூர் வாருகின்ற வேலைகள், அகலப்படுத்துகின்ற வேலைகள், ஆக்கிரமிப்புகளை அகற்றுகின்ற வேலைகள் ஆகியவற்றைச் செய்ய முடியாமல் போய்விட்டது. இருந்தாலும், மீண்டும் இந்த ஆண்டு இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணி தொடர்ந்து நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அடுத்த சில இனங்களையும் முடித்த பிறகுதான், நீங்கள் ஏதாவது பேச வேண்டுமானால் அதற்கு நான் அனுமதி கொடுப்பேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை. திரு. ப. ரங்கநாதன், குழுவின் தலைவர்.



1999 ஏப்ரல் 21]

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1998-99 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்தொன்பது முதல் நூற்று எழுபத்துமூன்று வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாக, பேரவைக்கு அளிக்கின்றேன்.

### (ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. ம. அப்துல் லத்திப், குழுவின் தலைவர்.

**திரு. ம. அப்துல் லத்திப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1998-99 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கையை, குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 6. தகவல் கோரல்

### பேரவையின் மார்ச் 22, 23, 24 ஆம் தேதிகளின் நடவடிக்கைக் குறிப்புகளை அனுமதியின்றி எழுதிக் கொடுத்தவர்கள்மீது நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் 22, 23, 24 ஆகிய தேதிகளில் நடைபெற்ற சட்டமன்ற நடவடிக்கைகள் பற்றிய அந்தக் குறிப்புகளை நான் கேட்டிருந்தேன். அதைக் கொடுக்க முடியாது; சட்டமன்ற செயலகத்திற்கு வந்து வேண்டுமானால் உட்கார்ந்து எழுதிக்கொள்ளலாம் என்று கூறினீர்கள். அதேபோல, 22 ஆம் தேதி என்னுடைய உதவியாளரை வைத்து அந்தக் குறிப்புகளையெல்லாம் எடுத்துக் கொண்டேன். அடுத்தது, 23, 24 தேதிகளில் கிட்டத்தட்ட 100 பக்கங்கள் இருந்தன. எனவே, ஓர் ஆளால் எழுத முடியாது என்று, அங்கிருந்த சபை அலுவலர்களை வைத்து, நான்தான் அவர்களை எழுதிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டேன். அவர்கள் முதலில் மறுத்தார்கள். நான், "அது ஒன்றும் தவறில்லை; நீங்கள் எழுதிக் கொடுங்கள்; நான் சபாநாயகரிடம் சொல்லிவிடுகிறேன்" என்று கூறியதன் பிறகு, அவர்கள் எழுதினார்கள். கிட்டத்தட்ட மூன்று பேர் அதை எழுதினார்கள். எழுதியது தவறு என்று அவர்களுக்கும் தெரியாது, எனக்கும் தெரியாது. ஆனால்

நீங்கள், அவ்வாறு எழுதிக் கொடுத்தது தவறு என்று, அவர்களைப் பணிநீக்கம் செய்திருப்பதாக அறிகிறேன். ஆகவே, நான்தான் அவர்களை எழுதிக் கொடுக்கக் கேட்டேன். தவறு என்றிருந்தால் என்னை வேண்டுமானால் நீங்கள் தண்டியுங்கள். ஆனால், என்மீது இருக்கின்ற கோபத்தில், அவர்கள் மூன்று பேரை நீங்கள் பணிநீக்கம் செய்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) சுந்தரம் உட்காருங்கள். நீங்கள் பேசுவதே முறையில்லாமல் பேசுகிறீர்கள். அதுதான் விவகாரம். உங்கள் கூற்றுப்படியே, அவர்கள் எழுத மாட்டேன் என்று சொன்னவர்களை, "நான் பேரவைத் தலைவரிடம் சொல்லிக்கொள்கிறேன்; நீங்கள் எழுதுங்கள்" என்று அவர்களிடம் சொல்லியதாகச் சொல்கிறீர்கள். என்னிடம் வந்து சொன்னீர்களா? நானாகக் கண்டுபிடித்து, இந்த மாதிரி தவறான முறையிலே பயன்படுத்திவிட்டீர்கள் என்று சொல்லி, அதற்காக நடவடிக்கை எடுத்திருக்கிறேன். இப்போது உங்கள்மீது நடவடிக்கை எடுப்பதாக இருந்தால், நீங்களே சொல்லுங்கள், என்ன தண்டனை என்று. எஞ்சிய கூட்டத் தொடருக்கு நீங்களே வெளியிலே போய் விடுகிறேன் என்று சொல்கிறீர்களா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு அப்படி ஒரு பிரியம் இருந்தால் செய்யுங்கள். அதைக்குறித்து ஒன்றும் நான் சொல்லவில்லை. நான் சொல்ல வருவது, அவர்களைப் பணியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறேன். எழுதச் சொன்னது நான். அவர்களுக்கு தப்பு என்று தெரிந்திருந்தால் எழுதிக் கொடுத்திருக்க மாட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர்களை விட்டுவிடுங்கள். அதை நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் செய்தது தவறு என்பதை இப்பொழுது ஒத்துக்கொள்கிறீர்களா? நீங்கள் அதற்கு வருத்தம் தெரிவியுங்கள், போதும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எழுதுவது தப்பு என்று எனக்குத் தெரியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது தப்பு என்று தெரிகிறதா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இப்பொழுது சொல்லியிருக்கிறீர்கள். சட்டமன்ற விதிகளிலே நான் பார்த்தேன். அதிலே ஒன்றும் இல்லை.



**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து நாம் இரண்டுபேரும் பேசிக்கொண்டிருக்கிறோம். குறுக்கே தேவையில்லாமல் இவர்கள் பேசுகிறார்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தினுடைய நேரத்தை அவரவர்கள் நினைத்தபடி பயன்படுத்திக்கொள்ள தாங்கள் அனுமதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினை குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை வருமானால், மாண்புமிகு உறுப்பினர் மீதுதான் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நீங்கள் பேசி முடித்துவிட்டீர்கள்; பதிலும் சொல்லப்பட்டுவிட்டது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறா என்பதை அறிவதற்கு விதிப் புத்தகத்தை எடுத்துப் படித்துப் பார்த்தேன். விதிப் புத்தகத்திலே அதுமாதிரி இல்லை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவற்றையெல்லாம் இங்கே பேசுவதற்கு இடம் கிடையாது. சட்டமன்றத்திலே உள்ள 234 உறுப்பினர்களுடைய நேரத்தையும் ஓர் உறுப்பினர், தான் நினைத்தபடி பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கக்கூடாது என்று தங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இனிமேல் இதுகுறித்துப் பேசுவதற்கு யாருக்கும் அனுமதி கொடுக்க மாட்டேன், உட்காருங்கள்.

## 7. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 37 - சுற்றுச்சூழல்

(ஆ) கோரிக்கை எண் 44 - காட்டுவளத் துறை

(இ) கோரிக்கை எண் 58 - காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு

### (அ) கோரிக்கை எண் 37 - சுற்றுச்சூழல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த படியாக, 1999-2000 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 37 - சுற்றுச்சூழல், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுச் சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 11,58,39,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2219, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,58,39,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2063, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4350, திரு. நா. பெரியசாமி.





**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை வட்டம், ஊத்துக்குளி ஒன்றியம், நொய்யல் ஆற்றின் கரையை ஒட்டி சுமார் 3 கிலோமீட்டர் தூரத்திற்கு குடிநீர் ஆதாரங்கள் மாசு அடைவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,58,39,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4036, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,58,39,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3403, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2392. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் தடையால் தமிழகத்தில் மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகளை, அரசே அந்தந்த நிறுவனங்களோடு தொடர்புகொண்டு அரசு மூலமாக உதவி செய்து சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்து அந்த ஆலைகளை மீண்டும் இயக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,58,39,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4625, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுற்றுச்சூழல் பாதிக்காமல் இருக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்று முழுமையாக ஆராய்ந்தறிந்த பின்னர் தொழிற்சாலைகள் அமைக்க அனுமதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,58,39,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4249, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,58,39,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3953, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொழில்கள் தொடங்கும்போது, அவ்விடத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து சரியான ஆய்வு மேற்கொண்ட பின்னர் அனுமதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,58,39,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4414, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.



**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,58,39,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3046, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,58,39,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2572, திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4528, திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,58,39,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3682, திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி மாவட்டம், பெரியாற்றில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,58,39,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3922, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பூந்தமல்லி தொகுதி, ஆவடியில் உள்ள ஷாவாலஸ் உரத் தொழிற்சாலை வெளியிடும் நச்சுப் புகையால் பொதுமக்கள் நல்வாழ்வுக்கு ஏற்பட்டிருக்கும் சுகாதாரக் கேடு பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,58,39,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 44-காட்டுவளத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 44.—காட்டுவளத் துறை, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.92,24,27,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4678, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் வனத் துறை ஊழியர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கி ஏ.கே. 47 ரக துப்பாக்கிகளை வாங்கி சந்தன மரக் கடத்தலைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 92,24,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4355, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காடு வளர்ப்புத் திட்டத்திற்குப் பொதுமக்கள் பெரிதும் ஈடுபாடு கொள்ளச் செய்யும் வகையில் நடைமுறைகளை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,24,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3993, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜவ்வாது மலையில் வனத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் வனப் பள்ளிகளை, கல்வித் துறை அல்லது ஆதிதிராவிடர் நலத் துறையிடம் ஒப்படைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,24,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2406, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில் உள்ள கிராமப் பகுதி விவசாயிகளுக்குப் பழக் கன்றுகள், தேக்கு மரக் கன்றுகளை வனத் துறை மூலம் இலவசமாகக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,24,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4465, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேதாரண்யம் முதல் நாகை வரை உள்ள பரந்த கடற்கரைப் பரப்பில் காடு வளர்ப்பதன் மூலம் இயற்கைச் சுற்றுப்புறச் சூழலை மாறாமல் காத்து, போதிய மழை பெய்விக்கவும், தட்ப வெப்ப நிலையைச் சீராக வைக்கவும் இயலும் என விஞ்ஞானிகள் கூறுவதால் இதுகுறித்து ஆய்வு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,24,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3952, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை வன உயிரினக் கோட்டத்திலுள்ள கோடியக்கரை, முத்துப்பேட்டை, நாகப்பட்டினம், தஞ்சாவூர் சரகங்களில் பணியாற்றி வரும் 35 பேர்களின் பணிகளை நிரந்தரமாக்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,24,27,000-/ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4410, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,24,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2950, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில், குடமுருட்டி ஆற்றின் இருகரையிலும் மரங்கள் இல்லாத இடங்களில் தேக்கு மரக் கன்றுகள் நட்டு வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,24,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2213, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் காட்டுவளம் குறைந்து வருவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,24,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3902, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,24,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2848, திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி நகராட்சிப் பகுதியில் உள்ள வனப் பகுதியில் விலங்குகள் சரணாலயம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,24,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4526, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, "To discuss the need to plant more sandal wood trees, teak wood trees and rose wood trees in the forests in Dharmapuri District", I move—

"That the sum of Rs. 92,24,27,000/- allocated under Demand No. 44 - Forest Department be reduced by Rs. 100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2726, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "வனத் துறைக் காவலர்களுக்கு போதிய ஆயுதங்கள் வழங்கி மரம் கடத்தல், விலங்குகளை வேட்டையாடுதல் போன்ற சமூகவிரோதச் செயல்களைத் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,24,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3984, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"திருநெல்வேலி மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலையில் களக்காடு பகுதியில் வைரக்கல் திருட்டைத் தடுத்து நிறுத்தி வன வளத்தைக் காக்கும் பொருட்டு வைரம் எடுப்பதை அரசே ஏற்று நடத்தி அரசின் வருமானத்தைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.92,24,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

## (இ) கோரிக்கை எண் 58-காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 58-காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.91,70,92,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 130, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,70,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4372, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,70,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3996, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காடுகளில் உற்பத்தியாகும் பொருட்களை வனத் துறையின் மூலம் விநியோகிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,70,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2440, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் டெப்போவிற்கு வரும் சந்தனமரங்களை வருடக்கணக்கில் வைத்திருக்காமல், உடனுக்குடன் ஏலம் விடவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,70,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3947, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் காடு வளர்ப்புத் திட்டத்தில் சிறப்புக் கவனம் செலுத்தி பொதுமக்களின் ஆதரவுடன் காட்டு வளத்தைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,70,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4403, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,70,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3032, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,70,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2238, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,70,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3909, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,70,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4247, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,70,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4466, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியாருக்குச் சந்தனம் மரம் வளர்க்க அனுமதி வழங்கி சந்தன உற்பத்தியைப் பெருக்கி ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,70,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல், காட்டுவளத் துறை மற்றும் காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில், தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர் விவாதத்தில் பேச இருக்கிறார்கள். ஆகவே, காலத்தின் அருமை கருதி, உறுப்பினர்கள் பேச்சை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவாதத்தைத் தொடங்கி வைக்கிற திரு. சி. ஞானசேகரன் அவர்கள், அடிக்கடி பேசுகிற காரணத்தினால், அவருக்கும் பத்து நிமிடங்கள்தான் கொடுக்கப்படுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுவளம், சுற்றுச்சூழல் மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய தங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

---

@ 337 முதல் 383 வரையுள்ள பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

தமிழகத்திற்குக் கல்விக் கண்ணைத் தந்து, கல்வித் துறையிலே ஒரு மாபெரும் புரட்சி செய்த, கர்மவீரர் காமராஜர் அவர்களுடைய மணிமண்டபத்தைக் கட்டுவதற்கு, மத்தியில் இருக்கக்கூடிய சுற்றுச்சூழல் துறையிடமிருந்து இன்று சாதகமான பதிலைப் பெற்றுத் தந்திருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய நன்றியை நாங்கள் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழகத்திலே இருக்கக்கூடிய நிலப் பரப்பளவு பொதுவாக 1,30,057 சதுர கிலோமீட்டர் என்றும், அதிலே வனப் பகுதி 22,748 சதுர கிலோமீட்டர் என்றும் ஒரு கணக்கை நம்முடைய அமைச்சர் அவர்கள் தன்னுடைய கொள்கைக் குறிப்பிலே கூறியிருக்கிறார்கள். இவ்வளவு சதுர கிலோமீட்டரிலும், நம்முடைய அரசினுடைய இராஜயம் நடக்கிறதா என்பதைப் பார்த்தால் இல்லை என்பதுதான் எனக்கு வேதனையாக இருக்கிறது. வீரப்பனுடைய இராஜாங்கம் கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் இருந்தது; இந்த ஆட்சியிலும் இருக்கிறது. ஆனால், அவனுடைய இராஜ்யத்தைத்தான் நம்மால் கவிழ்க்க முடியவில்லை.

*[மாண்புமிகு மாற்று தலைவர் திரு. வை. சிவபுண்ணியம் தலைமை]*

நேற்றுகூட, முதலமைச்சர் அவர்கள், (B.J.P.) மத்தியிலே இருக்கக்கூடிய (B.J.P.) ஆட்சியை, த.மா.கா. கவிழ்த்து விட்டது என்கிற குறிப்பை இங்கே சொன்னார்கள். உண்மையிலேயே நாங்கள் கவிழ்க்கவில்லை. உண்மை நிலை, நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும். எங்களுடைய தமிழ் மாநில காங்கிரசுக்கு ஊழல் எதிர்ப்பு என்பது ஒரு கொள்கை. அதேபோல், மதவாத எதிர்ப்பு என்பதும் ஒரு கொள்கை. இரண்டு கொள்கைகளையும் இரண்டு கண்களாக வைத்திருக்கிற தமிழ் மாநில காங்கிரசும், எங்களுடைய மக்கள் தலைவர் திரு. மூப்பனார் அவர்களும், சரியான முடிவை எடுத்து, எங்களுடைய நிலையை நாங்கள் விளக்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சில நேரங்களில் கொள்கைகளை எங்களால், தாரை வார்க்கமுடியாது. மதவாத எதிர்ப்பு என்பதைக் கடுமையாக நாங்கள் சாதித்தான் ஆகவேண்டும். ஊழலை எதிர்க்க வேண்டும் என்பதிலும் நாங்கள் இன்னும் குறியாகத்தான் இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, நிச்சயமாக எங்களுடைய பயணம், ஊழலை ஒழிப்பதிலும், மதவாதத்தை எதிர்ப்பதிலும் தொடர்ந்து



நடைபெறும். எத்தகைய எதிர்ப்புகள் வந்தாலும் அவற்றை தகர்த்தெறிய நாங்கள் காத்திருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, வீரப்பனை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் கைது செய்யவில்லை, இப்போது தி.மு.க. ஆட்சி. அப்போது ஏன் கைது செய்யவில்லை என்று நீங்களும் சொன்னீர்கள். ஆட்சிப் பொறுப்புக்கு நீங்கள் வந்த பின்னாலே, ஏன் இன்னும் நீங்கள் அவனைக் கைது செய்ய முடியவில்லை? இப்போது பார்த்தால், 32 ஆறுகள், 11 பெரிய நீர்த்தேக்கங்கள், அதேபோல் 2,679 கால்வாய்கள், 38,863 குளங்கள் இவையெல்லாம் தமிழகத்தில் இருக்கின்றன. ஆனால், இந்த நீர்நிலைகள் எல்லாம் முக்கியமாக வனப் பகுதிகளிலே அதிகமாக இருக்கின்றன என்றுகூட நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இத்துணை சிறப்பு மிக்க நீர்நிலைப் பிடித்தங்களையெல்லாம் உருப்படியாகக் காப்பாற்ற வேண்டுமானால், வீரப்பனைப் போன்றவர்கள், அதேபோல் நிறைய பேர் குட்டி வீரப்பனைப் போன்றவர்கள் எல்லாம் நாட்டிலே இருக்கிறார்கள். அவர்களைப் பிடிக்க வேண்டும்.

சந்தனக் கட்டைகள் இப்போது 80 சதவிகிதம் அழிந்துவிட்டன. ஜவ்வாது மலையில் பார்த்தோம் என்று சொன்னால், Shellies Report எடுக்க முடியாது. அந்த அளவு எங்கே பார்த்தாலும் Shellies அங்கே சந்தனக் கட்டைகள் முழுவதுமாக அழிந்துபோய் இருக்கின்றன. என்னைக் கேட்டால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடுமையான ஓர் உத்தரவைப் போடலாம். இப்போது இருக்கக்கூடிய D.G.P-யோ, P.C.C.F.s-ஓ, இன்னும் ஒருமாத காலத்தில் வீரப்பனைப் பிடிக்கவில்லை என்றால், அவர்கள் பதவி இறங்க வேண்டும் என்ற உத்தரவைப் போட்டு, ஒரு காலவரையறையை நிர்ணயிக்க வேண்டும். எவ்வளவோ கோடி கோடியாக பணத்தை நாம் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், ஒரு வீரப்பனைப் பிடிக்க முடியவில்லை என்று சொன்னால், அது நமக்கு ஒரு மாபெரும் சவாலாக இருந்து கொண்டிருக்கிறது. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், எங்களுடைய திருப்பத்தூர் பகுதியிலே சந்தனக் கிடங்கு 1997 ஆம் ஆண்டு எரிந்து போனது. அதற்கு ஒரு நீதி விசாரணைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அந்த நீதி

விசாரணையின் அறிக்கை இன்னும் இந்த அவையிலே வைக்கப்படவில்லை. விசாரணை முடிந்ததா என்றும் தெரியவில்லை. இதற்கிடையிலே, C.B.I. விசாரணை வேறு நீதிமன்றத்தாலே உத்தரவிடப்பட்டிருக்கிறது. எனக்குக் கிடைத்த கணக்கின்படி பார்த்தால், ரூ.300 கோடி அளவுக்கு எரிந்துவிட்டதாகத் தெரிகிறது. நமது முதலமைச்சர் அவர்கள் 66 கோடி ரூபாய் அளவுக்குத்தான் [illegible] கட்டைகள் எரிந்து போனதாக ஒரு கணக்கைத் [illegible] அந்த அறிக்கை எப்போது வைக்கப்படும். C.B.I.-யினுடைய நிலை என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நீதிபதி இராமன் அவர்கள் தலைமையிலே விசாரணை Commission அமைக்கப்பட்டு, அதன்மூலம் அந்தச் சந்தனக் கிடங்கு தீ விபத்து பற்றி விசாரணை செய்யப்பட்டு வருகிறது. அந்த அறிக்கை கிடைத்தவுடன் விரைவில் அவையில் வைக்கப்படும்.

*முற்பகல் 11-05*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசு ரப்பர் கழகம் என்பது பல ஆண்டுகளுக்கு முன்னாலே தமிழகத்திலே உருவாக்கப்பட்டு அது சிறப்புறச் செயலாற்றி வந்த காலம் ஒன்று உண்டு. ஆனால், அதற்குப் பின்னால் தொய்வு ஏற்பட்டு இன்று பல கோடி ரூபாய் நஷ்டத்திலே அது இயங்கிக் கொண்டிருக்கின்றது. சம்பளம்கூடக் கொடுக்க முடியாமல் அந்த ரப்பர் கழகம் இன்று திண்டாடிக் கொண்டிருக்கிறது. ரப்பர் கழகத்தில் நடைபெறக்கூடிய ஊழலைப் பற்றி அங்கேயே சொல்கிறார்கள். Tender மூலமாக ரப்பர் பாலை விற்பதற்குப் பதிலாக, அங்கே இருக்கக்கூடியவர்களில் சில பேருக்கு தனிப்பட்ட முறையில் கொடுத்துவிடுகிற காரணத்தினால் நிறைய இழப்பு என்று சொல்கிறார்கள். C.A.G. அவர்களுடைய அறிக்கையை நாம் பார்த்தோம் என்று சொன்னால், பல கோடி ரூபாய் இந்த ரப்பர் கழகத்திலே நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது தெரியும். இதற்கான காரணத்தை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.



'Delays ranging from 2 to 34 months in payment of lease rent for plantation areas entailed avoidable payment of interest charges of Rs. 2.64 crore.

Due to lower stand per hectare and on account of lack of effective control on tapping operations, the Company suffered loss of revenue of Rs. 65.83 crore.

The Company which is the largest single owner of Rubber Plantations in the State (holding 33 per cent of the total yielding area) accounted for only 16 per cent of the total yield of the State. The potential loss of revenue suffered by the Company due to shortfall in achievement of yield with reference to State average amounted to Rs. 51.57 crore.

Non-tapping of tappable trees due to absenteeism of tappers and excess yield of field scrap over the norm resulted in loss of revenue of Rs. 1.61 crore

Excess process loss in production of cenex, Ribbed Smoked Sheets, Estate Brown Crepe over the norms led to loss of revenue of Rs. 2.74 crore.

Non-regulation of production planning to actual stock and non-enforcement of contractual terms resulted in loss of Rs. 0.61 crore on the sale of cenex and Ribbed Smoked Sheets' என்று பல கோடி ரூபாய் அளவிற்கு இந்த ரப்பர் கழகத்தில் நட்டம் ஏற்பட்டிருக்கிறது (மணியடிக்கப்பெற்றது) அதைச் சரி செய்வதற்கு இந்த அரசாங்கம் எடுத்திருக்கிற முயற்சி என்ன? அதற்கு என்ன காரணம் என்பது C.A.G. Report-லே சொல்லப்பட்டிருக்கிறது. Absence of phased/planned replanting programmes; Lack of effective control on tapping operations; Absence of effective control on process loss; and, Ineffective marketing strategy என்று கூறுகிறார்கள். ஆகவே, இந்த அளவிற்கு ரப்பர் கழகத்தில் நட்டம் ஏற்பட்டதற்கான காரணத்தை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேயிலைத் தோட்டத்திலே நல்ல முன்னேற்றத்தைக் கண்டிருக்கின்றீர்கள். கடந்த கால ஆட்சியிலே அந்தத் தேயிலை தோட்டக் கழகத்தையே தனியாரிடம் கொடுத்து விடலாம் என்றுகூட

அரசாங்கம் சில நேரங்களில் நடவடிக்கை எடுத்திருந்தது. ஆனால், அதையெல்லாம் தவிர்த்து, இப்போது, அந்தத் தேயிலை தோட்டக் கழகத்திலே, கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் கிடைக்கின்ற வகையில் நல்ல நிருவாகம் அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அதுபோல வனத் தோட்டக் கழகத்திலும் நல்ல இலாபம் கிடைத்திருக்கிறது. எனவே, வனத் தோட்டக் கழகத்தைப் பொறுத்தவரையில் P.C.C.F. ஒருவரை நியமனம் செய்து நிர்வாகம் செய்தால் மேலும் நல்ல இலாபத்தை நீங்கள் பெறலாம். இப்போது 20 கோடி ரூபாய் இலாபத்தைக் கண்டிருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சமூகக் காடுகள் என்று சொல்லும்போது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அடிக்கடி சண்டை வந்துவிடும். இப்போது, ஏரிகளில் நல்ல கருவேல மரங்களை வளர்க்கும்போது, அதை அனுமதிக்கவே கூடாது என்பது நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கூற்று. ஆனால், சமூக நலக் காடுகளில் ஏரிகளில் ஆக்கிரமிப்பு இல்லாமல் பார்த்துக்கொண்டால் நிறைய பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று சொல்லும்போது நிச்சயமாக அதனை உருவாக்க வேண்டியது நம்முடைய கடமை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தமிழ்நாட்டிலே மொத்தம் 39,000 ஏரிகள் இருக்கின்றன. பொதுப் பணித் துறைக்குச் சொந்தமானவை 9,000 ஏரிகள்தான். அதிலே ஒரு பக்கத்திலே தூர் வார வேண்டும், கால்வாய்களைத் தூர் வார வேண்டுமென்று சொல்கிறீர்கள். ஏரியில் மரம் நட்டால் எப்படித் தூர் வார முடியும்? முதலமைச்சர் அவர்கள் ஒரு வருடத்திற்கு 200 ஏரிகளைத் தூர் வார வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். NABARD திட்டத்திலே நாங்கள் கிட்டத்தட்ட 2000 ஏரிகளை எடுக்கப் போகிறோம். மத்தியச் சர்க்கார் திட்டத்தின் கீழும் ஏரிகளை எடுக்கப்போகிறோம். கிட்டத்தட்ட பொதுப் பணித்துறைக்கு உட்பட்ட ஏரிகளிலே இன்னும் 3,000 ஏரிகளையாவது தூர் வார வேண்டுமென்பதை ஒரு பெரிய Programme-ஆக நாங்கள் செய்து கொண்டு இருக்கிறோம். அப்படி மரங்கள் நடப்பட்டுவிட்டால்



தூர் வார முடியாது. அதனாலே இரண்டில் ஒன்றை decide பண்ண வேண்டும். ஒன்று மரம் வளர்க்க வேண்டும். அப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் தூர் வாருகின்ற பிரச்சினையை மறந்துவிட வேண்டும். இரண்டிலே எது என்று முடிவு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்): மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.**

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கண்மாய்களில் தூர் வாரும் இடம் என்பது தனியாக இருக்கிறது. நீர் பிடிப்புப் பகுதியிலே இந்தக் கருவேல மரங்களை நட வேண்டுமென்று சொல்கிறார்களே தவிர, தூர் வாருகின்ற பகுதி என்பது பாதுகாக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தண்ணீர் இருக்கிற ஏரிகளில் எங்கே செடி வைக்கிறார்கள் என்று பார்த்தால் கரையிலே நீர்பிடிப்பு இடத்திலே முழுவதும் வைத்து விடுகிறார்கள். இரண்டாவது, இப்போது நாம் முதலமைச்சரின் நிதியின்கீழ் தூர் வாரும் திட்டத்திற்கு ஓர் ஏரிக்கு 10 இலட்சம், 12 இலட்சம், maximum 15 இலட்சம் வரையில்தான் கொடுக்கிறோம். ஆனால் NABARD-லே எப்படி இப்போது கொடுக்கப் போகிறார்கள் என்று சொன்னால், கிட்டத்தட்ட ரூ.1 கோடியிலிருந்து 1½ கோடி ரூபாயவரைகூட ஒரு கண்மாய்க்குச் செலவு பண்ணலாம். அப்படிப் பார்க்கிறபோது, கொண்டுபோய் மண்ணை வாரி அதனுடைய பின் பகுதியிலே கொட்டி, வரத்துக் கால்வாயையும், பாசனக் கால்வாயையும் அகலப்படுத்தி, ஆழப்படுத்தி, அது பெரிய அளவிலே செய்யப்போகிற ஒரு திட்டம். ஆனால், நீங்கள் என்ன சொல்கிறீர்கள், இந்த ஓரத்திலே மட்டும் கொஞ்சம் மண்ணை வாரி விட்டார்கள்; பின்னாலே அப்படியே விட்டுவிட்டார்கள்; அந்த ஏரியை மராமத்து செய்யவே இல்லை என்று Petition கொடுக்கிறீர்கள். ஆகையினாலே இப்போது தூர் வார இருக்கிறதிலே பரந்திருக்கிற எல்லா மண்ணையும் வாருகின்ற அளவிற்கு-முதலிலே உதாரணமாகச் சொல்கிறேன்-தாமல் ஏரியை இப்போது எடுக்கப் போகிறோம். தாமல் ஏரியிலே தண்ணீர் இப்போது வற்றியிருக்கிறது. அந்த ஏரியை Nabard திட்டத்திலே எடுக்கப் போகிறோம். அதை ஒரு மாதிரி ஏரியாகச் செய்து காட்டவிருக்கிறோம். ஆகவே, நான் ஒன்றும் மரம் வைப்பதை எதிர்க்கவில்லை, மரம் வைக்க வேண்டும். ஆனால், நீர்பிடிப்பு, தண்ணீர் கொள்ளளவை அதிகப்படுத்துகிற இடத்தில் மட்டும் வேண்டாம் என்று சொல்கிறேனே தவிர வேறு அல்ல.

முற்பகல் 11-10

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏரிகளைத் தூர் வார வேண்டிய பணி மிகவும் அவசியமான, அத்தியாவசியமான, வரவேற்கத்தக்க பணி. அதை யாரும் மறுத்துச் சொல்லவில்லை. தூர் வாரப்பட்ட ஏரிகளில் மரக் கன்றுகளை நடலாம். ஏன் என்றால், ஒவ்வொரு வருடமும் தூர் வார வேண்டியதில்லை. 10 வருடத்திற்கு ஒரு முறை தூர் வாரினால் போதும். அதுமாதிரி இந்த வளர்ந்த மரங்களை 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை, 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை வெட்டுவதற்கு நாம் அனுமதி கொடுத்துவிடுகிறோம். மரம் எங்கு வெட்டப்படுகிறதோ, அங்கு வெட்டியவுடன் தூர் வாரக்கூடிய பணிகளையும் உடனே செய்துவிட்டு மீண்டும் மரக் கன்றுகளை நட வேண்டும். இரண்டு பணிகளையும் கண்டிப்பாகச் செய்ய வேண்டும். ஏரிகளிலே மரம நடுவது மிக மிக நல்லது என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள், ரொம்ப நேரம் ஆகிவிட்டது.

**திரு. சி. ஞானசேகரன்:** இது நல்ல Subject. இன்னும் Time இருக்கிறது. சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன். ஏற்கெனவே 20 வருடம் வேலை செய்திருக்கக்கூடிய ஒரு Ranger இருக்கிறார் என்று சொன்னால், அவர் ஒரு வருடம், 2 வருடம் கண்டிப்பாக ரப்பர் தோட்டக் கழகத்திலே போய் வேலை செய்ய வேண்டும் என்றெல்லாம் ஒரு நியதி வைத்திருக்கிறோம். அப்படியெல்லாம் அனாவசியமாக நம்முடைய ஆளைக் கொண்டு போய் Deputation-லே தள்ள வேண்டியதில்லை. 20 ஆண்டுக் காலம் பணியாற்றிய Ranger-க்கு நீங்கள் நேரடியாகவே A.C.F. Post கொடுத்துவிட்டுப் போகலாம். ரப்பர் கழகத்திற்குப் போக வேண்டும், அங்கே போக வேண்டும் என்றெல்லாம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்பதால் இதனை நீங்கள் பரிசீலிக்க வேண்டும்.

அதேபோல் Social Forestry-ஐ இணைப்பதாகச் சொல்கிறீர்கள். அதை இணைக்க வேண்டாம். இரண்டு துறைகளும் தனித் தனியாக இருந்தால்தான் நாட்டிற்கு நல்லது. ஆகவே, இது தனித் தனியாக இயங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



கோவையில், நகரத்தின் மைய பகுதியிலே வனக் கல்லூரி இருக்கிறது. 300 ஏக்கர் பரப்பிலே இருக்கிறது. நல்ல costly-ஆன இடம், மாட்டிக்கொண்டுவிட்டது. ஏதோ அந்தக் காலத்திலே ஊருக்கு ஓரம் என்றிருந்ததாலே வைத்தார்கள். இப்போது வனக் கல்லூரியை வேறு எங்காவது சிறுவாணியிலோ அல்லது எங்களுடைய ஜவ்வாது மலையிலோ கொண்டுபோய் வைக்கலாம். நகரத்தின் மைய பகுதியிலே 300 ஏக்கர் costly-ஆன இடத்திலே கொண்டுபோய் வைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த வனக் கல்லூரி இப்போது ஆரம்பிக்கப்பட்டதல்ல. 150 ஆண்டுகளுக்கு முன்னாலே அந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. மிக அழகான கட்டடம். ஆகவே, அந்தக் கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. மேலும், அங்கிருக்கிற 300 ஏக்கர் நிலத்தில் ஏராளமான மரங்கள் நிறைந்திருப்பதால் மிகப் பெரிய அளவிற்கு வளர்ந்து வருகிற அந்த நகரத்திற்கு நுரையீரல்போல Oxygen-ஐக் கொடுக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** சீக்கரம் பேசி முடித்துவிடுங்கள். இப்போது 13 நிமிடங்கள் ஆகின்றன. சுற்றுச்சூழல் என்று சொல்லி ரொம்பவும் சுற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறீர்கள். ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, இல்லை, சுற்றமாட்டேன், மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழலைப் பொறுத்த அளவில் நம்முடைய அரசாங்கம் நிறைய செய்ய வேண்டியிருக்கிறது. குறிப்பாக எங்களுடைய மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், 200 அடி ஆழத்திற்கு நிலத்தடி நீர், நிறைய நீர்பிடிப்புப் பகுதியெல்லாம் மாசு அடைந்து இருக்கிறது. ஆகவே, முதல்வர் அவர்கள் நிலத்தடி நீர் மாசில்லாமல் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் Tannery. அதேபோல் ஜவ்வரிசி ஆலை. ஆலைகளில் இருக்கக்கூடிய சாயப் பட்டறைகளை எல்லாம் உடனடியாக மூட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டு இருக்கிற காரணத்தினாலே, தொழில் நசிந்து போய் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் நீதிமன்றத்திலே வாதாடி எப்படியாவது அவர்களுக்கு 6 மாதமோ, ஓர் ஆண்டோ time நீங்கள் வாங்கிக் கொடுத்தால் ஜவ்வரிசி ஆலைகளும் இயங்கும், Tannery-களும் இயங்கும். அதேபோல viscose. Viscose-ஐப் பற்றி இங்கே சொல்லியாக வேண்டும். Viscose-ஐப் பொறுத்தவரை, கடந்த காலத்திலே ஆற்றிலே நீர் விடாமல்

இருந்தவர்கள் மீண்டும் ஆற்றிலே கழிவு நீரைவிட ஆரம்பித்து விட்டார்கள் என்ற காரணத்திற்காக விவசாயிகள் அவ்வப்போது போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டு கைது செயயப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் இந்த Viscose-ல் இருக்கக்கூடிய அந்த மாசு ஆற்றில் கலக்காமல் இருப்பதற்கு . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** 14 நிமிடங்கள் ஆகிவிட்டன, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, Viscose-ஐப் பொறுத்த அளவிலே, உச்சநீதிமன்ற உத்தரவுபடி நமது மாசுக் கட்டுப்பாடு வாரியம் 17 condition-களைப் போட்டு, ஒரு சொட்டுகூட பவானி ஆற்றில் அந்த நீர் கலக்கக் கூடாது என்று உத்தரவிட்டு, அதன்படி இப்போது வேலை நடந்து வருகிறது. ஆற்றிலே நிச்சயமாக எந்தக் கழிவுநீரையும் விட இந்த அரசு அனுமதிக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** திரு. ஞானசேகரன், நிறைய பேசிவிட்டீர்கள். திரு. வி.கே. லட்சுமணன்.

முற்பகல் 11-15

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விவசாயிகள் நாள்தோறும் அங்கே கைது செய்யப்பட்டு வருகிறார்கள். பெரிய போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. நீதிமன்றத்தினுடைய உத்தரவின் மூலமாக ஆற்றிலே தண்ணீரே கலக்கவில்லை என்று சொன்னால் போராட்டத்திலே ஈடுபட வேண்டிய அவசியமில்லை. ஆகையினாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் போராட்டத்திற்கு என்ன காரணம் என்பதை அறிவிப்பார்களா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த வட்டாரத்திலேயுள்ள, குறிப்பாக தொழிற்சாலையிலே பணியாற்றுகின்ற எல்லா கட்சித் தொழிலாளர்களும் கையெழுத்திட்டு, தி.மு.க., அ.இ.அ.தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள், ம.தி.மு.க., இப்படி எல்லா கட்சிகளினுடைய தொழிலாளர்களும் கையெழுத்திட்டு அந்த ஆலை தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் அடிப்படையில், மாண்புமிகு அமைச்சர் இங்கே குறிப்பிட்டதைப்போல கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டு, அதற்கென்று அவர்கள்



400 ஏக்கர் தனியாக நிலமே எடுத்து, அங்கே அந்தக் கழிவுநீரைக் கொண்டுபோய் விடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு—அதுகூட வெறும் வாய்க்காலிலே, திறந்த வாய்க்காலிலே ஓடாமல், அது pipe மூலமாகப் போவதற்கு ஏற்பாடு-T.V-யிலே எல்லாம்கூட காட்டினார்கள் அந்த pipeகளை-செய்யப்பட்டிருக்கின்றது. அதற்கு மேலும் அதனால் ஊறு விளையுமேயானால் "நீங்கள் ஆலையை மூட வேண்டும்" என்ற நிபந்தனையும் போட்டு, அதற்கும் சம்மதித்துத்தான் கொடுத்திருக்கிறோம். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? (குறுக்கீடு) நிறுத்திவிடலாமா? தொழிலாளர்களை பாதிக்க விடலாமா என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன் அவர்கள் தொழிலாளர்கள் பாதிப்பு பற்றி கவலையில்லை என்றும் சொல்வார்களேயானால்-இந்தப் போராட்டம் நடைபெறுவது, அது ஒரு தயார் செய்யப்பட்ட போராட்டம்; உண்மையான விவசாயிகள் நடத்துகின்ற போராட்டமல்ல. அந்தப் போராட்டத்தின் உண்மை வடிவம் என்ன என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக விவசாயிகளுடைய பெயரால் ஒரு பெரிய தொழிற்சாலையை மூடிவிடலாமா?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** போதும். அடுத்து, டாக்டர் மு. தேவராஜன்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரேயொரு கோரிக்கை, பேசி முடித்துவிடுகிறேன். உங்களுக்குப் புண்ணியமாகப் போய்விடும். Please.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** இல்லை, வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் 14 நிமிடங்கள் பேசியாகிவிட்டது, உட்காருங்கள். டாக்டர் மு. தேவராஜன்.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வனத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு முன்பாக இன்று பிறந்தநாள் காணும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நீடுழி வாழ்ந்து, இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்குத் தொண்டு செய்ய வேண்டுமாய் வாழ்த்தி, என்னுடைய பேச்சை ஆரம்பிக்கின்றேன்.

அண்ணா வழியில் அயராது உழைப்போம், ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம், இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம், வன்முறையைத் தவிர்த்து வறுமையை வெல்வோம், மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற தன்னிகரற்ற...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மானியத்தைப்பற்றிப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். மானியத்தை விட்டுவிட்டு எங்கேயோ போகிறார்கள். காடு என்பதால் காட்டில் கண்டபடி சுற்ற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். *(சிரிப்பு)*

**டாக்டர் மு. தேவராஜன்:** தந்தை பெரியார் அவர்களின், பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் தமிழகத்தின் ஒப்பற்ற தலைவருக்கும்—60 ஆண்டுகளுக்கு மேலாக இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்கு உழைத்துக்கொண்டிருக்கும் தன்னலமற்ற தலைவருக்கும், எங்களுடைய மாவட்டத்திற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டதற்காக, நிலம் எடுக்கப்பட்டதற்காக மாவட்டத்தின் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது வன வளம் உலக மொத்தப் பரப்பில் 20 கோடி சதுர மைல்கள் ஆகும். அது, தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பில் 1 இலட்சத்து 10 ஆயிரம் சதுர மைல்கள் நிலப்பரப்பாகும். ஆனால் இன்றைய வன வளம் 22 சதவீதமே இருக்கிறது. இன்றைய மொத்த நிலப்பரப்பில் 33 சதவீதம் வன வளம் இருக்க வேண்டும். ஆனால், மனிதன் தன்னுடைய சுயநலனுக்காகவும், தன்னுடைய பொருளுக்காகவும், தன்னுடைய வருவாய்க்காகவும், மரங்களை வெட்ட ஆரம்பித்ததன் விளைவே இன்றைய சுற்றுச்சூழல் மாசு மற்றும் நோய் பெருக்கம். இதை உணர்ந்த தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டும் என்ற எண்ணத்திலே சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக, வன வளத்திற்காக, தன்னுடைய பிறந்தநாளை முன்னிட்டு வருடத்திற்கு ஒரு கோடி மரங்கள் நட வேண்டும் என்று அறிவித்து, கழகத் தோழர்கள் வருடத்திற்கு ஒரு கோடி மரங்களை நட்டார்கள். அந்த அளவிலே இந்த மாமன்றத்திற்கு ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.



முற்பகல் 11-20

மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரில் சத்துணவுத் திட்டம் என்று அமைத்தார்கள். அந்தச் சத்துணவுத் திட்டத்திற்கு மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் சத்துணவுத் திட்டம் என்று அறிவித்தார்கள். அதேபோல இந்த நாட்டைப் பற்றிக் கவலைப்பட்ட தலைவரவர்களின் பெயரில், இந்தச் சுற்றுப்புறச் சூழலைப் பற்றிக் கவலைப்பட்ட தலைவரவர்களின் பெயரில்—இந்திய அரசியல் தலைவர்களிலே சுற்றுப்புறச் சூழலைப் பற்றிக் கவலைப்பட்டதாக எந்த அரசியல் தலைவரும் இல்லை—"கலைஞர் அவர்களின் மரம் நடும் திட்டம்" என்று இந்தத் திட்டத்தை அறிவிக்க வேண்டுமாய் இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

33 சதவீதம் வன வளம் பெருக—இந்த மாமன்றத்திலே 22 சதவீதம்தான் காட்டு வளம் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது— அதிலே இன்னும் 11 சதவீதம் கூட வேண்டும். அதற்காக என்னுடைய பணிவான கருத்துக்களை இந்தச் சபையிலே வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாநில அளவிலே மரங்களின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டும். மரங்களை வெட்டுபவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்க வேண்டும். மாநில அளவிலே வன வளத்தைப் பெருக்க, மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க தனியார் நிலங்களிலும், அரசு நிலங்களிலும் நட்டு வளர்ப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். கால்நடைகளின் மேய்ச்சலைக் கட்டுப்படுத்த அவைகளுக்கென்று ஒரு பகுதியிலே தனியாக நிலங்கள் ஒதுக்கப்பட வேண்டும்.

இயற்கைச் சூழலோடு விலங்குகளும், பறவைகளும் வாழ்வதற்கான சூழலுக்கு 25 சதவீதம் காடுகள் தேவைப்படுகின்றன. ஆகவே, அவைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்.

மனித வாழ்வில் பங்கெடுத்து, மனித வாழ்விற்குப் பயன் தருகின்ற மருந்துகளாக பழங்கள் காய்க்கும் நாவல், அத்தி, வில்வ மரம் போன்ற மரங்கள் நடப்பட வேண்டும்.

சந்தன மரமே இந்த நாட்டில் அருகிப் போய்விட்டதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். சந்தன மரம் எதிர்காலத்திலே ஒரு காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுவிடுமோ

என அஞ்சப்படுகிறது. ஏனென்றால் கடந்த அ.இ.அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலே ஆண்டவர்கள் சந்தன மரங்களையும், விலை உயர்ந்த தேக்கு மரங்களையும் கொள்ளையடித்தார்கள். கொள்ளை அடித்து, மாமல்லபுரம், மன்னார்புரம், ஹைதராபாத் போன்ற இடங்களில் சேகரித்து வைத்தார்கள். வருங்காலத்திலே, சந்தன மரங்கள் இல்லை என்று சொல்லும் அளவிற்கு இருக்கிறது. ஆகவே, சந்தன மரங்களைத் தனியார் நிலங்களுக்கு ஒதுக்கிடு செய்து தனியார் வளர்ப்பதற்கு அரசு ஊக்குவிக்க வேண்டும். இல்லையென்றால் சந்தன மரம் எதிர்காலத்திலே இல்லை என்று ஆகிவிடும். மேலும் சந்தன மரங்களை தனியார் நிலங்களில் வளர்த்து Coffee Board போல ஒரு Board அமைத்து சந்தன மரங்கள் வளர்ந்த பிறகு அதைக் கொள்முதல் செய்ய அரசே முன்வர வேண்டும்.

விலை உயர்ந்த தேக்கு மரங்களெல்லாம், ஆற்றங்கரை நெடுகிலும் இருந்த மரங்கள் எல்லாம், கடந்த அரசாங்கத்திலே கொள்ளையடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுவிட்டன. ஆகவே, தேக்கு மரங்கள் போன்ற விலை உயர்ந்த மரங்களை நடுவதற்கு அரசு ஊக்குவிக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியின் சார்பாக, 40 ஆண்டுகளுக்கு மேலாகக் கோரிக்கை வைத்த, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தந்த தமிழகமுதல்வரவர்களுக்கு என்னுடைய தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே விசுவகுடி என்ற நீர்த்தேக்கம் இருக்கிறது. நீர்த்தேக்கத்தை பற்றி ஏற்கெனவே அரசிடம் கோரிக்கை இருக்கிறது. அந்த விசுவகுடி நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

என்னுடைய தொகுதியில் கூகையூர் பாலத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த வருடத்தில் செயல்படுத்தித் தருகிறேன் என்று சொன்னார்கள். அதற்கும் என்னுடைய தொகுதியின் சார்பாக நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரையூரில் உடைந்த அணைக்கட்டு பல ஆண்டுகளாகச் சீர்திருத்தப்படாமல் கிடக்கிறது. அதையும் சீர்செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.



வேப்பந்தட்டையைத் தாலுகாவாக அறிவித்த நிலையில், மாணவர்கள் விடுதியையும், மாணவிகள் விடுதியையும் கட்டித்தருவதுடன் வேப்பந்தட்டையை தாலுகா அந்தஸ்துக்கு உயர்த்த வேண்டுமாய்ப் பணிவோடு இந்த வேண்டுகோளை வைக்கிறேன். வாலிகண்டபுரம்—

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** உரையை முடியுங்கள்.

**டாக்டர் மு. தேவராஜன்:** அடுத்து என்னுடைய தொகுதிப் பிரச்சினை. வாலிகண்டபுரம்-மேட்டுப்பாளையம் இடையே ஒரு மேம்பாலம், ஆற்றின் குறுக்கே அமைத்துத்தர வேண்டுகிறேன். வேப்பந்தட்டை-கிருஷ்ணாபுரம் இடையே ஒரு மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுகிறேன். வாலிகண்டபுரம், பிரம்மதேசம் வழியாக ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைத்துத் தர வேண்டுகிறேன். தொகுதியிலுள்ள அனைத்து ஏரிகளும், கருவேல மரங்கள் நட்டு, அந்த ஏரிகள் அனைத்தும் மண் மேடாகக் காட்சியளிக்கின்றது. ஆகவே, ஏரிகளை ஆழப்படுத்துவதற்கு வருங்காலத்திலே கருவேல மரங்களை அந்த ஏரியில் நடாமல் இருக்கக் கேட்டுக்கொள்கிறேன். மலையாளப்பட்டி, வி. களத்தூர் வழியாக ஓடுகின்ற கல்லாற்றின் குறுக்கே அணைகள் கட்டி, தடுப்பு அணைகள் கட்டி, நிலத்தடி நீர் உயர இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டத் தலைநகரமாக அறிவிக்கப்பட்ட நிலையில் நிதி ஒதுக்கீடு இல்லை. ஆகவே,—(குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** ஞானசேகரன், இப்பொழுது என்ன?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசுகின்றபொழுது ஏரியிலே கருவேல மரங்களை நடக் கூடாது என்கின்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். ஏற்கெனவே நாங்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கின்றோம். ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் இருக்க வேண்டுமென்று சொன்னாலும் காடு அழியாமல் இருக்க வேண்டுமென்று சொன்னாலும் ஏரியிலே மரம் நட்டு, வளர்ந்த பிறகு, periodical-ஆக அதை வெட்ட நீங்கள் ஏற்பாடு செய்தால்தான் நாடு வளமாகும். ஆகவே, நீங்கள் கருவேல மரங்கள்—

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** முதலிலேயே சொல்லியாயிற்று. டாக்டர் தேவராஜன் நீங்கள் விரைவாகப் பேசி முடியுங்கள்.

*முற்பகல் 11.-25*

**டாக்டர் மு. தேவராஜன்:** மரம் நடுவது என்பதில், ஆற்றங்கரை நெடுகிலும், வழிநெடுக, கடலில் கலக்கும் இடம் வரையிலும் கோடிக்கணக்கான மரங்களை நட்டு, வன வளத்தைப் பெருக்கலாம்.

பெரம்பலூர், மாவட்டமாக அறிவிக்கப்பட்ட நிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் வளாகத்திற்கு இன்னும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஆகவே மாவட்ட ஆட்சித்தலைவர் வளாகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். பெரம்பலூர் மாவட்டத் தலைநகராக அறிவிக்கப்பட்ட நிலையில், சுற்றுலா மாளிகை இன்றுவரை இல்லை. ஆகவே, பயணிகள் தங்குவதற்கு அங்கே சுற்றுலா மாளிகை அமைத்துத் தர வேண்டுமாய் பணிவோடு கேட்டு விடைபெறுகிறேன்.

## 8. அறிவிப்பு

### உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி ஏற்பாடு

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. வை. சிவபுண்ணியம்):** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அனைத்து உறுப்பினர்களுக்கும் சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்திருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 37—சுற்றுச் சூழல்**—தொடர்ச்சி

**(ஆ) கோரிக்கை எண் 44—காட்டுவளத் துறை**—தொடர்ச்சி

**(இ) கோரிக்கை எண் 58—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு**—தொடர்ச்சி

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** அடுத்து, திரு. வி.பி. சிங்காரவேலு.

**திரு. வி.பி. சிங்காரவேலு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நாங்கள் எல்லாம் வனத்திலே வசிப்பவர்கள். ஆகவே தயவுசெய்து எனக்குத் கொஞ்சம் அதிகநேரம் ஒதுக்கித் தர வேண்டுமென்று



பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்து மக்களுடைய நலன்களுக்காகவும், அவர்களுடைய வாழ்க்கை மேம்பாட்டிற்காகவும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினுடைய முன்னேற்றத்திற்காகவும் அல்லும் பகலும் அயராது பாடுபடக்கூடிய எங்களுடைய தலைவர், தமிழக முதல்வர் அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என்னுடைய வணக்கத்தைச் சமர்ப்பித்து என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

கோவை மாட்டத்தின் கழகக் காவலனும், தொண்டர்களின் தோழனுமான எங்களுடைய மரியாதைக்குரிய வனத் துறை அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கக்கூடிய காட்டுவளம், சுற்றுச்சூழல் குறித்த இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று, சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் தமிழகத்தில் சந்தனம் ஒரு அடையாளப் பொருளாகிவிடுமோ என்று சொன்னார்கள். ஆனால் நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், தமிழகத்தில் வனப் பகுதிகளில் எந்தவிதமான மரங்களையும் வெட்டுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. அதைப்போல, வனத்தை வளப்படுத்த வேண்டும், வனத்தினுடைய பரப்பை 33 சதவீத அளவுக்கு உயர்த்துவதற்குப் பெருமுயற்சி எடுத்து, ஜப்பான் நாட்டினுடைய உதவியோடு இப்போது தமிழகத்திலே ஏறத்தாழ 200 கிராமப் பகுதிகளில் வனத்தை வளப்படுத்துவதற்காக நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. அதுமட்டுமல்லாமல், அந்த வனப் பகுதிகளில் வன விலங்குகளைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், வனத்திலே இருக்கக்கூடிய விலை உயர்ந்த மரங்களில், இந்த மூன்றாண்டு காலத்தில் ஒரு மரத்தைக்கூட வெட்டுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதையும் இந்த நேரத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், மரங்களை வெட்டுவதற்கு நாம் அனுமதி அளிக்காத நேரத்தில், நம்முடைய பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய பல்வேறு மரச்சாமான்களுக்கு வெளி மாநிலங்களுக்குச் சென்று மரங்களை வாங்குகின்ற காரணத்தால், அந்த மக்கள் மிகுந்த செலவு செய்து வீடுகளைக் கட்ட வேண்டிய நிலை இருக்கிறது என்பதையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு, பல ஜாதி மரங்களை வெட்டுவதற்கும் நிபந்தனையோடு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது, இரண்டு பங்கு மரக் கன்றுகளை

மீண்டும் வளர்க்க வேண்டுமென்ற நிபந்தனையோடு மரங்களை வெட்டுவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்தில் கிடைக்கும் தேக்கு மற்றும் Rose wood மரங்களைவிட, பர்மா தேக்கு மரங்கள் மிக மலிவாகக் கிடைக்கின்றன. அந்த நாட்டினுடைய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதன் காரணமாக, அதிகமான மரங்களை இந்தியாவுக்கு அனுப்புகிறார்கள். ஆகவே, நமது மரங்களை வெட்டி வன வளத்தை நாம் அழிக்க வேண்டிய அவசியம் இல்லை. பர்மா தேக்கு மரங்களையே மக்கள் உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.பி. சிங்காரவேலு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நிற்கிற மரங்களை வெட்டுவதற்கு நாம் அனுமதி அளிக்காவிட்டாலும், காற்று, மழையால் கீழே விழுந்துவிட்ட மரங்களை எடுப்பதற்கும், கடந்தகால ஆட்சியிலே வெட்டிவைத்து பாழாகிப் போய்க்கொண்டிருக்கிற மரங்களை எடுப்பதற்குமாவது நம்முடைய வனத் துறைக்கு வருமானம் கிடைக்ககூடிய வகையில், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன.

நம்முடைய 'TANTEA' -யைப் பொறுத்தவரையில் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் *1990* ஆம் ஆண்டில் வால்பாறை பகுதியை TANTEA பகுதியாக அறிவித்து, அதன் காரணமாக ஏறத்தாழ பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தேயிலைத் தொழிலாளர்கள் பயன்பெறுகிறார்கள். நம்முடைய உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்த ஆண்டு தேயிலை வளர்ச்சிக் கழகம் *30* கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அங்கே இருக்கக்கூடிய ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களை நாம் நிரந்தரமாக்கியிருக்கிறோம். உண்மையிலேயே தோட்டத் தொழிலாளர்களுக்காக நம்முடைய கழக அரசுதான் பாடுபாட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே TANTEA-யில், அந்தப் பகுதியில் இருக்கக்கூடியவன் என்ற முறையில் உணர்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-30*

இன்றைக்கு யார் யார் எல்லாமோ தோட்டத் தொழிலாளர்களுக்காகப் பாடுபடுவதாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.



இந்தப் பேரவையிலே மாண்புமிகு முதல்வரவர்கள் பேசாத பேச்சை எல்லாம், பொதுக்கூட்டத்திலே அவர் சொன்னதாக தவறான கருத்துகளையெல்லாம் சொல்லி, பொய்ப் பிரச்சாரம் செய்து வருகின்றார்கள். ஆனால், நாம் தேயிலை வளர்ச்சிக் கழகத்திலே இன்றைக்கு இரண்டு புதிய தொழிற்சாலைகளை நிறுவி, கோடிக்கணக்கான ரூபாய் இலாபத்தை ஈட்டி, அந்த மக்களுக்கு, பன்றிகள்கூட வாழ்வதற்குக் கேவலமாக இருந்த அந்தத் தேயிலைத் தோட்டப் பகுதியில், TANTEA - பகுதியில் இன்றைக்கு நல்ல வீடுகளைக் கட்டிக்கொடுத்து, அடிப்படை வசதிகளை நிறைவு செய்து கொடுத்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் நன்றி உணர்வோடு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேவேளையில், வால்பாறை பகுதியில் கல்லூரி என்று எதுவுமே இல்லை. *30* கோடி ரூபாய் இலாபம் ஈட்டிக் கொடுத்திருக்கின்றது தேயிலை வளர்ச்சிக் கழகம். ஆகவே, கூடலூர் பகுதிக்கு TANTEA சார்பில் ஒரு Polytechnic-ம் வால்பாறைக்கு ஒரு கலைக் கல்லூரியும் வழங்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால், உலகம் முழுவதும் உள்ள தேயிலைத் தோட்டங்களிலே பணியாற்றக்கூடியவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள்தான். அந்த மக்கள் நம்முடைய கழகத்திற்கு என்றைக்கும் விசுவாசம் உள்ளவர்களாக இருப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், நாடாளுமன்றத் தேர்தலிலேகூட ஊட்டி, கூடலூர், குன்னூர் மற்றும் வால்பாறை ஆகிய நான்கு தொகுதிகளிலும் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். இந்த நான்கு தொகுதிகளிலும் வசிக்கக்கூடிய தோட்டத் தொழிலாள மக்களுக்காக polytechnic-ம், கலைக் கல்லூரியும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) Forest area பற்றி ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** சீக்கிரம் பேசிமுடித்து விடுங்கள்.

**திரு. வி.பி. சிங்காரவேலு:** அதைப்போல, சந்தனக் கட்டை வழக்குகளில் 'compounding' செய்யக்கூடிய அந்த நிலையை நீங்கள் மாற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால் ஒருபுறத்திலே அந்த வழக்கிலே compulsory imprisonment என்று இருக்கிறது. Non-bailable என்று இருக்கிறது. ஆனால், ஒரு வன அதிகாரி அவருடைய கட்டுப்பாட்டிலே *500* கிலோ பிடித்தால்கூட, *10* கிலோ பிடித்ததாக அவர் வழக்கைப் பதிவு

செய்து, அவரே சமரசம் செய்து 'compounding' போடக்கூடிய ஓர் அதிகாரம் இருக்கிறது. ஆகவே, நீங்கள் கண்டிப்பாக, இந்தப் பிரிவை எடுக்க வேண்டும். அதைப்போல 'Hill Area Trees Preservation Act'-ஐயும் நீங்கள் நீக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் வனச் சட்டத்தை மீறி Estate-கள் வாங்கிய நபர்கள்மீது நடவடிக்கை எடுப்பதாக ஏற்கெனவே உறுதியளித்திருக்கிறீர்கள். அதன்மீது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்

வனத் துறையில் பணியாற்றக்கூடிய ஊழியர்கள் மிகுந்த இடர்பாடுகளுக்கிடையே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு, நம்முடைய காவல் துறை காவலர்களுக்கு மானிய விலையில் பொருட்களை வழங்குவதுபோல, அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதுபோல, வனத் துறை ஊழியர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய வனத் துறை அதிகாரிகளுக்குச் சொந்தமாக வாகனங்கள் வாங்குவதற்குக் கடன் கொடுக்கின்றபோது, ஏற்கெனவே பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய ஓட்டுநர்களுக்கு வேலை இழப்பு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த முறை நான் ஒரு கவனஈர்ப்பில் இங்கே உரையாற்றுகின்றபோது, வன விலங்குகள் தாக்குதலால் இறப்பவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டதை, நான் கேட்டுக்கொண்டதன் பேரில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தினார்கள். ஆனால், ஒரு மனிதன் விபத்திலே இறப்பதைக் காட்டிலும், புலி அடித்து, யானை மிதித்து இறப்பது என்பது மிகவும் கொடுமையான செயல். ஆகவே நஷ்ட ஈடாக ஓர் இலட்சம் ரூபாய் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நேற்று முன்தினம் கூட, வால்பாறையில் கரந்தை என்ற காட்டுத் தேனீ கடித்து Supervisor ஒருவர் அந்த இடத்திலேயே மரணம் அடைந்திருக்கிறார். 25 பேர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் உதவி வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிங்காரவேலு குறிப்பிட்ட தேனீக்கள் கடித்து இறந்த அந்த நபர் தனியார் தோட்டத்திலே வேலை செய்யும்போது இறந்ததாக எனக்குத் தகவல் வந்து இருக்கிறது. ஆகவே, அதற்கு நிதி உதவி கொடுக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** அடுத்து, திரு. டி. மணி (குறுக்கீடு)

**திரு. வி.பி. சிங்காரவேலு:** ஒன்றே ஒன்று.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** நேரமாகி விட்டது. பேசியது போதும், உட்காருங்கள். திரு. டி. மணி.

• **திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வனத் துறை மானியத்தின்மீது பல விஷயங்களைச் சொல்ல வேண்டியிருந்தாலும், காலத்தின் அருமை கருதி என்று சொல்கின்ற அந்த வட்டத்திற்குள்ளே நின்று சுருக்கமாகச் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வனத்தைப் பாதுகாக்க கூடுதல் வன ஊழியர்கள் வேண்டும் என்பது முக்கியமான ஒரு விஷயம். அவர்களுக்கு பாதுகாப்புக்கு ஆயுதங்கள் வழங்கப்பட வேண்டும். சோதனைச் சாவடிகளைப் பலப்படுத்த வேண்டும். கடந்த காலத்தில் களியல் சோதனைச் சாவடியில் கொள்ளை அடித்ததில் காவல் துறை உரிய கவனம் செலுத்தாததைச் சுட்டிக்கிறேன். வனங்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

முற்பகல் 11-35

மகேந்திரகிரி பக்கம் சுமார் 300 ஏக்கர் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு உள்ளது. அதைத் தடுப்பதற்கு நீதிமன்றம் மூலம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று தலக்குமலை காணியிலே சுமார் 300 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த முயற்சி நடக்கிறது. இப்போது நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது. இந்த மூன்று வனத் துறை சம்பந்தமான வழக்குகளை சிறந்த வழக்கறிஞர்களைக் கொண்டு நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வனங்களைச் சரிவர பாதுகாக்க 9 கோரிக்கைகளையும் சரிவர அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வனத்தின்

பரப்பளவு குறைந்து போயுள்ளது என்பது பொதுவாக இருக்கின்ற ஒரு பிரச்சினையாகும். நம்முடைய தேவை 33 சதவிகிதம். இதை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வனத்தை விஸ்தரிக்க, ஆராய்ச்சிக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். வனங்களை மேம்படுத்தவும், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கவும், உயிரினங்களை பெருக்கவும் வேண்டும். வனங்களில் குடியிருக்கும் மலைவாழ் மக்கள் மரங்களை நட்டு அதில் வரும் வருமானத்தை எடுக்க அனுமதிக்க வேண்டும். இதனால் வனம் பாதுகாக்கப்படும்.

அடுத்து, வன வளர்ப்புத் திட்டம். ஜப்பான் நாட்டின் உதவியோடு நடைபெறுகின்ற இந்தத் திட்டத்தை அருகில் உள்ள கிராம மக்களின் ஒத்துழைப்போடு நடத்த வேண்டும். காடுகளைப் பாதுகாக்க தடுப்புச் சுவர்களைக் கட்டி, மழைக்காலங்களில் மழைத் தண்ணீரைத் தேக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மரங்களை வளர்க்கவும், மருந்துக்கான மூலிகைகள் வளர்க்கப்படவும், கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும். சந்தனம், தேக்கு, ஈட்டி போன்ற விலை உயர்ந்த மரங்களை நடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். கடலோரப் பகுதிகளில் மரங்களை நடவும், சவுக்குத் தோப்புகள், அதேபோன்று முந்திரித் தோப்புகள் உருவாக்கப்படவும் வேண்டும். சந்தன மரங்களைப் பாதுகாப்பதோடு, அதைத் திருடும் சமூகவிரோதிகள் மற்றும் அவர்களுக்குத் துணை போகும் அதிகாரிகள்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஏற்கெனவே காளிகேசம் மலைப் பகுதிகளில் பெருகி வருகின்ற திருட்டைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். பேச்சிப்பாறையிலிருந்து குலசேகரம் வன அலுவலகத்திற்கு அரசு வாகனத்திலேயே மரங்களைக் கொண்டு வந்து தனியாருக்கு விற்கின்ற ஒரு தவறான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே விறகுகள் எடுக்கிறோம் என்ற பெயரால் இப்போது பெரிய அளவிலே காளிகேசத்தில் மரங்கள் திருடப்படுகின்றன. அதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஏற்கெனவே தங்கராஜ், I.A.S., அவர்கள் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட Commission சில செல்வாக்குடையவர்கள் வனங்களை ஆக்கிரமித்து பட்டா வாங்கியதைக் கண்டறிந்ததை Re-survey செய்து அதை அரசுக்குச் சொந்தமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கல்வராயன் மலை, ஜவ்வாது மலைகளில் அரசு உத்தரவுபடி அப்பகுதியில் சாகுபடி செய்யும் மக்களுக்கு நிலத்தை ஒப்படை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வனத் துறைக்குச் சம்பந்தமான ரப்பர் கழகத்திலே இருக்கின்ற பிரச்சினை சம்பந்தமாக சுருக்கமாக சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். அதில் 2700 தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையின் காரணமாக ரப்பர் விலை வீழ்ச்சி அடைந்திருக்கிறது, உண்மைதான். ஆனால் அதைப் பாதுகாத்துக்கொள்வதற்கு அந்தத் துறையிலே இன்று 280-க்கும் அதிகமான வன ஊழியர்கள் அங்கு Deputation-லே இருக்கிறார்கள். அவர்களைத் திரும்ப வனத் துறைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இதனாலே அதிகப்படியான பணம் அரசுக்கு இலாபமாக வரும் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அதேபோல M.D. என்று பெரிய அதிகாரி இருக்கிறார். அந்த M.D., Plantation-க்கு உள்ளே சென்று பார்த்ததே இல்லை. அதனுடைய விளைவுதான் இப்போது இந்த அளவுக்குச் சீர்குலைவு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, அவர் 20 நாட்கள் சென்னையிலே தங்கியிருக்கிறார். கன்னியாகுமரியில் M.D. ஆக இருக்கிற அந்த நபர் 20 நாட்கள், சென்னையிலே தங்கியிருந்தால் எப்படி நம்முடைய Plantation-ஐப் பாதுகாக்க முடியும் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதுபோன்று, போக்குவரத்துக் கழகத்திற்கும், மின் துறைக்கும் மானியம் வழங்குவதைப்போல நலிந்துபோயிருக்கின்ற இந்தக் கழகத்திற்கும் அரசு மானியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மணலோடையில் இருக்கின்ற நம்முடைய குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அடுத்து மணலோடை என்ற ஊரிலே சமீபத்திலே 2 மரணங்கள் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக வேலைக்குச் சென்ற தாசன் என்ற தொழிலாளி வேலை நேரத்திலேயே மாரடைப்பால் இறந்து போனார். அவரைப் பாதுகாக்க எந்த அதிகாரியும் செல்லாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதுபோன்று கல்லார் Division-ல் சியாமளா என்ற தொழிலாளி வேலை செய்து கொண்டிருந்த நேரத்திலே இறந்து போயிருக்கிறார். எந்த உதவியும் அதிகாரிகளால் செய்யப்படாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதேபோல இந்த ரப்பர் கழகத்தைப் பாதுகாக்க

ரப்பரை, பயன்படுத்தி ரப்பர் சாலைகளை அமைக்க வேண்டும். ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளாக இதைச் சொல்லி வருகிறோம். தமிழ்நாட்டிலே உள்ள அரசு வாகனங்களுக்குத் தேவையான Tyre, Tube ஆகியவற்றைத் தயார் செய்தால் நம்முடைய ரப்பர் கழகத்தைப் பாதுகாக்க முடியும். அதுபோன்று தொழிலாளர்களுடைய சம்பளப் பிரச்சினையிலே உரிய கவனம் செலுத்த வேண்டும். தேயிலையானாலும் சரி, ரப்பரானாலும் சரி, குறைந்தபட்சம் ரூ.100 சம்பளம் வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்; அதை வழங்க வேண்டும். ரப்பர் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு குலசேகரத்தில் தனி மருந்தகத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேயிலைத் தோட்டத்திலே பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் ரூ. 100 சம்பளம் வழங்க வேண்டும். இந்த நிலையிலே அவர்களுடைய Bonus என்பது சாதாரணமாக 8.33 சதவீதம் என்ற அளவுக்குத்தான் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதிக இலாபம் பெறுகிற இந்த நிலையிலும்கூட தனியார் முதலாளிகள் வழங்குகின்ற 20 சதவீத Bonus-ஐயாவது இந்தத் தேயிலை, ரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-40

அதேபோன்று, நம்முடைய மத்திய வனப் பாதுகாப்புச் சட்டத்திற்கு மாறாக, அசம்பு மலையில் ஒரு சாலை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவசரமாக அதைத் தடை செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஏற்கெனவே நான் மூன்று, நான்கு பிரச்சினைகளை இங்கே குறிப்பட்டிருக்கிறேன். அசம்புமலை பிரச்சினை, அதேபோன்று மற்ற பிரச்சினைகளுக்கு நீதிமன்றத்திலே முறையாக வாதாடுவதற்கு நம்முடைய அரசு வழக்கறிஞர்கள் இல்லாத ஒரு சூழ்நிலை அந்த மாவட்டத்திலே இருக்கிறது. அதுபோல கோழிக்காணம் Estate-ல் ஒரு நபருக்கு 10 ஏக்கர் நிலம்தான் சொந்தம். ஆனால் அவர் 50 ஏக்கருக்கு மேல் வைத்துக்கொண்டிருக்கிறார். ஆக வனங்களைப் பாதுகாக்கின்ற வகையில் புதிய நடைமுறைக்கு நாம் செல்ல வேண்டும். அந்த அடிப்படையில் மரங்களைக் கூடுதலாக நடுவதற்கு, குறிப்பாக சந்தனம், தேக்கு, ஈட்டி போன்ற விலை உயர்ந்த மரங்களை நடுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பேச்சிப்பாறைக்கு அருகாமையில் சுமார் 3,000 தேக்கு மரங்கள் காய்ந்து போய் நிற்கின்றன. அவற்றை உரிய அதிகாரிகளை வைத்து விற்பனை செய்தால் அரசுக்கு அதிகப்படியான இலாபம் வரும். இது மிகப்



பாதுகாப்பாக செய்து முடிக்க வேண்டிய பிரச்சினை. மரங்களை விற்பனை செய்து முடிந்தவுடன் மீண்டும் பயிரிடுவதற்கு (Re-plantation), நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அந்த வகையில் இந்த வனத் துறையிலே இருக்கின்ற இந்தப் பிரச்சினைகளுக்கு அரசு அதிகக் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, நான் கூறுகின்ற விலை உயர்ந்த மரங்கள் அதிகமாக இருக்கின்ற கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகக்கவனம் செலுத்த வேண்டும். நம்முடைய வனம் ஓரளவுக்குப் பாதுகாக்கப்பட்டு வந்தாலும், சமீபத்தில் மூன்று நான்கு மாதங்களாக மோசமான நிலையை அடைந்திருக்கிறது. எனவேதான், குலசேகரத்தையும், காளிகேசத்தையும் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, காட்டு வளத் துறை மற்றும் சுற்றுச் சூழல் மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி, நான் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியா சுதந்திரம் பெற்று 52 ஆண்டுகள் ஆகிவிட்டன. 560-க்கு மேற்பட்ட சமஸ்தானங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஜமீன்கள் ஒழிக்கப்பட்டிருக்கின்றன. மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டிருக்கிறது. வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தவறாக சில நிறுவனங்களுக்கு 99 ஆண்டுக்காலம் குத்தகை என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. சுதந்திரம் பெற்ற பிறகும்கூட மக்களுடைய நலன் கருதி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் அந்த நிலங்களில் தேயிலையும், காப்பியும், ஏலமும் பயிரிடுவதற்கு பெரிய பெரிய பகாசுர நிறுவனங்களான B.B.T.C., TATA, BIRLA, கோயங்கா போன்ற கம்பெனிகளுக்கு, அதுவும் ஓர் ஏக்கருக்கு 10 ரூபாய், 15 ரூபாய் என்று அற்ப சொற்ப அளவில் குத்தகைக்கு விட்டுக்கொண்டிருப்பது ஏன் என்று இந்த மாமன்றத்திலே கேள்வி எழுப்பக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நாட்டிலே வாழ்கின்ற மக்களில் 40-லிருந்து 50 சதவீதம் பேர் வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மக்களுடைய வறுமையைப் போக்குவதற்கு எந்த நடவடிக்கை எடுத்தாலும்கூட, அவர்கள்

முழுமையாக வறுமைக் கோட்டிலிருந்து மேலே வர முடியாதவர்களாக இருக்கின்ற இந்த நிலையில், பகாசுரக் கம்பெனிகளுக்கு 10,000, 20,000 ஏக்கர் அரசினுடைய நிலங்களை எதற்காக விட்டுக்கொடுத்திருக்க வேண்டும்? இந்த மாமன்றத்திலே அரசு, வன இலாகா குத்தகைக்குக் கொடுத்திருப்பதை ரத்து செய்து விட்டு, அந்த நிலங்களையெல்லாம் எடுத்து, அங்கே பல தலைமுறைகளாக வேலை செய்து கொண்டிருக்கக்கூடிய தோட்டத் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்தளிக்க இந்த அரசு முன்வருமா? முன் வர வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன.

பிற்பகல் 11-45

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் TATA, BIRLA போன்ற கம்பெனிகளுக்கெல்லாம். வனத் துறை நிலங்களைக் குத்தகைக்குக் கொடுத்திருப்பதாக தவறானத் தகவலைச் சொன்னார். திருவாளர்கள் Bombay Burma Trading Corporation நிறுவனத்திற்கு திருநெல்வேலி மாவட்டம் சிங்கப்பட்டி ஜமீன்தார் 1929 ஆம் ஆண்டு 8,373 ஏக்கர் நிலத்தை, ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூ. 33 வீதம் குத்தகைக்குக் கொடுத்துள்ளார். இந்தக் குத்தகை 1999-லேதான் முடிவடைகிறது. ஜமீன்தாரி நில ஒழிப்புச் சட்டம் 48-ன்படி சிங்கப்பட்டி ஜமீன் நிலம் முழுவதையும் B.B.T.C-க்குக் கொடுக்கப்பட்ட குத்தகை நிலத்தையும் சேர்த்து 1952-ல் அரசு எடுத்துக்கொண்டது. ஜமீன்தாரி நில ஒழிப்புச் சட்டப் பிரிவு 19-ன்படி Madras Revenue Board 1952-ல் B.B.T.C நிறுவனத்தினர் மீதமுள்ள குத்தகை காலத்தையும் அனுபவிக்க அனுமதி அந்தக் காலத்திலேயே அளித்துவிட்டார்கள். ஆகவே, அந்த நிலம் அவர்களால் அனுபவிக்கப்பட்டு வருகிறது.

அதேபோல நீலகிரி மாவட்டம், கூடலூர் கோட்டத்தில், நீலம்பூர் கோவிலகம் என்ற நிர்வாகத்தின்கீழ் ஆயிரக்கணக்கான * ஏக்கர் அன்றைக்கு அவர்களால் தனியார்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றன. ஆகவே, அந்த இரண்டு நிலங்களைத் தவிர வேறு எந்த நிலமும் வனத் துறையைச் சேர்ந்தது இல்லை. பாக்கி நிலங்கள் எல்லாம் TATA, BIRLA Estate-கள் எல்லாம் அவர்களுடைய பட்டா நிலங்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1952 ஆம் ஆண்டு B.B.T.C.-க்கு மறு குத்தகைக்கு கொடுக்கின்றபோது காட்டு இலாகாவுக்குச் சொந்தமான மரங்களை வெட்டக்கூடாது என்று சில condition-களைப் போட்டிருக்கிறார்கள். ஆனால், மணிமுத்தாறு அணைக்கு வர வேண்டிய catchment area என்று சொல்லக்கூடிய குசுங்குளியார் என்ற பகுதியில் 974 ஏக்கரில் இருந்த நல்ல மரங்களையெல்லாம் வெட்டி, அந்த மரங்களையெல்லாம் அழித்து, அதன் காரணமாக அங்கே சரியாக மழைகூட பெய்யாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. 1995 ஆம் ஆண்டு சேரன்மகாதேவி Sub-Collector B.B.T.C. நிர்வாகம் இப்படி 974 ஏக்கரில் இருந்த மரங்களையெல்லாம் வெட்டிவிட்ட காரணத்தினாலே Condtition-ஐ மீறியிருக்கிறது. எனவே, அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டுமென்று அறிக்கை கொடுத்திருக்கிறாரே, ஏன் அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக அறிய விரும்புகிறேன். மேலும், அவர்கள் குத்தகைக்கு 99 ஆண்டுகளுக்கு விட்டிருக்கிறார்கள். ஆனால், ஏன் 10 ரூபாய் வசூலிக்க வேண்டும் என்பதுதான் எனனுடைய கேள்வி. தேயிலையும் காப்பியும் விளையக்கூடிய இந்தப் பூமியில் ஆண்டுக்கு 10 ரூபாய் வசூலிப்பது எந்தவிதத்தில் நியாயம். ஒரு சாராயக் கடை என்றால் மறு ஏலம் விடுகிறோம், அதேபோல granite-க்கு மறு ஏலம் விடுகிறோம். மணலுக்கு மறு ஏலம் விடுகிறோம், அதிகமாக இலாபம் வந்தால், யார் அதிகமாக ஏலம் கேட்கிறார்களோ அவருக்குக் கொடுக்கிறோம். அதேபோல, இவர்களிடத்திலே ஏன் அதிகமாக வசூலிக்கக் கூடாது அல்லது Open Tender ஏன் விடக் கூடாது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1929-ல் செய்யப்பட்ட ஒப்பந்தப்படி நிர்ணயம் செய்த குத்தகைத் தொகையை வனத் துறை வசூலித்து வருகிறது. ஒப்பந்த விதிகளின்படி குத்தகைத் தொகையை உயர்த்த சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்று பரிசீலனை செய்து வருகிறோம். அப்படி உயர்த்தினால் அவர்கள் தடையாணை பெறத் தயாராக இருப்பார்கள் என்பதும் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களுக்குத் தெரியும். இப்போதெல்லாம், எது எதற்கோ உண்மையிலேயே செய்த குற்றங்களுக்கெல்லாம் தடையாணை பெற்றுவிடுகிறார்கள் என்பது நீங்கள் அறியாததல்ல.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள், நேரம் ஆகிவிட்டது.

**டாக்டர். க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வன இலாகா பகுதியில் தனியார்கள் தேயிலைத் தோட்டங்களை வைத்திருக்கிறார்கள். அவர்கள் நீச்சல்குளம் வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய Manager-களுக்கு பங்களா கட்டுவதற்கு அவர்களால் முடிகிறது. ஆனால், தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டும் வீடு கட்ட அனுமதிக்கப்படுவதில்லை.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எங்கு சுற்றினாலும் மாஞ்சோலையை மனதிலே வைத்துக்கொண்டு தொடர்ந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவது சம்பந்தமான பிரச்சினையை இந்த மானியத்திலேயும் பேசுகிறார். இந்தியாவிலேயே தோட்டத் தொழிலாளர்களுக்காக அதிகமான வீடுகள் கட்டிக் கொடுத்த மாநில அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது, வீடு கட்டுவது சம்பந்தமாக வாரியங்கள் இருக்கின்றன. அதிலே தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள். வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய amenities-ல் குறை இருந்தால், அந்த அலுவலகத்திலே நீங்கள் புகார் மனு கொடுத்து, அந்தக் குழுவிலே விவாதித்து நீங்கள் பரிகாரம் தாராளமாகக் காணலாம். எனவே புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. அதை விட்டுவிட்டு தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கவில்லை, வீடு கட்டிக் கொடுக்கவில்லை என்று பழைய பாடலையே பாடிக்கொண்டிருப்பது நியாயமாகாது.

*முற்பகல் 11-50*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற கருத்து சரியான கருத்தல்ல. தோட்டத் தொழிலாளர்களுக்குத் தனியாருடைய நிலங்களில் வீடு கட்டுவது என்பது அரசுக்கு முடியாது. ஏற்கெனவே அவர்களுக்கு அரசு குத்தகைக்கு விட்டிருக்கிறது. அங்கே B.B.T.C. என்றால் B.B.T.C. தான் வீடுகள் கட்டித் தர வேண்டும்; அல்லது, TATA Company என்றால் அவர்கள்தான் கட்டித் தர வேண்டும். அங்கு 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிய வீடுகளில் அன்று 1,000 தொழிலாளர்கள் இருந்தார்கள் என்றால், இன்று 3,000 தொழிலாளர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். ஒரு வீட்டில் அன்று ஒரு குடும்பம் இருந்தால், இன்று 3 குடும்பங்கள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றன. எனவே, அமைச்சர் அவர்கள் சொல்வது சரியான கருத்து அல்ல.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர். க. கிருஷ்ணசாமி:** B.B.T.C.-யோ, TATA-வோ என்ன சொல்கிறார்கள் என்றால், வன இலாகா தங்களுக்கு அனுமதி கொடுப்பது இல்லை; எனவே, நாங்கள் புதிய வீடுகள் கட்டிக் கொடுக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, Supreme Court-லே அண்மையிலே ஒரு தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். Forest Land-ல் வீடு கட்டக் கூடாது என்று நிர்வாகத்தினர் சொல்கிறார்கள். இருந்தாலும் அதுகுறித்து பேச்சு வார்த்தை நடத்தி சட்டரீதியாக அதற்கு என்ன நிவாரணம் காண முடியுமோ அதை துறையே காண்பதற்கு முயற்சிகள் எடுத்து வருகிறது. வீடுகள் கட்ட முடியாது என்று சொல்லி அவர்கள் தப்பிப்பதற்கு நாங்கள் விடமாட்டோம். Labour Plantation Act—ன்படி, தொழிலாளர்களுக்குத் தேவையான amenities— தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதை நாங்கள் கண்காணித்து வருகிறோம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** டாக்டர் க. கிருஷ்ணசாமி, பேசி முடித்துவிடுங்கள்; நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதேபோல, கூடலூர் பகுதியில் 920 ஏக்கருக்கு மோசடி Patta வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. அரசினுடைய அறிக்கையில் அந்த Patta கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால், நடைமுறையில் அங்கு இருக்கிற மக்கள் எல்லாம் இவர்கள் Patta போட்டு விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கின்றார்கள். அதற்கு வனத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அதிகாரி, அவருடைய பெயரைச் சொன்னால் தவறில்லை, பாண்டுரங்கன் என்ற ஓர் அதிகாரி தாராபுரம் பகுதியிலே Settlement Officer-ஆக கோவை-பெரியார்-நீலகிரி மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்டிருந்தார். அவர் ஓய்வு பெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக சில பேரிடம் ஏதோ பெற்றுக்கொண்டு, 900 ஏக்கர் நிலத்தை 20 பேர்களுக்கு, அதுவும் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு patta போட்டுக் கொடுத்துவிட்டார். இதையறிந்த எங்களுடைய கூடலூர் பகுதி வனத் துறை அதிகாரி உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்த நிலங்களை எல்லாம் மீட்டுக்கொண்டு இருக்கிறார். அவர்கள் மேல்முறையீட்டுக்குப் போயிருக்கிறார்கள். இருந்தாலும்கூட ஒரு Inch நிலம் கூட வனத் துறையினுடைய நிலத்தை நாங்கள் எவருக்கும் கொடுக்க மாட்டோம் என்ற உறுதியை இந்த மாமன்றத்தில் அவைத் தலைவர் மூலமாக அறிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** அடுத்து, திரு. க. மணிவர்மா. (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி, போதும். உட்காருங்கள்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல், காட்டு வளம் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வன விலங்குகள் சரணாலயங்களையும், பறவைகள் சரணாலயங்களையும் வனத் துறை பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். எனது தொகுதியிலே கல்வராயன் மலைத் தொடர்ச்சியிலே ஏராளமான சந்தன மரங்கள் இருந்தன. கடந்த கால ஆட்சியினர் அவற்றை வேரோடு பிடுங்கி எடுத்துச் சென்றுவிட்டார்கள். இன்றைக்கு அந்த வனப் பகுதி சந்தன மரங்கள் இல்லாமல் காலியாக இருக்கின்றது. இந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சந்தன மரங்கள் வளர்ந்த அந்த வனப் பகுதியிலே சந்தன மரக் கன்றுகளை வைத்து வளர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சந்தன மரங்களையே பார்ப்பதற்கு அரிதாக இருக்கின்ற நிலை அந்தப் பகுதியில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே அக்கரைப்பட்டி, கீழ்வலசை, மேல்வலசை ஆகிய கிராமங்கள் மலைப் பகுதியிலே இருக்கின்றன. அங்கு சாலை வசதிகளே இல்லாமல், சுமார் 15 கிலோ மீட்டர் தூரம் வரை மக்கள் நடந்து செல்கிறார்கள். அங்கு சாலை



வசதி ஏற்படுத்த வேண்டும் என்றால், அதை வனத் துறை மூலம் செய்வது என்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. எனவே, வனத் துறையே அங்கு அந்த கிராமங்களுக்கு சாலை அமைத்துத் தர வேண்டும். அங்கு, மக்கள் மின்சார வசதி இல்லாமல் இருக்கிறார்கள்; பல்வேறு அடிப்படை வசதிகள் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த மக்களுக்கு சாலை வசதியை அரசு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் தரைப் பகுதிக்கு வருவதாகச் சொல்லி இருக்கின்றார்கள். அங்கே அவர்கள் வைத்திருக்கின்ற 600 ஏக்கர் நிலங்களை நீங்கள் பெற்றுக்கொண்டு, அவர்கள் தரைப் பகுதிக்கு வருவதற்கு வனத்துறை முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, ஜப்பான் நாட்டு நிதி உதவியுடன் வன வளப் பாதுகாப்பு என்ற திட்டத்தின்கீழ் பல்வேறு கிராமங்களுக்கு, பல்வேறு அடிப்படை வசதிகளை எல்லாம் செய்து கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். ஆனால் அந்தக் கிராமங்களைத் தேர்ந்தெடுக்கின்றபோது சட்டமன்ற உறுப்பினர்களையும் ஆலோசித்துத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று நான் இந்தநேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். பல்வேறு அடிப்படை வசதிகளை மிகச் சிறப்பாகச் செய்து கொடுக்கிறார்கள். அந்தக் கிராமங்களுக்கு அவை வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்தாலோசிக்காமல் வனத்துறை அதிகாரிகள் கிராமங்களைத் தேர்ந்தெடுக்கிற நிலையை நாங்கள் காண முடிகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

என்னுடைய தொகுதியில் இருக்கிற நாமக்கொள்ளை, பீமரப்பட்டி, ஆத்துப்பாதி, புளியம்பட்டி, பனையூர், மேல்மவசி, உள்சக்கடி போன்ற கிராமங்களில் வன வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் அடிப்படை வசதிகளையெல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சந்தன மரங்கள் ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியிருப்பதாகத் தெரிகிறது. கிடங்குகளில் இருக்கின்ற சந்தன மரங்கள் மற்றும் காடுகளில் சாய்ந்து கிடக்கின்ற மரங்களையெல்லாம் ஏற்றுமதி செய்வதன் மூலம் சந்தனக் கடத்தலை, தடுப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. காடுகளில் இருக்கின்ற காய்ந்த மரங்களை

உடனடியாக வெட்டி எடுத்து, அந்த மரங்களையெல்லாம் ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தனூர் அணையிலே சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வகையிலே சிறிய வனவிலங்குப் பூங்கா ஒன்று கடந்த 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது. பறவைகள் சரணாலயமும் இருந்தது. இந்த ஆண்டு மிகச் சிறப்பாக பொதுப்பணித்துறை மூலம் ஒரு கோடி ரூபாய் அளவிலே பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. சுற்றுலாப் பயணிகள் ஏராளமான பேர் அங்கே வருகை தருகின்றார்கள். அங்கே வன விலங்குப் பூங்காவையும், பறவைகள் சரணாலயத்தையும் அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏரிகளில் கருவேல மரங்களை வைத்து, 10 ஆண்டுகளுக்குள்ளாக அவற்றை அறுவடை செய்ய வேண்டும். ஆனால் 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் ஆகியும் இன்றுவரையிலே அறுவடை செய்யாமல் அந்த மரங்கள் காய்ந்து போய், விறகை எடுத்துச் சென்று விடுகிறார்கள். அந்த மரங்களை ஏன் இதுவரை அறுவடை செய்யவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏரிகளில் வளருகின்ற கருவேல மரங்களை வனத் துறை 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் ஏலம் விட்டு விற்றுக்கொண்டிருந்தார்கள். கடந்த 2 ஆண்டுகளாக மரங்களினுடைய விலை சரிந்து விட்டபடியால், ஏலம் விடப்படவில்லை. இருந்தாலும்கூட இந்த ஆண்டு சிறிது அதிக ரூபாய்க்கு ஏலம் போயிருக்கின்றது. விரைவிலே உறுப்பினர் கூறிய பகுதியிலே இருக்கிற மரங்களை ஏலம்விட்டு அரசுக்கு உரிய தொகை சேர்ப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** உறுப்பினர் 2 நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

**திரு. க. மணிவர்மா:** இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறேன். அந்த மரங்களையெல்லாம் ஏலம் விடுவதற்கு உடனடியாக உத்தரவு வழங்க வேண்டும். ஈரோடு, பவானி போன்ற பகுதிகளுக்குத்தான் அந்த விறகுகள் செல்கின்றன. உடனடியாக மதிப்பீடுகளைக் குறைத்து, ஏலம் விடுவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். ஏலம் விட்ட ஒரு



மாதத்திற்குள்ளாக ஊராட்சிகளுக்குரிய பங்குத் தொகைகளை நீங்கள் கொடுக்க வேண்டும். ஊராட்சிகள் நலிந்த நிலையில் இருக்கின்றன. அந்த ஏரிகளை நம்பியே சில ஊராட்சிகள் இருக்கின்றன. ஆகவே உடனடியாக ஏலத்தை விட்டு ஊராட்சிகளுக்குச் சேர வேண்டிய பங்குத் தொகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான சாத்தனூர் அணையில் 500-க்கும் மேற்பட்ட முதலைகள் கொண்ட பண்ணை ஒன்று இருக்கிறது. ஆனால் இன விருத்தி இல்லாமல் அதற்காக மாதந்தோறும் 30,000 ரூபாய் செலவு செய்து கொண்டு, 6 வன ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எந்தவிதமான இலாபமும், வருமானமும் இல்லாமல் அந்த முதலைப் பண்ணை இருக்கிறது. இன விருத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வெளிநாடுகளில் முதலைக் கறிக்கு ஏகப்பட்ட வரவேற்பு இருப்பதாகச் சொல்கிறார்கள். அதைப் பதப்படுத்தி, ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சந்தன மரங்களைத் தனியார் நிலங்களில் வளர்க்க ஆவன செய்ய வேண்டும். அப்படி வளர்க்கிறபோது, தனியார் நிலங்களிலே வளர்க்கின்ற மரங்களின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டு, அரசே முழுவதையும் கொள்முதல் செய்துகொள்கிற வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** ஒரு நிமிடத்திலே பேசி முடியுங்கள்.

**திரு. க. மணிவர்மா:** என்னுடைய தொகுதியிலே காட்டுப் பன்றிகள் மந்தை மந்தையாக, சிறுபாக்கம், இராதாபுரம் ஆத்திப்பாடி, வானாபுரம், கூடலூர், வரகூர் போன்ற இடங்களில் விவசாயப் பெருங்குடி மக்கள் வளர்க்கின்ற பயிர்களை மிகவும் நாசப்படுத்தி, ஏராளமான நஷ்டத்திற்கு உட்படுத்துகின்றன. இந்தக் காட்டுப் பன்றிகளை வனத் துறை அதிகாரிகள் கட்டுப்படுத்த வேண்டும். அதற்குண்டான முயற்சிகளை எடுக்க வேண்டும். வேலியாவது அமைத்து அவை ஓர் ஊர்வலம் மாதிரி வருகின்றன. அதனால் எங்களுக்கு அதிக சங்கடங்கள் உண்டாகின்றன. எங்களுடைய பகுதியில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் பெருத்த நஷ்டத்திற்கு ஆட்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நண்பகல் 12-00

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருபுறத்திலே வனங்களையும், மிருகங்களையும் பாதுகாக்க வேண்டுமென்ற குரல் பத்திரிகைகள் மூலமாகவும் பொதுமக்கள் மூலமாகவும் எழுந்து கொண்டிருக்கின்றன. இன்னொருபுறத்திலே யானைகள் மூலமாகவும், காட்டுப் பன்றிகள் மூலமாகவும் அழிவுகள் வந்துகொண்டிருக்கின்றன என்றெல்லாம் சொல்கிறார்கள். இருந்தாலும் இரண்டுக்கும் இடைப்பட்ட விதத்திலே இந்த அரசு பொதுமக்களுக்கு உகந்ததைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலையில் காவனூர்-மந்தாரக்கோட்டை சாலையைப் போட வேண்டும். மேலும், தானிப்பாடியில் உள்ள வனத் துறைக்குச் சொந்தமானச் சுற்றுலா மாளிகை 100 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்தது. மிக மோசமான நிலையில் இடிந்து கிடக்கின்றது. அதைப் புதுப்பித்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**திரு. வ. அன்பழகன்:** Point of order, Sir, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பன்றிகளில் நாட்டுப் பன்றி, காட்டுப் பன்றி என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறேன். காற்றுப் பன்றி என்று அப்படிப்பட்ட ஒரு பன்றி இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காட்டுப் பன்றி என்றுதான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமாஷாக எதையாவது சொல்லிக் கொண்டேயிருப்பார். வனப் பகுதிகளில் சாலைகள் அமைக்க மத்திய அரசைக் கேட்டுத்தான் அமைக்க முடியும் என்ற நிலை நமது தமிழக அரசுக்கு இருக்கிறது. தயவுசெய்து அந்த விதியைத் தளர்த்துவதற்கு நீங்கள் மத்திய அரசுக்கு ஒரு கோரிக்கையாகவோ அல்லது கடிதமாகவோ எழுதி, சாலைகளை அமைத்துத் தருவதற்கு ஆவன செய்ய வேண்டும். குறிப்பாக, என்னுடைய தொகுதியில் ஈராடி—நாச்சாந்தல், தொறகுடி—கன்னமடை, காம்பட்டு—சின்னகாமாச்சாந்தல், கண்டகந்தல்—மேல்கரிப்பூர் ஆகிய



இடங்களில் மக்கள் சாலைகள் இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். விவசாயப் பெருங்குடி மக்களும், பயணிகளும் 30, 40 கிலோ மீட்டர் சுற்றித்தான் நகர்ப்புறங்களுக்குச் செல்கின்ற நிலை இருக்கிறது. ஆக, வனத் துறையே அந்தச் சாலைகளை அமைத்து அந்த மக்கள் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

மலைப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு வனத் துறை மூலம் பல்வேறு திட்டங்களை நமது அரசு தீட்டிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, என்னுடைய தொகுதியில் பல கிராமங்களில் மலைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். அந்தக் கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகளே இல்லை. அவைகளை வனத் துறையே செய்துதர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பல்வேறு பகுதிகளில் வழிப்பறிக் கொள்ளைகள் காட்டுப் பகுதியில் நடைபெறுகின்றன. காவல் துறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்தாலும், முழுமையாக அவர்களால் அந்த வழிப்பறிக் கொள்ளையர்களைப் பிடிக்கமுடியாத நிலை இருக்கிறது. குறிப்பாக, வீராணம், சாத்தனூர் சாலையில் இருக்கின்ற காட்டுப் பகுதி, சாத்தனூர்—வேப்பூர் செல்கின்ற காட்டுப் பகுதி போன்ற பகுதிகளிலெல்லாம் வழிப்பறிக் கொள்ளைகள் நடைபெறுகின்றன. அவற்றை வனத்துறை ஊழியர்களும், அதிகாரிகளும் காவல் துறைக்குத் துணையாக இருந்து தடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்றேன். காரணம், வனத் துறை அதிகாரிகளுக்குத்தான் காட்டுப் பகுதியில் வழித்தடங்கள் நன்றாகத் தெரியும். எனவே, கொள்ளையர்களின் இருப்பிடத்தைக் கண்டறிந்து காவல் துறைக்கு உதவியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, (மணியடிக்கப்பெற்றது) வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை மீதான மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதியில் இரணியல் என்ற பகுதி சுற்றுச்சூழலால் பாதிக்கப்பட்டு, கொசுக்கள் பரவி யானைக்கால் நோயால் நூற்றுக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டு அவர்களால் எழுந்து நடக்கக்கூட முடியாத நிலை உள்ளது. எனவே, அங்கு சுகாதாரத்தையும், சுற்றுச்சூழலையும் கவனத்தில் கொண்டு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று என்னுடைய தொகுதியில் திருவாலங்காடு என்ற பகுதியில், பொதுமக்கள் வாழும் பகுதியில் அடிக்கடி மாடு வெட்டுவது, தோல் பதனிடுவது போன்ற தொழில்கள் செய்யப்பட்டு அதனால் தெருக்களில் மக்கள் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை, எண்ணூர், கத்திவாக்கம் பகுதியில் உள்ள தொழிற்சாலையால் நச்சுக்காற்று, புகை வெளியேறி அதனால் அந்தப் பகுதியில் இருக்கிற பொதுமக்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்படுகிறது என்று வேதனையோடு கூறுகிறார்கள். அதேபோன்று அந்தப் பகுதியில் கழிவுநீர் கடலில் கலக்கிறது. கடல் அரிப்பினால் மக்கள் பயத்தோடு வாழக்கூடிய நிலை இருக்கிறது. சென்னை நகரில் பல பகுதிகளில் போதிய கழிவறை வசதி இல்லாத காரணத்தால், சிறிய தெருக்களில், சாலை ஓரங்களை மக்கள் கழிப்பிடமாகப் பயன்படுத்தக்கூடிய நிலை இருக்கிறது. இவைகளைக் கவனத்திலேகொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுப்புறச்சூழலை காரணம் காட்டி, திருப்பூர் மற்றும் கோவையில் பனியன் தொழிற்சாலைகளை மூடக்கூடிய நிலை இருக்கிறது. அவர்களுக்கு ஒன்று காலஅவகாசம் கொடுக்க வேண்டும் அல்லது அரசாங்கமே அவர்களுக்குச் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கின்ற வகையில் ஏதாவது செய்ய வேண்டும்.

*பிற்பகல் 12-05*

வனத் துறையைப் பொறுத்தவரையில் எங்களுடைய மாவட்டத்தில் பல ஆலயங்களுக்குக் கொடிமரம் கொடுப்பதற்கு அரசு உத்தரவிட்டதற்குப் பிறகும்கூட வனத் துறை அதிகாரிகள் அந்தக் கொடி மரங்களை ஆலயங்களுக்கு வழங்குவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள். அதேபோல, கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலை வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அரசு இவற்றையும் கவனத்தில்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விலங்குகளை வேட்டையாடக்கூடியவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மிளாவு என்று சொல்லக்கூடிய ஒரு இனம் — அதாவது குதிரையைவிட வேகமாக ஓடக்கூடிய இனம் —



இப்போது ஆங்காங்கே ஒருசிலதான் காணப்படுகின்றன. மாமிசத்திற்காக அதை வேட்டையாடக்கூடியவர்கள் அந்த இனத்தையே அழித்துவிடுவார்கள் என்ற ஒரு நிலை இருக்கிறது. அதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு அவற்றை வேட்டையாடக்கூடியவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முதுமலை சரணாலயத்தில் புள்ளிமான் வேட்டையாடிய குற்றவாளியை வனத் துறை அதிகாரிகள் கைது செய்து, அவர்மீது நடவடிக்கை எடுத்து 6 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து, அதே நாளில் அபராதத் தொகையைப் பெற்று Bharat Bank-ல் Deposit செய்துள்ளார்கள். தமிழகத்தில் இந்த அளவுக்கு ஒரு குற்றவாளியிடமிருந்து அதிகமாக வசூல் செய்த சம்பவம் வனத் துறையில் இதற்குமுன் இல்லை என்று கருதுகிறேன். எனவே வனத் துறை அதிகாரிகளை ஊக்குவிக்கும்வகையில், அதாவது வனத் துறை அதிகாரிகள் திறமையாக, தைரியமாகச் செயலாற்றக்கூடியவகையில், அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மான் வேட்டையாடிய ஒருவருக்கு, நீலகிரி மலைப் பகுதியில், 7 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரையில், இதுமாதிரி எங்கேனும் மான் வேட்டையிலே, காட்டு விலங்குகள் வேட்டையிலே இவ்வளவு பெரிய தொகை வசூலிக்கப்பட்டதா? நம்முடைய தமிழ்நாட்டில்தான் இது வசூலிக்கப்பட்டதா? இதற்குப் பின்னாலே வேறு எங்கும், எவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்திய துணைக் கண்டத்திலேயே சல்மான்கானிடம்கூட இவ்வளவு பெரிய தொகை வசூலிக்கப்படவில்லை. ஆகவே, வனத் துறை அதிகாரிகளை இந்த மன்றத்தின் மூலமாகப் பாராட்டுகிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** நான் ஏன் இதைச் சொல்ல வந்தேன் என்றால், இதுபோன்று தைரியமாகச் செயல்படக்கூடிய அதிகாரிகளை அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகக் குறிப்பிட்டேன்.

அதேபோல, வனக் காப்பாளர்களுக்குப் போதுமான சம்பளம் இல்லை என்று சொல்லிக் குறைப்பட்டிருக்கிறார்கள். இதையும் அரசாங்கம் கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வனத்தில் பணியாற்றக்கூடிய அதிகாரிகளுக்கு வழங்கக்கூடிய ஈப்புகள் பல இடங்களில், பழைய வாகனங்களாக இருக்கின்றன. எனவே அவர்களால் சிறப்பாகச் செயலாற்ற முடியவில்லை. எனவே முக்கியமான பகுதிகளில் உள்ள அதிகாரிகளுக்கு நல்ல புதிய ஈப்புகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வளவு risk-ஆன பணியில் பல பிரச்சினைகளுக்கு இடையில் பணியாற்றக்கூடிய அவர்களுக்கு Risk allowance-ஐ அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வனத்தில் பல பகுதிகளில் ஆங்காங்கு பல ஏக்கர் நிலங்கள் எந்தவிதமான மரங்களும் இல்லாமல் காலியாக இருக்கின்றன. அந்தப் பகுதிகளை எல்லாம் அரசாங்கம் தேர்ந்தெடுத்துப் புதிய மரங்களை நட்டு மேலும் வன வளத்தைப் பெருக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வனத் திருட்டு சர்வசாதாரணமாக நடக்கிறது. தேவையான அளவுக்கு Check-post இல்லை என்று கருதுகிறேன். Check-post-களைச் சென்று பார்க்கும்போது ஏதோ ஒரு கம்பு இருக்கிறது, ஒரு காவலர் அங்கு உட்கார்ந்து இருப்பதுபோல் தெரிகிறது. நல்லமுறையில் Check-posts இல்லை, சில குறிப்பிட்ட சாலைகளில்தான் இதுபோன்ற தடுத்தல் உள்ளது. எந்தச் சாலைகளின் மூலம் திருட்டு நடைபெறுகிறது என்பதைக் கண்டறிந்து அந்தச் சாலைகளில் Check-post அமைத்து, வலுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குத் தகுந்த ஆயுதங்களை வழங்கினால், எதிரிகளிடமிருந்துத் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளவும், எதிரிகளைப் பிடிக்கவும் வசதியாக அமையும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்த பல மின்னல் ராஜாக்களைப் பற்றி நண்பர் வேலாயுதன் அவர்களுக்கும்,



மணி அவர்களுக்கும் தெரியும், இப்போது எல்லா இடங்களிலும், எல்லா மின்னல் ராஜாக்களும் ஒழிக்கப்பட்டுவிட்டார்கள். வனத் துறையில் பெரும்பாலும் திருட்டுக்கள் 95 சதவிகிதம் ஒழிக்கப்பட்டுவிட்டது. அங்கொன்றும், இங்கொன்றுமாக அதிகாரிகளுக்குத் தெரியாமல் நடக்கலாம். அதையும் குறிப்பாகச் சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** உண்மைதான், கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த காலகட்டங்களில் எந்த அளவுக்கு இருந்தது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு கிட்டத்தட்ட 95 சதவிகிதம் அவை எல்லாம் ஒழிக்கப்பட்டுவிட்டன. இன்னும் சில இருப்பதை கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

அதுபோன்று பல ஆண்டுகளுக்கு முன்னால், கிராமங்களில் உள்ள சாலைகளின் பக்கங்களில், வனத் துறையின் சார்பிலும், அதேபோன்று ஊராட்சி ஒன்றியம் சார்பிலும் மரங்களை நட்டு, பாதுகாத்து, அந்தக் கிராம மக்களுக்கே குத்தகைக்கு விட்டு வருமானத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு முறை இருந்தது. சமீப காலங்களில் அந்த வழக்கமே இல்லாததுபோல் காட்சியளிக்கிறது. எனவே, கிராமப் பகுதிகளிலுள்ள சாலையோரங்களில் அதுபோன்று, ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட இடங்களில்கூட மரங்களை நட்டால், ஆக்கிரமிப்புகளைக்கூடத் தடுக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

வாழிய செந்தமிழ்;

வாழ்க நற்றமிழர்;

வாழிய பாரத மணித்திரு நாடு;

வந்தே மாதரம், வந்தே மாதரம்;

பாரத் மாதாகி ஜே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. நா.பெரியசாமி.

மக்களுக்கு அந்தப் பூமியை வழங்குவதற்கு வனத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

திருநெல்வேலி மாவட்டம், புளியங்குடி தாலுகாவில், சொக்கம்பட்டி, கடையநல்லூர் மலைப் பகுதியில் கல் குகைகளில் வாழ்ந்து வருகிற 31 குடும்பங்களுக்கு நிலம் வழங்கவும், வீடு கட்டிக் கொடுக்கவும் வனத் துறை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், கொங்கு மரப் பட்டைகளை உரித்து கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவகையில் ஏராளமான மரங்கள் அழிக்கப்பட்டு, வெட்டி கடத்தப்படுகின்றன. அதைப்போல, மணல் எடுக்கவும் வனத்தை அழித்து வருகிறார்கள். இதையெல்லாம் தடுத்து நிறுத்த வனத் துறை உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேனி மாவட்டத்திலே, கம்பம் பக்கத்திலே இருக்கிற குமுளியில், அமராவதிக்குப் பக்கத்தில் 250 பேர் நெடுங்காலமாக, வன நிலங்களில் மரங்களை வளர்த்து வந்து, வனத்தைப் பாதுகாத்து, அவர்களுடையப் பொருளாதார மேம்பாட்டையும், அவர்களுடைய பொருளாதாரத் தேவைகளையும் பூர்த்திசெய்து வந்தார்கள். இப்போது அதிலே பலபேரை வனத் துறை வெளியேற்றிவிட்டது. நான் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கேரள மாநிலத்தில் இடுக்கி மாவட்டத்தில், 10 ஆயிரம் பேர் வனத் துறையிலே, பழம் தருகிற மரங்களை மட்டுமே வளர்த்து, அந்த மரங்களில் இருந்து கிடைக்கும் பயன்களை அனுபவித்துக்கொண்டு, பொருளாதாரத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்வதற்கு, கேரள மாநிலத்தின் வனத் துறை பட்டா வழங்கியிருக்கிறது. ஆனால் அதையொட்டிய எல்லைப் பகுதியாக இருக்கிற தமிழ்நாட்டிலே இருக்கிற வனத் துறை, விவசாயிகளை வெளியேற்றி இருக்கிறது. இதுகுறித்து அமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு மத்திய வனச் சட்டப்படி, கேரள மாநில அரசாங்கம் முன்பு பட்டா கொடுத்திருக்கலாம் அதற்குப் பின்னர் எந்த ஒரு மாநில அரசாங்கமும் வனத் துறை நிலங்களை, வனத் துறை அல்லாத காரணங்களுக்குப்



பயன்படுத்தக் கூடாது என்று தடை இருக்கிறது. அதன் காரணமாகத்தான் குமுளியிலே இருக்கின்றவர்களை வனத் துறை வெளியேற்ற முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேரள அரசு எப்போது கொடுத்திருக்கிறதோ, அந்தக் காலத்திலிருந்தே தமிழ்நாட்டிலே இருப்பவர்களும் இருந்திருக்கிறார்கள். இதையும் சிறப்பு நேர்வாகக் கருதி, மத்திய அரசிடத்திலே, வனத் துறையிலே எடுத்துச் சொல்லி, அதற்கு அனுமதி பெற வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பழங்குடி ஆன்றோர் மன்ற சிபாரிசுபடி, 1852ஆம் ஆண்டு வன நில அளவைப் பட்டியலை வெளியிட்டு, பழங்குடி மக்களிடத்திலே இருந்த நிலத்தின் விவரத்தை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்று, சுற்றுப்புறச்சூழல் பாதிக்கப்படக் கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பல நேரங்களிலே தலையிட்டு உதவி செய்து வருகிறார்கள். அதிலே ஒன்றே ஒன்று பற்றி மட்டும் குறிப்பாக கவனம் செலுத்தப்படுகிறது. சாயப் பட்டறைகள், சலவை ஆலைகள் போன்ற தொழிற்சாலைகளினுடைய கழிவுகள் குறித்து மட்டும் கவனம் செலுத்தப்படுகிறது. அதிலே வரவேற்கத்தக்க நல்ல நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். ஆனால் இப்போது பெரு நகரங்களிலும், நகரங்களிலும் மருத்துவமனைகள் அதிகரித்து, அந்த மருத்துவமனைகளிலே உள்ள கழிவுகளை அப்படியே குப்பையாகக் கொட்டுகிற காட்சிகளை நாம் பல்வேறு இடங்களிலே பார்க்கலாம். எனவே, உடனடியாக—மருத்துவமனைகளிலே அதிலும் குறிப்பாக தனியார் மருத்துவமனைகளிலே எவ்வளவு செலவுகள் ஆகின்றது என்பது உங்களுக்குத் தெரியும். இந்த அடிப்படையைக் கருத்திலே கொண்டு—மருத்துவக் கழிவுகளை அழிப்பதை உத்தரவாதப்படுத்துகிற அளவிலே, நிர்பந்த நடவடிக்கைகளை சுற்றுபுறச் சூழல் துறை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, தூத்துக்குடி மாவட்டத்திலே Sterlite ஆலை. அது தொடர்ந்து நம்முடைய மாநிலத்திற்குப் பெரிய இடையூறாக இருந்து கொண்டிருக்கிறது. அங்கே பணிபுரியும் பல பணியாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பக்கத்திலே வசிக்கும் பொதுமக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவையெல்லாம் அயல் நாடுகளிலே

கைவிடப்பட்ட தொழில்நுட்பம் என்ற அடிப்படையில் இந்த நாட்டிலே இறக்குமதி செய்யப்பட்டிருப்பது, அனுமதிக்கப்பட்டிருப்பது ஒரு குறைபாடாகும். இந்த Sterlite ஆலையால் தொடர்ந்து வருகிற அபாயத்தைக் கருத்தில்கொண்டு, அது இயங்குவதற்குத் தடை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், நம்முடைய நகரப் பகுதியிலே வரக்கூடிய பிரச்சினைகளையும், சுற்றுச்சூழல் பிரச்சினைகளையும், காற்று மாசு படுவதையும், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் ஒருநாள் வந்து பார்த்தீர்களானால் நன்றாகத் தெரியும். அங்குள்ள சுழல் விசிறிகளிலே குப்பைகள் அப்படியே அப்பிக் கொண்டிருக்கின்றன. ஒரு நாள் விட்டு ஒரு நாள்கூட அப்படிப் பார்க்கலாம். அந்த அளவுக்கு குப்பைகள் சென்னை நகரத்திலே மாசு ஏற்படுத்துகிறது. இதையெல்லாம் எதிர்காலத்திலே கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, எனது பெருந்துறை தொகுதியிலே நொய்யலாற்றின் கரையோரத்திலே அமைந்திருக்கிற கிராமங்களில் எல்லாம், சாயக் கழிவுகளின் காரணமாக, குடிநீர் ஆதாரம் பாதிக்கப்பட்டுவிட்டது. அதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும். அதைப்பற்றி விரிவான அறிக்கையை அரசு பெற வேண்டுமென்று கேட்டு, கொடுத்த நேரத்தில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற வனம் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

ஒரு நாடு செழிப்பாக இருக்க வேண்டுமென்று சொன்னால், காடு வளமாக இருக்க வேண்டும். அதை உணர்ந்தவர்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அவர்கள் பல ஆண்டுகளாகவே தன்னுடைய பிறந்த நாளில் கழகத் தோழர்கள், உடன்பிறப்புகள் எல்லோரும் மரக் கன்றுகளைத் தங்களுடைய நிலங்களிலேயும், பொது இடமாக இருந்தால் அனுமதி பெற்று அங்கேயும் வளர்க்க வேண்டுமென்று ஆணையிட்டு, கழகத் தோழர்கள் பல்லாயிரக்கணக்கான மரக் கன்றுகளை நட்டு பல ஆண்டுகளாக நாடு செழிக்க உதவிக் கொண்டிருக்கின்றார்கள்.



பிற்பகல் 12-20

அதை உணர்ந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த வனத் துறை நல்லமுறையிலே பாதுகாக்கப்பட வேண்டுமென்பதை அறிந்து அதற்கான நிதியை ஒதுக்கி நல்லமுறையிலே இந்த வனத் துறை செயல்பட்டு கொண்டிருக்கிறது. நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே தமிழகத்தினுடைய மொத்த நிலப்பரப்பிலே 17.49 சதவிகிதம்தான் வனம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், சராசரியாக 33 சதவிகிதம் இருக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். பொதுமக்களும், நில உரிமையாளர்களும் எதிர்காலத்திலே அதிகமான வனங்களைப் பெருக்கிட உதவிட வேண்டும். நம்முடைய மாநிலமும் இந்தத் துறையிலே நல்ல முறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்றது என்பதை அறிந்து இந்தநேரத்திலே வனத் துறை அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகின்றேன்.

இன்னொன்று, இந்தக் குறிக்கோளை நிறைவேற்ற நம்முடைய அரசு ஜப்பான் அரசாங்கத்திடமிருந்து கடனாகப் பெற்று, கிராமிய வனக் குழு என்று ஆரம்பித்து, அதிலே பல உறுப்பினர்களையும் சேர்த்து, அவர்களுக்குள் பல இயக்குநர்களையும், தலைவர்களையும் ஏற்படுத்தி, பல இலட்சக்கணக்கான ரூபாயை இதற்காக ஒதுக்கி, அந்தக் கிராமங்களிலே இருக்கின்ற காட்டு நிலங்களிலே, காலியாக இருக்கின்ற நிலங்களிலே எல்லாம் மரங்களை நட்டு வனத்தைப் பெருக்குவதற்கு எடுத்திருக்கின்ற முயற்சிக்கு நான் இந்தநேரத்திலே வனத் துறை அமைச்சரவர்களையும் இந்த அரசையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேநேரத்தில் இந்த ஆண்டிற்கு இத்தனை கிராமங்கள் என்று வருகின்றபோது, அந்தக் கிராமங்களைத் தேர்ந்தெடுக்கின்ற நேரத்தில் நம்முடைய வனத் துறை அதிகாரிகள் அவர்களுக்கே எல்லாம் தெரியும் என்கின்ற நிலையிலே செயல்பட்டு வருகிறார்கள். இங்கேகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிவர்மா அதுபற்றிச் சொன்னார்கள். அந்தவகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே ஒரு குழுவை அமைத்து கிராமங்களைத் தேர்ந்தெடுத்து நல்லமுறையிலே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் இந்த அரசாங்கத்தை இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய பகுதியில் ஜவ்வாது மலை இருக்கிறது. அங்கே ஏராளமான சந்தனக் காடுகள் ஒரு காலத்திலே இருந்தன.

இப்போது ஓரளவு அது இருந்து வந்தாலும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், வனத் துறை அமைச்சர் அவர்களும் மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லி, சந்தனக் கட்டைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால், ஆண்டு ஒன்றிற்கு, ஏறக்குறைய நம்முடைய அரசுக்கு 100 கோடி ரூபாய் அதிகமாக வருவாய் வரும் என்ற வகையில் அந்த அனுமதியைப் பெற்றிருக்கிறார்கள். அதற்காக நான் நம்முடைய முதலமைச்சர் அவர்களையும், நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்களையும் இந்தநேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேநேரத்திலே திருப்பத்தூர் தீ விபத்து போன்ற நிகழ்ச்சிகள் ஏற்படாவண்ணம் அவைகளை விற்பதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வனத் துறை சிறப்பாகச் செயல்படுகின்ற இந்தநேரத்தில் நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ஏழையெளிய மக்களுக்குச் செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகளை மானிய விலையிலே தருகிறோம் என்று சொன்னார்கள். நான் அரசுக்கு ஒரு வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன். செம்மறி ஆடுகளை நீங்கள் மானிய விலையிலோ அல்லது இனாமாகவோ வழங்கலாம். வெள்ளாடுகளை மானிய விலையிலே வழங்குவதை நீங்கள் தடுக்க வேண்டும். காரணம், வனத் துறைக்கு ஒரு நேரடியான எதிரி என்று சொன்னால், சமூக விரோதிகள் ஒரு பக்கம் இருக்கிறார்கள் என்று சொன்னாலும், வெள்ளாடுகளும் காட்டை அழிக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்கு அரசாங்கத்தினுடைய மானியமோ அல்லது உதவியோ இருக்கக்கூடாது என்பதை நான் இந்தநேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, ஜவ்வாது மலையில் வனத் துறையால் நல்லமுறையில் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மற்றும் தொடக்கப் பள்ளிகள் அவற்றுக்கான கட்டடங்களோடு ஆசிரியர்களும் காலத்திலே பள்ளிகளுக்குச் செல்கின்ற அளவில் நல்ல முறையில் அந்தப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன.

*பிற்பகல் 12-25*

நான் நம்முடைய வனத் துறை அமைச்சரையும் கல்வித் துறை அமைச்சரையும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வதெல்லாம் மூன்று வகையான பள்ளிகள் அங்கே உள்ளன. ஒன்று வனத் துறையால் நடத்தப்படுகின்றது. இன்னொன்று கல்வித்



துறையால் நடத்தப்படுகின்றது. மற்றொன்று ஆதிதிராவிடர் நலத் துறையால் நடத்தப்படுகின்றது. இப்போது வனத் துறைப் பள்ளிகள் செம்மையாக நடத்தப்படுவதுபோல் கல்வி இலாகாவும், ஆதிதிராவிடர் இலாகாவும் நடத்துகின்ற பள்ளிகளைக் கண்காணிப்பதற்கு அவர்களுக்குப் போதிய அதிகாரிகள் இல்லை, காட்டுப் பகுதி என்கின்ற காரணத்தினால். அதனால், அரசே அதற்கான சட்டத் திருத்தம் தேவையென்றாலும்கூட கொண்டுவந்து, அந்தப் பள்ளிகளை வனத் துறையிடமே ஒப்படைப்பார்களேயானால், பள்ளிகள் நல்லமுறையிலே நடைபெற வாய்ப்பு ஏற்படும். அதையும் செய்ய வேண்டுமென்பதை நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வனத் துறையிலே வேலை செய்கின்ற ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுகள், அதேபோல் சம்பள உயர்வுகள் காலத்திலே கிடைக்கவில்லை என்கின்ற ஒரு குறை இருக்கிறது. அதை நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட வனத் துறை அதிகாரிகளிடம் சொல்லி, அவர்களுக்கு உரியநேரத்தில் அவைகள் எல்லாம் கிடைப்பதற்கு தக்க நடவடிக்கை எடுகக வேண்டுமென்று இந்தநேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அண்ணா உயிரியல் பூங்கா நம்முடைய வனத் துறையால் நடத்தப்படுகிறது. அதற்குக்கூட ஏராளமான நிதி ஒதுக்கி இருக்கிறார்கள். கேள்வி நேரத்திலேகூட இந்த அவையிலே ஒரு கேள்விக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, இந்தப் பூங்காவைப் பார்க்க வருகின்ற பொதுமக்கள் குறைந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்த அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது நாம் இன்னும்கூட அதிகமான நிதி தேவை என்றாலும் ஒதுக்கி அறிஞர் அண்ணா பெயரில் இருக்கின்ற உயிரியல் பூங்காவை இந்தியாவிலேயே சிறப்பான ஓர் உயிரியல் பூங்காவாகத் தரம் உயர்த்தி, பொதுமக்கள் ஏராளமாக அங்கு சென்று பார்வையிடுகின்ற அளவிலே அதைச் சீர்படுத்த வேண்டும், விரிவுபடுத்த வேண்டும் என்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டுக்கு முன்பு பல்வேறு பொழுதுபோக்கு பூங்காக்கள் சென்னை மாநகரிலே வந்ததன் காரணமாக கொஞ்சம் குறைவாக அண்ணா உயிரியல் பூங்காவிற்கு மக்கள் வருகை தந்தது உண்மை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரைக்கேற்ப பல விளம்பரப் பலகைகள் வைத்தும், இன்னும் பல

முன்னேற்றங்கள் செய்தும், புதியதாக வன விலங்குகளைக் கொண்டு வந்ததன் காரணமாகவும் இப்போது ஆண்டுக்கு 8 இலட்சத்திற்கும் மேல் மக்கள் அந்த உயிரியல் பூங்காவிற்கு வருகை தந்துகொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பெ.க. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றி. இன்னொன்றை நான் இந்தநேரத்திலே இறுதியாக, காலத்தின் அருமை கருதி சொல்லி முடிக்கிறேன். இப்போதும்கூட, சமீபத்திலே போளூர் அல்லது ஜவ்வாது மலைப் பகுதியிலே ஏராளமான சந்தனக் கட்டைகளைத் திருடுகின்ற ஒரு சமூக விரோதியை, வனத் துறை அதிகாரிகளால் 10 ஆண்டு காலமாக தேடப்பட்டு வந்த சமூக விரோதியைக் கைது செய்தார்கள். அது பாராட்டப்பட வேண்டிய ஒன்று. அதற்காக நம்முடைய அமைச்சரையும், இந்தத் துறையையும் நான் இந்தநேரத்திலே பாராட்டுகின்றேன். சில நேரங்களில், இங்கே சட்டத் துறை மானியக் கோரிக்கையிலேகூட, போளூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒன்றைக் கேட்டுக்கொண்டார்கள். இதை விசாரிப்பதற்காக திருப்பத்தூர் அல்லது சேலத்திலே இரண்டு நீதிமன்றங்களை வைத்து செயல்படுத்த இயலவில்லை. ஆனால் ஒன்று அங்கே எல்லா நீதிபதிகளும் விசாரிக்கலாம் அல்லது அந்த நீதிமன்றத்தை விரிவுபடுத்தப் போதிய தகுதியுடைய நபர்களை சட்டத் துறையை அணுகி நம்முடைய வனத் துறை அதிகப்படுத்த வேண்டும். ஏராளமான Lorries, Vans, Ambassador Cars, Tata Sumo, Tata Sierra போன்ற கார்களை எல்லாம் திருப்பத்தூர், சேலம், போளூர் போன்ற பகுதிகளிலே பிடித்து பல ஆண்டு காலமாக அப்படியே வைத்துவிட்டார்கள். அவற்றிலே இருக்கின்ற பல சாமான்கள் எல்லாம் களவு போய் விடுகின்றன. அதனாலே அரசுக்கும் இலாபம் இல்லை, சமூக விரோதிகளைக் கண்டுபிடிக்கப் போய் இன்னொரு சமூக விரோதமான காரியம் ஏற்பட வழி ஏற்படுகிறது. ஆகவே, அமைச்சரை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது துறை அதிகாரிகளையும், நம்முடைய முதல்வர் அவர்களையும் கலந்து பேசி...

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992-க்கு முன்பிருந்த சட்டப்படி பிடிக்கப்பட்ட வாகனங்களை அரசாங்கம் ஏலத்தில் விடுவதற்கில்லை. ஆகவே, அந்த வாகனங்கள் அப்படியே கிடக்கின்றன. 1992-க்கு பின்னாலே பிடிக்கப்பட்ட வாகனங்களை அரசுடைமையாக ஆக்கி,





உடனுக்குடன் நாங்கள் ஏலம் விட்டு வருகிறோம். ஆகவே, பழைய வாகனங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பார்த்திருக்கக்கூடும் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பெ.க. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே பிடிபட்ட வண்டிகளாகக்கூட இருக்கலாம். அதுபற்றி அமைச்சருடைய கவனத்திற்கு வந்ததா இல்லையா என்று எனக்குத் தெரியாது. வேண்டுமானால் அதற்கு ஓர் அதிகாரியைப் போட்டுப் பாருங்கள். அவைகள் எல்லாம் எந்த டெப்போவாக இருந்தாலும், சமீபத்திலே பிடிபட்ட வண்டிகள் அல்ல, சட்டத்திற்குட்பட்டு முன்பு பிடிபட்ட வண்டிகளாக இருந்தாலும், அவைகளையும் விட்டுவிடுங்கள். இப்போது ஒரு நல்ல நிலைமையை நீங்கள் கொண்டு வர வேண்டும்.

*பிற்பகல் 12-30*

இறுதியாக ஏரிகளிலே கருவேல மரங்கள் நடப்பட வேண்டும் என்று இப்போது சொன்னார்கள். அங்கே கருவேல மரங்கள் நடப்பட வேண்டும் என்பதிலே இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. ஆனால், இன்னொன்று சொல்லப்படுகிறது. கருவேல மரங்கள் ஏரியில் இருந்தால், தண்ணீர் வருகின்ற காலங்களில் அதனுடைய இலை தண்ணீரில் ஊறி, அதனாலே பயிர்களுக்கு சரியான மகசூல் கிடைக்காது என்ற நிலை ஏற்படும் என்று சொல்லப்படுகிறது. அதனாலே நமது வேளாண்மைத் துறை அதிகாரிகளைக் கலந்து இந்த நிலை உண்மையா, இல்லையா என்பதை ஆய்ந்து, எதிர்காலத்திலே செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சிகளுக்குச் சேர வேண்டிய நிதியையும் வனத் துறையிலிருந்து தர வேண்டும் என்று நான் இந்தநேரத்திலே அரசைக் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கின்றேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, இந்த வனத் துறைச் சட்டத்தின்கீழ் கைப்பற்றபட்ட வாகனங்களை எல்லாம் 1992 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டப்படி கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே, Criminal Procedure Code, 451 பிரிவின்படி Property நீதிமன்றங்களுக்கு கொடுக்கப்படும் என்று இருக்கிறது. ஆனால், இந்தச் சட்டம் வந்ததற்குப் பின்னால்

நீதிமன்றத்திற்கு கைப்பற்றப்பட்ட வண்டிகளையெல்லாம் கொண்டு போகத் தேவையில்லை என்று 1992-லே ஒரு சட்டம் வந்த காரணத்தாலே பல வண்டிகள் இன்று Forest Department-லே செத்து மடிந்து கொண்டிருக்கின்றன. அந்த நிலையை எல்லாம் தவிர்ப்பதற்கு ஒரு வேளை நீங்கள் உடனடியாக ஏலம் போட்டு பணத்தையாவது Deposit பண்ண வேண்டும். இல்லாவிட்டால் நீதிமன்றத்திற்கே Section 451 பிரகாரம் கொடுப்பதன் மூலம் வண்டியையாவது திருப்பிக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு வண்டியை ஏலம் விட வேண்டும் என்றால் உடனடியாக வனத் துறை அதிகாரிகளால் ஏலம் விட முடியாது. போக்குவரத்துத் துறையிலுள்ள Inspector அவர்கள் வந்து, அதற்குப் பிறகு Estimate தயார் செய்து, அதற்குப் பின்னாலே மேலதிகாரிகள் எல்லாம் அதற்கு Approval செய்து, அதற்குப் பின்னாலேதான் ஏலம் விட வேண்டும். ஆகவே, பல சங்கடங்கள் இருக்கின்றன. இருந்தாலும்கூட, விரைவாக, இருந்த இரண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்களை, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு ஏலம் விட்டு, அரசுக்குப் பெரும் பொருளை ஈட்டித் தந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காட்டு வளத் துறை, சுற்றுச்சூழல் ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று, என்னுடைய கருத்துக்களைப் பதிவு செய்ய விரும்புகின்றேன். காடு இந்த நாட்டுக்கு நல்லதைச் செய்துகொண்டிருக்கின்றது. ஒரு நாட்டிலே மூன்றிலே ஒரு பகுதி காடாக இருக்க வேண்டும் என்ற நிலையிலே நாம் ஐந்திலே ஒரு பகுதிக்குக் கீழே மட்டுமே காட்டை வைத்துக் கொண்டிருக்கிறோம், காட்டை மேலும் வளப்படுத்தினால்தான் நமது சுற்றுச்சூழலும் சரி, மழை போன்ற தேவைகளும் சரி, சரியான முறையிலே அவை இருக்கும் என்பதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அந்த வகையிலே காடுகளை மேலும் வளர்ப்பதற்கு காட்டின் பரப்பளவை அதிகப்படுத்துவதற்கு, இந்த அரசு தேவையான முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



குறிப்பாக, வேதாரண்யத்திலேயிருந்து நாகப்பட்டினம் வரையிலேயுள்ள பகுதி பரந்த கடற்கரைப் பகுதி. அந்தப் பகுதியிலே மரங்களை வைத்து காடுகளை வளர்த்தால் அந்தப் பகுதியிலே மாறி மாறி, திடீரென்று அதிகமாகப் பெய்து, நாசப்படுத்தக்கூடிய மழை கட்டுக்குள் வரும். சீதோஷ்ண நிலையும் சீராகப் பராமரிக்கப்படும் என்று விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கருத்தைத் தெரிவித்து கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கு மேலாகியும் அந்தப் பகுதியிலே காடு வளர்ப்பதற்கு அரசு போதிய முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

**மாண்புமிகு திரு பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் முதல் நாகப்பட்டினம் வரை 1,852.62 எக்டேர் வனப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 265 எக்டேர் பரப்பில் ஏற்கெனவே காடு வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. மீதமுள்ள நிலங்களில் நிதியொதுக்கீட்டைப் பொறுத்து படிப்படியாக விரைவில் அந்தப் பணி மேற்கொள்ளப்படும்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** வனப் பகுதியாக அறிவிக்கப்பட்டும், அந்த இடம் பாலைவனப் பகுதியாகவே இருக்கின்றது. அங்கே வளர்க்கப்பட்ட பஞ்சு மரங்கள் முற்றிப்போய் மீண்டும் அந்த இடம், பட்டுப்போன மரங்களின் இடமாக இருக்கின்ற காரணத்தால் மீண்டும் பாலைவனமாகக் காட்சி தந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அரசு அவற்றைக் கவனத்தில் கொண்டு, உடனடியாக அந்தப் பரந்த கடற்கரைப் பகுதியிலே, எதற்கும் பயன்படாத பகுதியிலே காடுகளை வளர்க்க வேண்டும். அந்தப் பகுதியிலே இப்போது M.R.L. போன்ற நிறுவனங்கள் தங்களது தொழிற்சாலைகளை வைத்து இருப்பதனால் மாசு ஏற்பட்டு இப்போது சுற்றுச்சூழல் அதிகமாகக் கெட்டுப்போய்க் கொண்டிருக்கிறது. அதையும் காப்பதற்கு வசதியாகக் காடுகளை வளர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, சந்தன மரங்களை வளர்ப்பதற்கு தனியாருக்கும் அனுமதி வழங்க வேண்டும். ஏனென்று சொன்னால் நம்முடைய நாட்டின் முக்கியமான பொக்கிஷம் அது. ஆகவே, தனியாரை அனுமதிப்பதனால் எந்தத் தவறும் ஏற்பட்டுவிடாது, உற்பத்தி பெருகத்தான் செய்யும் அனைவரும் மனம் கமழ வரலாம்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்க

விரும்புவதுபோல் இந்த அரசு தனியாரும் சந்தன மரங்களை வளர்க்கலாம் என்று கொள்கை கொண்டு, கடந்த ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே சட்டம் இயற்றி அதை ஜனாதிபதியினுடைய ஒப்புதலுக்காக அனுப்பியிருக்கிறோம். பலமுறை நினைவூட்டுகள் அனுப்பியிருக்கிறோம். இன்னும் ஒப்புதல் வரவில்லை. வந்ததும் உடனடியாக சட்டங்கள் திருத்தப்பட்டு, தனியாரும் சந்தன மரங்களை வளர்க்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

*பிற்பகல் 12-35*

**திரு. ஜி. நிஜாமுதீன்:** நன்றி. அதுபோல என் தொகுதியிலே கீவளூர் ஒன்றியப் பகுதியிலே வளர்க்கப்பட்ட மரங்கள் முற்றிய நிலையிலே இருக்கின்றன. இதற்குமேல் வளர முடியாது. பட்டுப்போய்விடும். இந்த நிலையிலே அந்த மரங்கள் பலராலும் திருடப்பட்டு வருகின்றன. ஆகவே, அதை முறையாகக் கவனிக்க வேண்டும். குறிப்பாக, பிரதலாபம் என்ற ஊரிலும் இம்மாதிரி இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அவற்றைக் கவனத்திற்கொண்டு. உடனடியாக அந்த மரங்களை ஏலம் விட்டு அரசுக்கு வருவாய் ஈட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, Plastic bags Plastic cups போன்ற பொருட்கள் மக்குவதற்குக் கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அதைத்தான் தினம் தினம் நாம் பயன்படுத்துகின்றோம். ஆகவேதான், நான் விற்பனை வரிகள் மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபொழுதுகூட அந்த Plastic பைகளுக்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய காகிதப் பைகளுக்கு வரியை விலக்குங்கள் என்று கேட்டேன். ஏனென்றால் அது உடனே மக்கிப் போகக்கூடிய பொருள். மாண்புமிகு அமைச்சரவர்கள்கூட அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆகவே, அந்த Plastic பையைப் பயன்படுத்துவதற்கு முழுமையாகத் தடை இல்லாவிட்டாலும், மக்கள் விழிப்புணர்ச்சி பெறுவதற்கும், சுற்றுப்புறத்தைக் காப்பதற்கும், காகிப் பைகளைப் பயன்படுத்துவதற்கு இந்த அரசு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல பலமாடிக் கட்டடங்களைக் கட்டும்பொழுது, இப்பொழுது வெளிநாடுகளிலே எல்லாம் கழிவை வெளியேற்றும் இடத்திலே சுத்திகரிப்பு—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Plastic பைகளையும் மற்றும் அதுபோன்ற Polymer பைகளையும் வன விலங்கு சரணாலயங்களிலும், வனப் பூங்காக்களிலும் எடுத்துச் செல்லக் கூடாது என்று ஏற்கெனவே தடைச் சட்டம் இருக்கிறது. பொதுமக்களும் அதைப் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இப்பொழுது இருக்கின்ற நிலையின்படி காகிதப் பைகளிலேதான் வருங்காலத்திலே பொருட்களையெல்லாம் விற்க வேண்டுமென்ற ஒரு சட்டம் கொண்டு வந்தால் நலமாக இருக்கும். பொதுமக்கள் அதற்கு ஒத்துக்கொள்வார்களா என்று தெரியவில்லை.



**திரு. ஜி. நிஜாமுதீன்:** நாட்டின் நலனுக்காக மக்கள் ஒத்துக் கொள்ளுவார்கள். அதை அரசு பரிட்சார்த்தமாகச் செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பலமாடிக் கட்டடங்களைக் கட்டும்பொழுது கழிவுநீர் வெளியேறுகின்ற இடத்திலேயே நீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்க வேண்டுமென்று பல வெளிநாடுகளிலே சட்டத்தை அமல்படுத்தியிருக்கின்றார்கள். ஆகவே, பல அடுக்கு மாடிக் கட்டடங்களிலே, கழிவுநீர், சாக்கடைக்குச் சென்றாலும், அது சுத்தமாகச் செல்ல வேண்டும். ஏனென்றால் கொசு போன்ற நுண்கிருமிகள் உற்பத்தியாவதைத் தடுப்பதற்காகப் பலமாடிக் கட்டடங்களைக் கட்டும்பொழுது, அவசியம் நீர் சுத்திகரிப்பு நிலையம் வைக்க வேண்டுமென்று இந்த அரசு ஒரு நிலையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும்பொழுதே மாசுக் கட்டுப்பாட்டிற்குப் போதிய வசதிகள் இருக்கின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும். ஏனென்று சொன்னால் நம் நாடு வளரக்கூடிய ஒரு நாடு. வளர்ந்திருக்கின்ற நாடு அல்ல. நாம் அனுமதித்து விடுகின்றோம். அதைச் சரியாக ஓர் அதிகாரி கவனிக்காமல் இருந்து விடுகின்றார். அதன்பிறகு நீதிமன்றத்திற்குச் செல்வது, அந்த ஆலைகளை மூடுவது, அதனால் பொருளாதாரத் தேக்கம், வேலையின்மை என்று பல நிலைகளை இந்த அரசு, இந்த நாடு எதிர்நோக்கியிருக்கின்றது. பல இடங்களிலே தோல் தொழிற்சாலையிலே பார்க்கின்றோம். அதைப்போல சாயப்பட்டறைகள், துணித் தொழிற்சாலைகளைப் பார்க்கின்றோம். அதை நாம் முன்பே கட்டுப்படுத்தியிருந்தால் தொழிற்சாலைகளை மூடக்கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டிருக்காது. ஆகவே, இதை முன்கூட்டியே, அனுமதி வழங்கும்பொழுதே, முழுமையான வசதிகள் இருக்கின்றனவா என்று பார்த்து வழங்க வேண்டும். அம்பை விட்டு

V2; 1. 31'v95 N95.7112
221803

வாலைப் பிடிப்பது போல இருக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) இப்பொழுதுதான் ஆரம்பித்தேன் நான்.

அடுத்து, முந்திரி, மா கன்றுகளுக்கு மானிய விலை. நாகை, தஞ்சை மாவட்டப் பகுதிகளிலே முந்திரி, மா நிறைய விளைகின்றன. அந்தப் பகுதியிலே நிறைய இடங்கள் இருப்பதால், மானிய விலையிலே அந்தக் கன்றுகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வனத் துறையிலுள்ள இல்லங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகப்பட்டினம் வன உயிரின கோட்ட சரணாலயத்தில் பணி புரியும் 35 பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் உள்ளார்கள். இந்த அரசு எத்தனையோ பணியாளர்களை, ஆயிரத்திற்கும் மேற்பட்ட, பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்களைப் பல்வேறு துறைகளிலும் பணி நிரந்தரம் செய்கின்ற வேளையிலே இப்படிப்பட்ட 35 பணியாளர்களை மட்டும் பணி நிரந்தரம் செய்யாமல் இருப்பது நியாயமற்றது. ஆகவே, இந்த வன உயிரினக் கோட்ட சரணாலயப் பணியாளர்கள் 35 பேரையும் பணி நிரந்தரம் செய்து அவர்களின் எதிர்கால வாழ்வுக்கு இந்த அரசு உத்தரவாதம் வழங்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தினக்கூலிப் பணியாளர்கள் 14 ரூபாய் தினக்கூலி பெறும் நிலையிலே இருந்து கொண்டிருப்பதை மாற்றி அரசு அறிவித்த குறைந்தபட்ச ஊதியம், அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அதுபோல காலியாக உள்ள எல்லா இடங்களையும் நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு, நீலகிரி மாவட்டங்களுக்கு இடைப்பட்ட இடத்தில் தெங்குமராட்டா சுற்றுலாத் தலமாக இருந்துகொண்டிருக்கின்றது. நிறைய மக்கள் வந்து கொண்டிருக்கின்றார்கள். அங்கு சென்று வருவதற்கு வசதியான, போதுமான வழி ஏற்பாடுகளையும், சாலைகளையும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காற்றில் மட்டுமல்ல; நீரில் மட்டுமல்ல; நிலத்தில் மட்டுமல்ல; அனைத்திலும் சுற்றுப்புறச் சூழல் கெட்டு இருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே



அரசியலிலும் கெட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாகச் சொல்லப்போனால் ** என்ற நிலை ஏற்பட்டு இருக்கின்றது. மொழியாலும், இனத்தாலும் தன்னை அடையாளம் காட்டிய காலத்தில், இந்தியன் என்ற தேச உணர்ச்சியோடு ஒவ்வொருவரும் அடையாளம் காட்ட வேண்டும் என்றனர் நம் முன்னோர் பெருநோக்கோடு. அதையும் தாண்டி நம் தமிழர்கள் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றார்கள் பரந்த நோக்கோடு. Globalisation.

அதற்காக இப்படியா? தமிழ்நாட்டை ஒரு மலையாளி ஆண்டார். ஒரு கன்னடியர், கர்நாடகக்காரர் ஆண்டார். ஒரு மாநில ஆட்சியில் தேசியத்தைக் காட்டியதற்காக, இந்திய அளவில் உலகமயமாக்கலா? ஏதோ மன்மோகன்சிங் கொண்டு வந்த உலகமயமாக்கல் பொருளாதாரம், வியாபாரம், உற்பத்தி ஆகியவற்றில்தான் என்று எண்ணியிருந்தோம். பிரதமர் பதவியிலும்தான் என்பதைப் புரியத் தவறி விட்டேன், அறியத் தவறிவிட்டேன். ஏதோ, **நிலை வருமோ? அந்த மாசையும் அகற்ற வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்கள் பேசும்பொழுது ** என்று ஒரு நூதனமான கேள்வியைக் கேட்டிருக்கின்றார்கள். இந்திய நாட்டினுடைய பிரஜையாகிவிட்ட ஒருவருடைய பெயரையெல்லாம், இப்பொழுது இந்த அவையில் இல்லாதவர்களுடைய பெயரையெல்லாம் சொல்லி, இப்படி வம்புக்கு இழுப்பது நியாயமா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யார் பெயரையும் சொல்லவில்லை. அதனால் விடுங்கள். திரு. அழகராஜா. (குறுக்கீடு) ** என்று சொன்னார்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** ** என்று சொன்னார் அல்லவா? அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசியதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏன் ஐயா, உங்களை மானியக் கோரிக்கையிலே பேசச் சொன்னால்...

**திரு. என்.ஆர். அழகராஜா:** முதலிலே அதை எடுத்து விடுங்கள். அப்புறம் நான் பேசுகிறேன். தயவுசெய்து அதை எடுக்க வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** ** குறிப்பிடுகிறார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அழகராஜா, பேசுங்கள்.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, . . . .

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அது ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுக்காமல் தயவுசெய்து நீங்கள் அந்த வார்த்தையை எடுக்குமாறு உத்தரவிட வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவரின் வேண்டுகோளை ஏற்று, அந்தச் சொற்றொடர் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றது. (குறுக்கீடு) திரு. நிஜாமுதீன், உட்காருங்கள்.

*பிற்பகல் 12-40*

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய 1,30,057 சதுர கிலோ மீட்டர் பரப்பில், வனப் பகுதியின் அளவு 22,748 சதுர கிலோமீட்டர் என்ற அளவிற்கு இருப்பதாகக் குறிப்பிலே காணப்படுகின்றது. கிட்டத்தட்ட 140 ஆண்டுகளுக்கு முன்னாலே ஆரம்பிக்கப்பட்ட வன இலாகாவானது அரும்பாடுபட்டு அனைத்து அதிகாரிகளும், அமைச்சர்களும் அதிலே அக்கறை எடுத்துக்கொண்டு கடந்த பல ஆண்டுகளாகப் பல

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கோடிக்கணக்கான ரூபாய்களையும் செலவு செய்தும்கூட, அதை 33 சதவீதத்திற்குக் கொண்டுவர முடியாத ஒரு நிலையை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, இனிமேலாவது அந்த நிலைமைகளை மாற்றி, தமிழகத்தினுடைய வளத்தைப் பெருக்குவதற்காகவும், சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்துவதற்காகவும் வனப் பகுதியை 33 சதவீதத்திற்குக் கொண்டு வருவதற்கு இந்த அரசு பெருமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் அதிலே ஈடுபட்டிருக்கக்கூடிய அரசு அதிகாரிகளும் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதிலே அரசின் கையேட்டிலும்கூட கடந்த 1992-93 ஆம் ஆண்டு 22,696 சதுர கிலோமீட்டர் என்றும், 1994-95 ஆம் ஆண்டில் அது 22,000 ஆகக் குறைக்கப்பட்டிருப்பதாகவும் இருக்கிறது. அதிலே அச்சுப் பிழையாகக்கூட இருக்கலாம். இருந்தாலும்கூட, அவைகளைச் சரி செய்ய வேண்டுமாய் வனத் துறை அதிகாரிகளை நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே விவசாயிகளுடைய முன்னேற்றத்தைக் கருதி, சாலைகளினுடைய அபிவிருத்திகளைக் கருதி, வனத் துறைக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய இடங்களிலே அணைகள் கட்டுகின்றபொழுது அல்லது சாலைகள் போடப்படுகின்றபொழுது வனத் துறைக்குச் சம்பந்தப்பட்ட ஒருசில ஏக்கராக்கள் அதிலே பாதிக்கப்படும் என்று சொன்னால், அரசு அதிலே அனுமதி அளிப்பது கிடையாது. ஆகவே, அந்த அனுமதி அளிக்காத காரணத்தினாலே அந்த அணைகள் கட்டப்படுவதும், சாலைகள் போடப்படுவதும் பல காலங்களுக்குத் தாமதப்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, இந்தியாவினுடைய பொருளாதாரம் மட்டுமல்ல, வளமான தமிழகம் உருவாவதற்கு அது தடையாக இருக்கிறது என்பதை உணர்ந்து உடனடியாக அதற்கான அனுமதி பெற்றுத் தருவதற்கு இந்த இலாகா முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தேனிக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய வருஷநாடு மலையிலேயிருந்து வத்ராயிருப்புக்குச் செல்லக்கூடிய பாதை கிட்டத்தட்ட 4 கிலோமீட்டர் தூரத்திற்கு வனப் பகுதி வழியாகச் செல்ல வேண்டிய ஒரு பாதை அந்தப் பாதை போடப்படும் என்று சொன்னால், வனத் துறை அதிகாரிகள் அதற்கு அனுமதி அளிப்பார்கள் என்று சொன்னால், கிட்டத்தட்ட அந்தப் பகுதிக்கு ஸ்ரீவில்லிப்புத்தூர், விருதுநகர், சிவகாசி, இராஜபாளையம், திருநெல்வேலி போன்ற பகுதிகளுக்கு, சின்னமனூர் போன்ற பகுதிகளிலேயிருந்து, தேனி போன்ற பகுதிகளிலேயிருந்து

செல்லக்கூடிய வாகனங்களுக்குக் கிட்டத்தட்ட 45 கிலோமீட்டர் தூரம் குறைகின்ற காரணத்தினாலும், எரிபொருள் மிச்சமாவதோடு, நேரமும் மிச்சமாக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று திருநெல்வேலி மாவட்டத்திலே கட்டப்படுகின்ற கோதையாறு நீர்த்தேக்கம், கிட்டத்தட்ட 500 million கனஅடி தண்ணீரைத் தேக்கக்கூடிய ஒரு நீர்த்தேக்கம். அதற்கு அரசினுடைய அனுமதி பெற்றிருந்தாலும்கூட, வனத் துறையினுடைய அனுமதி பெறாத காரணத்தினாலே அந்த நீர்த்தேக்கத் திட்டம் இன்னும் நடைபெறாமல் இருக்கிறது என்பதை அரசு உணர்ந்து, அதற்கு வேண்டிய அவகாசத்தை எடுத்துக்கொண்டு, உடனடியாக வனத் துறை அதிகாரிகள் அதற்கு அனுமதி அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

அடுத்தபடியாக, சாதாரணமாக மேற்குத் தொடர்ச்சி மலையாக இருந்தாலும் சரி, பல்வேறு வனப் பகுதிகளாக இருந்தாலும் சரி, அங்கே இருக்கக்கூடிய போதைப் பயிர்களை தீ வைத்து அழிக்கக்கூடிய நிலைமைகளை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். அதுசம்பந்தமாக சமூக விரோதிகளாக இருந்தாலும் சரி அல்லது அந்தப் பகுதிகளில் ஆடு மாடுகளை மேய்க்கிறவர்களாக இருந்தாலும் சரி, தீ வைக்கின்ற காரணத்தாலே அங்கே புதிதாக முளைக்கக்கூடிய நல்லபல மரங்கள் அழிந்து விடுகின்றன என்பதை இந்த அரசு உணர்ந்து, அதுபோன்ற சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு சரியான தண்டனைகளை அளிப்பதோடு மட்டும் நீங்கள் நிறுத்திவிடக் கூடாது. அந்த இடத்திலே உடனடியாக நல்லபல மரங்களை வைப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுகூட, அதுபோன்ற நிலைமைகள் ஏற்படுகிறபோது அங்கே மழைக்காலங்களில் land slide அதாவது மலைச் சரிவுகள் ஏற்படுகின்றன. மலைச் சரிவு ஏற்படுகின்ற காரணத்தாலே அந்த தண்ணீர், ஓடைகள் வழியாக, ஆறுகளின் வழியாகப் போகிறபோது அணைக்கட்டுகளில் silt ஏற்பட்டு அணைக்கட்டுகளுடைய நீர்மட்டம்கூட குறைந்துவிடுகிறது என்பதை உணர்ந்து உடனடியாக அதற்கு வேண்டிய நிவாரணப் பணிகளை அரசு செய்ய வேண்டும்.

இந்த ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகளின் புத்தகத்திலேகூட மேற்குத் தொடர்ச்சி மலையிலே



பல இடங்களில் மண் அரிப்பு ஏற்படாமல் இருப்பதற்குண்டான trenches வெட்டப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. ஆகவே பல இடங்களில் இதைச் செய்ய வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை உங்கள் வழியாகக் கேட்டுக்கொள்கிறேன். அதோடுகூட கடந்த ஒரு மாதத்திற்கு முன்னால் தேனி மாவட்டத்திலே இருக்கக்கூடிய வருஷநாடு பகுதிக்கு நான் சென்றபோது அங்கேயிருந்து அருகில் இருக்கக்கூடிய அம்மாகெஜம் போன்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. அதன் வழியாக ராஜபாளையத்திற்கு நான் சென்றபோது பல இடங்களிலே கஞ்சா பயிர் பயிரிடப்பட்டு இருப்பதை நேரடியாகப் பார்க்க முடிந்தது. அதேபோன்று அங்கே இருக்கக்கூடிய தோட்டத்தின் வழியாக நான் சென்றபோது அங்கே இருக்கக்கூடிய தோட்டத் தொழிலாளர்கள் கூறுகின்றபோது, அந்தப் பகுதியிலே ஒருசில மாதங்களுக்கு முன்பு ஐந்து காட்டு யானைகள் சுடப்பட்டு இறந்துவிட்டதாகவும், ஆனால் அரசுக்கு அளிக்கப்பட்ட அறிக்கையில் ஒரு யானை மட்டும்தான் இறந்ததாக குறிப்பிடப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. அது எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியவில்லை. ஆகவே அரசு மேல் அதிகாரிகளை அனுப்பி அதைத் தீவிரமாக விசாரிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அங்கே இருக்கக்கூடிய கஞ்சாச் செடிகளை அழிப்பதற்கும் இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொள்ளாச்சி, ஸ்ரீவில்லிபுத்தூர், தேனி ஆகிய பகுதிகளில் கஞ்சாச் செடிகளை அழிப்பதற்கு 20 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அதோடுகூட களக்காடு, முண்டந்துறை ஆகிய பகுதிகள் Tiger Sanctuary-யாக, சிங்கவால் குரங்கு Sanctuary-யாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த ஆட்சியில் அங்கே கேரளாவிலிருந்து வந்தவர்களும் சரி, இங்கு தமிழ்நாட்டில் இருக்கக்கூடியவர்களும் சரி, பல இடங்களில் mines வைத்து அங்கே வைரக் கற்களை எடுப்பதாக அறிகிறேன். அவர்களைத் தடுப்பதற்கு வன அதிகாரிகள் முயற்சி செய்தபோது, அங்கே இருக்கக்கூடிய வன அதிகாரிகளைச் சுட முயன்ற ஒரு நிகழ்ச்சியும் கடந்த ஒரு மாதத்தில் ஏற்பட்டிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அதனுடைய முழு விபரத்தை அறிந்து, அதற்கு மூல காரணமாக இருக்கக்கூடியவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கே கிடைக்கக்கூடிய வைரக் கற்களைப் பாதுகாப்பதற்கு இந்த

அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்றாண்டுகளில் அந்தக் களக்காடு பகுதியில் semi precious stones என்று சொல்லக்கூடிய அந்த வைரக் கற்களைத் தனியார்கள் களவாடுகிற நிலை இல்லை. கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு, ஒரு பெரிய சம்பவம் நடந்தும்கூட, நமது வனத் துறை அதிகாரிகள் தீவிரமாகக் கண்காணித்து, அதை நிறுத்தி இருக்கிறார்கள் என்ற செய்தியைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. என்.ஆர். அழகராஜா:** நன்றி இங்கே மரியாதைக்குரிய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, மேட்டூர் அணைப் பகுதியில் இருக்கக்கூடிய Viscose தொழிற்சாலையிலிருந்து வரக்கூடிய கழிவுநீர் பல விவசாயிகளைப் பாதிக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட அதைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, விவசாயமும் அங்கே இருக்கக்கூடிய தொழிற்சாலையும் மிக முக்கியம் என்று குறிப்பிட்டார்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்தத் தொழிற்சாலை உற்பத்தி செய்யக்கூடிய pulp-லிருந்துதான் அதிகமாகக் கழிவுநீர் வருகிறது. ஆகவே அந்த pulp-ஐ ஓரளவுக்காவது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யக்கூடிய வாய்ப்பை அந்தத் தொழிற்சாலை பெறுமென்று சொன்னால் அந்தக் கழிவுநீரை அவர்கள் கட்டுப்படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும். அதோடு அந்தப் பகுதியில் வெட்டப்படுகின்ற மூங்கில் மரங்களோ அல்லது வேறுபல மரங்களோ அழிக்கப்படாமல் இருக்கும் என்ற காரணத்தால், சுற்றுப்புறச் சூழலும் பாதிக்காத நிலைமை இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்வதோடு, அதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பல அரசு ஊழியர்கள் என்னிடம் மனுவை அளித்திருக்கிறார்கள். அதிலே கடந்த ஆண்டு வனத் துறை மானியக் கோரிக்கையை அளித்தபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட 6500 தற்காலிகத் தொழிலாளர்கள் இருப்பதாகவும், அவர்களுடைய பணி நிரந்தரமாக்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே அதைச் செய்வதற்கு இந்த அரசு உடனடியாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.



பிற்பகல் 12-50

அடுத்து, Group Insurance-க்குக் கிட்டத்தட்ட ரூ.3,30,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது, அரசின் உயர் மட்டத்திலே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு மட்டும்தான் இருக்கிறது. அது வனத் துறையிலே, கீழ்மட்டத்திலே இருக்கக்கூடிய வன ஊழியர்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேனியிலே கடந்த ஆண்டு ஓய்வு விடுதி ஒன்று கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியோடு வனத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி அளித்தார்கள். அப்பகுதியிலே இருக்கக்கூடிய குன்றின்மேல் கட்டலாம் என்று என்னுடைய அபிப்பிராயத்தைச் சொன்னபோது, அவர்களும் அதை மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டார்கள். அங்கே வெறும் கள்ளிச் செடிகளும், முட்செடிகளும்தான் இருக்கின்றன. அதற்காக ஒரு பாதை போட வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக சட்டமன்ற உறுப்பினர் வளர்ச்சி நிதியிலிருந்தும், மாவட்ட ஊராட்சி நிதியிலிருந்தும் நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் செய்யப்பட இருக்கின்றன. ஆனால், அந்த முட்செடிகளை வெட்டுவதால environment பாதிக்கும் என்று அங்கே இருக்கக்கூடிய மாவட்ட வன அதிகாரி கூறுகிறார். அது எந்த விதத்திலும் பாதிக்காது. ஆகவே, வனத் துறையினுடைய ஓய்வு விடுதியை அங்கே கட்டுவதற்கு அரசு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே இருக்கக்கூடிய வனத் துறை அதிகாரிகளே, அங்கே இருக்கக்கூடிய காடுகளை வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இது எந்தவிதத்திலும் பாதிக்காது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, உடனடியாக அதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்ததற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது முறையாக இந்த மாமன்றத்தில் வனத் துறை மற்றும் மாசுக் கட்டுப்பாடு துறை பற்றிய மானியக் கோரிக்கைகளை அளிக்கின்ற வாய்ப்பினை அளித்த எங்களது அருமைத்

தலைவர், தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து, என்னுடைய பதிலுரையை அளிக்கின்றேன்.

ஒரு நாட்டின் உண்மையான செல்வச் செழிப்பு அந்நாட்டின் வன வளங்களைப் பொறுத்தே அமைகின்றது. இவ்வளங்களைப் பாதுகாப்பதற்காக நம் முன்னோர்கள் தொன்றுதொட்டே பலவிதமான முயற்சிகளை எடுத்து வருகின்றனர். பல பழந்தமிழ்ப் பாடல்களில் எல்லாம் வனங்களைப் பற்றி ஏராளமான பாடல்கள் இருக்கின்றன. இதனையே நமது முதல்வரவர்கள் சங்கத் தமிழிலே அழகாக கணியன் பூங்குன்றனார் பாடல் ஒன்றை எடுத்துச் சொல்கின்றார்கள்.

"நற்றிணையில் வருகின்ற காதல் பாட்டொன்றைக்கூடக்
கற்றறிவாளன் கணியன் பூங்குன்றன் எழுதுங்கால்
மருந்துக்கு உதவுகின்ற மரத்தின் பட்டைகளை மட்டுமின்றி-அந்த
மரத்தையே வேரோடு பிடுங்குவதோ? எனக்கேட்டு
பயன்படுவன எதனையும் பாதுகாக்க வேண்டுமெனப்
பாங்காக அறிவுரையைப் பகருகின்றான் உலகிற்கு"

என்று நமது தலைவர், கலைஞர் அவர்கள் அழகாக சங்கத் தமிழிலே எடுத்துச் சொன்னார்கள். மேலும், இன்னொரு பாட்டில்,

"பாடுவோர்தான் ஆய் அண்டிரனை நாடிப்
பரிசாக பன்னூறு யானைகளைப் பெற்றிடுவர்; இந்த
காடுகளும் ஒருவேளை; கவிதை கற்றுப் பரிசு
பெற நீடுபுகழ் ஆய் அண்டிரனைத் தேடி வந்து; நல்ல
குளிர்தருக்கள் நிழல் தனிலே குவித்து வைத்தனவோ?"

என்று அழகான பாடல்களை எல்லாம் அழகு தமிழ்ப்படுத்தி காடுகள் எவ்வாறு தமிழகத்தில் வளர்க்கப்பட வேண்டுமென்பதைப் பற்றி எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

இப்போது ஆளுகின்ற, முதல்வராக இருக்கின்றபோது மட்டுமல்ல, அவர்கள் முதல்வராக இல்லாதபோதுகூட, இந்த நாட்டினுடைய,



வருங்காலச் சந்ததியினர் வாழ வேண்டும், மழை வளம் பெற வேண்டும் என்பதற்காக, தன்னுடைய ஒவ்வொரு பிறந்த நாளின்போதும், மரக் கன்றுகளை நட வேண்டுமென்று சொல்லி, இந்தத் தமிழகத்தினுடைய வளர்ச்சிக்காகப் பாடுபட்டிருக்கிறார்கள். ஆகவே, வனங்களை இந்த அரசு மிகமிக நன்றாகப் பேணிப் பாதுகாத்து வருகிறது. விஞ்ஞான முறையிலே வனத்தைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், ஐம்பதாண்டுகள் வளர்ந்துள்ள ஒரு மரத்தின் மதிப்பு ரூ.15.70 இலட்சமாகும் என்று சொல்கிறார்கள். ஒரு மரம் ஆண்டிற்கு 1000 கிலோ பிராண வாயுவை பிரபஞ்சத்திலே நிரப்புகிறது. ஓர் எக்டேர் நிலப்பரப்பில் உள்ள மரங்கள் 5 முதல் 10 டன் வரை எடையுள்ள கரியமிலவாயுவினை உட்கொண்டு 12.5 டன் முதல் 25 டன் வரை எடையுள்ள பிராண வாயுவை நமக்குக் கொடுக்கிறது. மேலும் 3 டன் முதல் 8.5 டன் மாசுப்பொருட்களை எடுத்துக்கொள்கிறது. இதன்மூலம் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க மரங்கள் எவ்வாறு உதவுகின்றன என்பதை விளக்கத் தேவையில்லை. மரங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் பருவ மழை உரிய காலத்தில் பெய்கிறது. மண், வளம் பெறுகிறது. நிலத்தடி நீரைப் பெருக்க வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே வனப் பரப்பு 22,748 சதுர கிலோமீட்டர். இது மொத்த நிலப்பரப்பிலே 17½ சதவீதமாகும். ஆனால், இந்தியத் துணைக் கண்டத்தினுடைய வன நிலப்பரப்பினுடைய சதவீதம் 22½ சதவீதம். ஒரு நாடு செல்வச் செழிப்பாக இருக்க வேண்டும், மழை வளம் நன்றாக இருக்க வேண்டுமென்றால், ஆன்றோர்கள், விஞ்ஞானிகள் எல்லாம் 33 சதவீதம் வனங்களாக இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நமது தமிழகத்திலே 17½ சதவீதம்தான் வனங்கள் இருக்கின்ற காரணத்தினால் இந்த மழை வளம் வெகுவாகக் குறைந்து சில வருடங்களில் பஞ்சம் ஏற்படுகிறது.

பிற்பகல் 12-55

ஆகவே நமது முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, இந்த வன வளத்தைப் பெருக்குவதற்காக பல்வேறு முயற்சிகளை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதன் காரணமாக சமீபத்தில் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் புகைப்படத்தின்படி இப்போது தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, மற்ற மாநிலங்களில் எல்லாம் வனப் பரப்பு குறைந்துகொண்டிருக்கும்போது, தமிழகத்திலே மட்டும்

19 சதுர கிலோமீட்டர் Tree cover உயர்ந்துள்ளது என்பதைப் பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இது 17½ சதவிகிதத்திற்குப் பதிலாக 18½ சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. வருங்காலத்திலே 22½ சதவிகிதம், இந்திய அளவிலே, இந்தியாவில் இருக்கின்ற வனப் பரப்போடு, தமிழகத்தினுடைய வனப்பரப்பும் ஒப்பாக உயரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, வன வளத்தைப் பெருக்க வேண்டும் என்பதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த முயற்சிகளின் விளைவாக ஜப்பான் நாட்டிலிருந்து 500 கோடி ரூபாயை மென்கடனாகப் பெற்று 1000 கிராமங்களிலே வன வளத்தைப் பெருக்க வேண்டுமென்று சொல்லி, இப்போது 3-வது ஆண்டாக அதைத் தொடங்கியிருக்கிறோம். 400 கிராமங்களிலே—ஒவ்வொரு கிராமத்திற்கும் ரூ.25 இலட்சம், ரூ.30 இலட்சம் என்று அந்தக் கிராம மக்களுக்குப் பணத்தைக் கொடுத்து கிராம வனத் துறை அதிகாரிகளுடைய ஒத்துழைப்போடு, அந்தக் கிராமங்களிலே வனங்களைப் பெருக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எந்தவொரு திட்டமாக இருந்தாலும் சரி, பொதுமக்களுடைய ஒத்துழைப்பு இல்லையென்றால் அந்தத் திட்டம் நிறைவேறாது. இதற்கு முன்னாலே நடைபெற்ற வனங்களை பாதுகாக்கின்ற முயற்சிகள் எல்லாம், வனங்களை உருவாக்குகின்ற முயற்சிகள் எல்லாம் `SIDA' போன்ற திட்டங்கள் எல்லாம் இந்த நாட்டிலே நல்ல பயனைக் கொடுக்கவில்லை என்பதற்குக் காரணம், பொதுமக்களுடைய ஒத்துழைப்பு இல்லை. ஆனால் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலமாக கலைஞர் அவர்கள் வாங்கித் தந்த 500 கோடி ரூபாய் மூலதனத்தின் மூலமாக இப்போது ஆயிரம் கிராமங்களிலே—இன்னும் இரண்டு ஆண்டுகள் பாக்கி இருக்கிறது,— 5 ஆண்டுகளும் மிகத் திறமையாக இந்த வன வளங்கள் காப்பாற்றப்படுமேயானால் நிச்சயமாக தமிழகத்தினுடைய வனப் பரப்பு கூடும். இந்தவகையிலே தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் மிகச் சிறந்த ஒரு திட்டமாக, இந்தியாவில் இருக்கின்ற மாநிலங்களுக்கு எல்லாம் எடுத்துக்காட்டாக இப்போது இந்தத் திட்டத்தின் மூலமாக பல்வேறு பயன்கள் ஏற்பட்டிருக்கின்றன. கிராமங்களிலே இருக்கின்ற மக்களுக்கு எல்லாம் மாற்று வேலைகளை—வனத்தையும், வனத்தைச் சுற்றியிருக்கின்ற மக்களும் வனத்தை அழித்து வருகின்ற அந்த நிலைமையை மாற்றி அவர்களுக்கெல்லாம் மாற்று வேலை கொடுக்கின்ற அளவுக்கு, இந்தத் திட்டத்திலே பல செயல்பாடுகள் இருக்கின்றன. உதாரணத்திற்கு சிவகங்கை மாவட்டத்திலே உலகம் பட்டி திட்ட கிராமத்திலே 115 கிராம மகளிருக்கு



கயிறு திரிக்கும் தொழிலிலே பயிற்சி அளித்து அதற்கான உபகரணங்களை வழங்கி வருகிறோம். இதற்கு முன்பு அவர்கள் மலையிலே சென்று விறகுகளை வெட்டி அதன்மூலமாக பிழைப்பு நடத்தி வந்தார்கள். தென்காசி பகுதியிலே ராஜீவ் நகர் கிராமத்தில் வனத்தைச் சார்ந்திருந்த 35 நபர்கள் இப்போது செங்கல் தயாரிப்பில் ஈடுபட்டு தினமும் ரூ.80 முதல் ரூ.100 வரை நிரந்தர வருமானம் பெறுகிறார்கள்.

தருமபுரி மாவட்டத்திலே கல்யாணபேரியான் குப்பம் என்ற இடத்திலே 26 நபர்களுக்கு, வனத்தை முழுவதுமாக அழித்துக்கொண்டிருந்த அந்த ஏழை நபர்களுக்கு ஓட்டுநர் பயிற்சி அளித்து, லாரி ஓட்டுவது, கார் ஓட்டுவது போன்ற பயிற்சிகள் கொடுக்கப்பட்டு அவர்களுக்கு நிரந்தர வருமானம் தரும் தொழில் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் சோலூர் மட்டம் என்ற இடத்தில், பெண்களுக்கு ஊறுகாய், purse wire கூடை, நீலகிரி தைலம் ஆகியவற்றைத் தயாரிக்க பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

விழுப்புரம் மாவட்டத்திலே ஓர் ஊரிலே 75 கிராம மகளிருக்கு கூடை முடைதலில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதற்கெல்லாம் மேலாக இந்தக் காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலமாக கிராமங்களிலே இருக்கின்ற சிறு நதிகளையெல்லாம் தடுத்து, Water-shed, நீர்ப்பிரிமுகடு என்ற அடிப்படையில் செயல்படுத்தப்படுவதால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து தங்கு தடையற்ற நீர்வளம் உறுதி செய்யப்படுகிறது. இதனால் ஒரு போகம் பயிரிடப்பட்ட பகுதிகளில் தற்போது இரண்டு போகம் பயிர் செய்யப்பட்டு, விவசாயிகள் மிகவும் நன்றாக இந்தத் திட்டத்தைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் 47 கிராமங்களில் 70 கசிவுநீர்க் குட்டைகள் கட்டப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டத்தில், லோக்கூர் கிராமத்தில் இந்தத் திட்டத்தின்கீழ் கசிவுநீர்க் குட்டைகள் மூலமாக நிலத்தடிநீர் உயர்ந்து, இந்தக் கிராம மக்கள் எல்லாம் இப்போது மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். 50-க்கும் மேற்பட்ட கிளைகளின்மூலம 3 போகம் விவசாயம் செய்கிறார்கள். இந்த அளவுக்கு இந்த வனத் திட்டத்தின் மூலமாக அவர்களுக்குப் பல்வேறு நல்ல காரியங்களைச் செய்து வருகின்றோம்.

பிற்பகல் 1-00

கிராம மக்களுக்கு ஆழ்க்குழாய் கிணறுகள், கைப்பம்பு அமைத்தல், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தல், சமுதாயப் பொதுக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், கதிரடிக் களங்கள், பயணிகள் நிழற்குடை, சாலைகள் அமைத்தல், கழிப்பறை வசதிகள், தொகுப்பு வீடுகள் போன்ற வசதிகள் எல்லாம் இந்த வனத் துறை மூலம் செய்து கொடுப்பதால், மக்கள் எல்லாம் மகிழ்ச்சியோடு இந்த வனத்தைப் பாதுகாக்கின்ற முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு மிக நல்லமுறையிலே இந்தத் திட்டம் செயல்பட்டு வந்தாலும்கூட, சில இடங்களிலே மரங்கள் வெட்டப்படுவது 5 சதவீதம் நடந்துகொண்டுதான் இருக்கிறது. ஆகவே அதைப் பாதுகாப்பதற்கு பெருமுயற்சிகள் எடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

1997-98-ல் சந்தன மரக் குற்றங்கள் 2600 ஆக இருந்தது. 1998-99-ல் 1500 ஆகக் குறைந்துவிட்டது. குண்டர்கள் தடைச் சட்டத்தின்கீழ் 33 பேர்களை கடந்த ஆண்டு சிறையில் போட்டிருக்கிறோம். இந்த ஆண்டு 42 பேர்களை சிறையில் போட்டிருக்கிறோம். இருக்கின்ற ஆட்களை வைத்துக்கொண்டு மிகச் சிறப்பாக இந்த அரசாங்கம் வனங்களைப் பாதுகாத்து வருகிறது. பல்வேறு வருமானங்கள் காடுகள் மூலமாக அரசுக்கு வருகின்றன. சந்தன மர வருவாய், கடந்த ஆண்டுகளில் மத்திய அரசாங்கம், ஏற்றுமதிசெய்ய விட்டிருந்தால் ஆண்டுக்கு 100 கோடி ரூபாய் வருமானம் கிடைத்திருக்கும். ஆனால் இருக்கின்ற உள்ளூர் சந்தையை வைத்துக்கொண்டு 3 ஆண்டுகளில் 72 கோடி ரூபாய்க்கு சந்தன மரத்தை விற்று இருக்கிறோம். நமது முதலமைச்சர் அவர்கள் பல்வேறு கடிதங்களை மத்திய அரசுக்கு எழுதி, இறுதியாக 13-4-1999 அன்றுதான் சந்தன மரக் கட்டைகளை, கட்டைகளாக ஆண்டுக்கு 1500 டன் அளவுக்கு அனுப்புகிற அந்த உத்தரவைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். ஆகவே இனி வரும் ஆண்டுகளிலே சுமார் 100 கோடி ரூபாய் அளவுக்கு சந்தனக் கட்டைகள் மூலமாக அரசுக்கு வருவாய் கிடைக்கும் என்ற நல்ல செய்தியை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் சந்தன மர ஏலத்தைப் பொறுத்தவரையில், சந்தன மர ஏலங்கள், முன்பு, அரசுக்கு வந்து, அமைச்சர்தான் அதை இறுதி செய்கிற நிலை எல்லாம் இருந்தது. அதன் காரணமாக சிகப்பு நாடா பிரச்சினைகள் எல்லாம் கடந்த ஆட்சியில் இருந்தது. ஆனால், இப்போது வனத் துறை அதிகாரிகளே—6 இலட்சம் ரூபாய்வரை மாவட்ட வன அலுவலரும், 30 இலட்சம் ரூபாய்வரை வனப் பாதுகாவலரும், 30 இலட்சம் ரூபாய்க்குமேல் தலைமை வனப் பாதுகாவலரும்—ஏலத்தை இறுதி செய்கின்ற அந்த ஆணையை அரசு வழங்கி, விரைவாக இந்தச் சந்தனக் கட்டைகளை விற்கின்ற அந்தச் செயலை நிலைநிறுத்தி வருகிறது. தமிழ்நாட்டிலே 17½ சதவீதம்தான் வனங்கள் இருக்கின்றன என்று முன்பு நான் குறிப்பிட்டேன். இதனை அதிகரிப்பதற்கு தமிழ்நாட்டிலுள்ள புறம்போக்கு நிலங்களை, குறிப்பாக revenue புறம்போக்கு நிலங்களை வனப் பகுதியாக, தமிழ்நாடு வனச் சட்டப்படி மாற்ற வருவாய்த் துறையின் உதவியோடு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1996-97 முதல் 1998-99 வரையிலான மூன்றாண்டுகளில் வனச் சட்டப்பிரிவு 16-ன்கீழ் 4,328 எக்டேர் வன நிலங்களை காப்பு வனமாக மாற்றி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதற்காக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



மேலும், விழுப்புரம் மாவட்டத்திலே கல்ராயன் மலை, தேனி மாவட்டத்திலே மேகமலை, திண்டுக்கல் மாவட்டத்திலே சிறுமலை போன்ற இடங்களில் 20 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் இருக்கின்ற பல பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காக, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் விரைவிலே அந்தப் பகுதிகளுக்குச் சென்று, காப்புக் காடுகளாக மாற்றுவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில மாண்புமிகு உறுப்பினர்கள் நீலகிரி மாவட்ட வனப் பகுதியில் ஆக்கிரமிப்பு இருப்பதாகச் சொன்னார்கள். கடந்த ஆண்டு நீலகிரி மாவட்டத்தில் உள்ள வன நிலங்களை ஆக்கிரமித்த 500-க்கு மேற்பட்ட முன்னாள் இராணுவத்தினர்களை விரைவிலே எந்தவிதமான மோதலும் ஏற்படாமல் இந்த அரசு அகற்றி, வனத்தினுடைய நிலங்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு மேலாக, கடந்த 2, 3 மாதங்களுக்கு முன்னால், கூடலூரில் உள்ள 900 ஏக்கருக்கு மேற்பட்ட வன நிலங்களை, பட்டா செய்து கொடுத்த ஓர் அதிகாரிமேல் நடவடிக்கை எடுத்து, இன்றைக்கு அந்த நிலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, தேனி மாவட்டத்தில், கூடலூரில் 311 ஏக்கர் பரப்பளவில் இருந்த ஆக்கிரமிப்பு மீட்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-05

இந்த வனத் துறையின் சார்பிலே ஏராளமான சரணாலயங்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டிலே 17

[திரு. பொங்கலூர் நா. பழனிசாமி] [1999 ஏப்ரல் 21

சரணாலயங்களும், 5 தேசிய பூங்காக்களும் இருக்கின்றன. மொத்த வனப் பரப்பிலே இது 12.8 விழுக்காடு அமையப்பெற்றுள்ளது.

சென்னைக்கு அருகேயுள்ள வண்டலூரில் இயற்கை சூழலில் 510 எக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள, ஆசியா கண்டத்திலேயே மிகப் பெரிய உயிரியல் பூங்காவான அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில், மற்ற உயிரினங்களின் மத்தியில், 50 வகையான அழிந்துவரும் பாலூட்டி வகைகள், 22 வகையான ஊர்வன வகைகள் மற்றும் 74 வகையான பறவையினங்களைப் பாதுகாக்க, இனவிருத்தி அடையச் செய்ய முயன்று வருகிறது என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பூங்காவில் புதியதாக இரண்டு ஒட்டகச்சிவிங்கிகள் கல்கத்தா நகர அலிப்பூர் உயிரியல் பூங்காவிலிருந்து வாங்கப்பட்டு, அவை நல்லமுறையிலே இப்போது பராமரிக்கப்பட்டு வருகின்றன.

நடப்பாண்டில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவின் முகப்புத் தோற்றம் மற்றும் நுழைவு வாயிலை அழகுபடுத்துவதற்கு 17 இலட்சம் ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் உயிரியல் பூங்காவிற்கு 8 இலட்சத்திற்குமேல் பார்வையாளர்கள் வந்துள்ளனர். நடப்பாண்டில் சுமார் ரூபாய் 12 இலட்சத்திலே 4 மின் கலத்தினால் இயங்கும் இரயில் வண்டிகளும், ரூபாய் 40 இலட்சத்திலே நான்கு மின்கலத்தில் இயங்கும் சிற்றூர்திகளும் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், இந்த வனத் துறையிலே இருக்கின்ற ஆராய்ச்சித் துறை மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்தத் துறையின் மூலமாக பல்வேறு புதிய கண்டுபிடிப்புகள், அதிக பயன் தரும் மரங்கள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபற்றி பல்வேறு நாளேடுகள், Hindu, Indian Express நாளேடுகள் போன்றவைகளிலும், உலக வங்கியைச் சார்ந்த FREEP அமைப்பும் நமது தமிழ்நாடு வனத் துறையை வெகுவாகப் பாராட்டி இருக்கின்றன. சமீபத்திலே எடுத்த கணக்குப்படி, தமிழகத்திலே வனத் துறையினுடைய பரப்பும், அதேபோல, தமிழ்நாட்டிலே வாழ்கின்ற வன விலங்குகளும் கூடியிருக்கின்றன. உதாரணத்திற்கு புலிகள் 72, சிறுத்தைகள் 110, யானைகள் 2826, சிங்கவால் குரங்குகள் 1335, வெளி மான்கள் 1917, காட்டு



1999 ஏப்ரல் 21] [திரு. பொங்கலூர் நா. பழனிசாமி]

எருமைகள் 4442 என்ற அளவிலே முந்தைய கணக்கெடுப்பைவிட மிக அதிகமாக உள்ளன. என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்னா என்ற ஓர் ஆண் யானை, 18 பேர்களைக் கொன்றிருக்கிற ஆண் யானை, கேரள வனப் பகுதியிலே இருக்கின்ற அதிகாரிகள் அதைச் சுட்டுவிட உத்தரவிட்டும்கூட. நமது தமிழ்நாட்டைச் சேர்ந்த அதிகாரிகள் அதை மிக வெற்றிகரமாக அடக்கி, இன்றைக்கு அது மிகச் சிறப்பாக மக்கள் எல்லோரையும் மகிழ்வித்துக் கொண்டிருக்கிறது. வெளிநாட்டைச் சேர்ந்த ஒரு பெண்மணி தவறான செய்திகளை நாட்டுக்கு அறிவித்தார். பத்திரிகைகளை எல்லாம் கூட்டிக்கொண்டு அந்தச் செயல் உண்மையல்ல, மக்னா யானை மிகச் சிறப்பாக இருக்கிறது என்பதைக் காட்டி, அவர்கள் எல்லாம் பாராட்டினார்கள் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வனத் துறையின் சார்பிலே மூன்று கழகங்கள் மிகச் சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தாலே 71,013 எக்டேர் நிலப்பரப்பிலே கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, பெரம்பலூர், கரூர் மாவட்டங்களிலே தைலம், முந்திரி மரங்கள் மற்றும் சவுக்கு மரங்கள் பயிரிடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. இக்கழகத்தின் சொத்து மதிப்பு 20 கோடி ரூபாய் ஆகும். கடந்த மூன்று ஆண்டுகளில் இக்கழகம் 1996-97-லே 17 கோடி ரூபாய் விற்றுமுதல் செய்து 2.67 கோடி ரூபாய் லாபமாக ஈட்டியிருக்கிறது. 1997-98-லே இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு 16.58 கோடி ரூபாய் வியாபாரம் செய்து 7.43 கோடி ரூபாய் லாபமாக ஈட்டியிருக்கிறது. இந்த 1999-2000 ஆம் ஆண்டிலே இதன் லாபம் 15 கோடிக்குமேல் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதுபோல, வனத் தோட்டக் கழகத்தின் மூலமாக நடத்தப்படுகின்ற சந்தன ஆலையை, கடந்த ஆட்சியாளர்களால் கைவிடப்பட்ட அந்தச் சந்தன ஆலையை எடுத்து, இன்றைக்கு அது மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. 8983 கிலோ எண்ணெயை விற்பனை செய்து, 10 கோடி ரூபாய் வருமானமாக ஈட்டியிருக்கிறது. இதில் ஒரு கோடி ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது.

அதேபோல, வனத் துறை மூலமாக நடத்தப்படுகின்ற இன்னொரு அற்புதமான கழகம், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்.

இதுவும் கலைஞர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் ஆசியாவிலேயே பெரிய Clonal ரக

தேயிலைச் செடிகள் கொண்ட தோட்டம். இதன் பரப்பளவு 4431 எக்டேர். நீலகிரி மலைப் பகுதியிலே 3400 எக்டேரிலும், ஆனைமலையிலே 1000 எக்டேரிலும் இந்தத் தோட்டம் பரந்து விரிந்து உள்ளது. இதில் 12 ஆயிரம் பேர்கள்—7 ஆயிரம் நிரந்தரத் தொழிலாளர்களும், 5 ஆயிரம் தற்காலிகத் தொழிலாளர்களும்—பணி புரிந்து வருகிறார்கள்.

பிற்பகல் 1-10

இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு 1996-97-லே 76 இலட்சம் கிலோ தேயிலை உற்பத்தி செய்து 39 கோடி ரூபாய்க்கு வியாபாரம் செய்து இருக்கிறது. அதன் மூலமாக 15 கோடி ரூபாய் லாபம் ஈட்டி இருக்கிறது. 1997-98 ஆம் ஆண்டிலே 103 இலட்சம் கிலோ தேயிலை உற்பத்தி செய்து 73 கோடி ரூபாய்க்கு வியாபாரம் செய்து 29 கோடி ரூபாய் லாபம் ஈட்டி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 1998-99 ஆம் ஆண்டிலே 98 இலட்சம் கிலோ தேயிலை உற்பத்தி செய்து 62 கோடி ரூபாய்க்கு விற்று முதல்செய்து, 12 கோடி ரூபாய் லாபம் ஈட்டி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டைவிட லாபம் குறைந்ததற்குக் காரணம், இந்த ஆண்டிலே தேயிலை உற்பத்தி நீலகிரி மாவட்டத்திலே 10 சதவீதம் குறைந்துவிட்டது. ஆனால் நமது அரசு தேயிலைத் தோட்டத்திலே 5 சதவீதம்தான் குறைந்து இருக்கிறது. விலையும்கூட கிலோவுக்கு 10 ரூபாய் குறைந்து இருக்கிறது. புதிதாக 2 தேயிலைத் தொழிற்சாலைகளை அந்தப் பகுதியிலே கட்டிய காரணத்தினால் லாபம் குறைந்து இருக்கிறது. அடுத்த ஆண்டு இதைவிட அதிகமாக 11 கோடி ரூபாய்க்கு மேலாக லாபம் ஈட்டும் என்று மதிப்பிடப்பட்டு இருக்கிறது. இந்தத் தேயிலைத் தோட்டக் கழகத்தினுடைய இன்றைய மதிப்பு 400 கோடி ரூபாய். அரசாங்கம் போட்டது வெறும் 38 இலட்சம் ரூபாய்தான். இன்றைய மதிப்பு 400 கோடி ரூபாய் என்று கணக்கிட்டு இருக்கிறார்கள்.

இன்னொரு கழகம் அரசு ரப்பர் கழகம். இது வனத் துறையினால் நடத்தப்பட்டு வருகிறது. இது கன்னியாகுமரி மாவட்டத்தில் 4250 எக்டேர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. இதிலே ரப்பர் மரங்களும், சிறிய அளவிலே கிராம்புகளும் வளர்க்கப்படுகின்றன. சுமார் 5000 பேர் இதிலே வேலை செய்து வருகிறார்கள். கடந்த ஆண்டுகளிலே இந்த ரப்பர் கழகம் மிக லாபகரமாக இயங்கி வந்தது. 1996-97-ல் இதனுடைய உற்பத்தி 2500 மெட்ரிக் டன்கள்; இதனுடைய விற்பனை 19 கோடி ரூபாய். 1997-98-ல் இதனுடைய உற்பத்தி 2700 மெட்ரிக் டன்கள்; ஆனால், வருவாயோ 15 கோடி ரூபாய்தான். 1998-99-ல் உற்பத்தி மிக அதிகமாகி, 115 சதவீதம்



உற்பத்தியை இது பெற்று, 3000 மெட்ரிக் டன்கள் உற்பத்தி செய்தும்கூட இதனுடைய வருமானம் 15 கோடி ரூபாய்தான். 60 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ ரப்பர் இன்றைக்கு 16 அல்லது 17 ரூபாய்க்கு விற்கின்ற காரணத்தினால், இந்தக் கழகம் இப்போது தற்காலிகமாக நட்டத்திலே இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இப்போது சர்வதேசச் சந்தையிலே ரப்பரினுடைய விலை வீழ்ச்சி மிகவும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், (குறுக்கீடு) . . .

**திரு. சி. ஞானசேகரன்:** I am on a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்புக் கொடுக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) ஏன், spring மாதிரி குதிக்கிறீர்கள்? சரி, சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது விளக்கம் அளிக்கிறபோது, ரப்பர் கழகத்தில், ரப்பா விலை வீழ்ச்சி காரணமாக இப்போது நட்டம் ஏற்பட்டு இருப்பதாகக் கூறுகிறார்கள். 1998 ஆம் ஆண்டு Comptroller and Auditor General Report-ல் நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணமாகக் கொடுக்கப்பட்டு இருப்பது. "absence of phased/planned replanting programme; lack of effective control on tapping operations; absence of effective control on process loss; and ineffective marketing strategy" என்று வேறு காரணங்களைக் கூறி இருக்கிறார்களே, அதை அமைச்சர் அவர்கள் சரி பார்த்தார்களா? விலை வீழ்ச்சி என்பது வேறு. இருந்தாலும்கூட, இதிலே இவ்வளவு குறைபாடு இருப்பதுதான் உண்மையான காரணம் என்பதை நான் சொல்லி, இந்தக் கழகத்திலே பல கோடி ரூபாய், கிட்டத்தட்ட 124 கோடி ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. அங்கு ஏன் நஷ்டம் ஏற்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97 ஆம் ஆண்டிலே இதிலே இருக்கின்ற ஆட்களை வைத்து 2500 டன் உற்பத்தி ஆனது. சரியான முறையிலே tap செய்யவில்லை என்றால், 1997-98-ல் 2700 டன்களும், 1998-99-ல் 115 சதவீதம், அதாவது 3000 டன்களும் எப்படி உற்பத்தி செய்திருக்க முடியும்? ஆகவே, விலை வீழ்ச்சிதான் முக்கியமான காரணமேயொழிய மற்ற காரணங்கள் இல்லை. Audit Report-லே சொல்லப்பட்டிருப்பதாக நீங்கள் சொல்வது ஒரு காரணமாக இருக்கலாம். இருந்தாலும்கூட,

[திரு. பொங்கலூர் நா. பழனிசாமி] [1999 ஏப்ரல் 21

இந்த ரப்பர் கழகத்தை மீண்டும் நல்லமுறையில் இயக்குவதற்கு பல்வேறு நலல பணிகளை இந்த அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது.

*பிற்பகல் 1-15*

தமிழ்நாட்டில் ரப்பர் சாலைகளை அமைக்க பிரேரணை அரசுக்குச் சமர்ப்பிக்கபபட்டுள்ளது. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் ரப்பர் கழகத்தினுடைய ரப்பரை வாங்கி, அந்தத் துறையிலே இருக்கின்ற அந்தச் சாலைகளுக்குப் பயன்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முதிர்ந்த நோயுற்ற ரப்பர் மரங்களை அதிகப்படியான பால் வடிப்புக்கு உள்ளாக்கி கழகத்திற்கு அதிக வருமானம் ஈட்டலாம். உபரியாக உள்ள துறைப் பணியாளர்களை தாய்த் துறைக்குத் திருப்பி அனுப்ப படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிககபபட்ட ரப்பர் பூங்காவில் அமைய இருக்கும் ரப்பர் தொழிற்சாலைகளுக்குத் தேவையான ரப்பரை அரசு ரப்பர் கழகத்திடமிருந்து வழங்கி, வருங்காலத்திலே ரப்பர் கழகத்தை நல்லமுறையிலே இயக்குவதற்காக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

வனத் துறையின் மூலமாகப் பணியாளர்களுக்குப் பல்வேறு உதவிகளை நாங்கள் வழங்கியிருக்கிறோம். 17 உதவி வனப் பாதுகாவலர்களுக்கு, துணை வனப் பாதுகாவலர்களாகப் பதவி உயர்வு தரப்பட்டுள்ளது. எட்டு கண்காணிப்பாளர்களுக்கு நேர்முக உதவியாளர்களாகப் பதவி உயர்வு தரப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. சி. ஞானசேகரன் அவர்கள், பழைய Audit Report-ஐ வைத்துக்கொண்டு இப்போது எங்களை விரட்டுகின்றார் என நினைக்கின்றேன்.

ஐம்பது வனவர்களுக்கு வனச் சரகர்களாகப் பதவி உயர்வு தரப்பட்டுள்ளது. இருநூற்று நாற்பத்து மூன்று வனக் காப்பாளர்களுக்கு வனவர்களாகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இருபத்தொன்பது உதவியாளர்களுக்கு கண்காணிப்பாளர்களாகப் பதவி உயர்வு தரப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் பணியாற்றிய 44 தினக் கூலிகளை அரசுப் பணியாளர்களாக அமர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

வனத் துறையிலே பணிபுரிகின்ற 3 வன அலுவலர்கள் 1997-98-லும், பதினாறு வன அலுவலர்கள் 1998-99-லும் வெளிநாட்டிற்கு அனுப்பி



1999 ஏப்ரல் 21] [திரு. பொங்கலூர் நா. பழனிசாமி]

பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். நடப்பாண்டில் எட்டு வன அலுவலர்கள், இரண்டு வனச் சரகர்கள் வெளிநாட்டிற்கு அனுப்பப்படுவார்கள்.

அடுத்து, அறிவிப்புகள் வனத் துறை ஆரம்பிக்கப்பட்டு ஏறத்தாழ 150 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. இந்த வனத் துறையின்கீழ் வன நிர்வாகம், வன உயிரினம், வனப் பாதுகாப்பு மற்றும் சமூகக் காடுகள் என்று பல பிரிவுகள் இருக்கின்றன. வன நிர்வாகத்தினுடைய உயரதிகாரிக்கு தமிழகம் முழுவதும் எல்லையிருக்கிறது. அதைப்போல சமூகக் காடுகளைப் பார்க்கின்றவர்களுக்கும் தமிழகம் முழுவதும் எல்லையிருக்கின்றது. இதுபோல over-laping system இருக்கின்ற காரணத்தால் சரியான முறையிலே நிருவாகத்தைச் செய்ய இயலாமல் இருக்கின்றது. ஆகவே, இந்த வனத் துறை நிருவாகத்தைச் சீர் செய்து, மிகவும் சரியான முறையிலே இந்தத் துறையை நிருவாகம் செய்ய வேண்டுமென்பதற்காகப் பல்வேறு சீர்திருத்தங்களை துறையிலே செய்திருக்கின்றோம். கடந்த ஓராண்டாக வனத் துறையைச் சேர்ந்த அனைத்து அதிகாரிகளோடும் கலந்துகொண்டுதான் இந்த மாற்றத்தைச் செய்திருக்கின்றோம். அரசுக்கு எந்தவிதமான பண இழப்பும் இல்லாமல் இந்த மாறுதல்கள் செய்யப்பட இருக்கின்றன.

ஒவ்வொரு வன மண்டலமும் இரண்டு முதல் ஐந்து வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கியும், இரண்டு அல்லது மூன்று வன மண்டலங்கள் ஒரு தலைமை வனப் பாதுகாவலர் ஆளுகைக்கு உட்பட்டும் செயல்படுத்தப்படும் வகையில் தமிழ்நாடு வனத் துறையில் நிருவாகம் சீரமைப்பு செய்யப்பட உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு நான்கு வனப் பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டு—சென்னை, சேலம், கோவை, திருச்சிராப்பள்ளி—ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒரு தலைமை வனப் பாதுகாவலர் பொறுப்பேற்று அவரின் கட்டுப்பாட்டில் இரண்டு அல்லது மூன்று சீரமைக்கப்பட உள்ள வன மண்டலங்கள் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) சீரமைக்கப்பட உள்ள நிருவாகப் பட்டியல் தயாரிக்கப்பட்டு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அகில இந்திய அளவிலே வனத் துறையின் சார்பிலே, ஒவ்வொரு மாநிலமும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றன. தென் மாநிலங்கள் முழுவதிலும் அந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்தியிருக்கின்றார்கள். இந்த ஆண்டு, 2000 ஆம் ஆண்டிலே சென்னையிலே அகில இந்திய வன விளையாட்டுப் போட்டிகள், வனத் துறையின் சார்பிலே நடத்தப்படும் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பொங்கலூர் நா. பழனிசாமி] [1999 ஏப்ரல் 21

வளர்ந்து வருகின்ற இந்த உலகத்தில் தகவல் தொடர்பு சாதனங்களை நம் மாநிலத்தின் மூலைமுடுக்குகள்வரை விரிவுபடுத்தும் அரசின் கொள்கையை, முதல்வரின் கொள்கையைச் செயல்படுத்தும் வகையில் வனத் துறையிலுள்ள மாவட்ட வன அலுவலகம், சரக அலுவலகம்வரை கணிப் பொறிகளை வழங்கி, துறையின் செயல்பாடுகளை அதிகப்படுத்தும் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

*பிற்பகல் 1-20*

வனப் பகுதியில் விளையும் சிறு வன மகசூலை மலைவாழ் மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் பெருந்துறை பெரியசாமி அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அந்தத் திட்டம் இப்பொழுது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அடுத்த ஆண்டு முதல் அது செயல்படுத்தப்படும்.

உலகச் சுற்றுச்சூழல் நிதி உதவி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் மன்னார் வளைகுடா கடல் தேசிய பூங்காவின் அனைத்துச் செயற்பாடுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, வருங்கால சந்ததியினரை காக்கும் பொருட்டு Global Environmental Facilities என்ற நிறுவனத்திடமிருந்து சுமார் ரூபாய் 40 கோடி நிதி உதவியுடன். மாநில மற்றும் மத்திய இணை நிதி உதவியும் சேர்த்து, ஆகமொத்தம் ரூபாய் 100 கோடி அளவில் முன்னேற்றத் திட்டங்களுக்கான எம்.எஸ். சுவாமிநாதன் அறக்கட்டளையால் தயாரிக்கப்பட்ட ஏழாண்டுத் திட்டத்தை மைய அரசு இப்போது ஒத்துக்கொண்டிருக்கிறது.

நடப்பு ஆண்டில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தினால் சுமார் ரூபாய் 8 கோடி செலவில் ஆனைமலை பகுதியில் ஒரு தேயிலை தொழிற்சாலையும், நீலகிரியில் நடுவட்டம் என்ற இடத்தில் ரூபாய் 6 கோடியில் ஒரு தேயிலைத் தொழிற்சாலையும் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் உற்பத்தியாகும் தேயிலைத் தூள் தென் இந்தியாவிலேயே மிகவும் சிறந்தவை. தரம் வாய்ந்த தேயிலைத் தூளாக இருப்பதால் உலக அரங்கிலே அதற்கு மதிப்பு ஏற்பட வேண்டும் என்பதற்காக ஐ.எஸ்.ஓ. 9002 உற்பத்தி தரம் வாங்குவதற்கு இப்பொழுது எல்லா முயற்சிகளையும் நாங்கள் செய்து வருகிறோம்.

வனத் துறையிலே நீண்டநாட்களாக, கடந்த 23 ஆண்டுகளாக சமூக வனப் பணியாளர்கள் மற்றும் தோட்டக் காவலர்கள் ஆகியோர் தினக்கூலி அடிப்படையிலே பணிபுரிந்து வருகிறார்கள். 1991-லே ஓர் அரசு ஆணை அப்போதைய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது. அதன்மூலம் 10 ஆம் வகுப்பு படித்திருந்தால்தான் பதவி உயர்வு செய்யவேண்டுமென்று இருந்தது. அந்த ஆணையை ஆட்சேபித்து தற்காலிக சமூக வனப் பணியாளர்கள் மற்றும் தோட்டக் காவலர்களில் சிலர் தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயத்தில் மேற்படி ஆணையை ரத்து செய்யக்கோரி வழக்கு தொடர்ந்தனர். அவர்களது கோரிக்கையை டாக்டர் கலைஞர் அரசு பரிவுடன் பரிசீலனை செய்து, அரசு ஆணை எண் 64, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை நாள் 8-3-1999-ன்படி, வனக்காவலர் பணி நியமனத்திற்கு குறைந்தபட்ச கல்வித் தகுதி என்று வெளியிட்ட அரசு ஆணை எண் 297, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை நாள் 28-11-1994-ஐ ரத்து செய்துள்ளது. வனத் துறையிலே தினக்கூலி அடிப்படையிலே பணிபுரிந்துவரும் சமூக வனப் பணியாளர்கள் மற்றும் தோட்டக் காவலர்களின் ஒருங்கிணைந்த மாநில அளவிலான முதுநிலைப் பட்டியல் முதன்மை வனத் துறைத் தலைவரால் தயாரிக்கப்பட்டு, அதில் இடம்பெற்றுள்ள, தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்த அனைத்து சமூக வனப் பணியாளர்கள் மற்றும் தோட்டக் காவலர்களுடைய முதுநிலை அடிப்படையில் வனக் காவலர்கள் மற்றும் மாலி ஆகிய பணி இடங்களில் துறையில் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ள மற்றும் காலப் போக்கில் ஏற்படும் காலி இடங்களில் நியமன விதிப்படி பணியமர்த்தப்படுவார்கள். தற்போது குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் வராத சுமார் 2,500 சமூகவனப் பணியாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் ஊதிய விகிதத்தைத் திருத்தியமைக்கக் கருதப்படுகிறது. இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூபாய் ஒரு கோடி கூடுதல் செலவினம் ஏற்பட்டாலும்கூட, நீண்டநாளைய கோரிக்கையை கலைஞர் அரசு பரிவோடு கவனித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையத் தட்டும் ஒலி.)



1999 ஏப்ரல் 21] [திரு. பொங்கலூர் நா. பழனிசாமி]

அடுத்தபடியாக, வனத் துறையைவிட முக்கியமான துறை, சுற்றுச்சூழல் துறை. நாகரிகம் வளர வளர நாட்டிலே இருக்கிற மக்கள் சுற்றுச்சூழலை கவனிக்காமல் இருந்துவிட்டார்கள். குறிப்பாக, மேலைநாடுகளிலெல்லாம் நீண்டகாலத்திற்கு முன்பாகவே இந்த சுற்றுச்சூழலில் விழிப்புணர்வு கொண்டு அந்த நாடுகளையெல்லாம் மாசுபடுத்தாமல் இருந்தார்கள். ஆனால், தமிழ்நாட்டிலே 14 ஆண்டுகளுக்கு முன்னால்தான் இந்தத் துறை ஏற்படுத்தப்பட்டது. இதன் காரணமாக மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஏற்படுவதற்கு முன்பாகவே இருந்த தொழிற்சாலைகள், குறிப்பாக, திருப்பூரிலுள்ள சாயத் தொழிற்சாலைகள், வாணியம்பாடியிலுள்ள தோல் தொழிற்சாலைகள், திண்டுக்கல்லில்

இருக்கிற தொழிற்சாலைகள் மற்றும் பல தொழிற்சாலைகள் நாட்டை மாசுபடுத்திவிட்டன. ஆகவே, இந்த மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஆரம்பித்ததற்குப் பிறகு அவைகளையெல்லாம் சீர்செய்ய வேண்டுமென்பதற்காக, பல்வேறு சட்டங்கள் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1982 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட 1974 நீர் சட்டம், 1981 ஆம் ஆண்டு காற்று சட்டம், 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் சட்டம் மற்றும் இதன்கீழே உள்ள சட்ட விதிகளை வாரியம் செயல்படுத்தி வருகிறது.

*பிற்பகல் 1-25*

வாரியம் சென்னையைத் தலைமையிடமாகவும், 5 மண்டல அலுவலகங்களுடனும், 20 மாவட்ட அலுவலகங்களுடனும், 13 சுற்றுச்சூழல் ஆய்வகங்களுடனும் செயல்பட்டு வருகிறது. இந்தச் சுற்றுச்சூழல் மேலாண்மையைச் செயல்படுத்தும்பொருட்டு தமிழக அரசு சுற்றுச்சூழல் துறையை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் துறை 1996 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

தொழிற்சாலைகளின் மாசின் அளவைப் பொறுத்து சிகப்பு வகை தொழிற்சாலைகள் என்றும், ஆரஞ்சு வகை தொழிற்சாலைகள் என்றும், பச்சை வகை தொழிற்சாலைகள் என்றும் 3 வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. வாரியம் தொழிற்சாலைகள் அமைவதற்கான இசைவினை, இடத்தைப் பொறுத்தும், இயங்குவதற்கான இசைவினை, தேவையான மாசுக் கட்டுப்பாட்டு முறைகளை அமைத்த பின்பும் வழங்குகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் சுமார் 23 ஆயிரம் தொழிற்சாலைகள் இதன்கீழ் வருகின்றன. 28-2-1999 அன்றுள்ளபடி இதுவரை வழங்கப்பட்டுள்ள இசைவாணைகள் 16,578. அதிக அளவில் மாசுபடுத்தும் 29 வகையான தொழிற்சாலைகளுக்கு மத்திய அரசிடமிருந்து சுற்றுசூழல் ஆணை பெற வேண்டுமென்று விதி உள்ளது. பொதுவாக மாசை அதிகமாகச் செய்கின்ற இந்தத் தொழிற்சாலைகளுக்கு எல்லாம் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையிலே நமது தமிழக அரசும், மத்திய அரசும் பல்வேறு நிதி உதவிகளை வழங்கி இப்போது அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் நல்லபடியாக இயங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.



தமிழகத்தில் இருக்கிற 895 தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலே 26 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அதேபோல, 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சாயத் தொழிற்சாலைகள் தமிழகத்திலே இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் பொதுவாக பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கரூரிலும், அதேபோல திருப்பூர் மற்றும் பல இடங்களிலும் மொத்தம் 27 அமைக்கப்பட்டு வருகின்றன. தனியார் சுத்திகரிப்பு நிலையங்களும் ஏராளமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. மேலும், வேலூர் மக்கள் நலக் குழு தொடுத்த வழக்கின் அடிப்படையில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புப்படி குறிப்பிட்ட நீர் நிலைகளிலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவிற்குள் அமைந்துள்ள வாரிய இசைவுக்கு விண்ணப்பிக்காத சவ்வரிசி மற்றும் சாயத் தொழிற்சாலைகள் உள்ளிட்ட அதிக மாசுபடுத்தும் தொழிற்சாலைகளை மூட ஆணையிடப்பட்டது. அதன்படி மாநிலத்தில் உள்ள மொத்தம் 775 சவ்வரிசித் தொழிற்சாலைகளில் 86 சவ்வரிசித் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. குமாரபாளையம் மற்றும் பள்ளிப்பாளையம் பகுதிகளில் அமைந்துள்ள 117 சாயத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. மூடப்பட்ட தொழிற்சாலைகள் தனியாகவோ, கூட்டாகவோ கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து, வாரியத்தின் இசைவுக்கு விண்ணப்பிக்கும்போது, அவை பரிசீலிக்கப்பட்டு, இசைவாணை வழங்கப்படுகிறது. குமாரபாளையத்தில் 57 சாயத் தொழிற்சாலைகளுக்கு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு இசைவாணை வழங்கப்பட்டுள்ளது. மூடப்பட்டுள்ள, சுத்திகரிப்பு நிலையங்கள் அமைந்துள்ள 2 சாயத் தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், காவிரி நதியிலே மாசுபடுத்துகின்ற பவானி, குமாரபாளையம், பள்ளிப்பாளையம், ஈரோடு மற்றும் திருச்சி ஆகிய 5 நகரங்களில் இப்போதுள்ள மாசினைத் தடுப்பதற்கு மத்திய அரசு 22.5 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இதன்மூலம் மேற்படி நகரங்களில் கழிவுநீர் ஆற்றில் கலக்காதவாறு புதை சாக்கடை அமைக்கும் பணியும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணியும் வேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில பணிகள் குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய இயக்குநர் மேற்பார்வையிட்டு வருகிறார்.

காற்றின் தன்மையைக் கண்காணித்தல். சுற்றுப்புறத்திலுள்ள காற்றின் தன்மையைக் கண்காணிப்பதற்காக சென்னை நகரிலே 10 இடங்களிலும், கோயம்புத்தூரில் 3 இடங்களிலும், தூத்துக்குடியில் 3 இடங்களிலும், மதுரையிலே 3 இடங்களிலும், சேலத்திலே ஓர் இடத்திலும் ஆக 20 இடங்களில் கண்காணிப்பு நிலையங்களும், தொடர் காற்றுத் தர கண்காணிப்பு நிலையங்கள் தூத்துக்குடியில் ஒன்றும் SIPCOT-ல் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன.

வாகனப் புகையைக் கண்காணிப்பதற்காக சென்னையிலே 3 இடங்களிலும், தூத்துக்குடியில் ஓர் இடத்திலும், பழனியில் ஓர் இடத்திலும், உதகமண்டலத்தில் ஓர் இடத்திலும், காஞ்சிபுரத்தில் ஓர் இடத்திலும், ஆக 7 இடங்களில் வாகனப் புகை கண்காணிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

நீரின் தன்மையைக் கண்காணித்தல். காவிரி ஆற்றுப் படுகை மற்றும் தாமிரபரணி, பாலாறு, பவானி போன்ற இடங்களிலும், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஏரிகளிலும் நீரின் தன்மையை வாரியம் கண்காணிச்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் எவ்வளவு நேரத்தில் தங்களது உரையை முடிப்பீர்கள்?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் 5 நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் காவிரி ஆற்றில் மேற்கொள்ளப்பட்டுவரும் மாசுத் தடுப்புப் பணிகளில், நீரின் தன்மையில் ஏற்படும் முன்னேற்றத்தைக் கண்காணிக்க குமாரபாளையத்திற்கும், திருச்சிக்கும் இடைப்பட்ட தூரத்தில், காவிரி ஆற்றில் 12 இடங்களில் நீரின் தன்மை குறித்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

கடலோரக் கண்காணிப்பு. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் கடலோரக் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் கழிவுகள் வெளியேற்றப்படும் 7



இடங்களைக் கண்டறிந்து அவற்றின் தன்மைகளைக் கண்காணிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. சுற்றுப்புறச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, சென்னை பெரியார் விஞ்ஞான தொழில்நுட்ப வளாகத்திலுள்ள வாரியத்தில் சுற்றுச்சூழல் அரங்கம் மற்றும் ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, மூலமாக சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்வினை ஏற்படுத்தி, விழிப்பினை உருவாக்கி வருகிறது. வாரியத் தலைமையகத்தில் மாசு விழிப்புணர்ச்சி மற்றும் உதவிப் பிரிவு ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. இந்தச் சுற்றுப்புறச் சூழலைப் பற்றி மிக நன்றாக, விஞ்ஞானப்பூர்வமாகத் தெரிந்து கொள்வதற்காக இதில் பணிபுரியும் வாரியத் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் மொத்தம் 30 பேர்களுக்கு மேலாக, மேலும் 10 பணியாளர்கள் உட்பட, 40 பேர்களை வெளிநாடுகளுக்கு அடிக்கடி அனுப்பி, இந்த வாரியம் தன்னுடைய பணிகளைச் செவ்வனே செய்வதற்கு ஏற்பாடுகள் செய்து வருகிறது. இந்த வாரியத்தைப் பொறுத்தவரையிலே இசைவாணை மற்றும் செயல்படுவதற்கான ஆணை இதுவரையில் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில்தான் அளிக்கப்பட்டு வந்தது. ஆனால், இந்த வாரியத்தினுடைய பணிகள் செவ்வனே நடைபெற வேண்டும் என்பதற்காக இந்த மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் பணிகள் சீரமைக்கப்பட்டிருக்கின்றன. இதன்படி மிக அதிகமாக மாசுபடுத்தும் சிவப்புவகைத் தொழிற்சாலைகளுக்கு (Red Category) வாரியத் தலைவரும், Orange வகையான தொழிற்சாலைகளுக்கு மண்டல இணைத் தலைமைச் சுற்றுச்சூழல் பொறியாளர்களும், பச்சை வகை தொழிற்சாலைகளுக்கு மாவட்ட சுற்றுப்புறச் சூழல் பொறியாளர்களும், இனி இசைவாணை வழங்கும் விதத்திலே அதிகாரம் பகிர்ந்து அளிக்கப்படும் என்று இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால், காலவிரயமும், சிவப்புநாடா முறையும் வெகுவாகக் குறைக்கப்படும்.

வாரியத்தைக் கணிப்பொறி ஆக்குகின்ற திட்டத்தின்மூலம் ஒரு கோடி ரூபாயிலே அந்த நல்ல செயலை நாங்கள் செய்து வருகின்றோம். வாரியத்திற்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட தற்போது ஓசூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் முயற்சிகளை எடுத்து வருகிறோம். இந்த ஆண்டு கோவை, சேலம், திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு இடம் வாங்கப்பட்டு, கட்டடங்கள் கட்டப்படும். ஆகவே, இந்த மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் மிகச் சிறப்பான முறையிலே தமிழகத்திலே தொழில்கள் நன்றாக வளர்வதற்கும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான அறிவுரைகளை வழங்கி, இந்த

[திரு. பொங்கலூர் நா. பழனிசாமி] [1999 ஏப்ரல் 21

நாடு மாசுபடாமல் இருப்பதற்கும் பல நல்ல காரியங்களை இந்தத் துறை செய்து வருகிறது.

ஆகவே, இதிலே இரண்டு வகையான கருத்துகள் உண்டு. இந்தத் துறையின் தீவிரமான செயல்பாட்டால், கடந்த காலங்களிலே இராணிப்பேட்டை பகுதியிலே இருந்த தொழிற்சாலைகளெல்லாம் மூடப்பட்டதன் வாயிலாக ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல் அன்னியச் செலாவணி பெறப்பட்டு வந்த அந்த வியாபாரம் இன்று படுத்துபோய், வெறும் 300 கோடி ரூபாய் அளவிலேதான் வியாபாரம் நடைபெறுகின்றது. அதேபோல, திருப்பூர் பகுதியிலேயும் ஏராளமான தொழிற்சாலைகள் மூடப்பட்டதனால், வருமானம் குறைந்து வருகிறது. எனவே, இரண்டு வகையிலேயும் இதைக் கவனிக்க வேண்டும். வருமானமும் நாட்டிற்கு அதிகமாகக் கிடைக்க வேண்டும். மாசும் ஏற்படாமல் இருக்க வேண்டும். ஆக, இரண்டிற்கும் இடைப்பட்ட விதத்தில் இந்த அரசாங்கம் மிக நல்லமுறையிலே இந்தச் சுற்றுப்புறச்சூழல் வாரியத்தின் மூலமாக நல்ல செயல்பாடுகளைச் செய்து வருகிறது.

ஆகவே, இந்த வனத் துறை மானியக் கோரிக்கையில் மாண்புமிகு உறுப்பினர்கள் 92 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். சுற்றுப்புறச்சூழல் மானியக் கோரிக்கையில் 39 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்து இருக்கிறார்கள். அத்தனை தீர்மானங்களையும் நேற்று இரவு முழுவதும் நான் படித்திருக்கிறேன். அந்தத் தீர்மானங்களுக்கெல்லாம் உங்களுக்குப் பதில் வேண்டுமென்றால், பதில் கொடுக்க வேண்டும் என்றால், துறையின் மூலமாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, பதில் கொடுக்கவும் தயாராக இருக்கின்றேன். ஆகவே, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று மானியக் கோரிக்கைகளை ஏற்று, நிறைவேற்றித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லையே, உட்காருங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று.



1999 ஏப்ரல் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் ஒன்றே ஒன்று என்றால், எப்படி அனுமதிப்பது? உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியத்திலேதான் பேசுவதற்கு எனக்கு அனுமதி கொடுக்கவில்லை. கேள்வியாவது கேட்பதற்கு அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படியெல்லாம் பேசக் கூடாது, உட்காருங்கள். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

பிற்பகல் 1-35

## (ஆ) கோரிக்கை எண் 37 - சுற்றுச்சூழல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 37-சுற்றுச்சூழல், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன் இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. என்.ஆர். அழகராஜா, இருக்கையில் இல்லை. திரு. என்.ஆர். அழகராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம் இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.11,58,39,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க, (ஆம)

மறுப்போர் 'இல்லை' என்க, (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.



ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 44 - காட்டுவளத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 44 - காட்டுவளத் துறை; வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை, திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர் இருக்கையில் இல்லை, திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. என்.ஆர். அழகராஜா, இருக்கையில் இல்லை, திரு. என்.ஆர். அழகராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

**திரு. சி. வேலாயுதன்:** இருக்கையில் இல்லை. திரு. சி. வேலாயுதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. பா. வேல்துரை இருக்கையில் இல்லை. திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.92,24,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க, (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க, (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



## (இ) கோரிக்கை எண்—58 காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 58—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி இருக்கையில் இல்லை. திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை. திரு. ஆ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு.எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.91,70,92,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 22-4-1999 (காலை 9-30 மணிக்குக் கூடும்.) வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

146. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 12-11-1998 ஆம் நாளிட்ட 675 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

147. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் (1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணி நடைமுறை நூல் தொகுதி-I) திருத்தங்கள் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 16-12-1998 ஆம் நாளிட்ட 295 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் போரவைமுன் வைக்கப்பெற்றது)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

114. மானியக் கோரிக்கை எண் 37 - சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1999-2000 (தமிழ், ஆங்கிலம்)

115. மானியக் கோரிக்கை எண் 37-ன் கீழ் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000 (தமிழ், ஆங்கிலம்)

116. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மக்கள் சாசனம் என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

117. மானியக் கோரிக்கை எண் 44 - காட்டு வளத் துறை மற்றும் கோரிக்கை எண் 58 - காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

118. வனத் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 1999-2000. (ஆங்கிலம்)

119. வனத் துறையின் மக்கள் சாசனம் என்ற புத்தகம், 1999 (தமிழ், ஆங்கிலம்)

120. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்து ஒன்பதாவது

[1999 ஏப்ரல் 21

121. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபதாவது அறிக்கை, 1998-99.

122. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்தொன்றாவது அறிக்கை, 1998-99.

123. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்திரண்டாவது அறிக்கை, 1998-99.

124. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்துமூன்றாவது அறிக்கை, 1998-99.

125. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதிமூன்றாவது அறிக்கை, 1998-99.



## இணைப்பு I

[249 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## சுற்றுச் சூழல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண் 37

## 1999-2000

### 1.0 முகவுரை

சுற்றுச் சூழலைப் பேணிக் காப்பதும் இயற்கை வளங்களிலும் சுற்றுச் சூழலிலும் மாசினால் ஏற்படும் தாக்கத்தைத் தடுப்பதும் இன்றைய நாளின் தலையாய முக்கியத்துவம் வாய்ந்த பணியாக உள்ளது. ஒட்டு மொத்த சமுதாயத்தின் வசம் உள்ள இயற்கைச் செல்வங்களை மாசுபடுத்துவது சுற்றுச் சூழலின் சீரழிவிற்கும், வளங்களின் குறைவிற்கும் வழி வகுக்கிறது. சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அரசு வகுத்துள்ள சட்ட திட்டங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் சுற்றுச்சூழலின் மாசின் தாக்கத்தைக் குறைக்கலாம். இதனால் வளர்ச்சிப் பணிகளை சுற்றுச் சூழலைக் கெடுக்காமல் செய்ய முடியும்.

### 1.1 தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் அமைப்பு

1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஏற்படுத்தப்பட்டது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட கீழ்க்காணும் சட்டங்கள் மற்றும் விதிகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தி வருகின்றது:

1. 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் - 1978 மற்றும் 1988 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது.
2. 1977 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரிச்சட்டம் - 1991 ஆம் ஆண்டு திருத்தப்பட்டது.

3. 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் - 1987 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது.

4. 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம்.

5. 1989ஆம் ஆண்டு அபாயகரமான கழிவுப் பொருட்கள் (நிர்வகித்தல் மற்றும் கையாளுதல்) விதிகள்.

6. 1989 ஆம் ஆண்டு அபாயகரமான இரசாயனப் பொருட்களை தயாரித்தல், சேகரித்து வைத்தல் மற்றும் இறக்குமதி விதிகள்.

7. உயிரின மருத்துவக் கழிவு (நிருவகித்தல் மற்றும் கையாளுதல்) விதிகள், 1998.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு, சென்னை, மதுரை, வேலூர், கோவை மற்றும் திருச்சிராப்பள்ளியில் இணைத் தலைமை சுற்றுப்புறச் சூழல் நலப் பொறியாளர்களின் தலைமையில் 5 மண்டல அலுவலகங்களுடனும் சென்னை, தாம்பரம், அம்பத்தூர், வேலூர், வாணியம்பாடி, ஓசூர், கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கரூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் 18 மாவட்ட சுற்றுப்புறச் சூழல் நலப் பொறியாளர் தலைமையில் இயங்கும் அலுவலகங்களுடனும், உதக மண்டலம் மற்றும் நாகர்கோவில் ஆகிய இரண்டு உதவி சுற்றுப்புறச் சூழல் நலப் பொறியாளர் தலைமையில் இயங்கும் அலுவலகங்களுடனும் இயங்கி வருகிறது.

சென்னை, சேலம், மதுரை ஆகிய இடங்களில் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும், அம்பத்தூர், வேலூர், கடலூர் திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 7 இடங்களில் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும், மணலி, தூத்துக்குடி மற்றும் ஓசூர் ஆகிய 3 இடங்களில் நடமாடும் சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஏற்படுத்தி உள்ளது.

## 1.2 மற்ற நிறுவனங்களுடனான கலந்தாலோசனை

நகர் மற்றும் ஊரகத் திட்ட இயக்குநரகம், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பொதுப்பணித் துறை (நிலத்தடி நீர் மற்றும் பாசனம்) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், போக்குவரத்துத்





துறை, இந்திய வானிலை ஆராய்ச்சித் துறை, மீன்வளத் துறை, மத்தியத் தோல் ஆராய்ச்சி நிறுவனம், தேசிய சுற்றுச்சூழல் நலப் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம், தேசிய அபிவிருத்திக் குழு மற்றும் புகழ்பெற்ற கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்றவற்றுடன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கலந்தாலோசனை செய்து வருகிறது. மேலும் தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் திறமைகளை மேம்படுத்த உலக வங்கி மற்றும் அமெரிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்புகளுடன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கலந்தாலோசித்து வருகின்றது.

## 2.0 இசைவாணை வழங்கும் நடைமுறை

வாரியம், தொழிற்சாலைகளை அமைப்பதற்கும், அவற்றை இயக்குவதற்கும் நீர் மற்றும் காற்றுச் சட்டங்களின்கீழ், இரண்டு விதமாக இசைவாணைகளை வழங்குகிறது. தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணை, தொழிற்சாலை கட்டுமானப் பணிகளை தொடங்குவதற்கு முன், அது அமையவிருக்கும் இடத்தின் தன்மையைப் பொறுத்து வழங்கப்படுகிறது. வாரியத்தின் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் காற்று மாசு தடுப்பு சாதனங்களை தொழிற்சாலை அமைத்த பின்னர் உற்பத்தியைத் தொடங்கும் முன் தொழிற்சாலையை இயக்குவதற்கு வாரியம் இசைவாணையை வழங்குகிறது. நீர் மற்றும் காற்று சட்டங்களின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட வரையரைகளை இசைவாணை வழங்கும்பொழுது வாரியம் இசைவாணையில் குறிப்பிடுகின்றது.

வாரியம் 28-2-1999 வரை 16,578 இசைவாணைகளை, 1974 ஆம் ஆண்டைய நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழும், 13,824 இசைவாணைகளை 1981 ஆம் ஆண்டைய காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழும் வழங்கியுள்ளது.

## 2.1 அனல்மின் நிலையங்கள்

500 மெகாவாட் திறன் கொண்ட ஒருசில குறிப்பிட்ட அனல்மின் நிலையங்களை அமைக்க சுற்றுச்சூழல் அனுமதியை தமிழக அரசு வழங்க ஒரு வல்லுநர் குழுவை அமைத்துள்ளது.

## 2.2 புகார் மற்றும் சட்ட நடவடிக்கை

மாவட்ட அளவில் நன்கு அமைக்கப்பட்டுள்ள கள அமைப்பின் உதவியுடன், வாரியத்தில் புகார் பெறப்பெற்ற 24 மணி நேரத்திற்குள் அதனை விசாரணை செய்யும் நிலையில் வாரியம் உள்ளது. மாசு கட்டுப்பாடு சட்டங்களை மீறியதன் காரணமாக 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் 321 வழக்குகளும், 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் 134 வழக்குகளும், வாரிய விதிமுறைகளுக்குட்படாத தொழிற்சாலைகளின்மேல் தொடுக்கப்பட்டுள்ளன. 28-2-1999 வரை வாரியத்தின் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தாத 12,540 தொழிற்சாலைகளுக்கு முகாந்திர விளக்கம் கேட்டும், 2,719 தொழிற்சாலைகளை மூடுவதற்கு ஆணையும் வாரியம் வழங்கியுள்ளது.

## 3.0 காற்றின் தன்மையினைக் கண்காணித்தல்

நகர்ப்புறங்களில் பெருகிவரும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் வாயுக் கழிவுகளினாலும் மற்றும் பெருகிவரும் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையினாலும் சுற்றுப்புறக் காற்றின் தன்மை மாசுபட ஏதுவாகிறது. காற்று சட்டத்தின்படி தமிழ் மாநிலம் முழுவதும் காற்று மாசு கட்டுப்பாட்டிற்குட்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 3.1 தேசிய சுற்றுப்புறக் காற்றின் தன்மையைக் கண்காணித்தல்

தேசிய சுற்றுப்புறக் காற்றின் தன்மையைக் கண்காணிக்கும் திட்டத்தின் கீழ் சென்னை, கோவை மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய பெரிய நகரங்களில் தலா மூன்று இடங்களிலும், சேலத்தில் ஒரு இடத்திலும் சுற்றுப்புறக் காற்றின் தன்மையை வாரியம் கண்காணிக்கிறது.

சென்னை மாநகரத்தில் சென்னை சுற்றுப்புறக் காற்று தர கண்காணிப்புத் திட்டத்தின் மூலம் 7 நிலையங்களை வாரியம் தனது நிதியின் மூலம் நிர்மாணித்து சுற்றுப்புறக் காற்றின் தன்மையினை குடியிருப்பு, வர்த்தகம் மற்றும் நுட்பப் பகுதிகளில் கண்காணிக்கிறது. இந்தக் கண்காணிப்பில் கண்டறியப்படும் காற்றுத் தர அளவுகள் ஒவ்வொரு வாரமும் பிரபல நாளிதழில் வெளியிடப்படுகிறது.

கடலூரில் அமைந்துள்ள சிப்காட் தொழிற்பேட்டை மற்றும் தூத்துக்குடியில் அமைந்துள்ள பெரிய தொழிற்பேட்டை ஆகிய இடங்களில் தொழிற்சாலைகளில் பொருத்தப்பட்டுள்ள காற்று மாசு



தடுப்புச் சாதனங்களின் செயல்முறையினை மதிப்பீடு செய்வதற்காகவும் மற்றும் நிர்ணயித்த தரத்தினைவிட மாசு அதிகமாகும்போது காற்று மாசு தடுப்பு சாதனங்களை மேம்படுத்தவும் தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையங்களை ரூபாய் 80 இலட்சம் செலவில் வாரியம் அமைத்துள்ளது.

## 3.2 வாகன வாயு வெளிப்பாடுகள்

நகர்ப் பெருக்கம் மற்றும் தொழில் வளர்ச்சியின் காரணமாக சென்னையில் வாகனப் போக்குவரத்து அதிகரித்து அவை வெளியேற்றும் வாயுக் கழிவுகளும் அதிகரித்துள்ளன. வாரியம் வாகனப் புகை கண்காணிப்பினை 1-5-1992 முதல் செயல்படுத்தி வருகிறது. சரக்குப் போக்குவரத்து வாகனங்களுக்காக சென்னை மாநகரில் மூன்று இடங்களில் வாகனப் புகை கண்காணிப்பு மையங்களை நடத்தி வருகின்றது. வாரியம் வாகனப் புகை கண்காணிப்பு நிலையங்களை மாவட்ட அளவிலும் ஏற்படுத்தியுள்ளது. திண்டுக்கல், பழனி, உதகமண்டலம் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் வாகனப் புகை கண்காணிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 4.0 நீரின் தன்மையினைக் கண்காணித்தல்

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத மற்றும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீராலும் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் ஊராட்சிகளிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத வடிகால் கழிவு நீராலும் நாட்டின் பெரிய நதிகள் மாசுபடுகின்றன. மாசுப்படுத்துவோர் சரியான வழிமுறைகளை மேற்கொள்ள அறிவுறுத்தும் பொருட்டு, நீர் மாதிரிகளை வாரியம் தொடர்ச்சியாக சேகரித்து கண்காணித்து வருகிறது. தொழிற்சாலைகளைப் பொறுத்த அளவில் அவைகளால் வெளியேற்றப்படும் கழிவு நீர், வாரியம் நிர்ணயித்துள்ள தரத்தினை அடையும் வகையில், சுத்திகரிப்பு நிலையங்களை தனியாகவோ அல்லது பொதுவான முறையிலோ அமைக்க வேண்டியது தொழிற்சாலைகளின் பொறுப்பாகும்.

## 4.1 பெரிய ஆறுகளில் மாசு கலப்பதைத் தடுத்தல்

தமிழ்நாட்டில் முக்கிய ஆறுகளான காவிரி மற்றும் அதன் உபநதிகள், பெண்ணையாறு, பாலாறு, வைகை மற்றும் தாமிரபரணி ஆகிய ஆறுகளில் மாசு கலப்பதை தடுக்கும் முகத்தான், தமிழ்நாடு அரசு

[1999 ஏப்ரல் 21

அதிக அளவில் மாசுபடுத்தும் 14 வகையான தொழிற்சாலைக்ளை, இந்த ஆறுகளின் கரைகளிலிருந்து 5 கி.மீ. தூரத்துக்குள் அமைத்தலைத் தடை செய்து ஆணைகள் வெளியிட்டுள்ளது.

### 4.2 உலக சுற்றுப்புறச் சூழல் கண்காணிப்புத் திட்டம் மற்றும் இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்புத் திட்டம்

உலக சுற்றுப்புறச் சூழல் கண்காணிப்புத் திட்டத்தின் கீழ் மேட்டூர், பள்ளிப்பாளையம் மற்றும் முசிறி ஆகிய இடங்களில் காவிரி ஆற்று படுகைகளிலும், முசிறியில் நிலத்தடி நீரிலும், நீரின் தரத்தினை வாரியம் கண்காணிக்கிறது. இதுபோல் இந்திய தேசிய நீர் ஆதாரங்கள் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் காவிரி ஆறு (16 இடங்கள்), தாமிரபரணி (7 இடங்கள்), பாலாறு (1 இடம்) மற்றும் வைகை (1 இடம்) மற்றும் உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய மூன்று முக்கிய ஏரிகள் வாரியத்தால் கண்காணிக்கப்படுகின்றன.

### 4.3 சென்னை மாநகர நீர் வழிகள் சுத்திகரிப்புத் திட்டம்

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் செயல்முறைக் கழிவு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து வெளியேறும் நகரக் கழிவு ஆகியவற்றால் நீர் வழிகளில் ஏற்படும் மாசினைத் தடுக்கும் வகையில் வாரியம் சென்னை நகர நீர் வழிகளின் நீரின் தரத்தினை அதிக கவனத்துடன் கண்காணிக்கிறது. வாரியம் செப்டம்பர் 1991-லிருந்து நீர் மாதிரிகளை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஒவ்வொரு மாதமும் சேகரித்து ஆய்வு செய்கிறது.

### 5.0 தொழிற்சாலை மாசு கண்காணிப்பு

தமிழ்நாட்டில் வேகமாகப் பெருகிவரும் தொழிற்சாலைகளின் காரணமாக தொழிற்சாலை மாசினை தொடர்ந்து கண்காணிப்பது மிகவும் இன்றியமையாததாக ஆகிறது. மாசினை உண்டாக்கும் எல்லா தொழிற்சாலைகளும் தேவையான மாசு தடுப்பு சாதனங்களான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், காற்று மாசு தடுப்பு சாதனங்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை அமைப்புகள் ஆகியவற்றை வாரியம் நிர்ணயித்துள்ள தரத்தினை அடையும் அளவில் பொருத்த வேண்டும்.



1999 ஏப்ரல் 21]

### 5.1 17 வகையான அதிக மாசு உண்டாக்கும் தொழிற்சாலைகள்

வாரியம் ஒரு சிறப்புக் கண்காணிப்புப் பிரிவினை கூடுதல் தலைமை சுற்றுச்சூழல் நலப் பொறியாளரின் கீழ், இந்திய அரசு குறிப்பிட்டுள்ள 17 வகையான அதிக அளவில் மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளை கண்காணிக்கும் பொருட்டு அமைந்துள்ளது. அதிக அளவில் மாசுபடுத்தும் 17 வகையான தொழிற்சாலைகளின்கீழ் 198 தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு அவை தீவிரமாக வாரியத்தால் கண்காணிக்கப்படுகின்றன.

### 5.2 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கூட்டாக அமைந்திருக்கும் சிறிய முதலீட்டு தொழிற்சாலைகள் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் தீவிரமான திட்டத்தில் வாரியம் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது.

| வ.எண். | பிரிவுகள் | தொழிற் சாலைகளின் எண்ணிக்கை. | திட்டங்கள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 660 | 26 |
| 2. | துணி (சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள்) | 1,688 | 27 |
| 3. | உணவகங்கள் | 90 | 1 |
| 4. | மருத்துவமனைகள் (பொது எரிப்பான்) | 64 | 1 |

பம்மல், சிட்கோ (ராணிப்பேட்டை), வாணியம்பாடி, உதயேந்திரம், ராணிப்பேட்டை, ஆம்பூர் (துத்திப்பேட்டை), ஆம்பூர் (மளிகை தோப்பு), பேரணாம்பேட் (பக்கலப்பள்ளி), மேல்விசாரம், திண்டுக்கல், மாதவரம் மற்றும் திருச்சிராப்பள்ளி (இராம்ஜி நகர்) ஆகிய இடங்களில் 513 தோல் தொழிற்சாலைகளுக்காக பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அய்யம்பேட்டை - முத்தியால்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள

[1999 ஏப்ரல் 21

65 சாயப்பட்டறைகளுக்காக ஒரு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும், மருத்துவமனையிலிருந்து வெளியேறும் நுண்ணுயிர் மருத்துவக் கழிவுகளுக்காக சேலத்தில் ஒரு பொதுக் கழிவு எரிப்பானும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

கரூர் மற்றும் திருப்பூர் பகுதிகளிலுள்ள சலவை மற்றும் சாயப்பட்டறைகளை மூட சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பையொட்டி எழுந்த இக்கட்டான நிலையைத் தவிர்க்க மாண்புமிகு தமிழக முதல்வர், மனுதாரர்கள், தொழிலதிபர்கள் மற்றும் அரசு பிரதிநிதிகளுடன் 7-5-1998 அன்று கூட்டிய முத்தரப்பு மாநாட்டில் மேற்கொண்ட முடிவிற்கொப்ப, பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க மாநில அரசு நிர்ணயித்த ரூ.50 இலட்சம் என்ற உச்சவரம்பிற்கு மேல் மாநில அரசு கூடுதல் மானியத் தொகையாக ரூ.313.37 இலட்சங்கள் வழங்கி ஆணையிட்டது. மேலும், கரூர் மற்றும் திருப்பூர் பகுதிகளில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை விரைந்து அமைக்க தக்க ஏற்பாடுகளைச் செய்ய ஒரு வல்லுநர் குழுவையும் அமைத்து அரசு ஆணையிட்டது.

300 சலவை மற்றும் சாயப்பட்டறைத் தொழிற்சாலைகளுக்காக. திருப்பூர் பகுதியில் வீரபாண்டி, சின்னக்கரை, காசிப்பாளையம். குன்னங்கல்பாளையம், ஆண்டிப்பாளையம், மண்ணரை, அங்கேரிபாளையம் மற்றும் மாணிக்கபுரம் புதூர் ஆகிய இடங்களில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் கரூரில் 40 சலவை மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்காக ஒரு நிலையமும் நடப்பு ஆண்டில் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் சலவை மற்றும் சாயப்பட்டறைத் தொழிற்சாலைகளுக்காக கரூரில் 7 இடங்களிலும், தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காக திருச்சிராப்பள்ளியில் 2 இடங்களிலும், வேலூரில் 8 இடங்களிலும், உணவகம் மற்றும் தங்கும் விடுதிகளுக்காக கொடைக்கானலில் ஓர் இடத்திலும் பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்காக ஆகும் திட்டச்செலவில் 25 விழுக்காடுவரை மானியமாக தமிழக அரசு வழங்குகிறது. ஒவ்வொரு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் அமைக்கப்படும் விதம் மற்றும் அதன் செயல் திறன் ஆகியவற்றை ஆராய்ந்தபின், வாரியம் அரசிடம் இருந்து பெறும் மானியத்



1999 ஏப்ரல் 21]

தொகையினை பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்குகிறது. வாரியம் இதுவரை 47 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்காக ரூபாய் 1,949.43 இலட்சம் மானியத் தொகையினை மாநில அரசிடமிருந்து பெற்று அதில் 28-2-1999 வரையிலும் 39 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூபாய் 1,557.71 இலட்சம் மானியத் தொகையினை வழங்கி உள்ளது.

## 5.3 அபாயகரமான கழிவுகளை வெளியேற்றும் தொழிற்சாலைகள்

18 வகையான அபாயகரமான கழிவுகளின் சேகரிப்பு, போக்குவரத்து, சேமிப்பு, பெறுதல், சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றல் ஆகியவற்றை வாரியம் திறம்பட கண்காணிக்கிறது. 1,039 தொழிற்சாலைகள் அபாயகரமான கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதி, 1989 இன் கீழ் கண்டறியப்பட்டு 1,030 தொழிற்சாலைகளுக்கு 28-2-1999 வரை வாரியத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வாரியம் அபாயகரமான கழிவுப் பொருட்களைச் சுத்திகரித்து வெளியேற்றுவதற்காக 8 இடங்களை தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தெரிவு செய்துள்ளது. திருவள்ளூர் மாவட்டம், மணலூர் கிராமத்தில் ஓர் இடத்திலும் காஞ்சிபுரம் மாவட்டம், சிறுசேரி கிராமத்தில் ஓர் இடத்திலும் நிலையங்களை தேர்வு செய்வதற்கான சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் அபாய நேர்வு மதிப்பீடு ஆய்வு, தேசியச் சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிலையத்தால் (நாக்பூர்) முடிக்கப்பட்டுள்ளது. சிறுசேரியில் உள்ள இடத்திற்கு இச்சட்டத்தின்கீழ் அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மைய அரசின் சுற்றுப்புறச் சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 இன் கீழ் குறிப்பிட்டுள்ள அறிவிக்கையின்படி, மத்திய அரசு குறிப்பிட்டுள்ளபடி வாரியம் 25 அபாயகரமான இராசாயனப் பொருட்களின் தனிப்பட்ட சேமிப்பு கிடங்குகளை கண்டறிந்துள்ளது. வாரியத்தின் கண்காணிப்பினால் பொது உடமை காப்புச் சட்டம், 1991 இன் கீழ் அபாயகரமான 73 தொழிற்சாலைகள் இன்னல் எதிர்நோக்கு காப்பீடுகளை எடுத்துள்ளன.

## 5.4 உயிரின மருத்துவக் கழிவுகள்

மைய அரசு. உயிரின மருத்துவக் கழிவுகள் நிருவகித்தல் மற்றும் கையாளுதல் விதிகளை 20-7-1998 அன்று மைய அரசிதழில் அறிவிக்கை மூலம் வெளியிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தமிழக அரசு

[1999 ஏப்ரல் 21

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத் தலைவரை உரிய அலுவலராக 1998 ஆம் ஆண்டைய உயிரின மருத்துவக் கழிவுகள் (நிருவகித்தல் மற்றும் கையாளுதல்) விதிகளின் கீழ் நியமித்து ஆணையிட்டுள்ளது.

## 5.5 பொதுமக்கள் ஆலோசனைக் குழு

10-4-1997-ல் வெளியிடப்பட்டுள்ள 1994 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை திருத்தத்தின்படி, தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள 29 வகை தொழிற்சாலைகள் தொடங்கும் திட்டங்களுக்கு இசைவினை வழங்கும் வகையில் பொதுமக்கள் ஆலோசனைக் குழுவினை அமைக்க ஆணை பிறப்பித்துள்ளது. குறிப்பிட்ட தொழிற்சாலைகள், திட்டங்களிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் பொது மக்கள் கருத்தறிய மே 1998 லிருந்து தொடர்புள்ள மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்தில் ஆலோசனைக் குழு கூட்டம் நடைபெற்று வருகின்றது. பொதுமக்கள் ஆலோசனைக் குழுவிடமிருந்து விவரங்கள் பெறப்பட்டவுடன் வாரியம் அதனை ஆராய்ந்த பின்னர் இத்தொழிலகங்கள் திட்டங்கள் தொடங்கப்பெற தடையில்லாச் சான்றிதழ் வழங்குவதற்கு முடிவெடுக்கும். 28-2-1999 வரை இவ்வகையான 69 தொழிற்சாலைகள்/திட்டங்களுக்கு பொதுமக்கள் ஆலோசனை நடைபெற்றுள்ளது.

## 6.0 கடற்கரைப் பகுதிகளில் சுற்றுச்சூழலை நிர்வகித்தல்

தமிழ்நாடு சுமார் 1000 கி.மீட்டருக்கும் மேலான நீளமான கடற்கரையைக் கொண்டுள்ளது. மனித நடவடிக்கை காரணமாக உயிரின வாழ்க்கைச் சூழல் இப்பகுதிகளில் பாதிக்கும் நிலையில் உள்ளது. கட்டுப்பாடற்ற நடவடிக்கைகள் சிலவற்றைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்த இப்பகுதிகளில் மிக அதிக அளவிற்கு பாதிப்பு ஏற்படுவதைத் தடுத்து பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு இக்கடற்கரையோரப் பகுதிகள் முறைப்படுத்தப்பட்ட கடற்கரை மண்டலம், I, II மற்றும் III என வகைப்படுத்தப்பட்டுள்ளன. வாரியம் கடற்கரையோர கழிவு வெளியேற்றும் அமைப்புகளையும், 7 அதி முக்கிய இடங்களையும் கடலோரப் பகுதிகளில் கண்டறிந்துள்ளது. இப்பகுதிகளில் கடலில் வெளியேற்றப்படும் மாசு அளவினை மதிப்பிடவும், அதற்கேற்ப சரியான வழிமுறைகளை மேற்கொள்ளவும் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றது.



1999 ஏப்ரல் 21]

## 7.0 வாரியத்தின் பிறபணிகள்

### 7.1 சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம், சென்னை-25-ல் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு அரங்கை வாரியம் அமைத்துள்ளது. இதன் மூலம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை ஏற்படுத்துகிறது. மேலும் முதுநிலை மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான ஓவியப்போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, மற்றும் ஒளி, ஒலி சாதனங்களின் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றை வாரியம் நடத்தி வருகின்றது. மேலும் வாரியம், தனது தலைமை அலுவலகத்தில் ஒரு மாசு விழிப்புணர்வு மற்றும் சேவை மையத்தினை அமைத்துள்ளது.

### 7.2 அரசு சாரா அமைப்புகளின் குழு

அரசு சாரா அமைப்புகளின் குழு, சென்னையில் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்கள் மற்றும் மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஆகியவற்றின் ஆலோசனையுடன் அரசு சாரா அமைப்புகளிடையே ஒரு தொடர்பினையும், விழிப்புணர்வினையும் ஏற்படுத்தும் ஓர் அமைப்பாகவும் இக்குழு செயல்படுகிறது.

### 7.3 சுற்றுச்சூழல் பயிற்சி மையம்

வாரிய ஊழியர்கள், தொழிற்சாலைகளின் அலுவலர்கள், உள்ளாட்சித் துறை ஊழியர்கள் மற்றும் அரசு சாரா அமைப்பைச் சார்ந்தவர்கள் ஆகியோரின் தேவைக்கேற்ப மாசு தடுப்பு மற்றும் சுத்திகரிப்பு உத்திகள் குறித்து அவர்களுக்கு ஆலோசனை வழங்குவது மற்றும் மாசினைக் கட்டுப்படுத்துவதில் திறமை அடைவது ஆகிய நோக்கத்திற்காக டென்மார்க் நாட்டிலிருந்து நிதி உதவியாக ரூபாய் 4 கோடியினைப் பெற்று, சுற்றுச்சூழல் பயிற்சி மையத்தை தனது தலைமை அலுவலகத்தில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அமைத்துள்ளது. 1995 ஆம் ஆண்டு டிசம்பரிலிருந்து 28-2-1999 வரையிலும் சுற்றுச்சூழல் பயிற்சி மையம் 98 பயிற்சி வகுப்புகளை நடத்தி 1,894 அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது.

## 7.4 அவசர உடனடி செயல் மையம்

அபாயகரமான இரசாயனங்களை பயன்படுத்தும் முறைகள் மற்றும் கையாளுவது ஆகியவை பெருகி வருவதனால் விபத்துகள் நடைபெறும் சாத்தியங்கள் அதிகமாகி உள்ளன. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அவசரநிலை உடனடி செயல் மையத்தின் கட்டுப்பாடு மைய அறையினை தனது தலைமை அலுவலகத்திலும், இதனுடைய செயல் அறையினை மணலியிலும் அமைத்துள்ளது.

## 7.5 ஓசோன் கண்காணிப்புப் பிரிவு

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள ஓசோன் கண்காணிப்புக் குழு, ஓசோனை சிதைக்கும் பொருட்களை தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யும் மற்றும் உபயோகிக்கும் தொழிற்சாலைகளைக் கண்டறிந்து அவற்றின் இன்றைய தேவைகளையும் எதிர்கால அளவினையும் கணக்கிடும் பணியினை மேற்கொண்டு வருகிறது. சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களைக் கொண்டு ஓசோனை சிதைக்கும் பொருட்களுக்கு முறையாக மாற்று அறிவதற்கு ஓர் அடிப்படையாக இக்குழுவின் கண்டுபிடிப்புகள் அமையும்.

## 7.6 சுற்றுப்புறச் சூழல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

மாசினைக் குறைக்கும் தூய்மையான தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்யும் பணியில் ஈடுபடும் பொருட்டு வாரியம் சுற்றுச்சூழல் மற்றும் அபிவிருத்திப் பிரிவினை சென்னையிலுள்ள மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தில் அமைத்துள்ளது. கனிம, கரிம மற்றும் டேனின் ஆகிய மாசுப் பொருட்கள், தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுநீரில் எவ்வாறு குறைகிறது என்பதனை ஆராயும் பொருட்டு இப்பிரிவு, சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆலோசனையுடன், நுண்ணுயிரிகளைக் கொண்டு தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுகளைச் சுத்திகரிப்பு செய்வது பற்றிய ஆய்வறிக்கையினைத் தயாரித்துள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டுள்ளன.

## 8.0 உலக வங்கி உதவி

தொழிற்சாலைகள் வெளியேற்றும் மாசினைக் கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ், உலக வங்கி, இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும்





வனத் துறையின் மூலம் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு அதன் ஆய்வகங்களைப் பலப்படுத்துவதற்கான உதவியினை அளித்து வருகிறது. இத்திட்டத்தின் பகுதி-I இன் கீழ் ரூபாய் 71.88 இலட்சம் மதிப்புள்ள உபகரணங்கள்/கருவிகளையும், பகுதி - II இன் கீழ் நடப்பு ஆண்டில் ரூ.244.95 இலட்சம் மதிப்புள்ள உபகரணங்களையும் பெற்றுள்ளது.

## 9.0 ஆண்டுத் திட்டங்கள்

வாரியம், தனது நிதியின் மூலம் கீழ்க்கண்ட திட்டங்களினை 1997-98 ஆம் ஆண்டில் செயல்படுத்தியுள்ளது:

(அ) அபாயகரமான கழிவுப் பொருட்களைப் பகுப்பாய்வு செய்து சான்றிதழ் வழங்குவதற்குத் தேவையான உபகரணங்களின் தேவையை மேம்படுத்தும் வகையில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சென்னை மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தில் அபாயகரமான கழிவுப் பொருட்களைப் பகுப்பாய்வு செய்யும் பிரிவினை ரூபாய் 9.41 இலட்சம் செலவில் அமைத்தல்.

(ஆ) வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் செயல்படும் அபாயகரமான கழிவுப் பொருட்களின் மேலாண்மைப் பிரிவினை ரூ.12.60 இலட்சம் செலவில் பலப்படுத்துதல்.

(இ) கடற்கரைப் பகுதிகளில் ஏழு அதி முக்கிய இடங்களில் சுற்றுச்சூழல் கண்காணிக்கும் பணியினை ரூ.14.36 இலட்சம் செலவில் மேற்கொள்ளுதல்.

(ஈ) இராணிப்பேட்டை சிப்காட் தொழிற்சாலை வளாகத்தில் தொடர் சுற்றுப்புறக் காற்று மண்டலத் தன்மையைக் கண்காணிக்கும் நிலையத்தை ரூபாய் 45 இலட்சம் செலவில் அமைத்தல்.

(உ) திருச்சிராப்பள்ளியில் ரூபாய் 8.95 இலட்சம் செலவில் சுற்றுப்புறக் காற்று மண்டலத் தன்மையைக் கண்காணிக்கும் நிலையத்தை ஏற்படுத்துதல்.

9.1. மேலும் வாரியம் தனது நிதியின் மூலம் 1998-99 ஆம் ஆண்டில் திருப்பூரில் ரூபாய் 37.51 இலட்சம் மதிப்பில் மாவட்டச் சுற்றுப்புறச் சூழல் ஆய்வகத்தினை ஏற்படுத்தும் திட்டத்தினை செயல்படுத்தி

[1999 ஏப்ரல் 21

வருகிறது. மேலும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 1999-2000 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்த உத்தேசித்துள்ளது:

(அ) ஈரோடு மாவட்டச் சுற்றுப்புறச் சூழல் ஆய்வகத்தினை ரூபாய் 38.90 இலட்சம் மதிப்பில் அமைத்தல்.

(ஆ) 5 மாவட்ட அலுவலகங்களை ரூபாய் 12.00 இலட்சம் செலவினத்தில் கணினி மயமாக்குதல்.

## 10.0 முக்கியத் திட்டங்கள்

எதிர்வரும் வருடங்களில் நிறைவேற்றுவதற்காக அபாயகரமான கழிவுகள் மேலாண்மை, சுற்றுப்புறச் சூழல் பற்றி திட்டமிடுதல், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆய்வகங்களைப் பலப்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மையை கணினி மயமாக்குதல் ஆகிய முக்கியத் திட்டங்களை வாரியம் கண்டறிந்துள்ளது.

## 11.0 சுற்றுச்சூழல் துறை இயக்குநரகம்

தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் மேலாண்மையை செயல்படுத்த சுற்றுச்சூழல் துறை இயக்குநரகம் ஏற்படுத்தப்பட்டது. இத்துறை பெரிய திட்டங்களான தேசிய நதி நீர் திட்டத்தின்கீழ், காவிரி ஆற்றில் மாசு கலப்பதைத் தடுத்தல் மற்றும் தேசிய ஏரி பாதுகாப்பு திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள ஏரிகளில் மாசு கலப்பதைத் தடுத்தல் ஆகிய பணிகளை செயல்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இவற்றைத் தவிர தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் செயல்படுத்தப்படாத பிற சுற்றுச்சூழல் திட்டப் பணிகளையும் இத்துறை செயல்படுத்தி வருகிறது.

### 11.1 தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்டம்

இத்துறை, மத்திய அரசு பொறுப்பேற்கும் தேசிய நதி நீர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் ஓடும் காவிரி ஆறு மாசுபட்டுள்ள ஐந்து இடங்களில் மாசினைக் குறைக்கும் பணிகளை 1996-97 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தி வருகிறது. இதற்கான மொத்த திட்டச் செலவினம் ரூ.3820 இலட்சங்களாகும். ரூ.340 இலட்சங்கள் திருத்திய மதிப்பீட்டில் பெரும் பணிகள், சிறு பணிகள் மற்றும் திட்ட மேலாண்மைப் பிரிவு அமைத்தல் ஆகியவற்றை செயல்படுத்தி வருகிறது. 1998-99 ஆம் ஆண்டில் மாசு தடுப்பில் சிறு பணிகளான குறைந்த



1999 ஏப்ரல் 21]

செலவில் சுகாதார வசதி, ஆற்றங்கரையோரப் பகுதிகள் அபிவிருத்தி, விறகினால் எரிக்கும் மயானம் அமைத்தல் ஆகிய பணிகள் 95 விழுக்காடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. பெரும்பணிகளில், கழிவுநீரை ஆற்றில் கலக்காதவாறு தடுத்து மாற்று வழிப்படுத்தும் பணி ஈரோடு, கொமாரபாளையம், பள்ளிப்பாளையம், பவானி மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டச் செயல்பாட்டினை கண்காணிக்கும் பொருட்டு திட்ட மேலாண்மைப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகிறது.

### 11.2 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டப் பணிகள்

பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ. 15 இலட்சங்கள் செலவில் 14 மாவட்டங்களுக்கான சுற்றுச்சூழல் தொகுப்பு அறிக்கை மற்றும் மாநில சுற்றுச்சூழல் நிலை அறிக்கை ஆகியவை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பள்ளி, கல்லூரிகளில் சுற்றுச்சூழல் மையங்கள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட விழிப்புணர்வுப் பணிகள் செயல்படுத்தப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

## 12.0 1999-2000 ஆண்டில் செயல்படுத்த உத்தேசித்துள்ள செயல்பாடுகள் விவரம்

காவிரி ஆற்றில் மாசு தடுப்புப் பணிகள் 1999-2000 ஆண்டிலும் ரூ. 800 இலட்சங்கள் திட்ட மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம் செயல்படும் ஐந்து நகரங்களில் காவிரி ஆற்று நீரின் தரத்தைக் கண்காணிக்கும் பணிக்காக ரூ. 7.79 இலட்சத்திற்கு மைய அரசினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இப்பணி தொடங்கப்பட்டு 1999-2000 ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

சுற்றுச்சூழல் துறையை வலுப்படுத்த 1999-2000 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ. 33 இலட்சத்திற்கான திட்டம் மாநில திட்ட ஆணையத்தினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. திருவள்ளூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் சுற்றுச்சூழல் மேலாண்மைக்கு ஆதார வரைபடம் மற்றும் இராணிப்பேட்டை, தூத்துக்குடி பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளின் தாக்கத்தைத் தாங்கும் சக்தியைக் கணக்கிடுதல் ஆகிய பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

[1999 ஏப்ரல் 21

தமிழ்நாடு கடற்கரையோரப் பகுதிகள் மேலாண்மைத் திட்டத் தயாரிப்பில் இத்திட்டங்களை செயல்படுத்தும் துறைகளுடன் இணைந்து சுற்றுச்சூழல் துறை செயல்படும். தமிழ்நாடு கடற்கரையோரப் பகுதிகளில் மாசுபடுவதைத் தடுப்பதற்கும், சீரான நில உபயோகத் திட்டத்தை ஏற்படுத்தவும், கடற்கரையோரப் பகுதி மேலாண்மைக்கென தமிழ்நாடு கடற்கரையோரப் பகுதி மேலாண்மை ஆணையம் ஒன்றை மைய அரசு ஏற்படுத்தியுள்ளது. தற்போது பெரிய அளவில் வரைபடம் தயாரிக்கவும், உயர் அலை மட்ட மற்றும் தாழ்வு அலை மட்ட கோடுகள் நிர்ணயம் செய்யும் பணிகளையும் மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ரூ. 250 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.



1999 ஏப்ரல் 21]

## மானியக் கோரிக்கை 37-க்குத் தொடர்புடைய தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000

பொருளாதார தாராள மயமாக்கல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை நமது நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளாக அறிமுகப்படுத்தியதன் மூலம், நமது நாட்டின் பொருளாதார அமைப்பு நவீனப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. இச்சீர்திருத்தத்தின் முக்கிய குறிக்கோள்கள் உற்பத்தி உயர்வு, வேலைவாய்ப்புகளை அதிகரித்தல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதலாகும். இம்முன்னேற்றக் கொள்கைகளாலும், வாழ்க்கைத் தரம் உயரவேண்டும் என்று பேரார்வத்தாலும் நமது எரிசக்தியின் தேவை தொடர்ந்து உயர்ந்து கொண்டே இருக்கின்றது. நாம் நமது தேவைக்கு நிலக்கரி, எண்ணெய், இயற்கை வாயு, விறகு போன்ற பலதரப்பட்ட எரிசக்தி ஆதாரங்களை உபயோகப்படுத்துகிறோம். மின்சாரம் என்பது ஒரு வகை எரிசக்தி, நமது தேவைக்கேற்ற அளவிற்கு, தேவைப்பட்ட இடத்திற்கு கொண்டு சென்று நாம் உபயோகிக்கக்கூடியது. உலகம் முழுமையும் தற்போது மின்சார உற்பத்தி பெருமளவு நிலக்கரியைச் சார்ந்தே உள்ளது. வரும் ஆண்டுகளிலும் நிலக்கரி மற்றும் எண்ணெய் மூலம் மின் உற்பத்தி செய்வது நிலையாக தொடர்ந்து கொண்டே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இவற்றை அடிப்படையாகக் கொண்டு மின் உற்பத்தி செய்வதால் நமக்கு ஏற்படும் பல இடர்பாடுகளையும், அதாவது வேகமாகக் குறைந்து வரும் நிலக்கரி இருப்பு, நிலக்கரியின் தரக்குறைவு, நிலக்கரி மற்றும் எண்ணெய் விலைகளில் ஏற்படும் உயர்வு, போக்குவரத்துச் செலவினம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு போன்ற நிலைமைகளையும் நாம் சமாளித்தாக வேண்டும்.

இத்தருணத்தில் புதுப்பிக்கக்கூடிய மரபுசாரா எரிசக்தி வளங்கள், மரபுசார்ந்த எரிசக்தி வளங்களுக்கு ஓர் முக்கியமான மாற்று ஆதாரமாக விளங்கும் நிலையில் உள்ளது. புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி வளங்களை பயன்படுத்துவதன் வாயிலாக, தூய்மையான எரிசக்தி பெறலாம். மேலும் இவ்வளங்கள் உலகின் முதன்மையான ஆதார சக்தியான சூரிய சக்தியை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், இவை என்றென்றும் நமக்குக் கிடைத்துக் கொண்டேயிருக்கும் இவ்வளங்கள் குறைவதே இல்லை.

[1999 ஏப்ரல் 21

தமிழ்நாடு அரசு மேற்கண்ட காரணங்களைக் கருத்திற்கொண்டு 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் என்ற அமைப்பை மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களை ஊக்குவிக்கவும், மேம்படுத்தவும், அதற்கான திட்டங்களைத் தமிழ்நாட்டில் செயல்படுத்தவும் ஏற்படுத்தி உள்ளது. இந்நிறுவனம் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி தொடர்பான மாநில திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மேலும், இந்திய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தின் சார்பு அமைப்பாக, மைய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்துகின்ற திட்டங்களையும் இந்நிறுவனம் செயல்படுத்துகின்றது.

தொடக்கத்திலிருந்தே, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் காற்று சக்தி, சூரிய சக்தி, உயிரியல் சக்தி ஆகியவைகளைச் சார்ந்த பல்வேறு முன்னோடி திட்டங்களை போற்றத்தக்க வகையில் சிறப்பாகச் செயல்படுத்தி வந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட இடையறாத முயற்சிகளால் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி ஆதாரங்கள் பற்றிய அடிப்படை கருத்து இம்மாநிலத்தில் நன்கு வேரூன்றி கீழ்க்கண்ட பலன்களை அடைந்துள்ளது:

(அ) புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி ஆதாரங்களைக் கொண்டு மின் உற்பத்தி செய்வதற்கு முதன்மை அளிக்கப்பட்டுள்ளது. அதில் பெருமளவு முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது;

(ஆ) சூரிய ஒளி சுடுநீர் அமைப்புகள், சூரிய ஒளி இறைப்பான்கள், சூரிய ஒளி விளக்குகள், சூரிய ஒளி தெரு விளக்குகள், சூரிய சக்தி மூலம் காற்றை சூடாக்கும் அமைப்புகள், சாண எரிவாயு கலன்கள், தாவர எரிவாயு இயந்திரங்கள் மற்றும் நீர் இறைக்கும் காற்றாலைகள் போன்ற சாதனங்களின் உபயோகத்தினை ஊக்குவிக்க முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

(இ) ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மலைப்பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவைகள் மூலம், கிராமப் பகுதிகளில் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி பற்றிய கருத்தையும் பயன்களையும் பிரச்சாரம் செய்ய தனிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் தற்போது முனைந்து செயல்படுத்தும் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி திட்டங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:



1999 ஏப்ரல் 21]

# சூரியவெப்ப சாதனங்கள்

## சூரியவெப்ப சுடுநீர் அமைப்புகள்

சூரியவெப்ப சுடுநீராக்கி தொழில்நுட்பம் நன்கு வளர்ந்து வாணிபச் சந்தையில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. மக்களின் தேவைக்கேற்ப பல வடிவ அமைப்புகளிலும் கொள்ளளவுகளிலும் இவ்வமைப்புகள் தயாரிக்கப்படுகின்றன.

மாநில மற்றும் மைய அரசுகளின் பல்வேறு மானியத் திட்டங்களின்கீழ் இதுகாறும் 2374 வீட்டு உபயோகத்திற்கான சுடுநீர் அமைப்புகளும், 319 பெரிய அளவிலான சுடுநீர் அமைப்புகளும் நிறுவப்பட்டுள்ளன. பெரிய அளவிலான சூரிய சுடுநீர் அமைப்புகள், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், தொழிற்சாலைகளில் உள்ள சிற்றுண்டிச் சாலைகள் ஆகியவற்றில் நிறுவப்பட்டுள்ளன. இத்தகைய சூரிய சுடுநீர் அமைப்புகளை மாநில அரசின் மருத்துவமனைகளிலும், மாணவர்கள் தங்கும் விடுதிகளிலும் நிறுவ தமிழ்நாடு அரசு 100 விழுக்காடு நிதி உதவி வழங்கி, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் நிறுவி வருகிறது. இதுகாறும் இத்தகைய சுடுநீர் அமைப்புகள் 10 மாநில அரசு மருத்துவமனைகளிலும் 5 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் விடுதிகளிலும் நிறுவப்பட்டுள்ளன.

இவ்வமைப்புகளிலிருந்து பெறப்படும் சுடுநீர் மருத்துவமனை நோயாளிகளுக்கும், விடுதி மாணவர்களுக்கும் பெரிதும் பயனளிக்கிறது. இத்திட்டம் வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1999-2000 ஆம் ஆண்டில் சூரியவெப்ப சுடுநீர் அமைப்புகள் நிறுவ கீழ்க்கண்ட மானியங்கள் வழங்கப்படும்;

(1) தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் பெரிய அளவிலான சூரியவெப்ப சுடுநீர் அமைப்பு ஒன்றிற்கு ரூ.16,000/- மானியமாக வழங்கி ஆறு அமைப்புகள் நிறுவப்படவுள்ளன;

(2) வீட்டு உபயோகத்திற்கான சூரியவெப்ப சுடுநீர் அமைப்பு ஒன்றிற்கு ரூ.2,000/- வீதம் மானியம் வழங்கி 300 அமைப்புகள் நிறுவப்படவுள்ளன.

## சூரியவெப்ப சுடுகாற்று அமைப்புகள்

சூரியவெப்ப சுடுகாற்று அமைப்புகளைப் பயன்படுத்தி தொழிற்சாலைகளில் தேயிலை, பழங்கள், தானிய வகைகளினை உலர

[1999 ஏப்ரல் 21

வைப்பதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. சூரியவெப்ப சுடுகாற்று அமைப்புகள் மூலம் காற்றின் வெப்பத்தை 65 முதல் 70 டிகிரி வரை அதிகரிக்க இயலும். இத்தகைய அமைப்புகள் காற்றின் வெப்பத்தை சூரியசக்தி மூலம் அதிகரிப்பதால் 25 விழுக்காடு எரிபொருள் சிக்கனத்திற்கு வழிவகுக்கிறது. தமிழ்நாட்டில் இதுவரையில் 14 சூரியவெப்ப சுடுகாற்று அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

## சூரியஒளி மின் சாதனங்கள்

சூரியஒளி மின் தொழில்நுட்பத்தில் சிலிகான் செல்கள் மூலமாக சூரிய ஒளியிலிருந்து நேரடியாக டி.சி. மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த டி.சி. மின்சாரத்தை நீர்ப்பாசனத்திற்காக தண்ணீர் இறைக்க பயன்படுத்தலாம் அல்லது சூரிய ஒளியிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட டி.சி. மின்சாரத்தை மின்கலங்களில் சேமித்து ஏ.சி. மின்சாரமாக மாற்றி விளக்குகளையும், மின்விசிறிகளையும் இயக்க உபயோகிக்கலாம். சூரியஒளி மின் தொழில்நுட்பம் மூலம் மின்சாரத்தை அதிக அளவில் தயாரித்து மின் வாரிய கட்டமைப்பில் செலுத்தலாம். எனவே, சூரியஒளி மின் சாதனங்களின் உபயோகம் எதிர்காலத்தில் சிறந்து விளங்கும். சூரியஒளி மின் பம்புகள், லாந்தர்கள், தெரு விளக்குகள், சிறிய அளவிலான மின்சக்தி ஜெனரேட்டர்கள் ஆகிய சாதனங்கள் வர்த்தக ரீதியில் தற்போது பல இடங்களில் விற்கப்படுகின்றன.

## சூரியஒளி மின் பம்பு

சூரியஒளி மின் பம்பு என்பது சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரித்து, பம்பை இயக்கித் தண்ணீரை இறைக்கக்கூடிய ஒரு சாதனம். 900 வாட் திறன் உள்ள ஒரு பம்பு ஒரு நாளைக்கு 50,000 லிட்டர் தண்ணீரை மொத்தம் 30 அடி உயரத்திற்கு இறைக்கவல்லது. அது ஒன்றிலிருந்து இரண்டு ஏக்கர் நிலங்களுக்கு நீர் பாய்ச்சும். தமிழ்நாட்டில் மொத்தம் 4,80,000 விவசாயிகள் பம்புகளுக்கு மின்சாரம் பெற காத்திருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாடு மின்சார வாரியம் ஆண்டிற்கு 40,000 பம்புகளுக்கு மட்டுமே மின் இணைப்பு வழங்குகிறது. ஆண்டுதோறும் மிக அதிக அளவில் புதிய பம்புசெட்டு இணைப்பிற்கான விண்ணப்பங்கள் மின் வாரியத்தால் பெறப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் சூரியஒளி பம்புகள் சிறுவிவசாயிகளுக்கு நம்பகமான ஒரு மாற்றாக அமையும்.



999 ஏப்ரல் 21]

சூரியஒளி பம்புகள் நிறுவுவதை ஊக்கப்படுத்துவதற்காக மைய அரசும், மாநில அரசும் கணிசமான அளவில் மானியங்களை வழங்குகின்றன.

900 வாட் திறனுள்ள பம்பின் விலை ரூ.2.24 இலட்சம். மைய அரசின் நிறுவனமான இந்திய புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் ஒரு வாட்டுக்கு ரூ.125/- வீதம் ரூ.1,12,500/- மானியமாக வழங்குகிறது. மாநில அரசு ஒரு பம்புக்கு ரூ.59,000/- மானியமாக வழங்குகிறது. எனவே பயனாளி பங்குத் தொகை ஒரு பம்பிற்கு ரூ.52,500/- ஆகும்.

விவசாயத்திற்காக நமது மாநிலத்தில் இதுவரை 145 சூரியஒளி பம்புகள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 69 பம்புகளும், கோயம்புத்தூரில் 15 பம்புகளும், கடலூர் மாவட்டத்தில் 6 பம்புகளும், மீதியுள்ளவை மற்ற மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளன.

1999-2000 ஆம் ஆண்டில் 900 வாட் திறனுள்ள 25 பம்புகள் நிறுவிட, பம்பு ஒன்றிற்கு ரூ.59,000/- வீதம் மானியம் வழங்க தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது.

சூரியஒளி மின் பம்பின் விலை சற்று அதிகமாக இருந்தாலும், அவை மிகவும் எளிய சாதனமாக உள்ளதால் பெரிய அளவில் சூரியஒளி மின் பம்புகள் மாநிலமெங்கும் நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகளை தமிழ்நாடு அரசு பரிசீலித்து வருகிறது.

## சூரியஒளி விளக்கு

சூரியஒளி விளக்கு 60 வாட் பல்பு கொடுக்கக்கூடிய வெளிச்சத்தைத் தரக்கூடிய ஒரு சாதனமாகும். இதைத் தேவைப்படும் இடங்களுக்கு எடுத்துச் சென்று பயன்படுத்தலாம். ஒரு நாளைக்கு 4 மணிநேரம் எரியும். எளிதாக எடுத்துச் செல்ல முடிவதால் இதனை வீட்டு உபயோகத்திற்கும் வெளி உபயோகத்திற்கும் எடுத்துச் செல்லலாம். இது மின்வசதி செய்யப்படாத இடங்களிலும், அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படக்கூடிய இடங்களிலும் மிகவும் உபயோகமாக இருக்கும்.

ஒவ்வோர் ஆண்டும் மைய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் தனிநபர்களுக்கும், வணிகம் சாராத நிறுவனங்களுக்கும் மானியத் திட்டத்தின் கீழ் சூரியஒளி விளக்குகளை விற்க இலக்கு நிர்ணயம் செய்கிறது. ஒரு விளக்கின் விலை ரூ.4,000/-. மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் வழங்கும் மானியம் ரூ.1,500/-.

[1999 ஏப்ரல் 21

மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் இதுவரை 3,437 சூரியஒளி விளக்குகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில் மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் தமிழ்நாட்டிற்கு 1000 விளக்குகளுக்கான இலக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் மத்திய அரசு மானியத்துடன் கூடுதலாக ரூ.500/- மாநில அரசு மானியம் வழங்கி 1000 லாந்தர்களை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த சூரியஒளி விளக்குகள் பொறியியல் கல்லூரிகளுக்கு அருகாமையில் உள்ள இடங்களில் வாழும் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்படும். சம்பந்தப்பட்ட பொறியியல் கல்லூரிகள் இந்த லாந்தர் விளக்குகளை பராமரிக்கவும், அதன் செயல்திறனை மதிப்பீடு செய்யவும் கேட்டுக் கொள்ளப்படும்.

### சூரியஒளி தெரு விளக்குகள்

சூரியஒளி தெருவிளக்கு தனித்து இயங்கக்கூடியது. 11 வாட் திறனுள்ள சிறிய குழல் விளக்கினை உடையது. இது 12 மணிநேரம் எரியும். இது 35 வாட் திறன் கொண்ட இரண்டு சூரியஒளி மாட்யூல்கள், 11 வாட் திறன் உள்ள சிறிய குழல் விளக்கு மற்றும் மின்னணு சுற்றுக்களை உடையது. ஒரு விளக்கின் விலை சுமார் ரூ.30,000/-. தமிழ்நாடு அரசு ஒரு விளக்கிற்கு ரூ.12,000/- மானியமாக வழங்குகிறது. 1997-98-ல் தமிழ்நாடு அரசு 20 சூரியஒளி தெரு விளக்குகளுக்கு ஒப்பளிப்பு வழங்கியது. அனைத்து 20 விளக்குகளும் நிறுவப்பட்டுவிட்டன.

1999-2000 ஆம் ஆண்டில் ஒவ்வொரு சூரியஒளி தெரு விளக்கிற்கும் ரூ.12,000/- வீதம் மானியம் வழங்கி 40 சூரியஒளி தெரு விளக்குகள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இந்த சூரியஒளி தெரு மின் விளக்குகள் பல்கலைக்கழகங்களைச் சுற்றி அமைந்துள்ள பகுதிகளில் நிறுவப்படும். இவ்விளக்குகளின் செயல்திறன் பல்கலைக்கழகங்களின் உதவியுடன் மதிப்பீடு செய்யப்படும்.

## தமிழ்நாடு மின் வாரிய கட்டமைப்புடன் இணைந்த சூரியஒளி மின் நிலையங்கள்

மின் வாரிய கட்டமைப்பில் இணைந்த சூரியஒளி மின் நிலையங்கள் தமிழ்நாட்டில் முன்னோடித் திட்டங்களாக நிறுவப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் கயத்தாறில் ரூ.44.75 இலட்சம் செலவில் 15 கிலோவாட் திறன் கொண்ட சூரியஒளி மின் நிலையம்



1999 ஏப்ரல் 21]

ஒன்றை நிறுவியுள்ளது. இது 1995 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் தமிழ்நாடு மின் வாரியக் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நிலையம் தென்னிந்தியாவிலேயே இவ்வகையில் முதலாவதாகும். 100 கிலோவாட் திறன் கொண்ட மின் கட்டமைப்புடன் இணைந்த மற்றொரு மின் நிலையம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை அருகில் நல்லூர்பாளையத்தில் ஒரு தனியார் நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ளது.

மைய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் இத்தகைய மின் நிலையங்களை நிறுவுவதற்கு மானியம் அளிக்கிறது. ஒவ்வொரு 25 கிலோவாட் திறனுள்ள நிலையம் நிறுவ, திட்ட மதிப்பீட்டில் மூன்றில் இரண்டு பங்கை (அதிகபட்சம் ரூ.50 இலட்சம்) மானியமாக வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் 25 கிலோவாட் திறன் கொண்ட இரண்டு மின் கட்டமைப்புடன் இணைந்த மின் நிலையங்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் எல்.ஜி.பாளையம் மற்றும் எஸ்.என்.பாளையம் ஆகிய இடங்களில் தனியார் நிறுவனம் மூலம் நிறுவியுள்ளார்கள். இத்திட்டத்தை இந்நிறுவனமே சொந்தமாக நிறுவி இயக்கி வருகிறது.

## காற்று சக்தி

### காற்று சக்தி மூலம் மின் உற்பத்தி

தமிழ்நாடு, காற்று சக்தி மூலம் மின் உற்பத்தி செய்வதில் இந்தியாவில் முதன்மையாக விளங்குகின்றது. மாநில அரசு அறிவித்துள்ள தெளிவான கொள்கைகள், வழங்கியுள்ள வசதிகள் மற்றும் மாநிலத்தில் பரவலாக உள்ள காற்று சக்தி மிகுந்த பகுதிகள் ஆகியவைகளால் காற்று மூலம் மின் உற்பத்தி செய்யும் காற்றாலைப் பண்ணைகள் தமிழ்நாட்டில் பெருகி வருகின்றன. இதன் மூலம் தமிழ்நாட்டில் காற்று மூலம் மின் உற்பத்தி செய்வது தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ரீதிகளில் சாத்தியமானது என்று நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க அளவில் தமிழ்நாடு அடைந்துள்ள சாதனைகளில் சில கீழே தரப்பட்டுள்ளன:

(அ) தமிழ்நாட்டில் 28-2-1998 வரை அரசு செயல்விளக்கத் திட்டங்கள் மூலம் 19.355 மெகாவாட் திறன் கொண்ட 120 மின் காற்றாலை இயந்திரங்களும், தனியார் துறையின் மூலம் 672.820 மெகாவாட் திறன் கொண்ட 2,467 மின் காற்றாலை இயந்திரங்களும் நிறுவப்பட்டு, இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது;

[1999 ஏப்ரல் 21

(ஆ) நாட்டிலேயே முதலாவது தனியார் துறை காற்றாலைப் பண்ணை தமிழ்நாட்டில் 1990 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது;

(இ) காற்றாலைப் பண்ணை மூலம் மின் உற்பத்தி செய்வதில் நாட்டின் மொத்த உற்பத்தியில் 72 சதவிகிதம் தமிழ்நாட்டின் பங்காகும்;

(ஈ) நாட்டிலேயே மிகப் பெரிய அளவில் 345 மெகாவாட் திறன் அளவில் தனியார் காற்றாலைப் பண்ணைகளின் ஒரு பெரிய தொகுப்பு தமிழ்நாட்டில் மட்டுமே நிறுவப்பட்டுள்ளது. இது அமெரிக்காவில் கலிபோர்னியாவில் உள்ள காற்றாலைப் பண்ணைகளின் தொகுப்புக்கு அடுத்ததாக உள்ளது;

(உ) தமிழ்நாட்டில் உள்ள காற்றாலைப் பண்ணைகள் 28-2-1998 வரை 2239 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்து தமிழ்நாடு மின் கட்டமைப்புக்கு அளித்துள்ளன.

தமிழ்நாட்டில் காற்றாலைகள் மூலம் மின் உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பதற்கு மைய அரசும், மாநில அரசும் அளிக்கின்ற பல்வேறு சலுகைகள் கீழே தரப்பட்டுள்ளன:

## மைய அரசின் சலுகைகள்

(அ) மின் உற்பத்தி காற்றாலை இயந்திரங்கள் வெளியில் பொது உரிமத் திட்டத்தின்கீழ் எளிய முறையில் இறக்குமதி செய்யலாம்; நான்கு முக்கியமான உதிரிபாகங்களை இறக்குமதி வரியின்றி இறக்குமதி செய்யலாம்;

(ஆ) 100 சதவீதம் தேய்மான வரிச்சலுகை;

(இ) திட்டத் தொகையில் 75 சதவீதம் வரை கடன் வசதி.

## தமிழக அரசின் சலுகைகள்

(அ) தனியார் நிறுவனத்தினர் தங்களது காற்றாலைகள் மூலம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை தமிழ்நாடு மின் வாரிய கட்டமைப்பின் மூலம் செலுத்தி தமிழ்நாட்டிலுள்ள தங்களது தொழிற்சாலைகளின் தேவைகளுக்குப் பயன்படுத்தலாம். அந்த மின்சாரத்தில் இரண்டு (2%) விழுக்காடுகள் மட்டும் மின் வாரியத்துக்குக் கமிஷனாகச் செலுத்த வேண்டும்.



1999 ஏப்ரல் 21]

(ஆ) உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை மின் வாரியத்தின் வாயிலாக சேமித்துக் கொள்ளலாம். சேமிக்கும் மின்சாரத்தில் இரண்டு (2%) விழுக்காடுகள் மட்டுமே மின் வாரியத்துக்குக் கமிஷனாகச் செலுத்த வேண்டும்.

(இ) தனியார் நிறுவனத்தினர் உற்பத்தி செய்யும் காற்றாலை மின்சாரத்தை மின் வாரியம் 1-12-1995 முதல் ஒரு யூனிட்டுக்கு ரூ.2.25 வீதம் வாங்குகிறது. இந்த விலை ஆண்டிற்கு 5 விழுக்காடுகள் வீதம் 5 ஆண்டுகளுக்குக் கூடும்.

(ஈ) மின் உற்பத்தி காற்றாலை இயந்திரங்கள் வாங்க விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல்.

நம் நாட்டில் காற்றாலை தொழில்நுட்ப உள்ளமைப்பை வலுவுடையதாக்க இந்திய அரசு காற்று சக்தி தொழில்நுட்ப மையம் என்ற அமைப்பை சென்னையிலும், அதனைச் சார்ந்த மின் காற்றாலை ஆய்வு நிலையம் ஒன்றினை தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறிலும் அமைத்திட முடிவெடுத்துள்ளது. தமிழக அரசு, சென்னை மற்றும் கயத்தாறில் இந்நிலையங்கள் அமைத்திட நிலங்களை அளித்திட முன்வந்துள்ளது. இம்மையம் இந்தியாவிலேயே காற்று சக்தி தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான ஒரே ஒரு தொழில்நுட்ப மையமாக இருக்கும். காற்று சக்தி தொடர்பான ஆராய்ச்சி, காற்றுவள மதிப்பீடு, அமைப்பு ஒப்புதல், இயந்திரச் சான்றிதழ் வழங்கல், பயிற்சி அளிப்பு ஆகிய பணிகளை இம்மையம் மேற்கொள்ள உள்ளது. ஆகையால் இம்மையம் காற்று சக்தித் துறையைச் சார்ந்த தொழில் முனைவோருக்கும், முதலீட்டாளருக்கும், காற்றாலை உரிமையாளர்களுக்கும் மற்றும் அரசு அதிகாரிகளுக்கும் பெரிதும் உதவிகரமாய் அமையும்.

## நீர் இறைக்கும் காற்றாலைகள்

காற்று மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டங்களுடன் தமிழக அரசு நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவவும் ஊக்கமளித்து வருகின்றது. 1997-98 முடிய தமிழ்நாட்டில் மொத்தம் 865 நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. தமிழக அரசு 1999-2000 ஆம் ஆண்டில் நான்கு நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவ தலா ரூ.20,000/- மானியம் அளிக்க முடிவு செய்துள்ளது.

[1999 ஏப்ரல் 21

## உயிரியல் மற்றும் தாவர சக்தி

கால்நடை மற்றும் விவசாயக் கழிவுப் பொருட்கள் மூலம் சாண எரிவாயு தயாரித்து அதனை எரிபொருளாக உபயோகிப்பது தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் இயலும் என்று அறியப்பட்டுள்ளது. இது தவிர, ஆய்வுகளின் அடிப்படையில் சர்க்கரை ஆலைகளில் உபயோகமற்றதெனக் கருதப்பட்ட கரும்பு வீழ்படிவு மூலமாகவும் எரிவாயு தயாரிக்க இயலும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், மைய மற்றும் மாநில அரசுகளின் மானிய உதவிகளோடு சர்க்கரை ஆலைகளில் கரும்பு வீழ்படிவுகளை உபயோகித்து பணியாளர்களின் உணவு விடுதி மற்றும் தங்கும் விடுதி ஆகியவற்றின் பயன்களுக்காக எரிவாயு கலன்களை நிறுவ நடவடிக்கை எடுத்து வருகிறது. 1997-98 ஆம் ஆண்டுகளில் தமிழக அரசு மானியமாக ரூ.75,000/- ஒவ்வொரு கலனுக்கும் வழங்கி 60 கனமீட்டர் அளவு கொண்ட 3 கலன்கள் மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் நிறுவப்பட்டன.

முதற்கட்ட நடவடிக்கையாக வெவ்வேறு மாவட்டங்களில் உள்ள பத்து தாலுகாக்களில் உபரியாகக் கிடைக்கும் தாவர மற்றும் விவசாயக் கழிவுகளைப் பற்றிய மதிப்பீடு ஆய்வு தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால் ரூ.10.50 இலட்சங்கள் செலவில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு மார்ச் 1997-ல் முடிவடைந்தது. 1998-99-ல் மேலும் ஏழு தாலுகாக்களில் ஆய்வு செய்து திட்ட அறிக்கையினைத் தயார் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாய்வு அறிக்கைகளின் துணைகொண்டு உபரியாகக் கிடைக்கும் தாவரக் கழிவுப் பொருட்களிலிருந்து மின் உற்பத்தித் திட்டங்கள் நிறுவிட தனியார் முதலீட்டாளர்கள் அவர்களாகவே முன்வர இயலும். மேலும், இத்திட்டங்களுக்கு மைய அரசால் வழங்கப்படும் வட்டி மானியம் பெற இவர்கள் தகுதி பெறுவார்கள். இத்திட்டத்தின்கீழ் தொழில் முனைவோர்களுக்கு உதவிடும் நோக்கத்தில் தொழில்நுட்பத்தை அறிந்து கொள்ள ஏதுவாக 1998-99 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தால் தொழில் அபிவிருத்திக் கருத்தரங்குகள் இரண்டு முறை நடத்தப்பட்டன.

சேலம், தருமபுரி மாவட்டங்களில் மிகுதியாகக் காணப்பெறும் ஜவ்வரிசி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படும் கழிவுகளால் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு ஏற்படும் தீங்குகளைக் கட்டுப்படுத்தவும், அக்கழிவு நீரிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யவும் செயல் விளக்க முறையில் ரூ.1.00 இலட்சம் செலவில் மாநில அரசின்



1999 ஏப்ரல் 21]

நிதியுதவியுடன் அமெரிக்காவிலுள்ள நியூஜெர்சி பல்கலைக்கழகத்தின் உதவியுடன் ஒரு திட்ட ஆய்வறிக்கை 1997-98 ஆம் ஆண்டில் தயார் செய்யப்பட்டது. ஆய்வறிக்கைகளினை அடிப்படையாகக்கொண்டு தர்மபுரி மாவட்டத்தில் ஒரு தனியார் தொழில் முனைவர் 0.370 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் கலன் ஒன்றை நிறுவ முன்வந்துள்ளார்.

1998-99 ஆம் ஆண்டில் மாநகர மற்றும் நகரங்களில் வெளிப்படும் அன்றாடக் கழிவுகளை மதிப்பீடு ஆய்வு செய்யவும், அவைகளிலிருந்து மின் உற்பத்தி செய்யவும் முதற்கட்ட நடவடிக்கையாக சம்மந்தப்பட்ட துறைகளின் துணையுடனும், மைய அரசின் நிதி உதவியுடனும் (50%) தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால் சேலம் மாநகராட்சிக்கான திட்ட அறிக்கை தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதர மாநகராட்சி/நகராட்சிகளுக்கான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி விரைவில் தொடங்கப்பெறும். இவ்வறிக்கைகளின் துணைகொண்டு தனியார் நிறுவனங்கள் நகரக் கழிவுகளை பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் திட்டங்களை நிறுவ முன்வரலாம்.

சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி செய்யும் திட்டங்களைப் பெரிய அளவில் நிறைவேற்ற மாநில மற்றும் மைய அரசுகள் ஊக்கம் அளித்து வருகின்றன. இதனால் கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்யலாம். இதுசம்மந்தமாக சர்க்கரை ஆலைகளில் உள்ள கொதிகலன் மற்றும் இதர உபகரணங்களின் திறனை மேம்படுத்தி இணை மின் உற்பத்தி செய்து, தமிழ்நாடு மின் வாரியத்திற்குக் கூடுதல் மின்சாரம் தயாரித்து வழங்க இவ்வாலைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. இத்திட்டங்களுக்கு மைய அரசு, கூட்டுறவு ஆலைகளுக்கு ஒரு மெகாவாட் மின் உற்பத்திக்கு ரூ.2.00 கோடி வரையிலும், தனியார் ஆலைகளுக்கு வட்டி மானியமும் வழங்குகிறது.

1998 மார்ச் வரையில் தமிழ்நாட்டிலுள்ள 36 சர்க்கரை ஆலைகளில் ஒன்பது சர்க்கரை ஆலைகளில் 137.10 மெகாவாட் மொத்தத் திறன் கொண்ட இணை மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டு (2 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் 15.00 மெகாவாட் மற்றும் 7 தனியார் சர்க்கரை ஆலைகள் 122.10 மெகாவாட்) மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் இன்னும் கூடுதலாக சுமார் 20.24 மெகாவாட் திறன் நிறுவப்படலாம். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 500 மெகாவாட் மின் உற்பத்திக் குறியீட்டை அடைய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[1999 ஏப்ரல் 21

1997-98 ஆம் ஆண்டில் 50,000 கிலோ கலோரி திறன் கொண்ட 8 தாவர எரிவாயு இயந்திரங்கள் மாநிலத்தில் உள்ள 8 முக்கிய சிறைச்சாலைகளில் ரூ.6.95 லட்சங்கள் மதிப்பில், சமையல் உபயோகத்திற்கென இவ்வரசால் அமைக்கப்பட்டுள்ளன. இதன் பயனாக சிறைச்சாலைகளின் விறகு எரிபொருளின் செலவீனம் 50 சதவிகித அளவில் குறையப்பெற்றுள்ளது. 1998-99 ஆம் வருடத்தில் மேலும் 5 சிறைச்சாலைகளில் சமையல் உபயோகத்திற்கு தாவர எரிவாயு இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவற்றின் செயல்பாட்டினை அறிந்து வரும் ஆண்டுகளில் மேலும் பல நிறுவனங்களும் தனியாரும் இதுபோன்ற இயந்திரங்களை நிறுவலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக செயல்விளக்க அடிப்படையில் (50,000 கி.கலோரி/மணி) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையுடன் இணைந்து இம்மாதிரி இயந்திரம் ஒன்று ஊட்டி மாவட்டம் கார்குடியிலுள்ள ஆதிதிராவிடர் நலத் துறை மாணவர் விடுதியில் முழு மானியத்துடன் நிறுவப்பட்டுள்ளது. ஓராண்டு காலத்திற்கு இதன் திருப்திகரமான செயல்பாட்டிற்குப்பின், பிற ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கும் விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம்

தமிழ்நாட்டில் 21 தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மூலம் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் கிராம மக்களின் சமையல், விளக்கு வெளிச்சம், குடிநீர் ஆகிய அடிப்படைத் தேவைகளுக்குப் பயன்படும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள எரிசக்தி உபகரணங்கள் அவர்களின் தேவைக்கேற்ப மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. இத்திட்டத்தில் பணியாளர்களுக்கான சம்பள செலவினத்தை இந்திய அரசும், திட்டச் செலவினத்தை தமிழக அரசும் ஏற்கின்றன. கீழ்க்கண்ட எரிசக்தி சேமிப்பு உபகரணங்கள் 25 முதல் 100 விழுக்காடுகள்வரை மானியமாக இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன:

1. மேம்படுத்தப்பட்ட மண் அடுப்புகள் (100 விழுக்காடு மானியம்);
2. உராய்வு குறைவான புட் வால்வுகள் (75 விழுக்காடு மானியம்);



1999 ஏப்ரல் 21]

3. நீர் இறைக்கும் காற்றாலைகள் குடிநீர் தேவைக்காக பொதுக் கிணறுகளில் அமைத்தல் (100 விழுக்காடு மானியம்);
4. பிறவகையான எரிசக்தி சேமிப்பு உபகரணங்கள் (25 விழுக்காடு மானியம்).

## ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணி

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் பல்வேறு குறிக்கோள்களில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை ஊக்குவிப்பதும் ஒன்றாகும். அதன் அடிப்படையில் 1998-99 ஆம் ஆண்டில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுடனும், தொழில்நுட்ப நிலையங்களுடனும் இணைந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மரபுசாரா எரிசக்தித் திட்டங்களில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டுள்ளது. தமிழக அரசு இப்பணிக்காக 1998-99 ஆம் ஆண்டிற்காக ரூ.2.00 லட்சம் ஒதுக்கியுள்ளது.

கோழி எச்சத்தைப் பயன்படுத்தி "அன்ஏரோபிக் டைஜெட்சன்" முறையில் மின் உற்பத்தி செய்ய செயல்விளக்க முறையில் கலன் நிறுவி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## விளம்பரம்

மரபுசாரா எரிசக்தி வளங்களைப்பற்றியும், அது தொடர்பான பல்வேறு உபகரணங்களின் பயன்களை மக்களிடையே பிரபலப்படுத்தும் நோக்கத்துடன், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் பல கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. பிற நிறுவனங்கள் நடத்தும் கண்காட்சிகளிலும் பங்கேற்று வருகிறது. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்திடம் இருக்கும் ஒரு விளம்பர ஊர்தியில் மரபுசாரா எரிசக்தி உபகரணங்களின் மாதிரிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த ஊர்தி பொருட்காட்சிகள், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், சமத்துவபுரம் மற்றும் நமக்கு நாமே திட்டம் போன்ற அரசு திட்டங்களின் தொடக்க விழாக்கள் மற்றும் கருத்தரங்குகள் நடைபெறும் சமயங்களில் எடுத்துச் செல்லப்பட்டு உபகரணங்களின் பயன்கள் மக்களுக்கு விளக்கப் பயன்படுகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் மரபுசாரா எரிசக்தி வளங்கள் பற்றிய விளம்பர நடவடிக்கைகளுக்காக ரூ.2.00 லட்சம் ஒதுக்கப்பட உள்ளது.

[1999 ஏப்ரல் 21

## இணைப்பு-II

[249-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### கோரிக்கை எண் 44-காட்டுவளத் துறை

### கோரிக்கை எண் 58-காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு

### வனத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000

காடுகள் வற்றாத மீண்டும் புதுப்பிக்கக்கூடிய செல்வங்களை வழங்குவது மற்றும் பல்வகை உயிரினச் சூழல் செறிந்த சுற்றுப்புறத்தை வளமையாகப் பாதுகாப்பது போன்ற இரு பணிகளையும் செயல்படுத்தும் தொகுப்பு அமைப்பாகும். கீழ்க்கண்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதன் மூலம் இவ்வியற்கை வனங்களை செம்மையாக பாதுகாக்க இயலும்:

* சுற்றுப்புறச் சூழலின் நிலைத் தன்மையைப் பாதுகாத்தல் மற்றும் உயிரின வாழ்க்கைச் சூழலை சமநிலைப்படுத்துதல்;
* தரம் குன்றிய வனப்பகுதியில் கூட்டு வன நிர்வாக முறையில் சுற்றுச் சூழலை மீட்டு இயற்கை வனங்களை மேம்படுத்துதல்;
* வளமிக்க உயிரின பாவல்களாக அமைந்துள்ள வன உயரினங்களையும், தாவர இனங்களையும் பாதுகாத்தல்;
* நீர்த்தேக்கங்கள், ஏரிகள் மற்றும் ஆறுகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளின் மண் வளத்தினையும் அதன் ஈரப்பதத்தினையும் பாதுகாத்தல்;
* சமுதாய மற்றும் தனியார் நிலங்களில் மரவளர்ப்புப் பணியினை கணிசமான அளவில் அதிகப்படுத்துதல்;
* கிராமப்புற மக்களின் குறிப்பாக மலைவாழ் மக்களின் அத்தியாவசியத் தேவைகளான விறகு மரங்கள், கால்நடைத் தீவனம் மற்றும் இதர வனப் பொருட்கள் ஆகியவற்றை பூர்த்தி செய்தல்;
* விலையுயர்ந்த வனப் பொருட்கள் திருட்டுத்தனமாக அகற்றப்படுவதிலிருந்து பாதுகாக்கும் பணியை வலுப்படுத்துதல்;



1999 ஏப்ரல் 21]

* கடலோரப் பகுதிகளில் அருகி வரும் உயிரினச் சூழலை நிலைநிறுத்துதல்;
* ஒளிர்விடும் சிறந்த ஆராய்ச்சியின் மூலமாக வன வள நுட்பங்களையும் மேம்பாட்டுத் திட்டங்களையும் மாறிவரும் காலத்திற்கேற்ப நவீனமயமாக்குதல்.

### 2. நோக்கங்கள்

#### 2.1. காடுகளின் பரப்பளவு:

தமிழ்நாட்டின் மொத்த நிலப் பரப்பளவான 1,30,057 சதுர கிலோ மீட்டரில் 22,748 சதுர கிலோமீட்டர் பரப்பு வனப் பகுதியாகும். இது, மொத்தப் பரப்பில் 17.49 விழுக்காடாகும். பொதுவாக நிலப் பரப்பில் வனப்பகுதி இருக்கவேண்டிய உரிய அளவான 33 சதவீதத்தைவிட இது குறைவாகும். மாநில நிலப் பரப்பளவில் வன வளங்களை மேலும் உயர்த்த, மரங்களின் எண்ணிக்கையை தனியார் நிலங்களில் அதிகப்படுத்தியும், வன நிர்ணயப் பணிகளை துரிதப்படுத்தவும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

#### 2.2. கூட்டு வன நிருவாக முறையில் உயிரினப் பரவல்களை மேம்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாத்தல்:

தமிழ்நாட்டில் வனங்களின் அருகாமையில் அமைந்துள்ள சுமார் 3072 கிராம மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதாலும், கால்நடைகளின் மிதமிஞ்சிய மேய்ச்சலினால் ஏற்படும் அழிவினாலும், சுமார் 7,000 சதுர கிலோமீட்டர் வனங்கள் தரம் குன்றிவிட்டன. இந்த தரங்குன்றிய வனப் பகுதியில் சுற்றுச் சூழலை மீட்டு இயற்கை உயரினச் சூழலை நிலை நிறுத்தவும், இயற்கை வனங்களை மேம்படுத்தவும் கூட்டு வன நிருவாக முறை அடிப்படையில் அதிக அளவில் பயன்களைப் பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

#### 2.3. ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் பகுதித் திட்டம்

தமிழகத்தில் 32 ஆறுகள், 11 பெரும் நீர்த்தேக்கங்கள், 2679 கால்வாய்கள், 38,863 குளங்கள் உள்ளன. இவற்றின் பெரும்பாலான நீர்ப்பிடிப்புப் பகுதிகள் வனங்களில் அமைந்துள்ளன. ஆகையால், வனங்களைப் பாதுகாக்கவும், மண்ணின் ஊட்டச் சத்தை மேம்படுத்தவும், காடு வளர்ப்புப் பணிக்கென குட்டைகள் கட்டுதல், காண்டூர் டிரென்சிங்,

மலைச் சரிவுக் கால்வாய்கள் போன்ற மண்வளப் பாதுகாப்பு முறைகள் மூலம் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் மேம்படுத்தப்படும்.

## 2.4. உயிரினச் சூழலை பாதுகாத்தல்

உயிரினப் பரவல்கள் தமிழ்நாட்டில் செறிந்துள்ளன. மாநிலத்தின் மொத்த வனப்பரப்பில் 2917 சதுர கிலோமீட்டர் அளவில், அதாவது 12.8 விழுக்காடுக்கு குறைவில்லாத பகுதிகள் ஐந்து தேசிய உயிரினப் பூங்காக்கள், ஆறு வன உயிரின சரணாலயங்கள் மற்றும் பன்னிரண்டு பறவைகள் சரணாலயங்களையும் உள்ளடக்கிய வன உயிரின பாதுகாப்பிற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. தாவர வன உயிரினங்களை பாதுகாத்தலை முதன்மைக் கொள்கையாக தொடர்ந்து செயல்படுத்துவதன் மூலம், சரணாலயங்களும், தேசிய பூங்காக்களும், பாரம்பரிய வனங்களும் உருவாக்கப்படும். மாநிலத்தின் மொத்த வனப் பரப்பளவில் பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் பரப்பளவை 25 விழுக்காடாக உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## 2.5. வன ஆராய்ச்சி

தமிழ்நாட்டில் வன ஆராய்ச்சி 1918-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மாறிவரும் சூழ்நிலைகளில் குறிப்பாக தொழிற்சாலைகள், வணிகம் மற்றும் உள்ளூர் துறைகளின் தேவைக்கேற்ப புதிய வன நுட்பவியல் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. வன நுட்பங்கள் தற்போதைய நடைமுறையிலுள்ள காலத்திற்கேற்பவும் வருங்காலத் தேவைகளை நிறைவு செய்யும் வண்ணம் மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் தக்க ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

டேராடூனிலுள்ள இந்திய வன ஆராய்ச்சிக் கல்வி மையம் மாநில அரசுடன் இணைந்து கூட்டு வன ஆராய்ச்சி செய்ய கோயம்புத்தூரிலுள்ள மத்திய அரசு வன மரபியல் மற்றும் மரம் வளர்ப்பு நிறுவனத்தின் மூலம் 1997-98 முதல் நிதியுதவி அளித்து வருகிறது. அமோக விளைச்சல் தரக்கூடிய சில தாவர வகைகளின் தரம் வாய்ந்த விதைப் பெருக்க மையங்களாக மாற்ற மத்திய அரசால் ரூ.33.90 இலட்சம் 1998-99 வரை வழங்கப்பட்டுள்ளது. அதில் 1997-98ல் ரூ.5.00 இலட்சம் மாநில அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.





சென்ற ஆண்டு (1998-99-ல்) ரூ.24.996 இலட்சம் மாநில அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 2.6. கடலோரப் பகுதி மேம்பாடு

தமிழகத்தில் கிட்டத்தட்ட 1000 கிலோ மீட்டர் அளவில் அமைந்துள்ள கடலோரப் பகுதிகள் மாறுபட்ட பல்வேறு இயற்கையின் சவால்களையும் உயிரினத் தலையீடுகளையும் தாங்கிக் கொண்டு நுண்ணிய உயிரனச் சூழல் அமைப்புகளை காத்து வருகின்றன. கடலோரங்களில் வீசும் அதிவேகக் காற்று மற்றும் புயல்களின் நாச விளைவுகளைக் குறைப்பதற்கும், மணற்குன்றுகளை நிலைப்படுத்தவும் மற்றும் அரிதான உயிரினப் பரவல்களில் தாவர மற்றும் நீர்வாழ் உயிரினங்களைப் பாதுகாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## 2.7. வன விரிவாக்கம் மற்றும் நிருவாகம்

தமிழ்நாட்டில் வேளாண்மையினை பாதிக்காத வகையில் தனியார் நிலங்களில் மரம் வளர்ப்புப் பணிகளை கூடுதலாக்க வாய்ப்புகள் மிகுதியாக உள்ளன. வன விரிவாக்க முறையின் மூலம் வனத் துறைக்கும் மக்களிடையேயும் செயல்பாடுகள், செய்திகள், மற்றும் உபகரணங்கள் சம்பந்தமான பணிகளையும் தொடர்ந்து பரிமாறிக் கொள்ள இயலும். இம்முறையின் மூலம் மாநிலத்தின் சூழ்நிலைக்குத் தக்கவாறு மரங்கள் மற்றும் காடுபடு பொருட்களின் தேவை மற்றும் விநியோகத்தின் இடையேயுள்ள இடைவெளிகள் குறைய வாய்ப்புண்டு. தனியார் நிலங்களில் மரம் வளர்ப்புக்குத் தடையாக உள்ள நடைமுறை விதிகளும், ஒழுங்கு முறைகளும் படிப்படியாக தளர்த்தப்பட்டு வருகின்றன.

## 2.8. வனப் பாதுகாப்பு

சந்தன மரம் உள்ளிட்ட இதர விலை மதிப்புமிக்க அட்டவணை மர வனப் பொருட்கள் சமூக விரோதிகளால் திருட்டுத்தனமாக கடத்தப்படுகின்றன. இதுப்போன்ற தீய சக்திகளை எதிர்த்துப் போராட வனத் துறையில் நவீன ஆயுதங்கள், தொடர்புச் சாதனங்கள் மற்றும் வாகனங்களைக் கொண்ட பாதுகாப்பு உள்கட்டமைப்பை வலுப்படுத்த தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்படும்.

## 2.9. பழங்குடியினர் மேம்பாடு

தமிழ்நாட்டில் சுமார் 5.74 லட்சம் பழங்குடியினர் வாழ்கின்றனர். இவர்களில் திருச்சி, விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், தர்மபுரி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் சுமார் 2.10 இலட்சம் பழங்குடியினர் வாழ்கின்றனர். இப்பழங்குடி மக்களின் வாழ்க்கைப் பொருளாதாரம் வன வளத்தினையே சார்ந்துள்ளது. எனவே, பழங்குடியினருக்கு ஆதாயங்களை உருவாக்கும் வகையில் வனப் பகுதிகளிலும் மற்றும் பழங்குடியினரின் இடங்களிலும், மரங்கள் மற்றும் தாவர வளம்கொண்ட மூலதனச் சொத்துக்கள் உருவாக்கப்படும். பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தில் நில முன்னேற்றப் பணிகள், வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் அடிப்படை உள்ளமைப்பு வசதிகளை வழங்கும் பல பணிகள் முனைப்புடன் செயல்படுத்தப்படும்.

## 2.10. உற்பத்தி வனவியல்

பொது மக்களின் வாழ்க்கைக்குத் தேவைப்படும் மரங்கள் மற்றும் மரங்களல்லாத காடுபடு பொருட்களை பூர்த்தி செய்யும் வகையில் தரம் வாய்ந்த மரங்களின் எண்ணிக்கையினை உயர்த்தவும், மரபியல் மாறுபாடுகளை பாதுகாக்கவும் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். உற்பத்தியில்லாத வனங்கள், புறம்போக்கு நிலங்கள், கால்வாய் ஓரங்கள் ஆகியவற்றை விலை உயர்ந்த தடிமரம் கொண்ட பகுதிகளாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 2.11. மருத்துவச் செடிகள் அடங்கிய மரங்களல்லாத சிறு வனப் பொருட்கள்

மரபியல் வேறுபாடு காரணமாக எண்ணற்ற மூலிகைச் செடிகள் மற்றும் மரங்களல்லாத காடுபடு உற்பத்திச் செடிகள் அழியும் அல்லது அவற்றின் தன்மை மாறுபடக்கூடிய தருவாயில் உள்ளது. இவ்வகை மூலிகைச் செடிகளைப் பல்வேறு தாவர வளர்ச்சி நிலப்பரப்பு உள்ளடங்கிய பதினொன்று மூலிகைச் செடிகளை 'பாதுகாப்புப் பகுதிகளில் பாதுகாக்க தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், மூலிகைச் செடிகள் மற்றும் இதர மரங்களல்லாத காடுபடு பொருட்கள் பெருமளவில் உற்பத்தி செய்யவும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.





## 2.12. மனித வள மேம்பாடு

வனத் துறை மாநிலத்தில் மிகவும் பழமை வாய்ந்த துறையாகும். கடந்த ஆண்டுகளில் இம்மனித வளத்தின் மூலம் அரிய சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன. இம்மனித வளத்தின் திறனை மேலும் மேம்படுத்த தக்க பயிற்சிகள் அளிக்கப்பட்டு மேம்படுத்தப்படும்.

## 2.13. சாலைகள் மற்றும் தகவல் தொடர்பு அடங்கிய உள்ளமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

வனங்கள், தீவிரவாத சக்திகளான ஆக்கிரமிப்பாளர்கள், கடத்தல்காரர்கள் மற்றும் கஞ்சாப்பயிரிடுதல் போன்ற குற்றங்களில் ஈடுபடுபவர்களிடமிருந்து பாதுகாக்கப்பட வேண்டும். எனவே, வனத் துறையில் உள்ள சாலைகள் மற்றும் தகவல் தொடர்புகள் போன்ற உள்ளமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் நவீனமயமாக்கவும் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 2.14. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் தரங்குன்றிய சோலாக்காடுகளை மேம்படுத்துவதற்கென்றே செயல்முறைப்படுத்தப்பட்டு வருகிறது. இயற்கை வளங்களை பாதுகாத்தல், உள்ளமைப்புப் பாதுகாப்புத் திட்டமான ஜீன்பூல் தோட்டம், பாதுகாப்பு, விழிப்புணர்வு போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் வளர்ச்சிப் பணிகளான தரங்குன்றிய வனப்பகுதியில் மாம் வளர்த்தல், சோலாக்காடுகளைச் சுற்றி கம்பியால் ஆன வேலியமைத்தல், தரங்குன்றிய சோலாக்காடுகளை மேம்படுத்த மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், வனப்பகுதியில் தீ பரவாமல் தடுக்க தீ தடுப்பு வெளிகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகள் செயல்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

## 2.15. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

தமிழகத்தின் மொத்த வனப்பரப்பான 22.748 சதுர கிலோ மீட்டரில் மேற்குத் தொடர்ச்சி மலை 5.596 சதுர கிலோ மீட்டரில் அமைந்துள்ளது. வனச் சுற்றுச்சூழலை மேலும் தரங்கெடாமல் தடுக்கவும், மேற்குத் தொடர்ச்சி மலை வனங்களில் தற்போதுள்ள தாவர மற்றும் உயிரினங்களை மேம்படுத்தவும், இடைவெளிகளில் நடுதல், நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நீர்வள ஆதாரங்களை ஏற்படுத்துதல், அடர்த்தி குறைத்தல்,

சிறுவனப் பொருட்கள் செடிகள் நடுதல், வன உயிரின வாழ்க்கைச் சூழலை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் செயல்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளும் மக்களின் ஈடுபாட்டுடன் கூட்டு வன நிருவாக முறையில் மேற்கொள்ளப்படும்.

## 2.16. கிழக்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

ஆரணியாறு, பாலாறு, பொன்னியாறு மற்றும் காவிரி ஆகிய நான்கு நதிகளின் உற்பத்திக்கு கிழக்குத் தொடர்ச்சி மலைகளே ஆதாரமாகும். இம்மலைத் தொடர் மனித வாழ்க்கைச் சூழல், பயிரிடுதல், ஆக்கிரமிப்பு ஆகியவற்றால் அழிவுக்குள்ளாகிறது. எனவே, கிழக்கு தொடர்ச்சி மலையின் உயிரினப் பரவல்களைப் பாதுகாக்கவும், தரிசாக உள்ள மலைப்பகுதிகளில் காடு வளர்ப்புப்பணி மேற்கொள்ளவும், சிறுவனப் பொருட்கள் வளர்க்கவும், மலைவாழ் மக்களின் வாழ்க்கைக்கு உதவிடும் வகையில் மேம்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

## 3. 1998-99 ஆம் ஆண்டின் சாதனைகள்

**3.1.** இவ்வாண்டு துறைக்கும் மக்களிடையேயும் செயல்பாடுகள், செய்திகள், உபகரணங்கள் மற்றும் பணிகளைத் தொடர்ந்து பரிமாறிக்கொள்ள ஏதுவாக எட்டு வன விரிவாக்க மையங்கள் ஏற்படுத்த அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

**3.2.** இவ்வாண்டில் வனக் காப்பாளர்களுக்கும் மற்றும் வனக்காவலர்களுக்கும் ரூ.50.00 லட்சம் செலவில் 10 இடங்களில் இணைந்த குடியிருப்புகள் கட்டுவதற்கு ஆணை வழங்கப்பட்டது. மேலும், ஆறு இடங்களில் வன ஓய்வு இல்லங்கள் கட்டுவதற்கு ரூ.49.80 லட்சமும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**3.3.** திண்டுக்கல் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களிலுள்ள முக்கிய பஞ்சாயத்து மற்றும் நகரங்களில் நிழல்தரும் மரங்கள் நடுவதற்காக பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.14.00 லட்சம் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

**3.4.** இந்த ஆண்டில் கிழக்கு மலைத்தொடர் மேம்பாட்டிற்காக ரூ.43.90 லட்சம் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.



**3.5.** இந்த ஆண்டில் 10 சோதனைச் சாவடிகளை மேம்படுத்த ரூ.18 லட்சம் செலவில் பகுதி, நிரந்தர கட்டடங்கள் கட்ட ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

**3.6.** பொள்ளாச்சி, தேனி மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய வனப்பகுதிகளில் கஞ்சா ஒழிப்புப் பணிக்காக ரூ.20.00 லட்சம் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

**3.7.** இந்த ஆண்டு அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவின் சில வளர்ச்சி பணிக்காக ரூ.54.63 லட்சம் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

**3.8.** வனத்துறை மூலம் வருமானத்தை உயர்த்த சீரான இடைவெளியில் சந்தன மர ஏல விற்பனை நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 574.500 டன்கள் எடையுள்ள சந்தன மரங்கள் ரூ.2533.23 லட்சத்திற்கும், 683.500 டன்கள் எடையுள்ள சந்தன வெள்ளடை மரங்கள் ரூ.178.93 லட்சத்திற்கும் விற்கப்பட்டுள்ளது. இருப்பினும், சந்தன மர ஏற்றுமதிக்கு மத்திய அரசால் விதிக்கப்பட்ட தடையினால் ஏராளமான சந்தன மரங்கள் விற்பனையின்றி தேக்கமுற்றுள்ளதால் துறைக்குக் கிடைக்கும் வருவாய் குறைந்துள்ளது.

**3.9.** அரசின் தீவிர முயற்சியால் இந்த ஆண்டு மூன்று மாவட்டங்களில் 51.249 லட்சம் கஞ்சா செடிகள் அழிக்கப்பட்டுள்ளன.

## 4. வன வருவாய் மற்றும் செலவினங்கள்

### 4.1. வன வருவாய்

இந்த ஆண்டின் (1998-99) வருவாய் மதிப்பீடு கீழ்க்கண்டவாறு ரூ.5,296.20 லட்சங்களாகும்.

| | வருவாய் இனம் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | சந்தன மரங்கள் | 2,000.00 |
| 2. | தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்கள் வழங்குதல் | 725.00 |
| 3. | மரங்களல்லாத காடுபடு பொருட்கள் | 152.91 |
| 4. | தடிமரம், விறகு, மூங்கில், சவுக்கு, மென்மரம் மற்றும் வனவியல் பண்ணைத் தோட்டங்கள் மற்றவை | 2,418.29 |
| | மொத்தம் | **5,296.20** |

1998-99 ஆம் ஆண்டில் சந்தன மரம், வெள்ளடை மரங்களின் விற்பனை மூலமாக எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூ.2,000.00 இலட்சத்திற்கு மாறாக அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ.2,712.17 இலட்சங்களாகும். 1999-2000 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருவாய் ரூ.8,096.16 இலட்சங்கள்.

## 4.2. செலவினங்கள்

1998-99ஆம் ஆண்டில் வன மேம்பாட்டிற்கான திட்டச்செலவு ரூ.14,090.01 இலட்சங்கள். திட்டமில்லா இனங்களுக்கான செலவு ரூ.5,585.26 இலட்சங்கள். 1999-2000 ஆம் ஆண்டில் வரவு-செலவு மதிப்பீடு ரூ.12,524.99 இலட்சங்கள் ஆகும் எனக் கருதப்படுகிறது.

## 5. திட்டப் பணிகள்

**5.1.** 1997-98ஆம் ஆண்டின் செலவு, 1998-99 ஆம் ஆண்டின் உத்தேசச் செலவு மற்றும் 1999-2000 ஆம் ஆண்டு செய்யக் கருதப்படும் செலவு ஆகியவற்றின் விவரங்கள் வருமாறு:

| திட்டம் (1) | 1997-98 ஆம் ஆண்டின் செலவு (2) | 1998-99 ஆம் ஆண்டின் உத்தேசச் செலவு (திருத்திய மதிப்பீடு) (3) | 1999-2000 ஆம் ஆண்டில் செய்யக் கருதப்படும் செலவுகள் (வரவு-செலவு மதிப்பீடு) (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| மாநில வனத் திட்டம். மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குமலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் | 7,427.83 | 13,489.13 | 12,157.84 |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம் 100% | 192.72 | 235.08 | 62.39 |
| மாநில அரசும் மத்திய அரசும் சம அளவில் பொறுப்பேற்கும் திட்டம் 50:50 | 441.32 | 498.40 | 412.58 |





| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் | 168.50 | 116.60 | 98.47 |
| மொத்தம் | **8,230.37** | **14,339.21** | **12,731.28** |
| மத்திய அரசின் உதவித் திட்டம் 50% கழித்தது | 220.66 | 249.20 | 206.29 |
| நிகர மொத்தம் | **8,009.71** | **14,090.01** | **12,524.99** |

**5.2.** 1999-2000 ஆம் ஆண்டின் மாநிலத் திட்டத்தின்கீழ் பின்வரும் திட்டங்கள் செயல்பட கருதப்பட உள்ளன:

| | திட்டங்களின் பெயர். (1) | 1999-2000 ஆம் ஆண்டுக்கு திட்ட முன்மொழிவு ஒதுக்கீடு தொகை (2) |
|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1. | உள்ளூர் வனப் பாதுகாப்பு | 6016.84 |
| 2. | பரவலான நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம். | 3135.24 |
| 3. | உயிரினப் பரவல் பாதுகாப்பு | 571.85 |
| 4. | வன ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு | 155.14 |
| 5. | கடலோரப்பகுதி மேம்பாடு | 148.29 |
| 6. | வன விரிவாக்கம் | 829.88 |
| 7. | வனப் பாதுகாப்பு | 605.13 |
| 8. | பழங்குடியினர் மேம்பாடு | 170.81 |
| 9. | உற்பத்தி வனவியல் | 237.16 |
| 10. | மருந்துச் செடிகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு | 9.00 |
| 11. | மனித வள மேம்பாடு | 192.49 |
| 12. | தகவல் தொடர்பு வசதிகள் அடங்கிய உள்ளமைப்பு மேம்படுத்துதல் | 453.16 |
| | மொத்தம் | **12,524.99** |

[1999 ஏப்ரல் 21

வன அபிவிருத்திக்கென பகுதி-2 திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட 5 திட்டங்கள் 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.68.96 இலட்சங்கள் அளவில் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது:

| வரிசை எண். (1) | திட்டத்தின் விவரம். (2) | 1999-2000-ல் செலவு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 1. | மூன்று மாவட்டங்களில் கஞ்சா பயிரிடுதலை அழித்தல் | 11.96 |
| 2. | இரண்டு மாவட்டங்களில் உள்ள பெரிய ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மற்றும் நகர் புறங்களில் நிழல் தரும் மரம் நடுதல். | 15.00 |
| 3. | சுமார் 1.50 லட்சம் நாற்றுக்கள் ரூ.20-வீதம் எழுப்பி பல்வேறு மாவட்டங்களில் விநியோகம் செய்தல். | 30.00 |
| 4. | சென்னை நகரில் அரசு மானியம் பெறும் பள்ளிகள் மற்றும் அரசு மானியம் பெறாத பள்ளிகளுக்கும் மரக் கன்றுகள் வழங்குதல். | 5.00 |
| 5. | பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களை பழுது நீக்கி துறைப் பணிக்காக உபயோகப் படுத்துதல். | 7.00 |
| | மொத்தம் | **68.96** |

## 6. தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம்

ஜப்பான் நாட்டு பன்னாட்டுப் பொருளாதார கூட்டு நிதி நிறுவனம் அளிக்கும் ரூ.499.20 கோடி கடனுடன் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் எனும் சிரிய திட்டத்தை 1997-98 முதல் ஐந்து வருடங்களுக்கு செயல்படுத்தும் வகையில் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது கூட்டு வன நிருவாக முறையில் காடுகளை ஒட்டியுள்ள கிராம மக்களின் ஒத்துழைப்புடன் திட்டமிடுதல், நடுதல், பாதுகாத்தல் மற்றும்



1999 ஏப்ரல் 21]

லாபத்தில் பங்கு என்கிற வகையில் காடு வளர்ப்புப் பணியானது தொடங்கப்பட்டுள்ளது. உள்ளூர் மக்களின் தேவைகளான மரம், காட்டு மரங்கள் அல்லாத சிறுவனப் பொருட்கள் ஆகியவைகளைப் பெறவும், சுற்றுப்புற மேம்பாட்டினை நிலைநிறுத்தவும் இத்திட்ட காலத்தில் கீழ்க்காணும் முக்கிய பணிகள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது:

1. கூட்டு வன நிருவாக முறையில் உள்ளூர் வனங்களைப் பாதுகாத்தல்.
2. மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.
3. வன விரிவாக்கத் திட்டம்.
4. நீர்ப்பிடிப்புப் பகுதிகளை மேம்படுத்தும் பணிகள்.
5. தடுப்புக்காடுகள், தோட்டங்கள்.

ஒவ்வோர் ஆண்டும் செயல்பாடுகளுக்கு 200 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இத்திட்ட முதலாம் (1997-98) ஆண்டில் 63.576 எக்டேர் பரப்பளவில் காடு வளர்ப்புப் பணி ரூ.45.20 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் (1998-99) ஆண்டில் 86.480 எக்டேர் பரப்பளவில் இப்பணி ரூ.96.14 கோடி செலவில் செயலாக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் 75.850 எக்டேர் பரப்பளவில் இப்பணிகளுக்காக ரூ.96.73 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. வன உயிரின சரணாலயங்கள்

1998 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் மேல்செல்வனூர் மற்றும் கீழ்செல்வனூர் பறவைகள் சரணாலயங்கள் அமைக்க அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், கொடைக்கானல், தர்மபுரி, விழுப்புரம், பவானி சாகர், கன்னியாகுமரி, பிச்சாவரம் மற்றும் கோடியக்கரை ஆகிய இடங்களில் பறவைகள் சரணாலயங்கள் மத்திய அரசுடன் ஆலோசித்து அமைக்கப்படவுள்ளன.

மன்னார் வளைகுடா உயிரின இயற்கைச் சூழலை வருங்கால சந்ததியினருக்கு பாதுகாக்கும்பொருட்டு **'க்ளோபல் என்விரான்மென்ட் பெசிலிட்டியிலிருந்து'** சுமார் ரூ.40.00 கோடி நிதி உதவியுடன் மாநில மற்றும் மத்திய இணை நிதி உதவியும் சேர்த்து ஆக மொத்தம் சுமார் ரூ.100 கோடி அளவில் முன்னேற்ற திட்டங்களுக்கான

[1999 ஏப்ரல் 21

எம்.எஸ். சுவாமிநாதன் அறக்கட்டளையால் தயாரிக்கப்பட்ட ஏழாண்டுத் திட்டம் இந்த ஆண்டு தொடங்கப்பட உள்ளது.

## 8. வனத் தோட்டக் கழகங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வனத் தோட்டக் கழகங்கள் வனத் துறையின் கீழ் இயங்கி வருகின்றன.

1. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், திருச்சிராப்பள்ளி
2. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூர்
3. அரசு ரப்பர் கழகம், நாகர்கோயில்

## 1. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், திருச்சிராப்பள்ளி

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் 13-06-1974 அன்று 1956 ஆம் ஆண்டு கம்பெனி சட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டது. இக்கழகத்தின் பங்கு மூலதனம் முழுவதும் தமிழ்நாடு அரசால் செலுத்தப்பட்டுள்ளது. அதிகாரமளிக்கப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் இதன் செலுத்தப்பட்ட மூலதன விவரங்கள் பின்வருமாறு:

1. அதிகாரமளிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.10 கோடி
2. செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.3 கோடி

இக்கழகத்தின் ஆளுகையின்கீழ் உள்ள 71,013 எக்டேர் காப்புக் காடுகள் வனத் துறையிலிருந்து குத்தகைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, கரூர், புதுக்கோட்டை, சிவகங்கை ஆகிய மாவட்டங்களின்கீழ் அடங்கிய பகுதியாகும்.

### குறிக்கோள்கள்

கூழ்மரம் மற்றும் முந்திரித் தோட்டங்களை உற்பத்தி செய்து, தொடரும் அறுவடை அடிப்படையில் பராமரித்தல், பொதுமக்களின் தேவையான விறகு மரங்கள் விநியோகம் செய்தல் போன்ற முக்கிய நோக்கங்களை இக்கழகம் கொண்டுள்ளது.



1999 ஏப்ரல் 21]

### சாதனைகள்

1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டத் தோட்டங்களின் விவரம் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது:

| | 1997-98 | 1998-99 |
|---|---|---|
| | (பரப்பளவு எக்டேரில்) | |
| யூகலிப்டஸ் தோட்டங்களின் உற்பத்தி | 2118 | 911 |
| முந்திரித் தோட்டங்களின் உற்பத்தி | 582 | 177 |
| சவுக்குத் தோட்டங்களின் உற்பத்தி | 92 | 66 |

### கூழ்மர விநியோகம்

இக்கழகம் 1997-98 ஆம் ஆண்டில் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட 50,989.415 மெட்ரிக் டன் அளவு கூழ்மரங்களின் அளவை விட 1998-99 ஆண்டில் 95,000 மெட்ரிக் டன் அளவு கூழ்மரம் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அதில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திற்கு 80,000 மெட்ரிக் டன்னும், சேஷசாயி காகித மற்றும் ஆலை நிறுவனத்திற்கு 15,000 மெட்ரிக் டன்னும் கூழ்மர விநியோகம் செய்யப்படும்.

இக்கழகத்தினால் வேலூர் மாவட்டத்திலுள்ள தெக்குபட்டில் சந்தன எண்ணெய் தொழிற்சாலை மீண்டும் வியாபார நோக்குடன் தொடங்கப்பட்டு 1-8-1997 அன்று முதல் முதன்முறையாக சந்தன எண்ணெயை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், புதுக்கோட்டையில் யூகலிப்டஸ் தோட்ட உற்பத்தியினை உயரிய மரபியல் முறையில் திசு வளர்ச்சி மூலம் உற்பத்தி செய்ய ஆய்வகம் ஒன்றினை அமைத்துள்ளது.

## 1999-2000 ஆம் ஆண்டின் திட்டங்கள்

1999-2000-ம் ஆண்டில் இக்கழகம் 25,00 எக்டேரில் வீரிய முறையில் பலன் தரும் கூழ்மரத் தோட்டங்களையும், 1,000 எக்டேர் பரப்பளவில் முந்திரி தோட்டங்களையும் உற்பத்தி செய்யக் கருதியுள்ளது. நுட்பவியல் மூலம் 70 எக்டேர் பரப்பளவில் சவுக்குத் தோட்டங்கள் உற்பத்திச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1999 ஏப்ரல் 21

இக்கழகத்தில் 1997-98, 1998-99 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டின் வரவு-செலவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(ரூபாய் இலட்சத்தில்)

| | 1997-98 (உள்ளபடி) | 1998-99 (வரவு-செலவு பட்டியலின்படி) | 1999-2000 (வரவு-செலவு பட்டியலின்படி) |
|---|---|---|---|
| நிதி வருவாய் | 1,658.47 | 2,794.82 | 3,314.00 |
| செலவுகள் | 1,392.93 | 2,107.57 | 2,586.00 |
| இலாபம் | (+) 265.54 | (+) 687.25 | (+) 728.00 |

## 8.2. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூர்

தற்போதுள்ள தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகமானது முந்தைய அரசு தேயிலைத் திட்டமாகும். இக்கழகம் 1956 ஆம் வருடத்திய கம்பெனிச் சட்டத்தின்கீழ் 22-8-1975ல் பதிவு செய்யப்பட்டு 01-04-1976லிருந்து ஒரு கழகமாகச் செயல்படத் தொடங்கியது. நீலகிரி மாவட்டத்தின் பொருத்தமான நிலங்களில் தேயிலை உற்பத்திச் செய்து இந்தியா திரும்பிய இலங்கை அகதிகளுக்கு நிரந்தர வேலை அளித்து மறுவாழ்வு கொடுப்பதை இதன் முக்கிய நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டது.

தோட்ட உற்பத்தி மற்றும் மறுவாழ்வுப் பணிகள் இக்கழகத்தால் பல்வேறு கட்டங்களில் தொடங்கப்பட்டன. இந்த கம்பெனியின் பங்கு மூலதனம் ரூபாய் 596.18 லட்சங்களாகும்.

### பசுந்தேயிலை உற்பத்தி

(கிலோ இலட்சத்தில்)

| 1997-98 (உற்பத்தி) | 1998-99 (மதிப்பீடு) | 1999-2000 (மதிப்பீடு) |
|---|---|---|
| 451.74 | 439.75 | 500.00 |



1999 ஏப்ரல் 21]

### பதப்படுத்தப்பட்ட தேயிலை

(இலட்சம் கிலோவில்)

| 1997-98 (உற்பத்தி) | 1998-99 (மதிப்பீடு) | 1999-2000 (மதிப்பீடு) |
|---|---|---|
| 102.90 | 101.15 | 115.00 |

### தொழிலாளர்கள்

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகமானது 6,926 நிரந்தரப் பணியாளர்களுக்கும், அதே சமமான அளவில் அன்றாடப் பணியாளர்களுக்கும் மறுவாழ்வு கொடுக்கும் வகையில் வேலை வாய்ப்பளித்துள்ளது.

### வருவாய் செலவினங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | தேயிலை விற்பனையில் பெறப்பட்ட வருவாய் | செலவு | வரிசெலுத்திய பிறகு நிகர லாபம் (+) நட்டம் (-) |
|---|---|---|---|
| 1997-98 | 7,384.31 | 4,725.87 | (+)2,658.44 |
| 1998-99 (வரவு செலவு, பட்டியலின்படி) | 6,486.95 | 4,953.95 | (+)1,533.00 |
| 1999-2000 (வரவு செலவு, பட்டியலின்படி) | 7,314.42 | 5,688.42 | 1,6,26.00 |

## 8.3. அரசு ரப்பர் கழகம், நாகர்கோவில்:

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வனப் பகுதியான 4,785.70 எக்டேர் நிலப்பரப்பில் குத்தகை முறையில் அரசு ரப்பர் கழகம் 1956 ஆம் ஆண்டின் கம்பெனிச் சட்டத்தின்கீழ் 20.08.1984 அன்று பதிவு செய்யப்பட்டது.

[1999 ஏப்ரல் 21

**உற்பத்தி மற்றும் விற்பனை**

| வருடம் | களஉற்பத்தி அளவு (மெட்ரிக் டன்னில்) | விற்பனை | மதிப்பு (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|---|
| 1997-98 | 2,692 | 2,721 | 1,157.22 |
| 1998-99 (வரவு-செலவுப் பட்டியலின்படி) | 2,800 | 3,572 | 1,501.75 |
| 1999-2000 (வரவு-செலவுப் பட்டியலின்படி) | 2,815 | 2,845 | 1,163.00 |

**வருவாய் மற்றும் செலவுகள்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | ரப்பர் மற்றும் இதர பொருட்களின் விற்பனை மூலம் வருவாய் | செலவுகள் | வரி செலுத்திய பின் நிகர லாபம் (+) நட்டம் (-) |
|---|---|---|---|
| 1997-98 | 1,506.40 | 1,858.94 | (-) 352.54 |
| 1998-99 (வரவு-செலவுப் பட்டியலின்படி) | 1,558.91 | 1,928.95 | (-) 370.04 |
| 1999-2000 (வரவு-செலவு பட்டியலின்படி) | 1,204.00 | 1,731.93 | (-)527.93 |

**முடிவுரை**

தமிழ்நாட்டில் மிகப்பெரிய அளவில் வனப் பரப்பை வன வளர்ப்பு திட்டங்கள் மூலம் அதிகரிக்கச் செய்ய இவ்வரசு எல்லாவித



1999 ஏப்ரல் 21]

முயற்சிகளையும் மேற்கொள்ளும். மலைவாழ் மக்கள் மற்றும் பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அவர்களின் முழுமையான உதவியுடன் வனப் பாதுகாப்பினையும் வன வளர்ச்சியையும் மேம்படுத்த இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. நலிந்த நிலையிலுள்ள மக்களுக்கு வன வளர்ப்பு திட்டங்களில் வேலைவாய்ப்பு அளிப்பதன் மூலம் அவர்களது பொருளாதார மற்றும் சமுதாய நிலை உயர்த்தப்படும். வன வளர்ச்சிப் பணியின் தற்போதைய கொள்கையானது ஏழை மற்றும் ஆர்வமுள்ள மக்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு கிடைப்பதோடல்லாமல் அதில் கிடைக்கும் இலாபத்தில் பங்குபெறும் வகையில் ஈடுபாட்டுடன் கூட்டு வன நிர்வாகம் அரசின் முக்கிய குறிக்கோளாகும்.

தனியார் மற்றும் பட்டா நிலங்களில் மரம் வளர்த்தலுக்குத் தடையாக உள்ள விதிகளை படிப்படியாக தளர்த்தி தனியார் தங்கள் நிலங்களில் மரம் வளர்க்க ஊக்குவிப்பது அரசின் நோக்கமாகும். இத்தகைய தடை தளர்த்தலினால் மாநிலத்தில் வளம் குறைவாக உள்ள அனைத்து தர நிலங்களிலும் அடர்ந்த வனப் பகுதிகளாக ஆக்குவதுடன் மாநிலத்தின் வன வருமானத்தை அதிகரித்தலுமே ஆகும்.

மேலும் தரங்குன்றிய வனப் பகுதிகள், சமுதாய நிலங்கள், அரசு நிலங்கள், தனியார் நிலங்கள் போன்றவற்றில் மரம் வளர்த்தல் மட்டுமின்றி வருங்காலத்தில் பெரும் வளத்தை தேடித்தரும் வகையில் வன வளத்தைப் பெருக்குதலே இதன் முக்கிய நோக்கங்களாகும். வனத் துறையின் தற்போதைய நிருவாக அமைப்பு மாறி வரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்படும்.

அரசின் வருவாயைப் பெருக்கும் நோக்கத்துடன் தற்போது நடைமுறையிலுள்ள சந்தன மர ஏற்றுமதிக்கான தடையினை நீக்க இவ்வரசு மத்திய அரசினை அணுகி, இருப்பில் தேங்கியுள்ள சந்தன மரங்களை உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி ஏலத்தின் மூலம் விற்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டை, பசுமை நிறைந்த மாநிலமாக்கிட வனத் திட்டங்களுக்கான முதலீட்டை அதிகரிக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

221803

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
Chennai-600 002.